
மாதாந்த சஞ்சிகை செப் - ஒக் 2007 100/=

SARINIHAR

# சரிநிகர்


"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" - பாரதி



# கண்ணீரும் காத்திருப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகரி திரைப்பட வட்டம்




**22**வது

பௌர்ணமி தின
திரைப்பட நிகழ்வு

படம் : **INNOCENT VOICES** - இயக்குனர் : **LUIS MENDOKI**



A Lawrence Bender Production A film by Luis Mandoki

# INNOCENT VOICES

குழந்தைப் போராளிகள் உருவாகும் கதை

இடம் : கொழும்பு தமிழ்ச்சங்கம்.
காலம் : ~~25.10~~.2007. 11, 24
நேரம் : மாலை 5.30 மணிக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கண்ணீரும் காத்திருப்பும் - 12



மக்கள் முன்னுள்ள கேள்வி - 19




மஹ்முத் தார்வீஷ் - 40



PROVOKED - 46



வாழ்வின் மீதான காதல் - 65



கவிதைகள் - 69



ஏ.ஜே.கனகரட்னா - 95


வாசகர் ஷெ(சா)ல்லடி... - 04

ஆசிரியர் தலையங்கம் - 07

மெல்லத்தமிழினி - 09

**அரசியல்**
கண்ணீரும் காத்திருப்பும்! - 12
மக்கள் முன்னுள்ள கேள்வி - 19
பந்தாடப்படும் சமாதானம் - 23
2007: திருப்பு முனையா? - 27
எமது தாயகம் வடக்கே! - 29
வாழ்வுரிமையும் பொறுப்பீனமும் - 31

தரிசனம் - 34

**கவிதை**
மலரா - 40
சலனி - 43

**சினிமா**
PROVOKED - 46
LUMUMBA - 49

**கருத்தாடல்**
நீராம்பல் சில கேள்விகள் - 57
நிகராக இல்லை - 63

**சிறுகதை**
நிர்வாணராச்சியம் - 66

**மதிப்பீடு**
வாழ்வின் மீதான காதல் - 65
குறிப்பேட்டிலிருந்து - 77

**நேர்காணல்**
மஹ்முத் தார்வீஷ் - 69

**நிகழ்வுகள்**
ஈழத்தமிழருக்கு மெருகு - 80
சிறுவர் திருவிழா - 81
யாழ். கலை இலக்கிய நிகழ்வு - 83

**நினைவுகள்**
அன்ரனியோனி - 88
கே.கே.மகாஜன் - 91
ஏ.ஜே.கனகரட்னா - 95

**ஓவியங்கள்**
ஏ.எம்.றஷ்மி
கோ.கைலாசநாதன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேற்றாகி நின்ற வெளி

கவிஞர் வில்வரத்தினம் பற்றிய, மகிழ்ச்சிக்குரிய மற்றொரு தகவலுமுள்ளது. அண்மையில் பாண்டிச்சேரி ஜவகர்லால் நேரு கருத்தரங்கு மண்டபத்தில், Facets of Tamil Diaspora என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

பிரெஞ் Indology நிறுவனத்துறையும் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறையும் இணைந்து ஏற்பாடு செய்த அக்கருத்தரங்கிற்கு ஆங்கிலத்திலே மேற்கூறியவாறு தலைப்பிட்டிருந்தாலும், தமிழ்த் தலைப்பு வில்வரத்தினத்தை நினைவு கூருமுகமாகவும் பொருத்தங்கருதியும் (அன்னாரது கவிதைத்தலைப்பான) 'வேற்றாகி நின்ற வெளி' (புலம்பெயர்ந்த தமிழ் இருப்பும் படைப்பும்) என மகுடமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி அன்னார் முன்னர் அந்நிறுவனத்தில் (?) நடத்திய தமது கவிதை பற்றிய அனுபவப் பகிர்வு தொடர்பான ஏறத்தாழ ஒன்றரை மணித்தியால வீடியோ காட்சியும் அக்கருத்தரங்கில் அன்று இரவு காண்பிக்கப்பட்டது.

பலரது நெஞ்சையும் உருக்கிய அந்நிகழ்ச்சி, தமிழ் மக்களது இடப்பெயர்வு அவலம் பற்றியதாகவும் இருப்பதனை அனைவராலும் உணர முடிந்தது. அதனால் அந்நிகழ்ச்சியை Edit செய்து, ஆங்கில உப தலைப்புடன் வெளியிட இருப்பதாக, அதனுடன் தொடர்புபட்ட கண்ணன் என்னிடம் கூறியிருந்தமையும் எமக்கு மனத்திருப்தி தருமொன்றாக உள்ளது.

செ.யோகராசா, கிழக்குப் பல்கலைக்கழகம்.

## வாய்ப்புக் கிடைக்குமா?

மல்கம் எக்ஸ் திரைப்படத்தைப் பற்றிமட்டுமல்ல, மல்கம் எக்ஸ்ஸைப் பற்றியும் அறியத் தந்த மணிதர்ஷாவுக்கு நன்றி. கறுப்பின மக்களுக்காகப் போராடிய மார்ட்டின் லூதர் கிங்கைப் பற்றித் தான் நாங்கள் அறிந்திருக்கிறோம். மல்கம் எக்ஸ் பற்றி அறிய வராததற்குக் காரணம் அவர் வன்முறை குறித்தும் நம்பிக்கை கொண்டிருந்தது தான் என்று தோன்றுகிறது. சேகுவேரா பற்றி ஓரளவு அறிந்திருக்கிறோம். ஆனால் அவருடைய டயறிக் குறிப்புக்களை மையமாக வைத்து மோட்டார் சைக்கிள் டயறி என்றொரு படம் வந்ததாக அறிந்தோம். ஆனால் இதுவரை பார்க்கக் கிடைக்கவில்லை இவ்வாறான திரைப்படங்களை நாங்களும் பார்க்க ஏதாவது வாய்ப்புக் கிடைக்குமா?

பிரவீன், சாவகச்சேரி

## கௌபீனத்தின் நீளம் பற்றி ...

ஆறு வருடங்களின் பின்பும் அதே மிடுக்கு கருத்தியலிலும், அதீத மினுமினுப்பு காகிதத்திலுமாக சரிநிகரின் புனர்ஜென்மம் கண்டு பூரித்தேன். 'வேடிக்கை மனிதர்களே' உமக்கு வெட்கம் உள்ளதா என வினாவுகின்ற அட்டைப்படம் ('பன்றிகளின் முன்னே முத்தை வீசாதீர்' என்ற வேதாகம வசனம் தான் நினைவுக்கு வருகிறது.)

'கருவாடும் உயிரிலிருந்தென்று யார் மதித்தார்' எனப் பிணந் தின்னும் 'இனந்தெரியாத' இன்றைய யுகத்தின் இருண்மையுள் மனிதத்தை தேடுகின்ற ஜெயசங்கரின் கூர்மையான கவிதையைத் தாண்டி, 'அடுத்த காலடியாக' ஆசிரியர் தலையங்கம் தன்னிலை விளக்கமற்ற தலைமைத்துவங்களின் பிடியில் 'மக்கார்த்தி யுகத்தின்' மத்தியில் இருந்து கொண்டும் மக்களின் துயரை மையிலிட்டுக் கொண்டு வருகிறோம் என்ற தன்னிலை விளக்கத்துடன் அமைந்து செல்கிறது.

'வெட்கம் கெட்டுப் போய் வீழ்ந்து படுவோமா' என்ற கட்டுரை ஒவ்வொரு இலங்கைக் குடிமகனும் உணர்ந்து வெட்கப்பட வேண்டிய இலங்கையின் அரசியல் ராஜதந்திரக் கலாசாரத்தை புத்தி ஜீவித்துவமாகச் சாடியிருக்கிறது. எல்லோருமே நிர்வாணமாக நிற்கும்போது கௌபீனத்தின் நீளம் பற்றி நினைவூட்டுகின்ற தைரியசாலியான நாசமறுப்பானிற்கு அது புனைபெயரல்ல இயற்பெயரே.

மேலும், சுனிலா அபேசேகரா, சுனந்த தேசப்பிரிய போன்ற சகோதரமொழி ஊடகவியலாளரின் கட்டுரைகளைத் தமிழில் தருவதனூடாக எமது வெகுஜன மனப்பாங்கில் திட்டமிட்டு விதைக்கப்பட்ட முற்கற்பிதங்களில் சில மாறுதல்களை எதிர்பார்க்க முடியும். ஆயினும், பராக்கிரம கொடித்துவக்குவின் கவிதையில் அதன் நோக்கம் பாராட்டப்படக் கூடியதாயினும் இலங்கையில் வந்தேறு குடிகளாகவே தமிழரை நோக்கும் 'மகாவம்ச' மனோபாவத்தின் சிறிய விகசிப்புகளையும் ஆங்காங்கே உணர முடியாமலில்லை.

ஜி.ரி.கேதாரநாதனின் திரை விமர்சனங்கள் கனதியானவை. குறிப்பாக லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிசின் உள்ளத்துறுத்தல் பற்றிய நோக்குநிலை சிந்திக்க வைத்தது. உண்மையான படைப்பாளிகள் கூட விலை போகிறார்கள் என்கிற யதார்த்தம் லெஸ்ரர் விடயத்திலும் பொய்க்கவில்லையா என்ன?

சு.வி பற்றிய செ.யோவின் கட்டுரை நன்று தான். ஆயினும் சரிநிகர் அந்த மறைந்த கவிஞனை மரியாதை செய்யும் விதத்தில் அவரின் படைப்புக்கள் சிலவற்றைப் பந்தி வைத்திருக்கலாம்.

எதிர் காலத்தில் அரசியற் கட்டுரைகளுடன், இலக்கியப் பகுதிகளையும் சரிவிகிதத்தில் கலந்து தந்தால் நன்றாக இருக்கும் என்பது எனதெண்ணம். இன்றைய சூழலில் அனைவருக்கும் பாதுகாப்பானதும் கூட.

ச.முகுந்தன், மட்டக்களப்பு.

## உயரிய குறிக்கோள்கள்

நீண்டகால இடைவெளிக்குப் பிறகு சரிநிகர் புதுப்பொலிவுடன் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. ஆசிரியர் குறிப்பில் கூறுவது போல் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், கௌரவமான சமாதானம், அனைத்துத் தளைகளிலிருந்துமான விடுதலை என்கின்ற உயரிய குறிக்கோள்கள் பற்றி பயணிக்க சரிநிகர் வாசகர்கள் என்றும் பின்நிற்கப் போவதில்லை.

சி.சித்திராதரன், பருத்தித்துறை

## மெய்மையைப் பிரதிபலிப்பதில் நெருக்கடி

இந்நெருக்கடியான காலகட்டத்தில் சரிநிகரின் மீள்வருகையை முக்கியமான இதழியல் வரலாற்றுப் பதிவாகவும் இன்னொரு வகையில் அளப்பெருஞ்சாதனையாகவும் கவனத்திற் கொள்ளலாம். தற்போதுள்ள சூழ்நிலையில் இதழியல்துறையில் தேக்கநிலையினை அவதானிக்க முடிகிறது. பல திசைகளிலிருந்தும் மறைகரங்கள் அழுத்துவதின் விளைவாக இத்தேக்க நிலை உணரப்படலாம். சரிநிகரின் மீள்வருகை இத்தேக்கநிலையில் சடுதியான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவை சரிநிகரில் வெளியாகும் அரசியல் கட்டுரைகளாகும். சரிநிகரின் தொடக்ககாலத்திலிருந்து இன்றுவரை அரசியல் கட்டுரைகள் எனவரும்போது அவற்றினது வாசிப்புக்கான எளிமையும் தெளிவான கருத்து நிலைக்கூறுகளும் எவரினதும் முதுகையும் சொறியாத நடுநிலைப்போக்கும் எடுத்துக்காட்டப்பட வேண்டிய சிறப்பியல்புகளாகும். யாழ்ப்பாணத்திலே மறைகரங்களின் வழிகாட்டுதலில் வெளியாகும் நாளிதழ்களின் கட்டுரைகளை வாசித்து மனஞ்சலித்திருந்த எனக்கு சரிநிகர் மே-ஜுன் 2007 இதழ் வாசிக்கக் கிடைத்ததில் பரவசம் கிட்டியது எனலாம். ஆசிரியர் தலையங்கம் உட்பட மெல்லத்தமிழினி பகுதியில் குறிக்கப் பட்டிருந்தவையும் அரசியல் கட்டுரைகளில் சகலவையும் மெய்யான அரசியல் நிலைப்பாட்டை எளிமையாகப் பகுப்பாய்வு செய்திருப்பது வாசகமனநிலையில் மிகுந்த கருத்துத்தெளிவினை ஏற்படுத்தவல்லது. அடுத்து குறிப்பிட வேண்டிய இன்னொன்று தரிசனம் பகுதி குறித்தவொரு நிலைப்பாடு தொடர்பான அனேகரின் கருத்துக்களைப் பதிவு செய்வது மட்டுமல்ல மாற்றுக் கருத்துகளுக்கும் இடமளிக்கப்படுவது பிரதானமாகிறது. பொதுவாக இப்போதுள்ள சூழ்நிலையில் இலங்கைக்குள்ளிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாகும் நாளிதழ்கள், மாசிகைகள் எவற்றிலும் மாற்றுக்கருத்துகளுக்கு இடமளிக்கப்படுவது முழுமையாக அருகிவிட்டிருப்பது இத்தருணத்தில் நினைவுகூரப்பட வேண்டியதாகும்.

இவைதவிர முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது மாற்று சினிமாவுக்கான வெளியை நோக்கி எனும் தலைப் பிலமைந்த கமோஸ்பானி திரைப்படம் பற்றிய குறிப்பும், அத்திரைப்பட இயக்குநர் சபிகாசுமர் உடனான நேர்காணல் பகுதியுமாகும். இவற்றைத் தந்திருக்கும் ஜி.ரி.கேதாரநாதன் நமது கவனிப்பிற்குரியவராகின்றார். ஈழத்தில் மாற்று சினிமா வுக்கான வெளியை நோக்கிய எந்தவொரு முயற்சியும் மேற் கொள்ளப்படாத நிலையில் ஜி.ரி.கேதாரநாதனின் இதுபோன்ற முயற்சிகள் பிரதானமானவை. வெகு இயல்பான மொழிநடை, நேர்த்தியான வெளிப்பாடு, தற்புதுமையான இயங்குதிசை, ஆழ்ந்த தேடலும் அதன்வழியேயான வெளிப்பாட்டு நேர்மையும் முதலான அம்சங்களை இவரது எழுத்துக்களில் காணக்கிடைப்பது மிக அபூர்வமான பதிகையென்றே சொல்லலாம். மாற்று சினிமாவுக்கான வெளியை நோக்கிய யாத்திரையில் கேதாரநாதன் அறியப்படாத பல தளங்களை அறிமுகப்படுத்துவார் என நம்பலாம்.

அர்த்தமும் அபத்தமும் எனும் சேரனின் குறிப்பு ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டுவதாகும். அரசியல் குறித்து எம்மிடமுள்ள மாயாவாதங்கள் படிப்படியாக நீக்கப்பட வேண்டியவை. சமாதானம் மிக அழகானது இவ்வழியால் வாருங்கள் (Take this road) படத்தை முன்வைத்து டி.சே.தமிழன் எழுதிய கட்டுரை தொடர்பாக இத் தொலைக்காட்சித்தொடர் 2004 காலப்பகுதியில் கைலாசபதிகலையரங்கில் திரையிடப்பட்டபோது தமிழ்க்குடும்பம் தொடர்பான காட்சிகளில் இயல்பான தன்மையை அவதானிக்க முடியவில்லை. (பேச்சுவழக்கு உட்பட) என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டது. அசோக ஹந்தகமவின் மே மகே சந்த ஒரு தமிழ்ப் பெண்ணை அவள் இயங்கும் சூழ்நிலைக்கேற்ப அவளை வெளிப்படுத்துவதில் மோசமான தோல்வியை எதிர் நோக்கியது. பிரசன்னவிதானஹேயின் இரமதியமவும் இதே தோல்வியை எதிர்கொண்டது. தமிழர் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதிலுள்ள இந்த இயக்குநர்களின் ஆர்வம் அவற்றை மெய்மை / விம்பங்களாக பிரதிபலிப்பதில் குன்றிப் போகிறது. இதுநேரடியாக நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கா மையினால் விளைவதேயன்றி வேறில்லை.

இராகவன், யாழ்ப்பாணம்

### நினைவுக் குறிப்புடன் மட்டும் நின்று விடுவதா?

சரிநிகரின் பரிணாமம் கண்டேன். உவகை, சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் உயர்தரம் பயிலும் போதுதான் சரிநிகர் எனக்குப் பரிச்சயமானது. வாசித்ததில் ஒன்றுமே புரியவில்லை. இருந்தும் அதன் பால் உண்டான ஈர்ப்பு அவற்றைப் பாதுகாத்து வைக்கத் தூண்டியது. இன்று எனக்கு மிகவும் உதவுகின்றது. ஒரு தீவிர இந்து கடும்போக்காளனாகவும், சிற்றின்ப வாசகனாகவும் இருந்த நான் ஆரம்பத்தில் சரிநிகருடன் முரண்பட்டிருக்கின்றேன். ஒரு தசாப்த காலமாக சரிநிகர் மிக அழுத்தமான சமூக தளத்தினை நோக்கி நகர்ந்ததோடு தீவிர வாசகர் வட்டங்களையும் பிரவாகித்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

தோழர் எஸ்.போஸ் அவர்களின் மரணம் நிகழ்கால வாழ்க்கை மதிப்பீடுகளை தெளிவாக உரைக்கின்றது. ஆனால் நாம் ஒரு நினைவுக் குறிப்புடன் மட்டும் நின்று விடுகின்றோம்.

கலாநிதி அன்டன் பாலசிங்கம் தொடர்பான சேரனின் குறிப்புகளில் அவரின் விடுதலை என்ற கட்டுரைத் தொகுதியையும் தொட்டிருந்தார். நான் சுனாமிக்குப் பின் முல்லைத்தீவு சென்ற வேளை குறிப்பிட்ட கட்டுரைத் தொகுதியைச் சுமந்து வந்தேன். இன்றைய அரசியல் அச்சம் 'இந்தியாவும் பிரபாவும்', 'ராஜீவ் - பிரபா சந்திப்பு' போன்றவற்றை முன்னட்டைகளுடன் கிழித்து எரித்து விட்டு, ஏனைய அத்தியாயங்களை மட்டும் ஒளித்து வைக்க நிர்ப்பந்தித்துள்ளது.

எம்.கருணாகரன், எட்டியாந்தோட்டை.

### பேனாவுக்குத் துப்பாக்கியால் பதில்

மீண்டும் வெளிவந்த சரிநிகர் இரு இதழ்களும் கனதியானவை. முதல் இதழில் விக்ரர் ஐவனின் கட்டுரையில் பல தகவல்கள் இருப்பினும் லலித் பற்றிய பார்வையும் மகிந்த பற்றிய பார்வையும் யதார்த்தத்திற்கு நெருடலாகப்படுகிறது. ஜே.ஆரின் ஆட்சிக் காலத்திலேயே இனப்பிரச்சினை தீவிரமடைந்து ஆயுதப் போராட்டம் உக்கிரமடைந்தது. தமிழர்கள் வகைதொகையின்றிக் கொல்லப்பட ஆரம்பித்த காலமும் அதுவே. அத்தனையையும் முன்னின்று நடாத்தியவர் பாதுகாப்பமைச்சர் லலித் அத்துலத் முதலியே. இந்திய -இலங்கை ஒப்பந்தம், அமைதிப்படை வருகை எந்தளவுக்கு சிறுபான்மை மக்களுக்கு விமோசனமளித்திருக்கும் என்பது கேள்விக்குறியேயாயினும், அதை அமுல்படுத்த முடியாமல் முறிவுக்குக் கொண்டு வந்த சம்பவமான, கைது செய்யப்பட்ட நிராயுதபாணி விடுதலைப்புலி உறுப்பினர்களின் முக்கியஸ்தர்களின் விடுதலையை மறுதலித்து கொழும்புக்குக் கொண்டுவரப் பணித்ததன் மூலம், அவர்களது தற்கொலைக்கும், அமைதிப்படையின் செயற்பாட்டு மாற்றத்திற்கும், புலிகளின் முழுமையான மீள்யுத்த செயற்பாட்டு மாற்றத்திற்கும் காரணமாக இருந்தவர் அத்துலத் முதலியே. உண்மையிலேயே இனப் பிரச்சினைக்கான தீர்வை அந்த நாட்களில் எட்டுவது என்பது இந்த நாட்களை விட இலகுவானதாய் இருந்திருக்கும் என்றே கருதுகிறேன்.

இரண்டாவது, இதழில் சந்திரபோஸ் சுதாகரின் நினைவுக் கட்டுரையை கருணாகரன் உருக்கமாக வடித்துள்ளார். சந்திர போஸ் சுதாகர் நான் அக்கராயன்குளம் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக இருந்த போது பாடசாலை மாணவன். எனது சகஊழியரின் மகன். தனது முதல்படைப்பை என்னிடம் காட்டி தனது ஆக்கத்திறனால் என்னை வியப்புற வைத்தவன். குறுகிய காலத்தில் வளர்ச்சி கண்ட அவன் இன்னும் எவ்வளவோ சாதித்திருக்கக் கூடியவன். அவனது பேனாவுக்குத் துப்பாக்கியால் பதில் சொல்லி விட்டார்கள். மனம் கலங்குகிறது.

ச.முருகானந்தன், கொழும்பு-06

### பேருவகை

90களின் பிற்பகுதியிலும் 2000த்தின் முற்பகுதியிலும் பத்திரிகை வடிவில் கண்ட சரிநிகரை - அப்போது நான் பாடசாலை மாணவன் - இப்போது சஞ்சிகை வடிவில் காண்பதில் பேருவகை.

வி.பராபரன், மொரட்டுவை

### ஒற்றைப் பரிமாணப் பார்வை

அசோக ஹந்தக தனது சினிமாக்களில் பல்வேறு தளங்களையும் களங்களையும் கொண்டு வருபவர். ஆனால் டி.சே.தமிழனின் கட்டுரை ஒற்றைப் பரிமாணத்துள் அவரைச் சுருக்கி விடுகிறது. அத்திரைப்படம் மீதான பார்வையும் மிகத் தட்டையாக உள்ளது.

விஜிந்தன், யாழ்ப்பாணம்.

### தவறும் திருத்தமும்

1. கடந்த இதழில் ஐக்கிய அமெரிக்க இராணுவம் X ஐ.நா.அறிக்கை என்ற கவிதைக்கான குறிப்பில் 'ஒள' என வரவேண்டிய 'ஆள' என வந்திருக்கிறது. அதனைத் திருத்தி வாசிக்கவும். இதே போல் ஆசிரியர் தலையங்கத்தில் பாக்கியசோதி சரவணமுத்து அவர்களுடைய பெயர் தவறாக அச்சிடப்பட்டுள்ளது. அதனையும் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம். ஆ-ர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேணுவோம் விடுதலையைப் போற்றி!**

வீடுவயல் வெளிகிழக்கின் விசாலித்து நின்றிருந்த
காடுகுளம் பள்ளி கையெடுக்கும் கோவில் – ஓடுகின்ற
ஆறென்று மகிந்தருள்ள அனைத்தின்றும் எமக்களித்த
பேறிந்த விடுதலையைப் பேண்!

\- ஈழமோகம்




நன்றி : ராவய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே
- பாரதி -

# நம்பிக்கைகளை இழக்கிலோம்

எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு நடாத்திய கணிப்பீட்டில் ஊடக சுதந்திரத்தை மீறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 14வது இடத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் நிமல்ராஜன் கொல்லப்பட்டு ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன.

2000ஆம் ஆண்டு நிமல்ராஜனின் படுகொலையுடன் ஆரம்பித்த ஊடகவியலாளர் மற்றும் ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல் இன்று உச்ச நிலையை அடைந்துள்ளது. அன்றிலிருந்து இன்றுவரை படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களில் ஒருவரது கொலை தொடர்பில் கூட குற்றவாளி இனம் காணப்படவுமில்லை. தண்டிக்கப்படவுமில்லை.

சிவராம் கொலை தொடர்பில் கிடைத்த துப்புக்கள் கூட கோப்புக்களுக்குள் தூங்கிக் கிடக்கின்றன.

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமாக 3 பத்திரிகைகள் மூடப்பட்டுள்ளன.
அந்தப் பத்திரிகைகளுடன் தொடர்புபட்டவர்கள் கொல்லப்படுவதும், கைது செய்யப்படுவதும், அச்சுறுத்தல்களுக்குள்ளாகுவதும் நின்றபாடில்லை.

பிராந்தியங்களைப் பொறுத்தவரை அதுவும் குறிப்பாக வடக்கு கிழக்கு ஊடகவியலாளர்களில் பெரும்பாலானவர்கள் அச்சம் காரணமாக நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்துள்ளனர். இருப்பவர்கள் அச்சுறுத்தலோ நெருக்கடியோ இல்லாமல் தமது பணியை ஆற்ற முடிவதில்லை. சில சந்தர்ப்பங்களில் இந்தப் பிராந்திய ஊடகவியலாளர்கள் ஊடகவியலாளர் அடையாள அட்டையை வைத்திருந்தும் கொழும்பில் இருந்து அனுமதி பெற்று வருமாறு படையினரால் பணிக்கப்படுகிறார்கள்.

ஊழல் மற்றும் மோசடி தொடர்பாக எழுதி வரும் ஊடகவியலாளர் ஊடகவியல் ஒழுக்க விதிகளையும் மீறி செய்தி மற்றும் மூலங்களுக்கான தகவல்களைத் தருமாறு அதிகாரத்தால் அச்சுறுத்தப்படுகிறார்கள். மறுப்பவர்களும் ஒத்தோடாதவர்களும் அரசு சார்ந்த ஊடகங்களால் துரோகிகளாக வர்ணிக்கப்படுகிறார்கள்.

தமக்கு எந்த தொலைபேசி இலக்கத்திலிருந்து அச்சுறுத்தல் வந்தது என ஊடகவியலாளர் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு கொடுத்திருந்தும் அது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாதவாறு பொலிஸார் திண்டாடுகின்றனர்.

தனது உத்தியோகபூர்வ பிஸ்டலை சிரச தொலைக்காட்சி நிறுவனத்திற்கெதிராகவும் பாவிக்கத் தயார் எனப் பகிரங்கமாகத் தெரிவிக்கும் அமைச்சர் ஒருவர் உள்ள ஒரு அரசாங்கத்தில் ஃ நாட்டில் மேற்போந்த நடவடிக்கைகள் எவையும் அசாதாரணமானவையாக இருக்கப் போவதில்லை.

இப்போது எல்லாவற்றுக்கும் மேலாக ஆயுதக் கொள்வனவு தொடர்பில் இடம்பெற்ற ஊழல்களை ஊடகங்கள் அம்பலப்படுத்தத் தொடங்கியதால், இப்போது போர் தளபாடக் கொள்வனவு மற்றும் புலனாய்வு அறிக்கையிடலை தடை செய்யும் விதத்தில் புதிய அவசரகால விதிகளை அரசாங்கம் அமுல்படுத்தவுள்ளதாகத் தெரிய வருகிறது.

அரசாங்கம் எடுத்து வரும் இந்த நடவடிக்கைகள் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறலுக்கு எதிரான ஒரு நடவடிக்கையாக அமையப் போகிறது. இந்தப் புதிய விதிகள் மூலமாக அரசாங்கம் கருத்து தெரிவிக்கும் மற்றும் அறிந்து கொள்ளும் சுதந்திரத்தை மறுக்க முனைகிறது என்றும் சுதந்திர ஊடக அமைப்பு குற்றம் சாட்டியிருக்கிறது.

பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பர். இங்கும் பிணம் தின்னச் சாத்திரங்கள செய்யப்படுகின்றன.

எல்லா நம்பிக்கைகளும் உதிர்ந்து போய்விட்ட மக்கள், அந்நிய நாட்டிலிருந்து வரும் ஒவ்வொரு அதிகாரியிடமும் சென்ற தெருப்பிச்சைக்காரர்களைப் போல அழுது முறையிடுகிறார்கள்.

தாம் இழந்து விட்டவைகளுக்காகவும், இன்னும் ஏதாவது இழக்க எஞ்சியிருந்தால் அவற்றிற்காகவும்.

எந்த நம்பிக்கையும் இல்லாவிட்டாலும் கூட, நம்பிக்கைகளை உருவாக்குவதும் படைப்பதும் நமது கடமையாக இருக்க வேண்டும் என்கிறார் பலஸ்தீனக் கவிஞரான மஹ்முத் தார்வீஷ்.

அது நமக்கும் பொருத்தமானது தான்!

வெளியீடு
சரிநிகர்,
237/22, விஜயகுமாரதுங்க வீதி,
கொழும்பு – 05.
☎: 5674225
✉: sarinihar@gmail.com

அச்சுப் பதிப்பு
நவமக அச்சகம்,
66/4, ஸ்ரீதர்மராம வீதி,
இரத்மலானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது புதிய வெளியீடுகள்




# தமிழின் கவிதையியல்

**கார்த்திகேசு சிவத்தம்பி**
தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரிய, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலக்கிய நிலைப்பட்ட தமிழ்க் கவிதையின் ஆக்கம், அமைப்பு, கருத்துநிலை அடிப்படைகள் பற்றிய வலுவான தமிழாய்வு இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் இலக்கிய நிலைப்பட்ட தமிழ்ப்பா கவிதையின் இடையறாப் பாய்வு பற்றிய ஒரு பார்வையினைத் தரும் இந்நூல் முதலில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறையில் (2004) விரிவுரைத் தொடராக வழங்கப்பெற்றது. நூல் நிலையில் தலைப்பு "தமிழின் கவிதையியல்" என மாத்திரமே நிற்பினும், புலமை நிலையில் இது ஒரு "தேடலாகவே" அமைகின்றது. சங்க இலக்கியங்கள், அற இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், அரசவை இலக்கியங்கள், கோயில் இலக்கியங்கள், சமூக நோக்கு இலக்கியங்கள் எனப் பேரலைகள் பல மேற்கிளம்பிய தமிழ்க் கவிதையின் அடிப்படைகளை இனங்கண்டுகொள்வதற்குதவும் வகையில் இந்நூலிலே காலநிலைப்பட்ட தமிழ்க் கவிதையோட்டத்தின் பருநிலைப் பார்வை தெளிவாக்கப்படுகின்றது.

பொருளடக்கம்: முகவுரை/ தொல்காப்பியத் துணையின்றிச் சங்கப் பாடல்கள்/ தொல்காப்பியம் சுட்டும் இலக்கிய ஆக்கக் கொள்கைகள்/ சங்கப்பின் பாடல் மரபு/ பாட்டியல் மரபிற் பாரிய மாற்றங்கள்/ தமிழ்க்கவிதைப் பாய்வின் திருப்புமுனைகள்/ கட்புல, செவிப்புல ஊடகங்களில் தமிழ்க்கவிதை/ நிகழ்த்தாத நிறைவுரை/ பின்னிணைப்பு: ஈழத்துத் தமிழ்க்கவிதைமரபு - ஒரு சுருக்கம்/ உசாத்துணை நூல்கள் பற்றிய ஒரு குறிப்பு/ சுட்டி.

**ISBN 978-955-659-068-4 / 248 Pages (XIV + 233)/ 145mm x 215mm/ Price Rs. 500/=**



# வன்னியின் கதை
முல்லைமணி வே. சுப்பிரமணியம்

"வன்னியின் கதை" என்னும் இந்நூல் வன்னியின் வாழ்வியலைச் சமூக, பொருளாதார, பண்பாட்டு பின்னணியிலே ஆய்வு செய்கிறது. வன்னிபிரதேசத்தின் வரலாறு, பொருளியல், கல்வி, கலைகள், வைத்தியம், இலக்கியம், சமயம், நீர்ப்பாசனம் முதலான பல அம்சங்களை உள்ளடக்கிய முதல் நூல் இதுவாகும். வன்னிப் பிரதேசம் பற்றி ஏற்கனவே வெளிவந்த நூல்கள், கட்டுரைகள், ஆவணங்கள், பதிவேடுகள் முதலானவற்றை உள்வாங்கி, ஆசிரியரின் பட்டறிவையும் பயன்படுத்தி இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது. வன்னிப்பிரதேசம் பற்றி அறிய விரும்பும் பொது வாசகர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் வேண்டிய தகவல்களை இந்த நூல் கொண்டுள்ளது.

**ISBN 978-955-659-066-8 / 240 Pages (XIV + 200)/ 145mm x 215mm/ Price Rs. 400/=**




# இலங்கையில் முஸ்லிம் நுண்கலை

**எம். எஸ். எம். அனஸ்** - முதுநிலை விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கையில் முஸ்லிம்களின் நுண்கலை மரபும் கலை பற்றிய சிந்தனைகளும் இந்நூலின் பிரதான விடயப்பொருள்களாகும். முஸ்லிம்களின் கலை ஈடுபாடு, இரசனையியல் உணர்வு என்பன மனிதப் பொது இரசனையின் அம்சமாக ஏன் கொள்ளப்பட்டிலது என்பதும் கலை தொடர்பான முஸ்லிம்களின் எதிர்ப்புணர்வுகளின் யதார்த்தம் என்ன? என்ற வினாவும் இந்நூலில் பேசப்படும் மற்றும் சில விடயங்களாகும். கலைக்கெதிரான மனோபாவங்கள் எவ்வாறு இருந்தபோதும் கலைத்துறையில் முஸ்லிம்களின் சில சாதனைகள் மகத்துவம் மிக்கவை. முஸ்லிம்களிடையே நிலவும் கலைகளுக்கு ஆதரவற்ற மனோபாவம் எதை அடிப்படையாகக் கொண்டது என்ற வினா தொடர்ச்சியான கருத்துப் பரிமாற்றத்துக்கு உரியது. இது இந்நூல் முழுக்கவும் விரவிநிற்கும் ஒரு பொது விமர்சன நோக்கு எனக் குறிப்பிடலாம்.

**ISBN 978-955-659-072-2 / 140 Pages (XII + 128)/ 145mm x 215mm/ Price Rs. 400/=**

## குமரன் புத்தக இல்லம்
361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12. தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை – 600 026

அகன்ற ஆழ்ந்த அறிவிற்காய் Towards Wider and Deeper Knowledge


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் சொல்வது சரிதான்!



வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு "விடுதலையைப்" பெற்றுக் கொடுத்து விட வேண்டுமென்கிற "மகத்தான லட்சியத்துடன்" ஆயுதமேந்திப் போராடிக் கொண்டிருக்கும் இலங்கை அரச படையினர். தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வந்திருக்கும் பிரதேசங்களில் வாழும் விடுவிக்கப்பட்ட மக்களுக்காக ஆற்றிவரும் சேவை மகத்தானது. அரசாங்கத்தின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெலவைக் கேட்டால். உலகத்தில் வேறெந்த நாட்டில் இருக்கும் படைகளும் செய்யாத சேவைகளை இலங்கைப் படைகள் செய்து வருவதாக கூறி வருகிறார்.

நாளொன்றுக்குக் குறைந்த பட்சம் நான்கு பேராவது சராசரியாக யாழ் குடாநாட்டிலும், அதேயளவு கிழக்கிலும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வழக்குக் கிழக்கிற்கு வெளியே கொல்லப்படுபவர்கள், இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை. இந்தக் கொலைகள் பற்றிய பத்திரிகைச் செய்தியைப் படிப்பவர்கள், இவை இராணுவ. முகாம்கள். காவலரண்களுக்கு மிக அண்மித்த இடங்களிலும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கும் நேரங்களிலுமே அதிகமாக நடக்கின்றன என்பதை அறிந்திருப்பர். தப்பித்தவறி இவ்வாறில்லாத ஒரு நேரத்திலோ இடத்திலோ நடந்த கொலையாக இருந்தால் கொல்லப்பட்டவர் புலியாக இருப்பதும் பத்திரிகைகளில் வருகின்ற செய்திதான். கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்படுவதும் காணாமற் போவதும் மிகச் சாதாரணமாகி விட்டன. மாணவர்கள் முதல் முதியோர் வரை கடத்தல் தொடர்கிறது. யாழ் மனித உரிமை ஆணையகத்தில் தஞ்சம் கோரிச் சரணடைவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.
யாழ்ப்பாணத்திலும் சரி, தீவுப் பகுதிகளிலும் சரி இத்தகைய ஆட்கடத்தல்களிலும். கொலைகளிலும் ஈடுபடுவோர் எந்தவித அச்சமும் இன்றித் தமது கைங்கரியத்தைக் காட்டி வருகிறார்கள். ஆயுதந் தரித்த இந்தக் கடத்தல்காரர்கள் யாராவது ஒருவரைப் பெயர் கூறி விசாரித்ததாக தகவல் கிடைத்தாலே ஓடிப் போய் மனித உரிமைகள் ஆணையகத்தில் தஞ்சம் கோர வேண்டிய நிலை அங்கு ஏற்பட்டுள்ளது.

கடத்தப்பட்டவர்கள் கொல்லப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் பதியப்படுகின்றன. நீதிபதி சடலம் போடப்பட்டிருக்கும் இடத்திற்குச் சென்று பார்வையிடுகிறார். மருத்துவ அதிகாரி துப்பாக்கியால் சுடப்பட்டதால் ஏற்பட்ட கொலை என்று அறிக்கை எழுதுகிறார். ஆனால், ஆயுதமேந்தியவர்கள் யாரும் கைது செய்யப்படுவதில்லை. கடத்தல்கள் நின்றபாடுமில்லை.

இலங்கை அரசாங்கத்தின் படையினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசத்து மக்களது "விடுதலை" இவ்வாறு இருக்கிறது. கெஹலிய ரம்புக்வெல சொல்வது சரிதான். ஏனைய நாடுகளில் இராணுவத்தினர் தாம் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசத்திலுள்ள ஆக்கிரமிப்புக்குள்ளானவர்களை கொல்வதற்கும் களை எடுப்பதற்கும் ஒப்பந்தக்காரர்களை வைத்திருப்பதில்லை. தாமே அவற்றைச் செய்கின்றனர். அந்த விதத்தில் இலங்கைப் படையினர் போல் வேறெந்தப் படையினரும் நடப்பதில்லை என்பது உண்மைதான். ●

# இடரும் தொடரும்

இடர்முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகளுக்கென்று ஒரு அமைச்சு இங்கே இருக்கிறது. அதன் அமைச்சர் மகிந்த சமரசிங்க.

இடர் முகாமைத்துவம் என்றால் இடர் வரும் போது அந்த இடரினால் பாதிப்புக்கள் ஏற்படும் போது அவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும் அதற்கு வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் பற்றிய திட்டமிடலுக்கும் அவற்றை முகாமை செய்யவும் என்று இந்த அமைச்சு உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஆனால். பெரும்பாலான இன்றைய அமைச்சர்களைப் போலவே இந்த அமைச்சுக்கான அமைச்சரும் தனது அமைச்சின் பணி நாட்டுக்கும் மக்களுக்கும் இடர் ஏற்படுத்துவதற்கான முகாமைத்துவத்தை செய்வது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார் என்று தோன்றுகிறது. அல்லது அதுதான் அவரது பணி என்று அவருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

ஏனென்றால். ஐ.நாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஒன்று இங்கு நிறுவப்பட வேண்டும் என்ற அண்மையில் இங்கு வந்திருந்த ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் லூயிஸ் ஆபர் தெரிவித்த கருத்தை இந்த அமைச்சர் கண்டிப்பாக மறுத்திருக்கிறார்.
இப்படிப்பட்ட ஒரு மறுப்பை ஒரு அமைச்சர் தெரிவிப்பதற்கு வேறெந்தக் காரணமும் இருக்க முடியாது. தாம் திட்டமிட்டுள்ள இடர்களை ஏற்படுத்தும் நோக்கத்திற்கு இது தடையாக இருந்துவிடும் என்பதே அவரை இவ்வாறு மறுக்க வைத்திருக்கிறது.

ஐ.நா கண்காணிப்புக் குழு ஒன்று நிறுவப்படுவதினால் இங்கேயுள்ள இடர்தரும் நடவடிக்கைகள் நின்றுவிடும் என்று நம்புவதற்கேற்ற ஆதாரங்களைக் கொண்ட ஒரு நாடு அல்ல இலங்கை. தவிரவும் ஐ.நா வின் கண்காணிப்புக் குழுக்கள் தருகின்ற தகவல்கள் அடிப்படையில் ஐ.நா பெரிய நடவடிக்கைகள் எதையும் எடுத்துவிடப் போவதும் இல்லை.



அப்படி இருக்க அமைச்சர் இப்படி அவசர அவசரமாக மறுத்ததற்கு என்ன காரணம்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே தெரியாமல் இடர்செய்தலை நடாத்த விரும்புகிறதா அரசாங்கம்?

ஆக, மனித உரிமை மீறல்கள் மட்டுமல்ல, இடர்களும் இன்னமும் தொடரத்தான் போகின்றன.

## கொஞ்சம் யோசியுங்கள்!



“அரசாங்கத்திலிருந்து எம்மவர்கள் விலகினாலும் நாம் அரசாங்கத்திற்கோ ஜனாதிபதிக்கோ எதிரானவர்கள் அல்ல!” என்று அறிவித்திருந்தார் ஆறுமுகம் தொண்டமான். அரசாங்கத்தில் சேர்வதிலும் விலகுவதிலும் பின் இரண்டுக்குமே நியாயம் கூறுவதிலும் ஆறுமுகம் தொண்டமானுக்கு இணையாக வேறொரு அரசியல்வாதி இப்போது யாரும் கிடையாது. அமைச்சர் சந்திரசேகரன் இவ்விடயத்தில் சற்று அதிகமான சாதனைகளைப் படைப்பாரென்று தோன்றிய போதும், ஆறுமுகம் தொண்டமான் இப்போது அவரையும் தூக்கி வீசிவிட்டார். என்ன இருந்தாலும் அவர் யார்? சௌமியமூர்த்தி தொண்டமானின் பேரனல்லவா? மீன் குஞ்சுக்கு நீச்சல் பழக்கவா வேண்டும்? அது அவரோடு கூடப்பிறந்த பாரம்பரியச் சொத்தல்லவா?
இவர் இப்படிச் சொல்லிய போதே அரசாங்கத்துடன் திரும்பவும் சேர அத்திவாரம் இட்டிருக்கிறார் என்ற ஊகத்தை இப்போது அவர் உறுதி செய்துவிட்டார்

ஆனாலும், எல்லோருக்கும் உறைக்கிற ஒரு விடயத்தையும் சொல்லியாக வேண்டும். என்ன இருந்தாலும் மலையக மக்களை முழு முட்டாள்களாக நினைத்துக் கொண்டு இப்படி அவர் தொடர்ந்து செய்து கொண்டிருப்பது அவ்வளவு நன்றாக இல்லை. அவர்கள் இ.தொ.காவினதோ அவர்கள் உறுப்பினர்களதோ தொழில் பேரத்தில், அரசியல் வியாபாரத்தில் கிடைக்கின்ற இலாபத்தில் தங்களுக்கும் பங்கு தரும்படி ஒருபோதும் கேட்டதில்லை. இனியும் கேட்பார்கள் என்று தோன்றவில்லை. அப்படி இருக்க இப்படியெல்லாம் செய்ய வேண்டிய அவசியம் தான் என்ன?


தொண்டமான் அவர்களும் அவரது கட்சியும், அரசாங்கத்திற்கோ ஜனாதிபதிக்கோ எதிரானவர் அல்ல என்பதை அவர் சொல்லித்தான் மலையக மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். இல்லாவிட்டால் எந்த அரசாங்கம் வந்தாலும், எந்த ஜனாதிபதி வந்தாலும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ள எப்படி இ.தொ.காவுக்கு முடிகிறது என்பதை அவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாதா என்ன?

ஆனால் அவர்களுக்கு இன்னமும் ஊசலாடிக் கொண்டிருக்கிற ஒரு நம்பிக்கை இருக்கிறதே. அதாவது, இ.தொ.கா. இன்னமும் தமது கட்சிதான் என்ற நம்பிக்கை. அதைப்பற்றிக் கொஞ்சம் பேசுவது நல்லது. இல்லாவிட்டால் விரைவிலேயே மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த இ.தொ.கா என்கிற “புறோக்கர்” எமக்கு எதற்கு நேரடியாகவே ஐ.தே.கவுக்கோ அல்லது சுதந்திரக்கட்சிக் கூட்டணிக்கோ வாக்களித்தால் சரி என்ற முடிவுக்கு அவர்கள் வந்துவிடப் போகிறார்கள்.

ஆறுமுகம் தொண்டமான் அவர்கள் எப்பொழுதும் அமைச்சர் தொண்டமானாக இருக்க வேண்டாமா? கொஞ்சம் சிந்திப்பது நல்லது!

## கைகொடுத்த தெய்வம்!

இலங்கை அரசாங்கத்திற்கும், அமைச்சர்களுக்கும் குறிப்பாக அமைச்சர் பெர்னாண்டோபுள்ளேக்கும் திடீரென தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பெரும் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது! இலங்கை அரசாங்கத்தின் புதிய எம்.பியாகப் பாராளுமன்றில் நுழைந்திருக்கும் ஜனாதிபதியின் சகோதரரான பசில் ராஜபக்ஸவுக்கு ஊடகங்கள் ஏற்படுத்தி வந்த களங்கத்தை தமிழ்ச்செல்வனின் பேட்டி துடைத்து விட்டதுதான் இதற்குக் காரணம். புலிகள் எப்போதும் பணத்திற்காக கொள்கையை விற்க மாட்டார்கள் என்று அரச தரப்பு அமைச்சர்களே வாக்குமூலம் கொடுக்கும் அளவுக்கு அந்த மதிப்புப் பெருகி இருக்கிறது.



ஜனாதிபதிக்குக் கிடைத்த பதவி, புலிகள் தமிழ்மக்களை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தேவையில்லை என்று அறிவித்ததன் காரணமாகக் கிடைத்த வெற்றிதான் என்பது உலகறிந்த விடயம். ஆனால் புலிகள் வாக்களிக்கத் தேவையில்லையென்று அறிவித்ததும் வாக்களிப்பை நடத்தாமல் இருப்பதை உறுதி செய்து கொண்டதும் அரசாங்கத்திடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு செய்த செயல்தான் என்ற குற்றச்சாட்டு கடந்த ஆறு மாத காலமாக முன் வைக்கப்பட்டு வருகிறது. ஐ.தே.க இதையொரு முக்கிய அரசியல் பிரச்சினையாகக் கிளப்பி விட்டு வருகிறது. ஜனாதிபதிக்கு இது பெருத்த அவமானமும், அரசியல் பிரச்சினையும் நிறைந்த தலையிடியாக மாறிவிட்டுள்ளது. போதாக்குறைக்கு அந்தப் பணத்தைக் கொடுத்தது ஜனாதிபதியின் சார்பில் பசில் ராஜபக்ஸ தான் என்று அரசாங்கத்திலிருந்து தூக்கியெறியப்பட்ட மங்கள சமரவீரவும், ஸ்ரீபதி சூரியாராச்சியும் தெரிவித்தது அவருக்கு மிகப் பெரிய அதிர்ச்சியூட்டும் நெருக்கடியாகி விட்டது.

பாவம், இதிலிருந்து மீள அவர் எத்தனையோ நடவடிக்கைகளில் இறங்கினார். ஆனால், அவை எவையும் பெரிய வெற்றியை அவருக்குத் தரவில்லை.

ஆனால், இவ்வளவு காலமும் மௌனமாக இருந்த புலிகளின் சார்பில் இப்போது தமிழ்ச்செல்வன் தாம் பணம் பெறவில்லையென்று அறிவித்திருக்கிறார். ஜனாதிபதி நிம்மதிப் பெருமூச்சு விட அவர் உதவியிருக்கிறார்.

உண்மையில் சொல்லப் போனால் மகிந்த ராஜபக்ஸ பணம் கொடுத்தாரா என்பது ஒரு பிரச்சினையே அல்ல.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலுக்காகப் பணம் கோடி கோடியாகக் கொடுக்கப்படுவது ஒன்றும் ஊரறியாத இரகசியம் அல்ல. ஆனால் புலிகளுக்குப் பணம் கொடுக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டை இன்றுவரை புலிகள் மறுக்காமல் இருந்தது பெரிய ஆச்சரியமான விடயம். அதைவிட ஆச்சரியம் பணம் பெற்றுக் கொண்டு தேர்தலில் பங்களிக்குமாறு கோரியதாகக் கூறும் குற்றச்சாட்டை மறுக்காமல் இருந்தது தான்.

பணம் வாங்குவதும் அதற்கேற்ப அரசியல் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதும் கூட இலங்கை அரசியலில் ஒன்றும் புதிய விடயம் அல்ல. ஆனால் விடுதலைப் புலிகள் இதை இவ்வளவு காலமும் மறுக்காமல் இருந்தது மிகப் பெரிய ஆச்சரியம். ஆனால் ஜனாதிபதி பிரேமதாசவிடம் ஆயுதம் வாங்கியதும், இந்தியப்படையைச் சந்திக்க அவரோடு நட்புப் பாராட்டியதும் இராஜதந்திரம் என்றால், இதுவும் அதுபோல இன்னொரு இராஜதந்திரம் என்று புலிகள் நினைத்திருக்கக் கூடும்.

இராஜதந்திரம் தந்திரோபாயம் என்று எதுவாக இருந்தாலும் அது நன்மை தரும் என்றால் அதைப் புலிகள் மேற்கொள்வார்கள் என்று விளக்கம் கூறும் பத்திரிகையாளர்களும் அறிவுஜீவிகளும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள்.



சரிதான். அரசுகளுக்கிடையிலான போரில் மக்கள் எப்பவுமே பகடைக்காய்கள் தான் என்ற உண்மையை இந்த அபிப்பிராயங்கள் உறுதி செய்கின்றன.

தேர்தலைப் புறக்கணிக்குமாறு புலிகள் கோரியதற்கு அவர்கள் கூறிய காரணம் மகிந்த ராஜபக்ஸவை வெல்ல வைப்பது தான் என விமர்சிக்கப்படுகையில் மௌனம் காத்தது சம்மதத்தின் அறிகுறியாகத்தான் கருதப்பட்டு வந்தது.

ஆனால் இப்போது தமிழ்ச்செல்வன், தாம் பணம் பெறவில்லையென்ற கருத்தை மட்டும் முன் வைத்திருக்கிறார். தேர்தலைப் பற்றி அவர் எதுவும் சொல்லவில்லை. இதைவிட முக்கியமான இன்னொரு விடயத்தையும் அவர் சொல்லியிருக்கிறார். அதாவது பணம் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுவது உண்மையானால் அது எமது பெயரால் யாராவது பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்பதுதான், அது. இந்த "வேறு யாராவது" என்ற தமிழ்ச் செல்வனின் கத்தி இருபக்கமும் கூரான கத்தி. ஒரு புறத்தில் அது ஜனாதிபதி பணம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டையும், மறுபுறத்தில் புலிகள் பெற்றுக் கொண்டார்கள் என்பதையும் அறுத்து விட்டிருக்கிறது. இது ஜனாதிபதியின் இன்றைய பிரச்சினையில் பாதியைக் குறைத்து விட்டிருக்கிறது.

ஆனால், பாவம் தமிழ்ச்செல்வன் இலங்கை அரசாங்க அமைச்சர்களின் பாராட்டால் தனது வழமையான புன்னகைக்கும் அதிகமாக அவர் சந்தோசப்பட்டுப் புன்னகைக்கலாம். இந்தக் காலம் தாழ்த்திய மறுப்பு அரசியல் ரீதியில் ஆபத்தான மறுப்பு என்பதை அவர் கவனிக்கத் தவறி விட்டார்.

கூடவே அவர் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார். பாராளுமன்றத்தில் தனது முதற் பேச்சில் தான் புலிகளைப் பார்த்ததேயில்லையென்று பசில் ராஜபக்ச கூற தமிழ்ச்செல்வனோ அவர் வந்து சந்தித்தாரென்றும் தங்களுக்கு ஒரு பிரேரணையைத் தந்தாரென்றும் கூறியிருக்கிறார். அதுவும் தங்களுடைய அரசியற் பிரிவை அல்ல, தங்களுடைய நிர்வாகப் பிரிவையே சந்தித்து பிரேரணையைக் கொடுத்தார் என்றும் வேறு சொல்லியிருக்கிறார். அது என்ன பிரேரணை என்பது இதுவரை யாருக்கும் தெரியாது.

கூடவே தங்களைச் சந்திக்க ரணிலும் முயன்றார் என்ற போதும் அது கைகூடவில்லையென்ற தகவலையும் அவர் கூறியிருக்கிறார்.

ஆக, இந்தத் தகவல்கள் எவையும் அரசியல் முக்கியத்துவமுடைய தகவல்கள் இல்லையா? இத்தனை காலம் மௌனம் காக்கும் அளவுக்கு இவை அற்ப விடயங்கள் தானா?

தமிழ்ச்செல்வனுக்குத்தான் தெரியும்!

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. இராஜதந்திரம் வேறு. தந்திரோபாயம் வேறு. தந்திரோபாயத்தில் அதிகளவு நம்பிக்கை வைத்தால் அது இராஜதந்திரிகளைக் கூட தன் வழிக்கு இழுத்துச் சென்று விடும். எதற்காக எது நடக்கிறது என்பது தெரியாமற் போய்விடும். ஏற்கெனவே இன்று நடக்கிற யுத்தம் வெறும் யுத்த வெறி காரணமாகத்தான் நடக்கிறது என்று நம்புகிற ஒரு பரம்பரை உருவாகிக் கொண்டிருக்கிறது.

அரசியல் தந்திரோபாயங்களில் நம்பிக்கை வைத்து, அதனால் கிடைக்கின்ற குறுகிய கால லாபங்களை மட்டும் கணக்கிலெடுத்து செயற்படும் அரசியலில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் நம்புகிற ஒரு விடயம் தான், வழிமுறை எப்படி இருந்த போதும முடிவு அதை நியாயப்படுத்தி விடும் என்பது.

ஆனால் தமிழ்ச் சினிமாவில் மட்டும்தான் அது உண்மையாக காட்டப்படுகிறது. நிஜவாழ்வில் அது முடிவையே தலைகீழாக மாற்றி அமைத்து விடுகிறது.

கண்ணுக்கு முன்னாலேயே இதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன.

சந்திரிகா அம்மையாரின் அரசியல் இதற்குப் பொருத்தமான அண்மைய உதாரணம்.

இதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். கொள்வார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீரும் காத்திருப்பும்!

## காணாமல் போகும் கதை

சுதா

மனித உரிமை மீறல்களை ஒரு கலையாகப் பயின்று வரும் இலங்கையில் 1971இல் இருந்தே மனிதர்கள் காணாமல் போவது என்பது ஒரு வகையில் சாதாரண விடயமாகி விட்டது. அக்காலப் பகுதியில் ஜே.வி.பி யுடன் தொடர்புடைய சுமார் 10,000 பேர் கடத்தப்பட்டு, காணாமல் போய் பின்னர் கொலை செய்யப்பட்டனர்.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த வெவ்வேறு அரசாங்களின் போது வடக்கு, கிழக்கு, தெற்கு என நாட்டின் அனைத்து பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர். இது ஒரு சாதாரண விடயமாகவே பல சந்தர்பங்களில் ஆட்சியாளர்களால் கருதப்பட்டது. கண்துடைப்புக்காக விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. காணாமல் போவது என்பதை சில சந்தர்பங்களில் அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்தவர்கள் கூட நியாயப்படுத்தியுள்ளனர்.

1987 முதல் 1991 வரையிலான காலப்பகுதியில் தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்கள் மேற்கொண்ட அரசிற்கு எதிரான எழுச்சியின் போது ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். இடதுசாரி செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், வழக்கறிஞர்கள், ஊடகவியலாளர்களென பலர் இவ்வாறு காணாமல் போய் பிணங்களாகவே கண்டுபிடிக்கப்பட்டனர். சிலர் காணாமல் போனவர்களாகவே தொடர்ந்தும் உள்ளனர். 1988,-1990 ஆண்டுகளில் வீதியோரங்களிலும் நதிகளிலும் பிணங்களைக் காண்பது சாதாரண காட்சிகளாக இருந்தன. எழுச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பியினரும் அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சியினரும் இதற்குப் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருந்தனர்.

இவ்வாறாக சுமார் 60,000 ஆண்களும் பெண்களும் காணாமல் போய் அல்லது படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தெற்கில் காணாமல் போன இந்த இளைஞர்கள் என்ன ஆனார்கள் என்று தெரிந்து கொள்வதற்கு 1990 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அன்னையர் முன்னணியில் இணைந்து அன்று எதிர்க்கட்சியில் இருந்த இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவும் அயராது உழைத்தனர். இவர்களாலும் ஒரு எதிர்ப்பு அணியை உருவாக்க முடிந்ததே தவிர பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்நாள் வரை நியாயம் கிட்டவில்லை. தற்போதும் 1980களின் இறுதியில் காணாமல் போன இளைஞர்கள் அவர்களது பெற்றோரால் தேடப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

70களிலும் 80களிலும் தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்கள் காணாமல் போன யுகம் மாறி 90களின் நடுப்பகுதிகளிலிருந்து தமிழ் இளைஞர்கள் பெருவாரியாக குறிப்பாக வடக்கிலிருந்து காணாமல் போகும் யுகமாற்றம் ஏற்பட்டது.

95, 96ஆம் ஆண்டுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ் குடாநாட்டை படையினர் மீட்ட பின்னர் மனித உரிமை மீறல்கள் பற்றி பல புகார்கள் வெளியாக ஆரம்பமாகின. குறிப்பாக காணாமல் போவது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டது.

1996 மார்ச் மாதம் சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கையின் நிலைமையை ஆராய்வதற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டது. இக்குழுவினர் வெளியிட்ட அறிக்கையில் 1995 ஏப்ரல் மாதத்தில் இருந்து யாழ் குடா நாட்டில் ஆயிரக்கணக்கானோர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டுள்ளதோடு நூற்றுக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டு மற்றும் காணாமல் போயிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

படையினரின் பங்களிப்போடு இலங்கையின் வடக்கு கிழக்கிலும் மற்றும் கொழும்பிலும் 1996ஆம் ஆண்டு பிற்பகுதியில் பலர் காணாமல் போயிருப்பதாக அமெரிக்க ராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ் குடாநாட்டில் 300இற்கும் அதிகமானவர்களும் நாட்டின் ஏனைய பகுதிகளில் 50இற்கும் மேற்பட்டவர்களும் இக்காலப்பகுதியில் காணாமல் போயுள்ளதாகவும் அவ்வறிக்கை மேலும் சுட்டிக்காட்டுகிறது.

1970களில் காணாமல் போன தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களும் 90களின் பின்னர் காணாமல் போகும் தமிழ் இளைஞர்களும் பல்வேறுபட்ட அரசியல் புறச்சூழல்களின் காரணமாக பாதிககப்பட்டுள்ளனர். ஆனால் இவர்களில் எவருமே மீளத் திரும்பி வரவில்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் சபையின் காணாமல் போனோர் தொடர்பாக பணியாற்றும் குழுவினர் இலங்கையின் 5749 சம்பவங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

"காணாமல் போவது" என்பது இல்லாது போவது அல்லது தொலைந்து விடுவது என்று அர்த்தப்படுகின்றது. ஆனால் இலங்கையில் காணாமல் போவது என்பது வெறுமனே இல்லாமல் போவதல்ல அதற்கு யாரோ ஒருவர் பொறுப்பாக இருக்கிறார். காணாமல் போனவர்களாக கூறப்படுபவர்களுக்கு எங்கு என்ன நடந்தது என்று யாரோ ஒருவருக்குத் தெரிந்து இருக்கிறது. ஆனால் அது சட்டத்திற்கு புறம்பாக மனித விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இடம் பெறுவதால் வெளித்தெரியாத விடயமாகவே இருந்து விடுகிறது.

இவ்வருட முதல் பகுதியில் மாத்திரம் கொலை செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் 70.7 சத வீதமானவர்கள் தமிழர்கள், இக்காலப்பகுதியில் கொலை செய்யப்பட்ட சிங்களவர்கள் 9.1 வீதமாகவும் முஸ்லீம்கள் 5.9 சதவீதமாகவும் உள்ளனர். இவர்களுள் பெரும்பாலானவர்கள் காணாமல் போனவர்களுக்குள்ளும் உள்ளடங்கியுள்ளனர்.

யாழ்மாவட்டம் கொலை, கடத்தல்களில் முன்னிலையில் உள்ளது. மொத்தக் கொலைகளில் 23.2 சதவீதமும் காணாமல் போனவர்களில் 49.5 சதவீதமானவர்களும் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். மட்டக்களப்பில் 21.5 சதவீதத்தினரும் வவுனியாவில் 21.3 சத வீதத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர். மொத்த கடத்தல் சம்பவங்களில் 17.7 சத வீதமானோர் கொழும்பில் இருந்தே கடத்தப்பட்டுள்ளனர்.

அரசியல், கப்பம் பெறல் போன்ற பல காரணங்களிற்காக கடத்தல்களும் காணாமல் போகும் சம்பவங்களும் மலிந்து காணப்படுகின்றன. ஒருவர் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படும் உரிமைக்கு சாவு மணி அடிக்கும் இந்த சம்பவங்களுக்கு பெரும்பாலும் இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வான்கள் காரண கர்த்தாக்களாக உள்ளன. இது நாட்டின் வடக்கு, கிழக்கு, கொழும்பு என்று வேறுபாடின்றி ஒரு பொது இலட்சணமாக உள்ளது.

இந்நிலவரம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஆசிய மனித

# அச்சத்தில் உறையும் கதை!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை ஆணைக்குழுவின் நிறைவேற்று இயக்குனர் பெசில் பெர்னாண்டோ " காணமல் போவது தொடர்பான தற்போதைய நிலைமை ஒரு பயங்கர சூழலை ஏற்படுத்தி நாடு முழுவதிலும் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வருடம் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் மாத்திரம் சுமார் 60 பொதுமக்கள் தாம் கடத்தப்பட்டு காணாமல் போய்விடுவோம் அல்லது கொலை செய்யப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தில் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவிடம் தஞ்சம் புகுந்துள்ளனர். தற்போதும் தினமும் குறைந்த பட்சம் இருவரேனும் பாதுகாப்புத்தேடி ஆணைக்குழுவிடம் வருகின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பு அரணாக யாழ் சிறைச்சாலைகளை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

சிவில் அமைப்புகள் வெளியிட்டுள்ள அரையாண்டு அறிக்கையில் 396 பேர் காணாமல் போயிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. காணாமல் போதல் மற்றும் மனித உரிமைகள் மீறல் குறித்து கண்காணிக்கும் மக்கள் கண்காணிப்புக்குழு செப்ரம்பர் மாதம் இறுதிவரை தமக்கு 153 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் கூறியுள்ளது. அவற்றில் 147 குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளது. ஆனால் இடம்பெறும் சம்பவங்களைப் பார்க்கும் போது இந்த எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு இருக்கலாம் என அவதானிகள் கணிக்கின்றனர்.





நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போகும் சம்பவங்கள் உள்நாட்டு மனித உரிமை ஆர்வலர்களின் கவனத்தை மட்டுமின்றி சர்வதேச கவனத்தையும் ஈர்த்துள்ளது. இம்மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகள் அரசாங்கம், இராணுவம் மற்றும் அதனோடு சேர்ந்து இயங்கும் துணை ஆயுத குழுக்கள் மீது நேரடியாகக் குற்றஞ் சுமத்துகின்றன.

இலங்கை அரசாங்கம் தன்மீதான குற்றச்சாட்டை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அடியோடு மறுத்து வருகின்றது. யுத்தம் இடம் பெறும் நாடொன்றில் மனித உரிமைகள் மீறப்படுவது ஒரு சாதாரண நிகழ்வென்று சில சந்தர்ப்பங்களில் ஆளும் தரப்பு அமைச்சர்களால் நியாயம் கூறப்படுகின்றது. குறிப்பிட்ட சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கு ஆணைக்குழுக்களையும் மனித உரிமைகளுக்காக அமைச்சையும் மாத்திரமே அரசாங்கம் நிறுவியிருக்கிறது.

காணாமல் போதல் மற்றும் கொலைகள் பற்றி விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி மகாநாம திலகரத்ன தனது அறிக்கையில் 2006 ஆம் ஆண்டு செப்ரம்பர் 13 ஆம் திகதியிலிருந்து 500 பேர் காணாமல் போயிருப்பதாகவும் அதில் பலர் வீடு திரும்பியுள்ளது அவதானிக்கப்படாமல் விடப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் " தற்போது நாட்டில் பிரகடனப்படுத்தாத யுத்தம் நிலவுகிறது. கொலைகள் போன்ற சம்பவங்கள் யுத்தம் நிலவும் நாடொன்றில் இவை சாதாரண நிகழ்வுகள்" எனக் கூறி இன்று நாட்டில் இடம்பெறும் கொலைகளையும் காணாமல் போகும் சம்பவங்களையும் சாதாரண நிகழ்வுகளாக்கியுள்ளார். இவரது இந்தக் கூற்று மனித உரிமை ஆர்வலர்கள் பலரது கண்டனத்திற்கு ஆளானது. கூடவே அவ்வாறு வீடு திரும்பியவர்கள் பற்றிய முழுமையான தகவலை தருமாறு மனித உரிமை ஆர்வலர்கள் சவாலும் விடுத்துள்ளனர். எனினும் இதுவரை அதற்கான பதில் எதுவும் வெளியிடப்படவில்லை.

காணாமல் போனவர்கள் தொடர்பாகவும் மனித உரிமைகள் பற்றியும் செயற்படுபவர்களுக்கும் பாதுகாப்பில்லாத சூழல் இலங்கையில் நிலவுவதற்கு நடராஜா ரவிராஜின் படுகொலையும் மனோகணேசன் சில காலம் இந்தியாவில் தங்கியிருந்ததுமே சிறந்த உதாரணங்களாகும்.

ஆணைக்குழுக்கள் விசாரணைக் கமிஷன்கள், சர்வதேச அழுத்தங்கள் காணாமல் போகும் சம்பவங்கள் மீது அதிக ஆர்வம் காட்டினாலும் சம்பவங்களில் மாற்றங்கள் இல்லாத நிலை இலங்கையில் தொடர்கிறது. காணாமல் போனவர்களில் ஒருசிலர் கப்பம் பெறப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஏனையோர் காணாமல் போனவர்களாகவே உள்ளனர். இதுவரை கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டாலும் இதுவரை எவரும் சட்டத்தின் முன் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவில்லை. உயிருக்கு பெறுமதி இல்லாத ஒரு தேசத்தில் கொலைகளும் கடத்தல்களும் காணாமல் போவதும் தொடர் சம்பவங்களாக இடம் பெறுகின்றன. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரம் தொடரும் கதை ...



**வே**லை செய்யுமிடத்தில், வேலையிலிருந்து வீடுதிரும்பும் போது, வெளிநாடு செல்வதற்காக கடவுச்சீட்டை பெற கொழும்புக்கு வந்த நிலையில் என்று பல்வேறு இடங்களில் வைத்து பலபேர் காணாமல் போயுள்ளனர். சிலர் தமது வீடுகளில் இருக்கும் போது 'இனம் தெரியாதோரால்' கொண்டு செல்லப்பட்டவர்கள் மீண்டும் வீடு திரும்பாமலே போயுள்ளனர். ஆனால் தேடுபவர்களின் சோகமும் கதறலும் தேவையும் ஒன்றாகவே இருக்கிறது. காணாமல் போன தமது உறவுகளைத் தேடும் ஒவ்வொரு தாயதும் தந்தையதும் மனைவி பிள்ளைகளதும் சகோதரர்களதும் கண்களில் ஏக்கமும் சோகமும் நிரம்பியுள்ளதோடு எவ்வாறாயினும் தமது உறவுகள் மீண்டும் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை மட்டுமே எஞ்சி உள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த இந்திராணி யோகராஜன் தன் மூன்று உறவுகளைத் தேடிக்கொண்டு இருக்கிறார். இவரது கணவரும் இரண்டு மகன்களும் கடவுச்சீட்டு பெற கொழும்புக்கு வந்தபோது காணாமல் போயுள்ளனர்.

இந்திராணியின் கணவர் இம்மானுவேல் யோகராஜன், கொஸ்பல் மிசனரி தேவாலயத்தின் போதகர். அவர் தன் இரு மகன்களான டேவிட்(20), டானியல்(22) (இவர் மிதிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவர்.) ஆகியோருடன் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வவுனியா தாண்டிக்குளத்திலிருந்து வந்து நீர்கொழும்பு கொச்சிக்கடையில் தங்கியிருந்தபோது மார்ச் மாதம் 2 ஆம் திகதி காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போன தன் உறவுகளைத்தவிர வேறு ஒருவரும் தன் கண்களின் முன் தெரிவதில்லை என்று கூறும் இந்திராணி காவல் நிலையத்திலும் மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளார். காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்க ஏதேனும் வழி கிடைக்குமா எனப் பலதடைவைகள் மக்கள் கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு சென்று வருகிறார். ஆனால் இதுவரையும் காணாமல் போன தன் கணவன் பிள்ளைகள் பற்றி இந்திராணிக்கோ அவர் குடும்பத்திற்கோ எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணம் கரவட்டியைச் சேர்ந்த 29 வயதுடைய கனகரத்தினம் முகுந்தனும் கொழும்பில் வைத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமல் போயுள்ளார். வடமராட்சி நெல்லியடியில் பொது முகாமைத்துவ உதவி உத்தியோகத்தராக பணியாற்றிய இவர் கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கும் தன் மூத்த சகோதரரை பார்ப்பதற்காக வந்து திரும்பி திருகோணமலை செல்வதற்கு பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக மே மாதம் 8 ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு சென்ற போதே காணாமல் போயுள்ளார்.

"அவரைப்பற்றி எமக்கு எந்த தகவலும் இதுவரை கிடைக்கவில்லை" என்பதை மாத்திரமே முகுந்தனின் தந்தை கனகரத்தினம் கூறுவதற்கு அவரிடம் எஞ்சியிருக்கிறது. தன் மகனைத் தேடித்தரும்படி எதிர்கட்சித்தலைவர் உட்பட பலருக்கு மனு கொடுத்துள்ளதோடு உரிய இடங்களில் புகார் செய்துவிட்டு மகன் கிடைத்து விடுவார் என்ற எதிர்பார்ப்போடு அவர் காத்திருக்கிறார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான முஹம்மட் நியாஸ் (34) கொழும்பு மெசெஞ்சர் வீதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்திலிருந்து இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். ஜனவரி 22 ஆம் திகதி நியாஸ் தனது வெளிநாட்டு பணியக முகவர் அலுவலகத்தில் இருந்த போது அங்கு வந்த இனந்தெரியாத நபர்கள் அவரை பலவந்தமாகக் கொண்டு சென்றுள்ளனர். அதன் பின்னர் அவர் பற்றி எந்தத்தகவலும் அறியாத அவரது தாய் ஸுறாதி தாஜுதீன் ஜனதிபதியிடமும் சென்று தன் மகனைத் தேடித்தருமாறு கோரியிருக்கிறார். இவருக்கும் ஏனையவர்கள் போலவே எந்த ஒரு சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

"என்மகன் எங்கே என்று தெரியாது அவரை யாரோ கொண்டு போயிருக்கிறார்கள் அவர் பற்றி எந்தத் தகவலும் எங்களுக்குத் தெரியாது. என் மகனைப் பார்க்க வேண்டும். தூரத்தில் வைத்தாவது அவரைக் காட்டுங்கள்." என்பதே ஸுறாத்தியின் ஒரே வேண்டுகோளாக இருக்கிறது.

மலையக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட அரசியல் ஏற்பாட்டாளர் குஞ்சுப்பிள்ளை சிவகாந்தன் (34) இரகசிய பொலிசார் எனக் கூறிக்கொண்ட சிலரினால் கடந்த வருடம் ஓகஸ்ட் 23 ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். கொழும்பு மெசேஞ்சர் வீதியிலுள்ள அவரது வர்த்தக நிலையத்திலிருந்த சிவகாந்தனை குறிப்பிட்ட தினத்தன்று அங்கு வந்த ஆறு பேர் இவ்வாறு பலவந்தமாக அழைத்துச் சென்றதாக அவரது தந்தை குஞ்சுப்பிள்ளை(67) தெரிவிக்கின்றார். தன் மகன் பற்றி கொட்டாஞ்சேனை காவல் நிலையத்திலும் ஏனைய இடங்களிலும் புகார் செய்துள்ள நிலையிலும் அவர் பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்பதே பதிலாக இருக்கின்றது.


சிவகாந்தன் காணாமல் போனதற்குப் பின்னால் அரசியல் காரணம் இருப்பதாக அவரது தந்தை உறுதியாக நம்புகின்றார்.


மத்திய கிழக்கு நாடொன்றிற்கு செல்வதற்கு கடவுச்சீட்டைப் பெறுவதற்காக மட்டக்களப்பிலிருந்து கொழும்பு வந்த எஸ். ஜேசுதாசன் (32) கொழும்பு கோட்டையில் வைத்து ஜனவரி 11 ஆம் திகதி காணாமல் போயுள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது வீட்டுத் தொலைபேசியை ஜனவரி 12 ஆம் திகதி தொடர்பு கொண்ட சிலர் சிங்கள மொழியில் பேசியதாக ஜேசுதாசனின் சகோதரி லீலாவதி கூறுகின்றார். அவர்கள் பேசியதில் சிஐடி என்பதைத்தவிர வேறெதுவும் தனக்குப் புரியவில்லை என அவர் தெரிவித்தார். தாம் கொழும்பிற்கு வந்து பல இடங்களில் புகார் செய்தும் தேடிப்பார்த்த போதும் தனது சகோதரரை கண்டுபிடிக்க முடியாது போய்விட்டதாக அவர் புலம்புகின்றார்.

"மட்டக்களப்பில் பாதுகாப்பு இல்லை என்று தான் வெளிநாடு போக கொழும்பிற்கு வந்தார். ஆனால் அவர் இங்கு காணாமல் போய் விட்டார்" என்று தன் சகோதரனின் நிலைப்பற்றி லீலாவதி ஆதங்கப்படுகிறார்.

வாழ்க்கையில் தந்தை, கணவன், மகன், சகோதரன் என்று யாரோ ஒருவரை இழந்து நிற்கும் இவர்கள் தினமும் தமது உறவுகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். கிடைத்து விடுவார்கள் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேடல், நம்பிக்கை என்ற இரண்டு மட்டுமே இவர்களது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றன. ●









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களின் கண்ணீருடன் விளையாடுவதை நிறுத்த வேண்டும்!

*மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளர் மனோ கணேசன்*

**அண்மைக்காலங்களில் காணாமல் போகும் சம்பவங்களின் தன்மையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா?**

கடத்தல்கள், காணாமல் போகும் சம்பவங்களில் பாரிய மாற்றங்கள் இடம் பெற்றுள்ளதாக நான் கூறமாட்டேன். கடத்தல்கள் நிறுத்தப்பட்டு கடத்தல்காரர்கள் மனம் திருந்தி விட்டனர் அல்லது அவற்றின் சூத்திரதாரிகள் மனந்திருந்தி விட்டனர் என்று நான் நம்பவில்லை.

கொழும்பு மற்றும் அதன் புற நகரப் பகுதிகளில் மக்கள் கண்காணிப்புக்குழுவின் நேரடி கண்காணிப்பு நடவடிக்கை காரணமாக குற்றவாளிகள் தமது நடவடிக்கைகளைத் தளர்த்தியுள்ளனர். இது ஒரு இடைநிறுத்தம் என்று தான் கூறலாம். ஆனால் வடக்கு, கிழக்கில் இவை தினசரி நடந்து கொண்டு தான் இருக்கின்றன. கடந்த காலங்களில் கடத்தல்களாக இடம்பெற்ற சம்பவங்கள் இன்று யாழ்ப்பாணத்தில் படு கொலைகளாக மாறி வருகின்றன.

**காணாமல் போனவர்கள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு மீது எத்தகைய அபிப்பிராயம் கொண்டுள்ளீர்கள்?**

இந்த ஜனாதிபதி ஆணைக்குழு மாத்திரம் அமைக்கப்படவில்லை அரசாங்கத்தின் அமைச்சர் மகிந்த சமரசிங்ஹ தலைமையில் மனித உரிமை அமைச்சு இருக்கின்றது. இந்த அமைச்சிற்கு ஆலோசனை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரமுகர்களைக் கொண்ட குழு உள்ளது. அரசின் மனித உரிமை ஆணைக்குழு இருக்கின்றது. மகானாம திலகரத்ன விசாரணைக்குழு உள்ளது. குறிப்பிட்ட பதினாறு பாரிய சம்பவங்களை விசாரணை செய்யும் விசேட ஆணைக்குழு ஒன்று உள்ளது. இதனைக் கண்காணிப்பதற்கு ஓய்வுபெற்ற இந்திய நீதிபதி பகவதி தலைமையில் சர்வதேச நிபுணர்குழு ஒன்று இருக்கிறது. இவற்றைத்தவிர ஜனாதிபதி தமது அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்துள்ளார்.

இவற்றின் மூலமமாக தமது உறவுகளை இழந்து வாழும் மக்களின் கண்ணீரைத் துடைக்கவோ அதற்குக் காரணமான குற்றவாளிகளிற்கு தண்டனை பெற்றுக் கொடுக்கவோ முடியாது போயுள்ளது. இதற்கான உண்மைக் காரணம், இந்த அரசாங்கத்தின் உயர்மட்ட செல்வாக்குள்ள பொலீஸ், இராணுவத்தினர் அரசுடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுக்கள் ஆகியோரே இத்தகைய கடத்தல்கள் படுகொலைகள் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே அரசாங்கம் மீது நம்பிக்கை வைப்பதென்பது குற்றவாளியிடமே நீதிபதியாக செயல்படுங்கள் என்று சொல்வதாகவே அமையும். எனவே இவ்வாறான ஆணைக்குழுக்கள் மீது நம்பிக்கை வைக்க நான் ஒரு முட்டாள் அல்ல.

**காணாமல் போனதாகக் கூறப்படும் பலர் வீடு திரும்பியிருப்பதாக மாகானாம திலகரத்ன ஆணைக்குழு கூறியிருக்கிறது. இவ்வாறான சம்பவங்கள் பற்றி உங்களிடம் முறைப்பாடு செய்த எவரேனும் தகவல் தெரிவித்துள்ளனரா?**

மகானாம திலகரத்ன தான் சார்ந்த நீதித்துறைக்கே அவமானத்தைத் தேடித்தந்துள்ளார். காணாமல் போனோர் பட்டியலில் பெயர் விபரம் திகதி அடையாள அட்டை இலக்கம் பொலிஸ் புகார் இலக்கம் ஆகியவற்றை உள்ளடக்கி நாங்கள் வெளியிட்டுள்ளோம். இன்னமும் சர்வதேச மன்னிப்புச்சபை மனித உரிமை கண்காணிப்பகம் அரசின் மனித உரிமை ஆணைக்குழு ஆகியவையும் இவ்வாறான விபரங்களை வெளியிட்டுள்ளன. இத்தகைய வீடு திரும்பியவர்கள், வெளிநாடு சென்றவர்களின் விபரங்களை இதேமாதிரி பட்டியலிட்டு வெளியிடுமாறு மகானாம திலகரத்னவிற்கும் அவரது எஜமான்களான அரசாங்கத்திற்கும் சவால் விடுகிறேன்.

மக்களின் கண்ணீருடன் விளையாடுவதை இவர்கள் நிறுத்த வேண்டும். காணாமல் போனவர்கள் வீடு திரும்பிவிட்டனர் அல்லது வெளிநாடு சென்று விட்டனர் என்று பொய் கூறுவதை நிறுத்த வேண்டும்.

**இலங்கையில் 70களிலும் 80களிலும் சிங்கள இளைஞர்கள் தெற்கில் காணாமல் போனார்கள் தற்போது தமிழ் இளைஞர்கள் காணாமல் போவதை சிங்கள தலைமைத்துவங்கள் அணுகும் முறையை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்?**

80களில் கூடுதலாக காணாமல் போனவர்கள் ஜே.வி.பி. இயக்கத்தின் இளைஞர்களும் யுவதிகளும்- அது ஒரு பக்கம் மறுபக்கம் இவ்வாறு காணாமல் போன சிங்கள இளைஞர்கள் பற்றி அன்று குரல் கொடுத்தவர் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச. இன்று அதே மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் தமிழர்கள் காணாமல் போகின்றனர். அதுவும் கடந்த காலங்களில் சிங்களவர்கள் இரவு நேரங்களில் கடத்தப்பட்டது போய் தமிழர்கள் பட்டப்பகலில் அரசின் காவல்சாவடிகள் நிறைந்த கொழும்பிலும் புற நகரப்பகுதிகளிலும் கடத்தப்படுகின்றார்கள். அப்போது பாதிக்கப்பட்ட ஜே.வி.பியினரும் சரி அல்லது அதற்காக போராட்டம் நடத்திய மஹிந்த ராஜபக்சவின் கட்சியும் சரி இன்று தமிழர்கள் கடத்தப்படுவதற்கு காரணமாக அல்லது அதனை நியாயப்படுத்துபவர்களாக அல்லது நடக்கும் அநியாயம் கண்டு மௌனித்தவர்களாக உள்ளனர். காரணம் அன்று காணாமல் போனவர்கள் சிங்களவர்கள் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமல் போபவர்கள் தமிழர்கள்.

**காணாமல் போனவர்கள் தொடர்பாக நீங்கள் ஜனாதிபதியுடன் நடத்திய சந்திப்புக்களின் போது அவர் எத்தகைய நிலைப்பட்டினைக் கொண்டிருந்தார்?**

ஜனாதிபதியையும் அவரது சகோதர சிரேஷ்ட ஆலோசகரையும் பாதுகாப்பு செயலாளரையும் கடந்த வருட பிற்பகுதியில் பலமுறை சந்தித்துள்ளேன். சட்டம் ஒழுங்கை மதிப்பவன் என்ற முறையில் அரசாங்கத்திற்கும் ஒரு வாய்ப்பை வழங்கிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வாறு சந்தித்தேன். மனித உரிமை மீறல்கள் பற்றி புகார் தெரிவிக்கும் போது அவற்றிற்கு பதிலாக விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் நடைபெறுவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றி கவனம் செலுத்துங்கள் என்று சொன்னார்களே தவிர தமது நிர்வாகத்தின் கீழ் நடைபெறும் அவலம் பற்றி அவர்கள் பதில் கூறவில்லை.


அதுமட்டுமல்ல யுத்தம் இடம்பெறும் போது இவ்வாறு மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவது சதாரணமான விடயம் என்ற பதிலையே இவர்கள் கூறியிருந்தனர். இதனாலயே மக்கள் கண்காணிப்புக்குழு அமைத்து நேரடிப் போராட்டத்தில் குதிக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது.

**மக்கள் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகள் எவ்வாறான அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன?**

எதிர்வரும் ஒக்ரோபர் 15 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையர் ஒருவர் இங்கு வருவதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமைக்கு எமக்கும் பாரிய பங்குள்ளது..

காணமல் போனவர்களை கண்டு பிடிப்பது. மேலதிக சம்பவங்களை தடுப்பது ஆகிய இரு விடயங்களிலயே நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். இதில் முதலாவது தொடர்பாக நாம் கண்காணித்து உலக அரங்கிற்கு கொண்டு சென்றுள்ளோம். காணாமல் போனவர்கள் தொடர்பாக பதில் கூறுவதற்கு அரசாங்கம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. எமது நடவடிக்கைகள் காரணமாக புதிய சம்பவங்கள் இடம்பெறுவது குறைந்த பட்சம் கொழும்பு மற்றும் அதன் புற நகர் பகுதிகளிலாவது ஒரு கட்டுப்பாட்டிற்கு வந்துள்ளது.

●




# காணாமற்போன கண்களுக்கு

நான் எப்படி வந்தேன் இதற்குள்
இவ்வளவு ஆழத்திற்குள் நான்
விளையாட்டிற்குக் கூட இறங்கியதில்லை
என்னுடைய சுயங்கள் பிய்த்தெறியப்பட்ட
அந்த நாளில் கூட நான் இதற்குள்
கிடப்பேன் என்று நினைக்கவில்லை

கடலே தொடுவானம் முத்தமிட
அசைவற்று நீ அழகாய் வெளித்தோன்றுகிறாய்
அழுகி நாற்றெடுமெடுக்கும் என்னை
முழுங்கிக் கக்கிவிட்ட மகிழ்ச்சியில்

"பாடிப் பயன்பெறவும், கல் தோணியாகவும்
நீ நாவுக்கரசன் இல்லையே
பேசாமற்கிட முண்டமே"
நீ கெக்கரிப்பது எனக்கு மட்டுமே கேட்கிறது

என் அவயவங்கள் எங்கே போயின?

தலை, கை, கால்கள்
முட் புதர்களிலா, பற்றைக்குள்ளா
எங்கே எறிந்தீர்கள் அவைகளை?

எவ்வளவு அழகானது எனது முகம்!

என்னைக்
கல்லோடு கட்டிக் கடலிலே
போட்டீர்களே!.

ஒளி பொருந்திய எனது அழகிய கண்களை
என்ன செய்தீர்கள் சகோதரர்களே?

சீனருக்குக் கொடுத்தவைகளில்
ஒரு சோடி கண்கள் என்னுடையவைதானா?

08.04.2007

சிமோன்தீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் முன்னுள்ள கேள்வி இது

**நாசமறுப்பான்.**

"தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைமை பதவியிலிருந்து கருணா நீக்கப்பட்டார். பிள்ளையானை அக்கட்சியின் மத்திய கமிட்டி தலைவராக நியமித்துள்ளது'

ஆங்கிலத் தினசரியொன்று தலைப்புச் செய்தியாக வெளியிட்ட இந்தச் செய்தியில், 80 மில்லியன் ரூபா கட்சிப் பணத்தைக் கையாடியதன் காரணமாகவே அவர் வெளியேற்றப்பட்டாரென்று மத்தியகமிட்டி அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்ப் பத்திரிகைகள் இந்த விடயத்திற்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்திருக்கவில்லை. அதற்குக் காரணங்களும் இல்லாமலில்லை. கருணா குழு என்பது விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து தனியாக இயங்கும் முடிவை எடுத்தபோது அதற்கிருந்த 'அரசியல் முகம் முழுமையாக அற்றுப் போய் வெற்று ஆயுதக் குழு என்ற பெயரை மட்டுமல்ல அரச படைகளுடன் கூட்டாகச் சேர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படும் ஒரு அணியாக மாறிவிட்டதென்ற அவப் பெயரை விரைவிலேயே அது பெற்றுக் கொண்டு விட்டது. கூடவே கொழும்பிலும், சுற்றுப் பிரதேசங்களிலும் பரவலாக நடந்த ஆட்கடத்தல், கப்பம் வாங்கல் போன்ற நிகழ்வுகளுக்கு கருணா அணியே காரணம் என்று சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிப்படையாகவே எழுதத் தொடங்கியிருந்தன. அதுமட்டுமல்லாமல் இந்தக் கடத்தல் கப்பம் வாங்கல் நிகழ்வுகளுக்கு அரச மற்றும் படையினரின் உயர் மட்டங்களில் தொடர்பு இருப்பதாகவும் செய்திகள் வெளியாகிருந்தன. ஆகவே தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை இந்த விடயம் ஒன்றும் முக்கியமான விடயமல்ல என்று அவைக்குத் தோன்றியிருக்கலாம்.

ஆனால் உண்மை அது மட்டுமல்ல. வெளியிலே சொல்ல முடியாவிட்டாலும் கருணா அணி தொடர்பான அச்சமும் இதற்கு ஒரு முக்கிய காரணம்தான். கருணா அணி அந்தளவுக்கு அச்சமூட்டும் ஒரு அணியாக உருப்பெற்றிருந்தது.

கருணா அணி இன்று பிள்ளையான் அணியாகப் பரிணமித்தமைக்கு 'பணம்' ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. இவ்வாறுதான் கருணா அணி பிரிந்தபோது பணம் ஒரு முக்கியமான காரணமாகக் கூறப்பட்டது. பணக் கணக்கு விவரம் தொடர்பான விசாரணைக்கு வருமாறு கேட்டதற்கு அஞ்சியே கருணா விலகினார் என்பது புலிகள் தரப்பின் குற்றச்சாட்டாக இருந்தது. இன்றும் பிள்ளையானைத் தலைவராகக் கொண்ட மத்திய கமிட்டியால் கருணா மீது வைக்கப்பட்டிருப்பதும் பணம் கையாடல் குற்றச்சாட்டே.

இன்று சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் கருணா அணியின் வெற்றிக்கெல்லாம் காரணமாக இருந்தது பிள்ளையானே என்று சித்திரிக்க முயல்கின்றன. இலங்கை அரசு தரப்பில் கருணாவையும், பிள்ளையானையும் இணைத்து வைக்கும் முயற்சிகள் நடப்பதாகவும் பத்திரிகைகள் கூறுகின்றன. சிங்கள மக்கள் மத்தியில் கருணா அணியைத் தமிழீழ விடுதலைப் புலிகள் அணிக்குச் சவால் விடக் கூடிய ஒரு மாற்று அணியாக உருவாக்கி விடுவதில் நிலவும் அக்கறை ஒன்றும் புதியதல்ல. இலங்கையில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும் அரசியலைக் கேள்விக்குள்ளாக்காத ஒரு ஆயுதமேந்திய அணி தமிழ்த் தரப்பிலிருந்து பலமாக உருவாகி வருமானால் அது தமக்கு லாபம் என்று கருதும் சிங்கள பேரினவாதக் கருத்தியலின் வெளிப்பாடுதான் இந்த முயற்சிகள். இதற்கு எல்லாக் காலங்களிலும், எல்லா மட்டங்களிலும் வரலாற்று ரீதியாக முயற்சிகள் தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றன. கிழக்கையும், முஸ்லிம் மக்களையும் இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்த டி.எஸ்.சேனநாயக்க காலத்திலிருந்து

**கருணா வெளியேறியபோது அவர் கிழக்கின் அரசியல் பற்றியும், அமைப்புக்கு அதில் இருந்த அக்கறையீனத்தையும் பற்றிக் கூறிக் கொண்டே வெளியேறினார். கருணா கூறியவற்றில் எந்தளவிற்கு உண்மையிருந்தது என்பது வேறுவிடயம். ஆனால், இந்தக் கருத்தைக் கூறுவதற்கு வாய்ப்பான ஒரு அரசியல் நிலைமை அங்கு நிலவுவதனை அதுவும் ஐம்பது வருடங்களுக்கு மேலாக நிலவுவதை தமிழரசியற் தரப்புப் புறக்கணித்து வந்திருக்கிறது என்பது அந்த அரசியலின் பலவீனம் என்பதை மறுப்பதற்கில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரையான எல்லா ஆட்சியாளர்களும் முயன்று வந்திருக்கின்றனர். இந்த முயற்சியில் அவர்கள் முற்றாகப் படுதோல்வி அடைந்ததாகச் சொல்லவும் முடியாது. இது தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியென்ற ஆரம்பகால அரசியற் கட்சிகளிலும் பின்னர் ஆயுதமேந்திய அரசியல் இயக்கங்களிலுமென்று தொடர்கிறது. இந்தத் தொடர்ச்சியின் பின்னணிகள் எல்லாமே ஒரே விதமாகவே இருந்து வந்திருக்கின்றன. இன்றுவரை இலங்கை அரசாங்கமும் சரி, தமிழர் தரப்பு அரசியலும் சரி இந்த வரலாற்று நிகழ்வுகளிலிருந்து பாடம் கற்றதாகத் தெரியவில்லை. இலங்கை அரசானாலும் சரி தமிழ் தரப்பு அரசிலாலும் சரி தத்தமது கொள்கைகளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை.


அண்மையில் கருணா அளித்த பேட்டியொன்றில் ஒற்றை ஆட்சியின் கீழ் தீர்வு காண முடியுமென்று தெரிவித்திருந்தமை, இந்த மாறாத வரலாற்று நிகழ்வுக்கு ஒரு சான்று!

தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைகளை முன் வைத்து குரலெழுப்பிப் போராடிய தமிழரசுக் கட்சி முதல் இன்றைய தமிழீழ விடுதலைப் புலிகள் வரை யாருமே கணக்கெடுக்காத ஒரு விடயம்தான் எப்படி ஒரு பேரினவாத அரசாங்கத்தால் கிழக்கிலும். முஸ்லிம்கள் மத்தியிலும் இத்தகைய ஒரு செயலை அரை நூற்றாண்டுகட்கு மேலாக தொடர்ச்சியாகச் செய்ய முடிகிறது என்பது. கணக்கெடுக்காத விடயம் என்பதை விட இந்தச் சிக்கலைக் கையாள்வதில் அவர்களுக்கு அக்கறை இருக்கவிலலை என்றே சொல்ல வேண்டும். கல்குடா தேவநாயகம் முதல். நேற்றைய கருணா வரையான இந்தப் போக்கை தமிழ் அரசியல் இனங்கண்டு கொண்டதெல்லாம், அந்தந்தத் தனி நபர்களின் குறைபாடுகளாகவே. அவற்றுக்கு அடிநாதமாக இருக்கும் ஒரு அரசியலை அவர்கள் இனங்கண்டு கொள்ளவில்லை. கருணா வெளியேறியபோது தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ கருத்து, அது ஒரு தனிப்பட்ட கருணாவின் முடிவு என்பது மட்டுமே.

ஆனால் கருணா வெளியேறியபோது அவர் கிழக்கின் அரசியல் பற்றியும், அமைப்புக்கு அதில் இருந்த அக்கறையீனத்தையும் பற்றிக் கூறிக் கொண்டே வெளியேறினார். கருணா கூறியவற்றில் எந்தளவிற்கு உண்மையிருந்தது என்பது வேறுவிடயம். ஆனால், இந்தக் கருத்தைக் கூறுவதற்கு வாய்ப்பான ஒரு அரசியல் நிலைமை அங்கு நிலவுவதனை அதுவும் ஐம்பது வருடங்களுக்கு மேலாக நிலவுவதை தமிழரசியற் தரப்புப் புறக்கணித்து வந்திருக்கிறது என்பது அந்த அரசியலின் பலவீனம் என்பதை மறுப்பதற்கில்லை.

பிரிந்து போன அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், பிரிந்தவர்கள் கொண்டிருந்த தமிழர் அரசியலுக்கு நேரெதிரான அரசியலை முன் வைக்கவும், நேரடியாகவே அரச சார்பு அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் செய்தார்கள் என்பது புறக்கணிக்கக் கூடிய ஒரு விடயம் அல்ல.

எதிர்த்தரப்பு, இத்தகைய குழப்பத்தை ஏற்படுத்த முடியுமான ஒரு அரசியல் நிலை நிலவுகிறது என்ற



யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அதைக் கையாள்வதற்கான முறையில் அரசியற் செயற்பாட்டை வகுத்துக் கொள்ளாதவரை இந்த நிலைமைகள் தொடரத்தான் செய்யும். இதை வெறும் தனிநபர் செயற்பாடு என்று முடிவுக்கு வருவதில் உள்ள அபாயமென்னவென்றால். அத்தகைய ஒரு நிலைமைக்கான விளைநிலமாக கிழக்கை என்றென்றைக்குமாக விட்டு வைத்திருப்பதுதான்.

கருணா அணியென்பது ஒரு வெறும் தனிநபர் அணியல்ல. அவருடன் சேர்ந்து ஐநூறுக்கு மேற்பட்ட போராளிகள் வெளியேறினார்கள். அவரது அரசியலை அங்கீகரிக்க அன்று அரசியல் பின்புலமும் கிழக்கில் இருந்தது. ஆனால், பிரிந்த கருணா அணியிடம் முரண்பாடுகளை வெளிப்படுத்துவதில் இருந்த ஆர்வம் அதைத் தீர்த்துக் கொள்வதற்கான அரசியலை அடையாளம் காண்பதில் இருக்கவில்லை. ஒரு அரசியல் இயக்கமாகப் பரிணமிப்பதற்கு வெறும் முரண்பாடுகள் மட்டும் போதுமானதென்று அந்த அணி நம்பியது. ஆனால் விரைவிலேயே அந்த முரண்பாடுகளை அடிப்படையாக வைத்து ஒரு அரசியற் கட்சியாகச் செயற்பட முடியாதென்ற நிலைக்கு அவர்கள் வந்தபோது, இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதைத் தவிர வேறு வழி அவர்களுக்குத் தோன்றவில்லை.

ஆனால் இந்த இணைவு, வெறும் இராணுவ அணியைப் பாதுகாப்பதற்கான ஒன்றாகச் சுருங்கி விட்டது. பேசிய அரசியல் பாதுகாப்புப் பிரச்சினையின் முன்னால் முக்கியமற்ற ஒன்றாகப் போய்விட்டது.

அதாவது அந்தக் கிழக்கிலங்கையின் பாதுகாப்பும் தமிழ் ஈழமும் என்ற அரசியலை பாதுகாப்புக்காக அவர்கள் கைவிட வேண்டி வந்தது. கைவிடுவது மட்டுமல்ல, அதற்கு எதிராகச் செயற்படுவது என்ற மட்டத்திற்கு அது அவர்களைத் தள்ளி விட்டது. வடக்குக் கிழக்குப் பிரிப்பும், ஒற்றையாட்சியும் நியாயமானவை என கருதும் அளவுக்கு கருணாவின் அரசியல் வீழ்ச்சியடைந்தது. அரசியல் ரீதியான சரணாகதி நிலையை அவர் அடைந்தபின், அவரது இராணுவ அணிக்கு இருக்கும் ஒரேயொரு குறிக்கோள், இலங்கை அரசின் அரசியலுக்காக யுத்தம் புரிவதைத்தவிர வேறில்லை.

இந்த நிலையில் சமகால இராணுவச் செயற்பாடுகளில் நேரடிப் பங்களிப்பைச் செலுத்துவது கருணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல, பிள்ளையானே என்பதால் கருணாவின் முக்கியத்துவம் அங்கு இயல்பாகவே அற்றுப் போய் விடுகிறது. கருணா, அணிக்கான ஒரு 'அரசியல்' இருக்கும் நிலையில் அவரை வைத்திருப்பது அந்த அணிக்கு அவசியமாக இருந்திருக்கக் கூடும். ஆனால் அப்படி இருப்பதானால், அந்த அணிக்கு என்று தனித்துவமான அரசியல் கருத்துக்கள், நோக்கங்கள் இருந்திருக்க வேண்டும். தனது அரசியலை முழுக்க முழுக்க தென்னிலங்கை அரசியலுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்ட பின், கருணாவின் இருப்பிற்கு வேறெந்த தர்க்க ரீதியான அர்த்தமும் இல்லாமற் போய்விட்டது. களத்தில் இல்லாத கருணாவைவிட, களத்தில் நிற்கும் பிள்ளையான் பதவிக்கு வருவது தர்க்க பூர்வமானதே என்பது இந்த நிலமையின் நடைமுறை சார்ந்த முடிவுதான் என்பதில் ஐயமில்லை.

இதுதான் கருணா வெளியேற்றப்படுவதற்கான அடிப்படையை உருவாக்கித் தந்திருந்தது. பணம் என்பது வெறுமனே ஒரு 'நிமித்த காரணம்' மட்டுமே. தவிரவும் பணத்தை கையாளும் அதிகாரம் களத்தில் நிற்பவரிடம் இருக்க வேண்டுமென்று நினைப்பதும் தர்க்கத்தின் பாற்பட்டதே. 80 மில்லியன் ரூபா பணத்திற்காக வெளியேற்றப்படும் அளவிற்கு கருணாவின் நிலை இருப்பதென்பது, தென்னிலங்கைப் பத்திரிகைகளுக்கு வேண்டுமானால் முக்கியமானதொன்றாக இருக்கலாம். ஆனால் அதுவொரு முக்கியமான விடயமாகக் கருணாவின் கட்சிக்கு இருந்திருக்க முடியாது. கருணா நேரடியாக களத்தில் தலைவராக இருக்கும் போதே அவரது கட்சி அவர் பணத்தை கையாண்ட விதம் பற்றி கணக்கு வைத்திருந்ததாகக் கூறமுடியாது. கையாளலுக்கும் கையாடலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு ஒரே ஒரு எழுத்துமாற்றத்தால் தான் வருகிறது. அந்த ஒற்றை எழுத்து உண்மையில் தலைமை மீதான நம்பிக்கையின் குறியீடு. களத்தில் இல்லாத கருணாவால் தலைமையிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் வழங்க முடியாது. ஒரு அரசியல் தலைமையால் தான் அதை வழங்க முடியும். தவிர்க்க முடியாமல் கட்சியின் நம்பிக்கையை பிள்ளையானிடம் மாற்றியிருக்கிறது. அவர்கள் இன்று கொண்டிருக்கும் அரசியலுக்கு இது அவசியமானதும் கூட. எனவே கையாடல் என்பது ஒரு நிமித்த காரணம் மட்டுமே.

இன்று பிள்ளையான் தலைமையிலான அணி இலங்கை அரசாங்கத்தின் படைகளுடன் சேர்ந்து நின்று கிழக்கில் செயற்படுகிறது. விடுதலைப் புலிகளின் கையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட கிழக்கில், அவர்கள் இலங்கை இராணுவ முகாம்களுடன் சேர்ந்து இருக்கின்றார்கள். ஐ.பி.கே.எப் இலங்கையில் அதிகாரம் செலுத்திய காலத்தில் அதனுடன் கூட்டாக இயங்கிய இயக்க இராணுவத்தினரைப் போல, இவர்களும் அதே முறையில் செயற்படுகின்றனர். ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் போல இப்போது கருணா அணியும் ஒன்று சேர்ந்து கொண்டுள்ளது.

**ஆனால் நாட்டிலுள்ள இன்றைய நிலைக்குக் காரணமான அடிப்படை விடயங்கள் எவற்றைப் பற்றியும் இப்படிச் சொல்பவர்கள் யாருக்கும் எந்த அக்கறையும் இருப்பதாக தெரியவில்லை. புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, இலங்கை அரசிடம் சரணடைந்து விடுவார்கள் என்றால் இன்னொரு ஈ.பி.டி.பி. இன்னொரு கருணா – பிள்ளையான் அணியைப் போல், ஒரு பிரபாகரன் அணி உருவாகும் என்பதை விட வேறென்ன நடந்துவிடுமென்று இப்படிக் கூறுகிறவர்கள் கருதுகிறார்கள்? வேறு விதமாக இது நடக்கும் என்று அடித்துச் சொல்வதற்கான எந்த உத்தரவாதமும் எவர்களிடமும் இல்லை. கடைசியாக நடந்த அனைத்துக்கட்சி மாநாட்டு முடிவுகளும் அதன் விளைவும் என்னவென்று அறிந்தவர்கள் எந்த நம்பிக்கையுடன் உத்தரவாதம் தரமுடியும்?**

இதிலேயுள்ள முக்கியமான விடயம் என்னவென்றால், தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்ப்புக் காரணமாக வெளியேறி, தற்பாதுகாப்புக்காக இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது என்று கூறுகின்ற அனைத்து அமைப்புக்களும், இங்கு தமது தனித்துவத்தை முழுமையாக இழந்து அரசாங்க அரசியலையே தமது அரசியலாக ஏற்றுக் கொண்டு விட்டன என்பது தான். புலிகளுக்கு மாற்றான எந்த அரசியலைக் கொண்டிருந்த காரணத்தினால் அவர்களது எதிர்ப்புக்கு உள்ளாக வேண்டி இருந்ததாகக் கூறப்படுகிறதோ, எந்த அரசியலுக்காகச் செயற்பட புலிகள் அனுமதிக்காததால் இலங்கை அரசின் பாதுகாப்புக் கோரப்பட்டதோ, அந்த அரசியல் இப்போதெல்லாம் இவர்களிடம் இல்லை என்பதுதான், இந்த அனைத்து அமைப்புக்களதும் நிலை.

இந்த நிலை, இன்று நேற்றல்ல, கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தொடர்கின்றது.

ஆக, இலங்கை அரசாங்கங்களோ தமிழ்த் தரப்பு அரசியலோ, மாற்று அரசியலை முன் வைத்து இயங்கிய அமைப்புக்களோ எவையும் கடந்த காலம் முழுவதுமாகத் தொடரும் இந்த வரலாற்றை புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை!

இது இலங்கையின் அரசியலில் ஏற்படுத்தியுள்ள மாற்றம் என்னவென்றால், என்றென்றைக்கும் முடிவுறாத ஒரு அராஜக அரசியலை நாடு முழுவதும் உருவாக்கி விட்டிருப்பதுதான். ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கான நிர்வாகக் கருவியாக இயங்கவில்லை. சட்டத்தையும், ஒழுங்கையும் குலைப்பவர்களை வளர்ப்பதன் மூலமாக கும்பல் ஆட்சியை மேற்கொள்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. கொலை, கொள்ளை, அதிகார துஸ்பிரயோகம், ஊழல் என்று "சட்டமும் ஒழுங்கும்" என்ற அரசியல் கோட்பாட்டுக்கு எதிராக என்னென்ன விடயங்கள் எல்லாம் இருக்கின்றனவோ அவையெல்லாம் இன்றைய அரசியலின் 'சட்டங்களும் ஒழுங்கும்' ஆகிவிட்டன.

வடக்குக் கிழக்கில் யுத்தத்தை முழுமையாக வெற்றிபெறச் செய்து, புலிகளை முழுமையாக இராணுவ ரீதியாக ஒழித்துவிட முடியுமென்றும் அப்படிச் செய்து விட்டால், நாட்டிலே பிரச்சினையே இல்லாமல் போய் விடும் என்றும் கிளிப்பிள்ளை மாதிரிச் சொல்லியபடியே தொடர்ந்து அரசாங்கம் யுத்தத்தில் ஈடுபடுகிறது. மனித உரிமை மீறல்கள் குறித்த உலக சமூகத்தின் குற்றச் சாட்டுக்களைப் புறமொதுக்கிவிட்டு, தாம் சமாதானத்திற்காகவே இருக்கிறோம் என்று அறிக்கை மீது அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறது அது. தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தத்தை விட்டு விட்டால் நாட்டில் நிலைமை சுமுகமாகிவிடுமென்றும் அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சமாதானப் பேச்சுக்கு வரவேண்டுமென்றும் கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றன. தமிழ் தரப்பில் இருந்தும் இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கைகள் எழுகின்றன.

ஆனால் நாட்டிலுள்ள இன்றைய நிலைக்குக் காரணமான அடிப்படை விடயங்கள் எவற்றைப் பற்றியும் இப்படிச் சொல்பவர்கள் யாருக்கும் எந்த அக்கறையும் இருப்பதாக தெரியவில்லை. புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, இலங்கை அரசிடம் சரணடைந்து விடுவார்கள் என்றால் இன்னொரு ஈ.பி.டி.பி. இன்னொரு கருணா - பிள்ளையான் அணியைப் போல், ஒரு பிரபாகரன் அணி உருவாகும் என்பதை விட வேறென்ன நடந்துவிடுமென்று இப்படிக் கூறுகிறவர்கள் கருதுகிறார்கள்? வேறு விதமாக இது நடக்கும் என்று அடித்துச் சொல்வதற்கான எந்த உத்தரவாதமும் எவர்களிடமும் இல்லை. கடைசியாக நடந்த அனைத்துக்கட்சி மாநாட்டு முடிவுகளும் அதன் விளைவும் என்னவென்று அறிந்தவர்கள் எந்த நம்பிக்கையுடன் உத்தரவாதம் தரமுடியும்?

மொத்தத்தில் நாட்டில் பொருளாதார வீழ்ச்சியும், வறுமையும், நோயும் தான் வளர்ந்து கொண்டிருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து இங்கு வருகின்ற தொண்டர் அமைப்புக்கள் சாகக் கிடக்கிறவருக்குப் பணிவிடை

இந்த இணைவு, வெறும் இராணுவ அணியைப் பாதுகாப்பதற்கான ஒன்றாகச் சுருங்கி விட்டது. பேசிய அரசியல் பாதுகாப்புப் பிரச்சினையின் முன்னால் முக்கியமற்ற ஒன்றாகப் போய்விட்டது. அதாவது அந்தக் கிழக்கிலங்கையின் பாதுகாப்பும் தமிழ் ஈழமும் என்ற அரசியலை பாதுகாப்புக்காக அவர்கள் கைவிட வேண்டி வந்தது. கைவிடுவது மட்டுமல்ல, அதற்கு எதிராகச் செயற்படுவது என்ற மட்டத்திற்கு அது அவர்களைத் தள்ளி விட்டது. வடக்குக் கிழக்குப் பிரிப்பும், ஒற்றையாட்சியும் நியாயமானவை என கருதும் அளவுக்கு கருணாவின் அரசியல் வீழ்ச்சியடைந்தது. அரசியல் ரீதியான சரணாகதி நிலையை அவர் அடைந்தபின், அவரது இராணுவ அணிக்கு இருக்கும் ஒரேயொரு குறிக்கோள், இலங்கை அரசின் அரசியலுக்காக யுத்தம் புரிவதைத்தவிர வேறில்லை.



செய்வது போல் நோ தெரியாமல் செத்துப் போக உதவிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அமைப்புக்கள் எவையும் சாவை நிறுத்தி நோயாளர்களை நிமிர்த்திவிட முயல்வதில்லை. அது அவர்கள் கடமையும் அல்ல.

பேச்சுவார்த்தையை 50 வருடங்களுக்கு மேலாக நடத்தி தோல்விக்கு மேல் தோல்வி கண்ட எமது நாடு. இன்றுவரை பேசுகின்ற முறையில் ஏதாவது மாற்றம் வேண்டுமென்று சிந்திக்க முயன்றதில்லை. பேரம் பேசுவதே பேச்சுவார்த்தை என்ற கருத்து நிலையில் இருந்து - உலகம் இன்று அந்த விடயத்தில் இருந்து எவ்வளவோ முன்னேறிவிட்டது - அவர்கள் ஒரு அங்குலம் கூட நகரவில்லை.

விளைவு நாட்டின் மனிதவளம் அழிகின்றது. இயற்கை வளம் நாசமாகிக் கொண்டிருக்கின்றது. உற்பத்தி வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. உலகநாடுகள் தமது நலனுக்காக எல்லாவிதமான முறையிலும் எமது மக்களைச் சுரண்டிக் கொண்டிருக்கின்றன. ஆயுத விற்பனை, கடன் வழங்குதல். நாட்டின் வளங்களை இதற்காகச் சூறையாடும் நோக்குடன் இரகசிய ஒப்பந்தங்களைச் செய்தல் என்று அவர்கள் இயங்குகிறார்கள். புதிய தலைமுறை வன்மமும், விரக்தியும், மனித விரோத இயல்பும் கொண்ட ஒன்றாக வளர்ந்து வருகிறது.

இந்தநிலையில், எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம் என்ற நோக்குடன் அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகிறார்கள். அரச சொத்து, மக்கள் சொத்து, தனிநபர் சொத்து என்ற வேறுபாடின்றி அவற்றை அபகரித்துத் தமது தனிப்பட்ட சொத்தைப் பெருக்கும் நிலையில் 'யுத்த தந்திரத்துடன்' அவர்கள் இயங்குகிறார்கள்.

ஆக, இந்த நாட்டில் என்னதான் நடக்க முடியும், நம்பிக்கை ஊட்டுவதாக?

பொய்த் தகவல்களையும் பிரச்சாரங்களையும் மேற்கொள்வதன் மூலமாக யுத்தத்தில் முன்னேறுவதாகவும், நாட்டில் பொருளாதாரம் வளர்வதாகவும் (எல்லோரிடமும் செல்போன் இருக்கிறதே!) காட்டிக் கொள்வதை எத்தனை நாள் நம்புவது? இந்த ஆட்சியைத் தூக்கி வீசி, இன்னொரு ஆட்சியை உருவாக்குவதால் மாற்றம் உருவாகிவிடும் என்று எத்தனை தடவை நம்பிக் கெடுவது?

இது இன்று எம் மக்கள் முன்னுள்ள கேள்வி.

இலங்கை அரசாங்கம் மன்னார் யுத்தத்தை சுட்டிக் காட்டுகிறது. சிங்கள மக்களுக்கு நம்பிக்கை ஊட்ட. வரப்போகும் மாவீரர் தின உரைபற்றியும் தனிநாட்டுப் பிரகடனம் பற்றியும் தமிழ் ஊடகங்கள் எழுதும் கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்ட முனைகின்றன.

மனச்சாட்சியுள்ள அரசியல்வாதிகளுக்கும், புத்திஜீவிகளுக்கும் இது சமர்ப்பணம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனா
## இந்தியா
## அமெரிக்கா

# பந்தாடப்படும் இலங்கையின் சமாதானம்

ஜே.எஸ்.திசநாயகம்


செப்டம்பர் முற்பகுதியில் ஜனாதிபதி ஆலோசகர் பசில் ராஜபக்ஸ, அவரது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஸ மற்றும் அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமானவரும் ஜனாதிபதி செயலாளருமான லலித் வீரதுங்க ஆகியோர் மூன்று சிரேஸ்ட உயரதிகாரிகள் சகிதம் இந்தியா சென்று அங்கு இந்திய உயரதிகாரிகளுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக்குழுவினர் இலங்கை திரும்பியதும், இந்திய இலங்கை அதிகாரிகளை உள்ளடக்கியதாக ஒரு "உயர்மட்ட ரீதியிலான குழு"வொன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தது.

இலங்கை நாடுகளுக்கிடையே நிலவிவரும் நெருக்கமான அயலுறவுகளின் பிரதிபலிப்பாக இத்தகையதான சந்திப்புகளும் பரிவர்த்தனையும் வழமையாக இடம்பெற்று வரும் ஒரு நடவடிக்கையேயாகுமெனச் சுட்டிக் காட்டியிருந்தார். (பி.பி.சி - சிங்களா: 07 செப் - 2007)

உயர்மட்டக் குழு விவகாரம் இவ்வாறாக பிசுபிசுத்த இதே காலப் பகுதியில் இந்திய இணையம் IANS இல் ஊடகவியலாளர் இந்திரஜித் பட்வார், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ பின்வருமாறு கூறியதாக எழுதியுள்ளார். "பாகிஸ்தான், சீனா ஆகியவற்றிடமிருந்து கொழும்பு தொடர்ந்தும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து கொண்டு

மூன்று முக்கியஸ்தர்கள் இந்தியாவிலிருந்து திரும்பியவுடன் உயர்மட்டக் குழு உருவாக்கத்தை இந்த விதமாக பெரிதாக ஏன் மிகைப்படுத்தியும், அதீதப்படுத்தியும் பிரசித்தப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே எவருக்கும் எழக் கூடியதொரு கேள்வியாகும். (எனவே இந்த அறிக்கையினை எத்தகைய அறிவுறுத்தலுமின்றி, தாமாகவே முன்வந்து ஜனாதிபதி செயலகம் தான் வெளியிட்டது என்பதை எவரும் ஒருபோதும் நம்பப் போவதில்லை.) இச் செய்தி உடனடியாகவே இந்தியாவால் மறுக்கப்பட்டதற்கான பின்னணியினையும் கூர்ந்து நோக்க வேண்டும் சீனாவிடமும், பாகிஸ்தானிடமுமிருந்து இலங்கையின் ஆயுதக் கொள்வனவையிட்டு, இந்தியா கவலைப்பட வேண்டிய





"இந்த உயர்மட்டக்குழு உருவாக்கப்பட்டிருப்பது இலங்கைத் தூதுக் குழுவினர் புதுடில்லியில் இந்தியக் குழுவினருடன் நடாத்திய பேச்சு வார்த்தையின் பலாபலனாகும்" என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட இந்தப் பேச்சுவார்த்தை குறித்து எவ்வாறாக அர்த்தப்படுத்திக் கொள்ளப்பட்ட போதிலும், மிகுந்த விரைவாகப் புதுடில்லியிடமிருந்து மறுப்பறிக்கையொன்று வெளியிடப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் சார்பில் அதன் பேச்சாளர் நவ்ரேஜ் சர்னா இந்திய -

வந்தாலும், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நேரக் கூடிய வகையில், நடவடிக்கைகளுக்கானதொரு தளமாக எச்சக்திக்கும் இலங்கையைப் பயன்படுத்த ஒருபோதும் அனுமதியளிக்கப் போவதில்லை." தொடர்ந்தும், அவர் கூறிக் கொண்டு போகிறார் "முன்னொரு போதும் இல்லாத வகையில் நாடு சர்வதேச உதவிகளைப் பெற்று வருகின்ற போதிலும் எங்களது மிக விசேடமான உறவு எப்போதும் இந்தியாவுடன்தான்." (IANS - 3 செப் 2007)

அரசாங்கத்தின் உள்வீட்டைச் சேர்ந்த

தேவையெதுவுமில்லை என்பதனை வலியுறுத்தி உத்தரவாதப்படுத்த வேண்டிய வில்லங்கமானதொரு நிலை ஜனாதிபதி ராஜபக்ஸவிற்கு ஏன் ஏற்பட்டது?

பாகிஸ்தான், சீனா ஆகியவற்றுடனான உறவு ஆயுதக் கொள்வனவை மாத்திரமே மையப்படுத்தியதொன்றாகவும், அதுகூட தமிழ் நாட்டின் கொந்தளிப்பான உணர்வு நிலை காரணமாக, இந்தியா தற்பாதுகாப்புக்கான ஆயுதங்களையேயன்றி வேறு எந்தவித ஆயுதங்களையும் ஏற்றுமதி செய்ய விரும்பாததொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலோசிஸ்தான் மாநிலத்திலுள்ள ஹவ்டார் விளங்குகிறது. ஹவ்டார் பாரசீக வளைகுடாவுக்கும் ஹோர்மஸ் நீரிணைக்குமிடையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கிறது. இந்த நீர்க்கால்வாய் ஊடாகவே உலகின் பெரும் பகுதியான எண்ணெய் வளம் கொண்டு செல்லப்படுகிறது. மேலும் சீனாவுக்கு வளைகுடாவிலும், அரேபிக் கடலிலும் அமெரிக்க கப்பல்களை கண்காணிக்கும் (Listening Post) பிரிவுள்ளது (இராணுவ ரீதியாக எதிரிகளின் தகவல்களை அறியும் மையம்).

ஹவ்டார் முக்கியத்துவம் அடிப்படையில் வர்த்தகம் சார்ந்தது. இது சீனாவுக்கு எண்ணெய்ப் போக்குவரத்துக்கானதொரு நுழைவாயிலாக தரைவழிப்பாதையுடனான வீதிகள், புகையிரதப்பாதைகளுடன் பாகிஸ்தான், திபெத் (சீனா வசமுள்ள) மற்றும் மியான்மார் (சீன - இந்திய எல்லைக்குச் சமாந்தரமாக) ஆகியவற்றுடன் இணைப்புகள், தொடர்புகளைக் கொண்டதாகவுள்ளது. வீதி அமைப்புகள் பீஜிங்குக்கு பெற்றோலிய மற்றும் இயற்கை வாயுக்கள் வளம் நிறைந்த மத்திய ஆசியாவுடனான தொடர்புகளுக்கும் வசதியினை ஏற்படுத்துவதாகவுள்ளது.

ஹவ்டார் துறைமுகம் பாகிஸ்தானுக்கு மேலும் பெருமளவில் லாபமீட்டிக் கொடுக்கும் ஒன்றாக இருக்கின்றது. ஹம்பாந்தோட்டையைப் பொறுத்தவரையில் சீனா முதலாங் கட்டத்திற்கான செலவீனத்தின் பெரும்பகுதியினை ஏற்கின்றது. இத்திட்ட மொத்த செலவினம் 1.6 பில்லியன் அமெரிக்க டொலராகும். (கப்பல் அணைகள், களஞ்சியப் பாதைகள் என்பவற்றுடன் ஹவ்டார் - கராச்சி நெடும்பாதை இணைப்பினை உள்ளடக்கியது.)

மலாக்கா நீரிணைப் பகுதியில் பெரும்பாலும் அமெரிக்காவின் கடற் கட்டுப்பாட்டினை எதிர்கொள்ள நேரிடலாமென்ற முன்னெச்சரிக்கை காரணமாகவே சீனா தரை மார்க்கப் பாதையில் நாட்டம் கொண்டுள்ளது. மேலும் கடற்பாதையினைப் பாதுகாப்பதற்குப் போதியளவு கடற்படையில்லாததினால் எரிபொருள் வளங்களை விநியோகம் செய்வதற்கு மாற்று மார்க்கங்களைக் கண்டடைய வேண்டிய தேவை சீனாவுக்கு ஏற்பட்டுள்ளதாக, இந்திய றோ புலனாய்வுத் துறையைச் சேர்ந்த முன்னாள் செயலாளர் விக்ரம் சூட் தெரிவித்தார். (ஹிந்துஸ்தான் ரைம்ஸ் - செப் 4 - 2007)


ஆனால், இது எந்தவிதத்திலும் அதனது எண்ணெய்ப் போக்குவரத்துக்கான கடல்வழிப் பாதைகளைத் திறக்க வேண்டுமென்ற சீனாவிற்கிருக்கும் ஆர்வத்தினைக் குன்றச் செய்யவில்லை. பாரசீக வளைகுடாவிலிருந்து சீனா ஈறாக எண்ணெய்ப் போக்குவரத்துப் பாதைகளுக்கான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகள் மீது சீனா அதற்கான பிடிகளைக் கொண்டுள்ளது.

சீனாவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறைமுகமாக ஹவ்டார் இருக்கிறது. ஏனைய முக்கியத்துவம் கொண்டனவாக மாலைதீவில் மாரோவும், மியான்மரில் ஒரு துறைமுகமும் இருக்கின்றன. மியான்மாரிடம் இருந்து பீஜிங் எண்ணெய் மற்றும் இயற்கைவாயு போன்றவற்றை வாங்குவது மாத்திரமின்றி, அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இந்தியக் கடல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பிரிவாக (Listening post) ஒரு பகுதி பிரதேசத்தைப் பயன்படுத்தவும் முற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பங்களாதேஷ், தாய்லாந்தில் பீஜிங்கிற்கு கடற் பிரசன்னமும் உள்ளது.

("இலங்கையின் மோசமான நிலைமை குறித்து இந்தியாவின் கவலை" - நோர்த் ஈஸ்ரேர்ன் மன்றலி - யூலை 2006)

இத்தகையதொரு தொடர்பிலேயே சீனா, ஹம்பாந்தோட்டையை ஒரு வர்த்தகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்திருப்பது பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றது. இலங்கையில் சீனாவின் உண்மையான அக்கறைகள் என்ன? ஹம்பாந்தோட்டையை சீனா ஒரு கண்காணிக்கும் பிரிவு (Listening post) ஆகவா அல்லது கப்பல்கள் தரிப்பிட வசதி கொண்ட முழுமையானதொரு துறைமுகமாகவா பயன்படுத்த விரும்புகிறது?

ஹிமாலயத்திற்கு அருகாக உயர்ந்த தரைப்பாதையைக் கொண்டிருப்பதுடன் ஈரான் தொடர்பில் சீனாவின் நெருக்கம் குறித்தும் அமெரிக்கக் கேந்திரவியல் தொடர்பிலான கொள்கை வகுப்பாளர்களுக்கு தலையிடி ஏற்பட்டுள்ளது. ஈரான் தற்போது ஒரு பிராந்திய பொருளாதார சக்தியாக அதற்கிருக்கும் சக்தி வளப் படிவுகள் காரணமாகத் தலையெடுத்து வருகிறது. அதற்கிருக்கும் இராணுவ வலிமை காரணமாக சர்வதேச விவகாரங்களில் ஈரான் வகிக்கும் பாத்திரமும் அதன் பங்கும் அதிகரித்து வருகிறது. அணுசக்தியில் அதற்கிருந்த ஈடுபாடு காரணமாகவும் மத்தியகிழக்கு விவகாரத்தில் அது கொண்டிருந்த அமெரிக்க - இஸ்ரேலிய கூட்டுறவுக்கெதிரான எதிர்ப்புணர்வு - நிலைப்பாடு காரணமாகவும் அமெரிக்கா பல பொருளாதாரத் தடைகளை அதற்கு விதித்திருந்தது.




சீனா, ஈரானுடன் 100 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்த 100 பில்லியன் தொன்கள் திரவ இயற்கை வாயு இறக்குமதியின் பொருட்டு (25 வருடத்திற்கும் அதிகமான காலஎல்லையைக் கொண்ட) மேற்கொண்ட ஒப்பந்தமொன்றையடுத்து அமெரிக்கா கடுமையாக எரிச்சலடைந்துள்ளது. இத்தகையதொரு அடிப்படையில் சக்தி வாய்ந்த இந்த இரு நாடுகளுக்குமிடையிலான நெருக்கம் தனது நலன்களுக்குப் பாதகமாக இருக்குமென அமெரிக்கா கருதுகிறது.

தென் ஆசியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சூழ்நிலையில்தான் (வெளிப்படையாக) என்ற அழுத்தமானதொரு தோற்றப்பாட்டினைக் காட்டுவதற்கு இலங்கை கடுமையாக முயற்சித்த போதிலும் கூட, சீனா இலங்கையின் நெருக்கமானதொரு அபிவிருத்திப் பங்காளியாக ஜனாதிபதி ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்தில் மாறிக் கொண்டு வருகின்றது என்றதொரு உண்மை நிலையினையும் அதனால் இராணுவம் சார்ந்த ஊடுருவல் நேரலாமென்ற அச்சப்பாட்டினையும மறுத்துவிட முடியாது.

சீனாவுக்கு இலங்கையில் தற்போது மூன்று பாரிய அளவிலான திட்டங்கள் உள்ளன. நுரைச்சோலை அனல்மின் ஆலைத்திட்டம், ஹம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் மற்றும் மன்னார் விரிகுடாவில் எண்ணெய் அகழ்வு வேலைத்திட்டம் என்பனவே அவையாகும். இத்திட்டங்களில் இரண்டைப் பற்றிய விபரங்கள் சிலோன் "டெய்லி நியூஸ்" பத்திரிகையில் வெளியாகியுள்ளன.

308 மில்லியன் அமெரிக்க டொலர் மூலதனத்தினூடாக "எக்ஸிம் பாங் ஒப் சைனா" புத்தளம் அனல்மின் ஆலைத்திட்ட நிர்மாணத்திற்கான நிதியுதவியினை அளித்து வருவதாக செய்தியறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. 300 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய திறனை இந்த ஆலை கொண்டிருக்கும்.

455 அமெரிக்க டொலர் செலவிலான "எக்ஸிம் பாங் ஒப் சைனா"வின் நிதியுதவியுடன் கூடிய ஹம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் முழு அளவிலான வசதிகளை உள்ளடக்கியதானதொரு துறைமுக நிர்மாணிப்பினைக் கொண்டதாக இருக்கும். (சிலோன் டெய்லி நியூஸ் யூலை 12 -2007)

மன்னார் விரிகுடா எண்ணெய் அகழ்வு எட்டுப் பிரிவுகளை உள்ளடக்கியதாக அமையும். இவற்றுள் இரு பிரிவுகளை இந்தியாவுக்கு ஒன்றும், சீனாவுக்கு ஒன்றுமாக இலங்கை ஏற்கெனவே வழங்கியுள்ளது. எஞ்சியிருக்கும் ஆறு பிரிவுகளும் சர்வதேச சந்தையில் அதிக விலை கோருபவர்களுக்கு விற்கப்படும்.




சக்தி வளங்கள், குறிப்பாக எண்ணெய் ஒருவகையில் இருபதாம் நூற்றாண்டில் பெரும் பூசல்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தக் கூடியதொன்றாக உருவெடுத்திருக்கின்றது. ஈராக் யுத்தம், மத்திய ஆசியாவில் அதிகரித்து வரும் இராணுவப் பிரசன்னம் போன்றன அமெரிக்காவுக்கு இந்தச் சக்திவள வேட்டையிலிருக்கும் நாட்டத்தினையும் தீவிர முனைப்பினையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. மேலும் எண்ணெய்ப் போக்குவரத்து தங்கு தடையின்றி நடைபெறக் கூடிய விதத்தில் ஆழ் கடற்பரப்பில் அது கடற்படைக் கண்காணிப்பு ரோந்து போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

எவ்வாறெனினும், அமெரிக்காவின் பாரிய பொருளாதாரம், சரிவு கண்டு விடாது தக்க வைத்துக் கொள்ளப்படுவதற்கு (எண்ணெயின் தேவை அளவு கடந்ததாக நாளாந்தம் பெருகி வரும் இன்றைய பின்னணியில்) இதற்கான சந்தையினைக் கட்டுப்படுத்துவதில் அதற்கிருக்கும் அரசியல் இராணுவ ரீதியிலான ஏக போகத்திற்கு, பத்து வீதத்திற்கும் அதிகமாக வளர்ச்சி வீதத்தைக் கொண்டிருக்கும் சீனாவினால் ஆபத்து நேரக் கூடியதொரு நிலை உருவாகி வருகிறது.

எண்ணெய்க்கான தேடலும் அதற்கான பேராசையும் மேலாதிக்க வல்லரசுக்கும் தற்போது வளர்ந்து வரும் ஒரு உலக சக்தியாகிய சீனாவுக்குமிடையே போட்டா போட்டிகளையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்து வருகிறது. அமெரிக்காவுக்கு மத்திய கிழக்கில் போல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் முக்கியத்துவமான பொருளாதார நலன்கள் இல்லாத போதிலும், அதற்கு இராணுவ ரீதியிலான நலன்கள் இருக்கவே செய்கின்றன. அது தன்னுடைய நலன்களை ஜப்பான், தாய்லாந்து, அவுஸ்திரேலியா இன்னும் பல நேச நாடுகளின் மூலம் பேணி வருகின்றது. இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் மிகப் பெரிய அளவிலான இராணுவ ரீதியிலான நலன் ஜப்பானுக்குப் பாதுகாப்பு வழங்குவதும், கொரிய குடாவினைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் ஆகும்.

இதேவேளை, பீஜிங்கிற்கு இப்பிராந்தியத்தில் பொருளாதார நலன்கள் இருக்கின்றன. பாரசீக வளைகுடாவுக்கும், சீனாவிற்குமான எண்ணெய்ப்பாதை தரைமார்க்கமாக பாகிஸ்தான், திபெத், மியான்மார் ஊடாகவோ அல்லது இந்து சமுத்திரத்தின் ஊடாகவோ உள்ளது. இத்தகையதொரு நிலையில் ஹம்பாந்தோட்டை முக்கியத்துவம் வாய்ந்ததொரு தன்மையினைப் பெறுகின்றது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கையில் சீனா, இலங்கையில் அபிவிருத்திகளில் ஈடுபடுவது ஒருவகையில் தீங்கற்றவை எனத் தோற்றமளிக்கும். இதற்குக் காரணம் ஹம்பாந்தோட்டை கடற்தள வாய்ப்புக்கு ஏற்ற இடமல்ல, அது வர்த்தகத் தொடர்புகளுக்கானதொரு பகுதியாகவே உள்ளது.

ஆனால், தோற்றப்பாடுகள் உண்மையானவையல்ல. கடந்த தசாப்த காலமாகச் சீனா பல துறைமுகங்களை அபிவிருத்தி செய்து வருகிறது. தங்கு தடையற்ற எரிபொருள் விநியோகத்தின் பொருட்டு, சிலவற்றைக் கடற்தளங்களாகவும், ஏனையவற்றை வர்த்தகத் துறைமுகங்களாகவும் அபிவிருத்தி செய்து வருகின்றது.

இந்தவகையில் இவற்றுள் மிக அதிகளவில் முக்கியத்துவம் பெற்றதாக பாகிஸ்தானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிராந்தியத்திலும் இந்து சமுத்திரத்திலும் சீனா இராணுவ வலிமை கூடிய, ஒரு பெரியளவிலான பொருளாதார சக்தியாக உருவெடுத்து வருவது, அப்பிராந்தியத்தில் பெரும் பதற்ற நிலையினைத் தோற்றுவித்துள்ளது. இதற்கான காரணம் சீனா - இந்தியா ஆகியவற்றிற்கிடையே 1962இல் மூண்ட எல்லை யுத்தமாகும். இந்தியாவின் வட எல்லையில் சீனா கைப்பற்றிய நிலப்பிரதேசங்கள் தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையே தீர்க்கப்படாத தகராறுகள் இன்னும் இருக்கின்றன. இதேவேளை இருதரப்பினரும் ஒத்துழைப்பின் மூலமாக அவற்றை சமாதான வழிமுறையில் தீர்த்து விடலாமெனக் கூறி வருகின்றனர்.

ஆனால் புதுடில்லிக்கு இது தொடர்பாக ஏற்பட்டிருக்கும் மனக் கிலேசம் காரணமாக தனக்கொரு தக்க துணையாக அமெரிக்காவைத் தேடிக் கொண்டுள்ளது. உலக வல்லரசான அமெரிக்காவுக்கும், தென்னாசியப் பெருஞ்சக்தியாகிய இந்தியாவுக்குமிடையே பொருளாதார, வர்த்தக மற்றும் இராணுவ ரீதியிலான பரிவர்த்தனைகளும் தொடர்புகளும் என்றுமில்லாதவகையில் மிக அதிகளவில் விரிவாக்கம் பெற்று வருகின்றன. அண்மைக்காலத்தில் மிக வெளிப்படையானதொரு எடுத்துக் காட்டாக அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகள் ஒன்றிணைந்து ("குவாட்" (QUAD) என அழைக்கப்படும்.) செப்டம்பர் 4 ஆம் திகதி 2007இல் நடாத்திய ஒருவார கால கடற்பயிற்சிகளைக் குறிப்பிடலாம். குறியீட்டு வார்த்தையில் "மலபார் 7 - 2"என அழைக்கப்படும் இந்த நடவடிக்கை, "முக்கியமான ஜனநாயக சக்திகளின் சீனாவுக்கு எதிரான கூட்டிணைவு முன் முயற்சி" என வர்ணிக்கப்பட்டுள்ளது.

"இந்தக் கூட்டு நடவடிக்கை குறித்து, ஆழ்ந்த கவலையடைந்துள்ள பீஜிங் நான்கு அரசாங்கங்களுக்கும் எதிராகத் தனது ஆட்சேபனையை அனுப்பி வைத்திருந்தது. அதற்குப் பதிலாக "குவாட்" அங்கத்துவ நாடுகள், குறித்த நடவடிக்கையானது பிராந்தியப் பாதுகாப்புக்கு உரியதானதொரு நடவடிக்கையே தவிர எக்குறிப்பிட்ட சக்திக்கும் எதிரான ஒன்றல்ல என உறுதி கூறியுள்ளன". (பி.பி.சி - செப் 5 2007)

புதுடில்லி குறியாக இருப்பது மிகத் தெளிவானது. பிராந்திய விவகாரங்களில் சீனாவின் கையோங்கி, முழு விவகாரங்களின் ஆளுகையும் அதன் கைக்கு போய்விடக் கூடாது என்பதே அதுவாகும். இந்தவகையில் குறிப்பாக, இலங்கை குறித்த கவலை அவர்களுக்கு என்றுமுள்ளது.

ராஜபக்ச ஆட்சி சீன இந்திய நலன்களைச் சமநிலைப்படுத்துவதில் புத்திசாலித்தனமாக இயங்குவதாக அண்மைக்காலமாக வெளிப்படுத்தி வருகிறது. இதற்கு உதாரணமாக மன்னார் விரிகுடாவில் இரு நாடுகளுக்குமே எண்ணெய் அகழ்வுகளுக்காக வழங்கப்பட்டுள்ள பகுதிகளைக் குறிப்பிடலாம். இந்தவகையில் இதையொட்டியதாக தென்னாசிய பகுப்பாய்வுக் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றினை சுட்டிக் காட்டலாம். "சீனாவின் எண்ணெய்த் தேடல் இலங்கையில் மன்னார் விரிகுடாவை நோக்கிப் பரந்துள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த இடத்தில் சீனாவுக்கு எண்ணெய் வளத்திற்கான ஒரு பிடியினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கம் வழங்கியிருப்பது, இப்பகுதியில் இந்தியா கொண்டிருக்கும் பிரசன்னத்தை மட்டுப்படுத்தி சமநிலைப்படுத்துவத ற்காகவே" என ஓய்வு பெற்ற இந்திய அரசாங்க உயரதிகாரி இராமன் தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் "ராஜபக்ச அரசாங்கத்தின் கொள்கை என்னவெனில் இந்தியாவுக்கு என்ன, என்ன வழங்கப்படுகின்றனவோ, அவையாவும் சம அளவில் சீனாவுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதேயாகும்" என்றார். (தென்னாசிய பகுப்பாய்வுக்குழு - மார்ச் 26, 2007)




வர்த்தகத் தொடர்பு மற்றும் முதலீடு உட்பட இராணுவ ஆயுதங்கள் கொள்வனவு மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் அடங்கலாக இப்போது எண்ணெய் அகழ்வுக்காக மன்னார் விரிகுடாவில் இடமளிக்கப்பட்டிருப்பது ஈறாக சீனாவுடன் இலங்கை கொண்டிருக்கும் நெருக்கமான உறவு இந்தியாவுக்கு ஆழ்ந்த கவலையையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சியில், இணைத்தலைமை நாடுகளாகிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் மற்றும் நோர்வே ஆகியவற்றின் இடைவிடாத பிரசன்னம் குறித்து, இந்தியா முன்பு பெரிதும் கவலை கொண்டிருந்தது. ஆனால், இன்றோ நிலைமை மாறிவிட்டது. மட்டுப்படுத்தப்பட்ட மேற்கத்தைய ஈடுபாட்டினால் நிலைகுலைந்து போகாது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் புதுடில்லி தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறது. மோசமான பொருளாதார நெருக்கடி, எதிரணியினரின் நெருக்குதல்கள் மற்றும் ஓயாத கெரில்லா யுத்தம் போன்றவற்றை எதிர்கொண்டு வருவதால் ராஜபக்ச ஆட்சி தொடர்ந்தும் பலவீனமடைந்து ஸ்திரமற்ற நிலைக்கே தள்ளப்பட்டு வருவது புதுடில்லிக்கு ஒருவகையில் பீதியினை ஏற்படுத்தி வருகிறது. அத்தகையதொரு நெருக்கடிநிலை ஏற்படின் கொழும்பு உதவிகோரி பீஜிங் வசப்பட்டுப் போய் விடலாம் என்பதே, அதன் அச்சமாகும். அந்த உதவி பொருளாதார, இராணுவ ரீதியாக மாறிவிடின், இந்தியாவுக்கு அது சீனாவின் நேரடியானதொரு அச்சுறுத்தலாகவே இருக்கும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண இறுதியில் எத்தகைய ரூபத்தில் நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டாலும், அவற்றுள் நிச்சயமான ஒன்றாக, சீனா தொடர்பிலான விவகாரம் இருக்கும்.

1980களின் முற்கூறுகளில் இனப்பிரச்சினையின் தீவிரம் ஈழ யுத்தமாக வெடித்தபோது, பிராந்திய பெருஞ்சக்தி என்ற ரீதியில் உலக வல்லரசை தனது கோடிப்புறத்திலிருந்து ஒதுக்கி வைக்கவே இந்தியா முற்பட்டிருந்தது. 20 வருடங்களின் பின்னர் இன்று நேசநாடுகளாக நெருங்கியிருக்கும் இவ்விரு சக்திகளும் உலக சக்தியாக தலையெடுத்து வரும் சீனாவைத் தடுப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. இவ்வாறாக அரசியல் சூதாட்டம் தொடர்கிறது... ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007:
# வரலாற்றின் திருப்புமுனையா?

ச.பா.நிர்மானுசன்

விவாதங்கள் நிறைந்ததும் மைல் கற்களை உடையதுமான இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு நடுப்பகுதியை கடந்து மாரிகாலத்தை நோக்கி நகர்கிறது. அமைதிக் காலப்பொழுதின், போர்க்களங்கள் அதன் அமர்களங்கள், மௌனங்கள் என்ன விளைவை ஏற்படுத்தப் போகிறது என்ற கேள்வியே எல்லோரிடத்திலும் முனைப்படைகிறது. எந்த தாக்கத்திற்கும் எதிர்த் தாக்கம் உண்டென்பதற்கு "ஈழப் போராட்டம்" மிகச் சிறந்த உதாரணம். இருப்பினும், அண்மைக்கால அசைவுகள் "சாதாரண" மக்களிடத்தில் வினாக்களை மட்டுமே விதைத்துள்ளது. இந்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியதில் கணிசமான பொறுப்பு "ஈழப் போராட்டத்திற்கு" உண்டு. அதற்கான காரணங்களில் முக்கியமானவையாக, மக்களை முழுமையாக அரசியல் மயப்படுத்தாததன் விளைவை ஒருபக்கமாகவும், சில ஊடகங்கள் உண்டாக்கிய மாயைகளை மறுபக்கமாகவும் குறிப்பிடலாம்.

ஓய்வுபெற்ற கேணல் ஹரிகரன் சுட்டிக்காட்டியது போல் பின்வரும் மூன்று விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு 2007 ஐ மைல் கற்களை உடைய ஆண்டென வர்ணிக்கலாம். அவையாவன:
, பண்டா – செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஐம்பது வருடங்கள் (1957-2007), தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கம் பெற்று முப்பது வருடங்கள் (1977-2007) இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி இருபது வருடங்கள் (1987-2007). அது மட்டுமன்றி "ஈழப் போராட்டத்தின்" வரலாறு காணாத "வெளிப்படை மௌனம்" உலாவரும் காலமாகவும், , "ஈழப் போராட்டம்" பாடையேறப்போகிறது என்று பெருமளவிலான சிங்களத் தரப்பினர் எண்ணத் தொடங்கியுள்ள காலமாகவும் 2007 இருக்கிறது.

பிரிகேடியர் வீரதுங்க, ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா போன்றோருடைய செயற்பாடுகள் நினைவுகளாகவும் சின்னங்களாகவும் மட்டுமே இருந்து வரும் ஒரு சூழலில் "நவீன துட்டகைமுனுக்களின் வீரப்பிரதாபங்கள்" ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் பொறி கிடங்குக்குள் தள்ளிவிட்டுவிடுமோ என்ற ஆய்வுகள் "ஜனநாயக ஊடக சுதந்திரத்தை" காரணங்காட்டி மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வுகள் வெற்றி பெறுகிறதோ தோல்வியடைகிறதோ என்பதற்கப்பால் மக்கள் தோற்றுப் போய்விட்டார்கள் என்பது நிதர்சனமாகியுள்ளது. இதேவேளை, சிறீலங்காவும் தோல்வியடைந்த நாடென்பது "பிச்சை" போடுபவர்களால் அறிவிக்கப்பட்டாயிற்று. இதே நிலை நீடிக்குமாகவிருந்தால் ஆய்வுகளின் முடிவுகள் வெளிவருவதற்கிடையில் தோற்றுப் போன மக்கள் பாடையிலே போய்விடுவார்கள். ஆக மொத்தத்தில், ஈழப் போராட்டத்தை பாடையேற்றப் போய் ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் ஆபத்தின் வாசலில் மயங்கிப் போய் நிற்கின்றது. நினைவு திரும்பி ஆக்கபூர்வமான பாதையில் பயணிக்கப் போகிறதா அல்லது நிரந்தரமாகவே "கோமா" நிலைதானா என்பது தான் கேள்வி.

ஏனெனில், ஈழப் போராட்டம் சிங்களத் தேசியவாதிகள் எனக் கூறிக்கொள்வோரால் பயங்கரவாதம் எனவும், ஆளும் தரப்பின் செயற்பாடுகள் தமிழ் தேசியவாதிகளால் அரச பயங்கரவாதம் எனவும் கூறப்படும் ஒரு உச்சக் கட்டத்தில்தான் விரைவான பதிலுக்காய் இலங்கை உட்பட சர்வதேசம் எங்கும் எதிர்பார்ப்புகள் உயர்மட்டத்தை அடைந்துள்ளன. போராட்டங்களைப் பொறுத்தவரை நீண்டகாலமாகத் தொடர்வதென்பது நல்லதென்பதல்ல என்பது வரலாற்றுப் படிப்பினை. ஈழப் போராட்டம் வரலாற்று படிப்பினைகளிலிருந்து மாறுபட்டதாக, வரலாற்றுப் படிப்பினைகளுக்கு முன்னுதாரணமாக இருந்து வந்துள்ளது என்பது உண்மை. ஆனால் அது இக்காலத்திற்கும் பொருந்துமா என்ற கேள்வி புதிய உலக ஒழுங்கில் தவிர்க்கப்பட முடியாததாகின்றது.

புதிய உலக ஒழுங்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பெரும் சவாலாக அமைந்துள்ள அதேவேளை சுதந்திரப் போராட்டங்களின் தீவிர மூச்சை நிறுத்துவதற்கு பல்வேறு வகையிலான செயற்பாடுகளை அவதானமாக முன்னெடுத்து வருகிறது. அதற்கு உலகமயமாக்கல் பேருதவி புரிகிறது. மிக சுருக்கமாகச் சொல்வதானால் உலகமயமாக்கல் என்பது ஒடுக்கப்படும் சமூகங்களை மென்மேலும் அடக்கியொடுக்குவதற்கான ஒரு உபாயமாகவே விளங்குகிறது. வல்லாதிக்க சக்திகள் அல்லது சர்வதேச சமூகமென காட்டிக்கொள்ளும் "விற்பன்ன நாடுகள்" உலகின் காவலர்களாக தம்மைத் தாமே அடையாளம் காட்டிக் கொள்கின்றன. அதனூடாக உலகச் சமநிலையை குழப்பி விடுகின்றன. உலகச் சமநிலை குழப்பலின் பாதிப்பாளர்களாக இருப்பவர்கள் தனித்து அபிவிருத்தியடைந்து வரும் நாட்டை சேர்ந்த மக்கள் மட்டுமல்ல, மாறாக அபிவிருத்தியடைந்த நாட்டைச் சேர்ந்த மக்களும்தான். ஆனால், இரு தரப்பினரும் பாதிக்கப்படும் விதம் வெவ்வேறு விதமாக அமைந்துள்ளது. ஒரு தரப்பு நேரடியாக பாதிப்புக்குள்ளாக மறுதரப்பு கட்டமைப்பு ரீதியான பாதிப்பினை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. எது எப்படியிருப்பினும் மக்களினுடைய இழப்புகளைப் பற்றியோ அல்லது அவர்களினுடைய அவலங்களைப் பற்றியோ அடக்குமுறையாளர்கள் சிந்திப்பதில்லை. ஆனால், இயல்பு

**பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஐம்பது வருடங்கள் (1957-2007),**
**தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கம் பெற்று முப்பது வருடங்கள் (1977-2007)**
**இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி இருபது வருடங்கள் (1987-2007).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு, ஜனநாயகம், நல்லாட்சி, மனித உரிமை, பயங்கரவாதம் போன்றவற்றை மக்களின் பெயரால் பேசிக்கொள்வார்கள்.

1983ல் பெய்ரூட்டில் ஈரான் குண்டு வீசியதை குற்றமாக சொல்லி தற்போது அதற்கான தண்டப்பணத்தை செலுத்த சொல்பவர்கள் தாம் ஈராக்கில் வாரி இறைத்த குண்டுகளுக்கு என்ன வார்த்தைஜாலம் காட்டப் போகிறார்கள்? மொன்ரிநிக்குரோவின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தியவர்கள், கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்திற்காய் மல்லுக்கட்டிக் கொண்டு நிற்பவர்கள் குந்த ஒரு குடிநிலம் கொடுத்த பலஸ்தீனம் குடிமுழுகிப் போவது கண்டும் கண்திறக்காமல் இருப்பது எதற்காக? மீண்டும் ஜனநாயக கொங்கோ குடியரசில் இரத்த ஆற்றை ஓட வைத்து, சூடானையும் மீண்டும் கொந்தளிப்பான நிலைக்கு கொண்டுவர வைப்பதில் குறியாய் நிற்கிறது முதலாளித்துவம். இவர்கள்தான் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்.

ஆட்புல ஒருமைப்பாடு, நாட்டின் இறைமை , தேசிய பாதுகாப்பு பற்றி பேசுபவர்களால் எவ்வாறு பிரஜைகளின் உரிமைகளை மட்டும் மறுக்க முடிகிறது. மக்களை அடக்குவதற்கு அரசியலமைப்பை காரணங்காட்டுபவர்கள் ஏன் அரசியலமைப்பில் மக்களுக்கென கூறப்பட்டுள்ள சுதந்திரத்தை மறுக்கிறார்கள்?

மேற்கூறிய கருத்துக்கள்தான் மக்கள் சக்தியை, சிவில் சமூகத்தின் பங்களிப்பை எடுத்து விளக்கியது. சுதந்திர சிந்திப்புக் கொண்ட மக்கள் சமூகத்தால் அடிமைத்தனத்தை களைய முடியும் என்பதை கவனத்திற் கொண்ட சர்வதேச சமூகம், அதனை தந்திரமாக கையாளுவதற்கான உபாயமாக சில அரச சார்பற்ற நிறுவனங்களை பயன்படுத்தத் தொடங்கியதாக கடுமையான விமர்சனங்கள் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக "சிவில் சமூகம்" என்பது சமூகத்தின்பால் முழுமையான கரிசனை கொண்டதாக அனைவரதும் பங்களிப்பு உடையதாக இருக்க வேண்டும். ஆனால், சமகாலத்தில் பேசப்படுகின்ற சிவில் சமூகமானது அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளையும், அவர்களுக்கு நெருக்கமானவர்களையும் கொண்டமைந்துள்ளது. வலு(Power) அதிகார பரவலாக்கம் பற்றி பேசும் இத்தகைய அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது கட்டமைப்புகளில் எத்தகைய அதிகாரப் பரவலாக்கத்தையும் செய்யத் தயாராகவில்லை. ஊருக்கு உபதேசம் தனக்கில்லையென்பது வல்லாதிக்க சக்கதிகளுக்கும் அவர்களால் உருவாக்கப்பட்டவர்களுக்கும் மிகப்பொருத்தமாகவுள்ளது. 2002 இல் சமாதான முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட போது மோதுகையென்றால் என்னவென்று பயிற்சி செய்திட்டங்களை மேற்கொண்டவர்கள் சுமார் ஐந்து வருடங்களுக்குப் பின்னரும் அதே இடத்திலேயே தடுமாறிக் கொண்டிருக்கின்றன. இது குறித்த செய்திட்டத்தை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இலக்கையடையாத தனத்தையே வெளிப்படுத்தி நிற்கின்றன. அத்தகைய சவால்களிலிருந்து வெளிவரவேண்டிய பொறுப்பு அரச சார்பற்ற நிறுவனங்களினுடையது. தமது பொறுப்பினை நியாயமான முறையில் மக்களுக்கு ஆற்றுவதன் மூலம் தம்மை சூழ்ந்துவரும் எதிர்மறைக் கருத்துக்களை கட்டுப்படுத்தலாம். ஒரு அரசாங்கத்திற்குரிய பொறுப்புணர்வோடு செயற்படாது, மாறாக அதற்கு எதிரான முறையில் தமிழ் மக்களுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்திய போது தமிழ் மக்களை பட்டினிச் சாவு போன்ற மனிதாபிமான விடயங்களிலிருந்து மீட்ட கணிசமான பெருமை சர்வதேச அரச, அரச சார்பற்ற நிறுவனங்களையும், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களையும் சாரும். இதேவேளை இவ்வாறான நடவடிக்கைகளை செய்வதுபோல் வெளியில் காட்டிக்கொண்டு, மறைமுகமாக ஈழப்போராட்டத்தின் தீவிரத்தன்மையை குறைப்பதற்கு கணிசமான பங்கினை சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன என்பது அவை மீதான கடந்த காலக் குற்றச்சாட்டு.

இது ஈழப்போராட்டத்தில் மட்டும் இடம்பெற்ற விடயமல்ல. பலஸ்தீனம் உட்பட சுதந்திரத்திற்காகப் போராடும் தேசமெங்கும் வியாபித்திருக்கிருகின்றது. பலஸ்தீன சுதந்திர இயக்கத்தின் (PLO) கட்டமைப்பு சீர்குலைவுக்கு, ஹமாஸ், ஹிஸ்புல்லா போன்ற இயக்கங்களின் தோற்றுவாய்களுக்கு மற்றும் போராட்ட தீவிரத்தை குறைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் சில மறைமுகமாகத் தன்னிலும் பங்காற்றியுள்ளன என்பது சுதந்திரப் போராட்ட வரலாறுகளை புரட்டிப் பார்க்கின்ற போது வெளித்தெரிகிறது. ஈழப்போரட்டத்தில் மக்கள் பாதிக்கப்பட்ட போது உதவிக்கரம் நீட்டியதனூடாக அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈழப்போராட்ட சூழலில் இன்றுவரை உலாவருகின்றன. அவற்றில் சில உண்மையில் மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் செயற்படுபவையல்ல. அத்தகைய அரச சார்பற்ற நிறுவனங்களாலும் ஈழப்போராட்டத்திற்கு சவால்கள் உள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட போது முண்டியடித்துக் கொண்டு வாய்க்கு வாய் சமாதானத்தை மந்திரமாக உச்சரித்த அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது என்ன செய்கிறார்கள்? ஆயுதம் தாங்கிய தரப்புகள் சமாதான காலத்தில் போருக்கான ஏற்பாடுகளைச் செய்யும். ஆனால் சமாதானத்திற்காக செயற்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் சமாதான காலத்தில் என்ன செய்தன? ஆக்கபூர்மாகவும் நீண்டகால நோக்கிலும் செயற்பட்டிருப்பின் இன்றைய தேக்கநிலை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஏற்பட்டிருக்காது. அரச சார்பற்ற நிறுவனங்களின் சுயநலப் போக்கும், துராநோக்கற்ற செயற்பாடுமே இன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் சம்பாதித்துக் கொண்டுள்ள அவப்பெயர்களுக்கான அடிப்படைக் கராணமாகிறது.

போருக்கான இறுதிக் கட்டத் தயாரிப்புக்கள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ள வேளையில் தீவிரமாக செயற்பட வேண்டிய அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள் பேசாமடந்தைகளாக உள்ளன. போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது முன்னணி சமாதான செயற்பாட்டாளர்களாக "சோடித்து" திரிந்தவர்கள் தற்பொழுது அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை, மாறாக அராஜகத்துக்கு வக்காலத்து வாங்குபவர்களாகவும், போருக்கு மறைமுகமாக ஆதரவு வழங்குபவர்களாகவும் உள்ளனர்.

அரசாங்கமும், அதன் ஆயுதப்படைகளும் மட்டுமல்ல விளைவுகளிலிருந்து விடுபாட்டுறுதியை (Impunity) பயன்படுத்துவது. கூடவே அரச சார்பற்ற நிறுவனங்களும் தான். ஆனால் அவற்றின் வடிவங்களும் அதன் வகைகளும் தான் வித்தியாசம். இவர்கள் ஒரு விடயத்தினை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அது யாதெனில், மக்களை எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது என்பதே.

வரலாறு தவறுகளை பொறுத்துக் கொள்ளுமே தவிர, மன்னிப்பதில்லை. இது மக்களை ஏமாற்றுகின்ற அனைவருக்கும் பொருந்தும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "எமது தாயகமும் வடக்கே"

சிராஜ் மசூஹூர்

பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்களின் விவகாரம் அடிக்கடி மறக்கப்படும் ஒன்றாக ஆகியிருக்கின்றது. தேசிய பிரச்சினையின் பிரதான பங்காளர்களது விவகாரங்களே அரசியல் அரங்கில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிலையில் இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. இலங்கை இனப்பிரச்சினையில் முஸ்லிம்களது நிலை அடிக்கடி சர்ச்சைக்குரிய ஒன்றாகவே இருந்து வருகின்றது. சிறுபான்மையினரது பிரச்சினை என்ற அக்கறையற்ற மனோபாவமே இதன் பின்னின்று செயற்படுகிறது. அதிலும் குறிப்பாக வடக்கு முஸ்லிம்களது விவகாரம் ஒவ்வொரு ஒக்டோபர் மாதத்தில் மட்டுமே ஞாபகப்படுத்தப்படும் ஒரு விடயமாக மாறியிருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

எனினும், உள்ளூர் மட்டத்தில் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைவிட, அண்மைக்காலமாக இங்கு வருகை தரும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளது கவனம் இவ்விடயத்தில் அதிகரித்து வருவது ஒரு முக்கியமான மாற்றமாகும். பலவந்தமாக வெளியேற்றப்பட்ட இந்த மக்களது விவகாரம் பொஸ்னிய பாணியிலான இனச்சுத்திகரிப்பை ஒத்த ஒன்று என்பதாலேயே அவர்கள் இந்த விடயத்தில் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர்.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002 பெப்ரவரி 22 அன்று கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், இலங்கை விவகாரத்தில் சர்வதேச சக்திகளது தலையீடு ஒப்பீட்டளவில் அதிகரித்து வந்திருக்கிறது. சுனாமிக்குப் பின்னரான நிவாரணக் கட்டமைப்பு மற்றும் வாழைச்சேனை, மூதூர் கலவரங்கள் என்பன முஸ்லிம்களது விவகாரம் தொடர்பான சர்வதேச சமூகத்தின் அக்கறையை அதிகரிக்கச் செய்திருக்கிறது. அதிலும் மாவிலாறு விவகாரத்தைத் தொடர்ந்து மூதூர் முஸ்லிம்கள் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டு திடீரென வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானதை முஸ்லிம் விவகாரத்தின் மீதான கவன ஈர்ப்பை மேலும் அதிகரிக்கச் செய்ய வழிவகுத்தது எனலாம்.

இவ்வாறான புறநிலைமைகள் சர்வதேச சக்திகளது இலங்கைப் பிரச்சினை தொடர்பான புரிதலை மேலும் ஆழப்படுத்தியிருக்கிறது. 29 ஜனவரி 2003ல் நிகழ்ந்த ஒலுவில் பிரகடன நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஒன்றுதிரண்டு தம்மை ஒரு தேசமாகப் பிரகடனப்படுத்தியதும் இதில் கணிசமான பங்களிப்பை ஏற்படுத்தியது எனலாம்.

இப்பின்னணியிலேயே சர்வதேச அளவில் செல்வாக்குள்ள அனைத்துலக மோதல் தவிர்ப்புக் குழு இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இவ்வறிக்கை இலங்கைப் பிரச்சினையில் முஸ்லிம் விவகாரம் மேலும் அதிக கவனம் எடுக்கப்பட்டுக் கையாளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

வடக்கு முஸ்லிம்கள் தங்களது தாயகத்துக்கு மீளத் திரும்பும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும், அவர்களது வெளியேற்றம் தொடர்பாக ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும், உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளை நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகள் என்பன தொடர்பாக இவ்வறிக்கை அதிக அழுத்தம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு முஸ்லிம்கள் தங்களது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பும் உரிமையை அரசு மட்டுமல்லாது தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்டு பகிரங்கமாக அதனை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இவ்வறிக்கை வேண்டியுள்ளது.

அரசாங்கம், புலிகள், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் போன்ற உள்ளூர் தரப்பினர் வடக்கு முஸ்லிம்களது விடயத்தில் உருப்படியான எந்த நடவடிக்கைகளையும் கிட்டிய எதிர்காலத்தில் செய்யப் போவதில்லை என்பதே களநிலைமையாகும். இதன் காரணமாகவே புற அழுத்தங்களை நம்பி நிற்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதன் ஒரு கட்டமாகவே சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இவ்விடயத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

1994ல் பி.பி.சி.க்கு வழங்கிய பேட்டி ஒன்றில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் "யாழ்ப்பாணம் முஸ்லிம்களது சொந்த மண். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவே அவர்கள் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது இதற்கு மன்னிப்பு கோருகிறோம்" என்று பகிரங்கமாகக் கூறியிருந்தார். பிரபாகரன் மன்னிப்புக் கோரிய ஒரே விடயம் இதுவே என்றும் கூறப்படுகிறது. விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் இதே கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்டிருந்தார்.

"ஆறாம் வருடமும் இவர்கள் அழுவதே விதியென்றால், அழியட்டும் இந்நாடு, அழியட்டும் என் இனம், அழியட்டும் என் தமிழ்" என்று கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் தனது கவிதை வரிகளை கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக கேட்போர் கூடத்தில் வைத்து 1995ல் வாசித்தபோது நேரடியாகக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அங்கிருந்த மனஉணர்வுகள் கால ஓட்டத்தினூடே பல திசைகளில் கலைந்து போயின. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சிவசிதம்பரம் முஸ்லிம் காங்கிரசின் தேசிய மாநாடு ஒன்றில் "வடக்கு முஸ்லிம்கள் மீளக்குடியமராத வரை தான் யாழ்ப்பாணம் போகப்போவதில்லை" என்று கூறியிருந்தார். அவை ஞாபகங்களாகவே மாறிவிட்டன. ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 75,000 வடக்கு முஸ்லிம்கள் 1990ல் விடுதலைப் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இப்போது அவர்களது எண்ணிக்கை 1,30,000 என அண்ணளவாக கணிக்கப்பட்டுள்ளது. இம்மக்கள் முறையான வதிவிட, உணவு, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளின்றி தமது அன்றாட இருப்புக்கே அல்லாடுகின்றனர். ஒரு நாள் கழிந்தது என்பதே இவர்களுக்கு பெரிய சாதனையாக இருக்கின்றது. உரிய சுகாதார வசதிகள் மற்றும் முறையான கல்வி வாய்ப்புக்கள், அடிக்கடி தேவைப்படும் சட்ட ஆலோசனைகள், தொழில் வாழ்வாதார வழிகாட்டல்கள் என்பன முறையாகக் கிடைக்காத நிலையிலேயே இம்மக்கள் தமது வாழ்வை நகர்த்த வேண்டி உள்ளது. மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சின் கீழ் இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்களுக்கான செயலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக அரசினால் சிறியளவு உலர் உணவு மானியமும் கொடுக்கப்படுகின்றது. இது மாதம் ஒன்றுக்கு 1250 ரூபாய் ஆகும். நாள் ஒன்றுக்கு வெறும் 8 ரூபா 50 சதம். இன்றைய வாழ்க்கைச் செலவு உச்சநிலையில் உள்ள சூழலில் இது எதற்குப் போதும்? ஒரு முழுக் குடும்பத்தினால் இதை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? இது அம்மக்களின் அடிப்படைத் தேவைகளை ஈடுசெய்ய எவ்விதத்திலும் போதுமானது அல்ல என்பது சொல்லாமலே தெரிந்த விடயமாகும்.

வாழ்தலே ஒரு போராட்டமாக இருக்கும் இம்மக்களுக்கு அண்மையில் புத்தளத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை மேலும் அழுத்தங்களையும் சுமைகளையுமே ஏற்படுத்தி உள்ளன. இடம்பெயர்ந்து வாழும் சமூகங்களுக்கும் புகலிடம் அளிக்கும் சமூகங்களுக்குமிடையில் சுமுகமான உறவைப் பேணுவதில் உலகம் முழுவதும் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன. புத்தளம் போன்ற குறைவிருத்திப் பிரதேசங்களில் வாழ்வாதாரங்களை, பொருளாதார ஈட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன. நீண்டகாலமாக இரு சமூகங்களுக்குமிடையிலான சிறு சிறு முரண்பாடுகள் வெடிப்பதன் மூலம் அவ்வப்போது நிலைமை மோசமடைந்தே செல்கிறது. பிரதியமைச்சர் பாயிஸின் அண்மைய நடவடிக்கைகள், அமைச்சர் நிஸாட் பதியுதீனுக்கு எதிரான அவரது மோதல் போக்கு, வடக்கு முஸ்லிம்களை 'அகதிகள்' என்று பொதுப்படையாக இழிவாகப் பேசியமை, தமது பிரதேச வளங்களை 'அகதிகள்' சுவீகரிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு போன்றவை அவசியமற்ற பிரச்சினைகள் உருவாவதற்கான சூழலை ஏற்படுத்தி உள்ளன. தனிப்பட்ட அரசியல் பிரச்சினைகளை இரண்டு சமூகங்களுக்கிடையிலான பிரச்சினையாக மாற்றுகின்ற பிற்போக்கு அரசியல் உடனடியாகக் களைந்தெறியப்பட வேண்டும். இதன் எதிர்விளைவாக பாயிஸ் உட்பட தனது முக்கியமான கட்சி அங்கத்தவர்களை முஸ்லிம் காங்கிரஸ் இடைநிறுத்தியுள்ளது.

இந்த அண்மைய முறைப்பாடுகளின் உடனடி எதிர்விளைவாக தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்றே வடக்கு முஸ்லிம்கள் எண்ணத் தலைப்பட்டனர். புகுந்த இடத்தில் இரண்டாம் பட்சமான சமூகமாக இருப்பதைவிடவும் சொந்த இடத்தில் கௌரவமான சமூகமாக வாழமுடியும் என்பதே அவர்களது ஆதங்கமாகும். இது இவ்வாறிருக்க, சிலாவத்துறையைக் கைப்பற்றியதாக அரசு பெருமிதத்துடன் அறிவித்துள்ளது. யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பது போல யானை ஹெல உருமயவின் வடிவத்தில் இப்போது வந்துள்ளது. இப்பிரதேசம் சிங்களவர்களது பூர்வீகப் பூமி என அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளனர். கிழக்கு மீட்பு பற்றிய ஆரவாரங்கள் சிங்கள மயமாக்கலினால் ஈடுசெய்யப்படுகின்ற சதித்திட்டத்தின் இன்னொரு அங்கமே இதுவாகும்.

இப்பிரதேசம் முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பெரும் வளம்மிக்க பகுதியாகும். முசலி என்று பொதுவாக அறியப்படும் இப்பிரதேசத்தில் 23 முஸ்லிம் கிராமங்கள் தொடர்ச்சியாக இருந்தன. இப்போது தென்கிழக்கு என்று பேசப்படும் பகுதியை விடவும் இது பரப்பளவில் பெரிய பிரதேசமாகும். அரச படைகள் இப்பிரதேசத்தைக் கைப்பற்றியதாக அறிவித்துள்ள நிலையில், அங்கு மீள்குடியேறக் கூடிய வாய்ப்பு உள்ளது என வடக்கு முஸ்லிம்கள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். இங்குதான் ஒருவிடயம் குறித்து முக்கிய கவனம் எடுக்க வேண்டியுள்ளது.

காலாகாலமாக தமது பாரம்பரிய வாழ்விடங்களில் மீளக்குடியேற வேண்டும் என இம்முஸ்லிம்கள் கோரிவந்துள்ள போதிலும், விடுதலைப் புலிகள் அது தொடர்பாக மன்னிப்புக்கு அப்பாலான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஆதலால் தான் அரச படைகளது கைப்பற்றல் சந்தர்ப்பத்தை மீள்குடியேறுவதற்கான வாய்ப்பாக இம்மக்கள் நோக்குகின்றனர். விடுதலைப் புலிகளும் போதிய உத்தரவாதத்தை உறுதியாக வழங்கியிருப்பார்களாயின் அரச படைகளை நம்பியிருக்க வேண்டிய எந்தத் தேவையும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்காது. இந்நுணுக்கமான விடயத்தை விடுதலைப் புலிகளின் தலைமையும், அரசியல் பிரிவும் போதியளவு கவனத்தில் எடுக்கவில்லை என்பது துரதிர்க்ஷ்டவசமானது. வடக்கு முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் இணைந்தே வாழ்வோம் என்பதில் - இவ்வளவு நிகழ்ந்ததன் பின்னர் கூட - மிகவும் உறுதியாக இருக்கின்றனர். அந்த உறுதியை கைகொடுத்து ஆழப்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் பலமுறை நழுவவிடப்பட்டுள்ளன. இது குறித்து தமிழ் - முஸ்லிம் நல்லுறவின் மீதும் சகவாழ்வின் மீதும் அக்கறை உள்ள எல்லோரும் ஆழமாகச் சிந்தித்து அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வடக்கு முஸ்லிம்கள் பல சமூக, பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவும் அரசியல் பிரக்ஞை காரணமாகவும் தமது தாயத்திற்கு மீள்வதில் உறுதியாக இருக்கின்றனர். அதற்கான சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் அவர்கள் அது குறித்துப் பேசவே செய்கின்றனர். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நடத்திய சர்வதேசப் பத்திரிகையாளர் மாநாட்டின் போதும் இதே உணர்வுகள் மேலெழுந்ததை இங்கு ஞாபகப்படுத்துவது பொருத்தமானது.

வடக்கு முஸ்லிம்கள் தமது தாயகப் பிரதேசத்தில் மீண்டும் நிம்மதியாக மூச்சுவிடும் காலம் எப்போது வரும்? அது வரும் என்ற நம்பிக்கையே அவர்களை வாழவைக்கின்றது. "எமது தாயகமும் வடக்கே"

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழரின் வாழ்வுரிமையும் இலங்கை இந்திய ஆட்சியாளரின் பொறுப்பீனமும்

**இடையன்**

இந்தியர்கள் இலங்கைக்கு வருவதும் போவதும் வரலாற்றின் ஆரம்ப காலம் முதல் இருந்த போதிலும் 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்தியதையடுத்துத் தென்னிந்தியாவில் இருந்து தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் இலங்கையின் மத்திய மலைநாட்டில் வந்து குடியேறலாயினர். இது ஆரம்பத்தில் ஒரு கட்டாய பொருளாதார குடியேற்றமாகவே அமைந்திருந்தது. இவ்வாறு இலங்கையில் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றமையானது இலங்கை தொடர்பில் குறிப்பாக இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர்கள் மீதான இந்தியாவின் பொறுப்பும், கடமையும் கூட அதிகரிக்கத் தொடங்கியது. இது இருவேறுநிலைப்பட்டதாக இருந்தது. முதலாவது குறிப்பிட் இந்த மக்கட் பிரிவினர் இந்தியாவின் குறிப்பாகத் தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டாவது இந்தியா இப்பிராந்தியத்தில் முக்கியமான நாடு என்ற ரீதியிலும் தனது கடமையையும், பொறுப்பையும் செய்ய வேண்டிய கடப்பாடு இருந்தது. அதை இந்தியா எந்தளவுக்குச் செய்துள்ளது என்பதைச் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மேற்குறிப்பிட்ட கட்டாய பொருளாதார குடியேற்றமானது 1828ஆம் ஆண்டு ஆரம்பித்த போதிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம்வரை இது தொடர்ந்தது. இவ்வாறு இந்தியாவிலிருந்து வந்த தமிழர்களில் பெரும் எண்ணிக்கையானோர் பெருந்தோட்டத்துறையில் குடியேறினர். குறிப்பிட்டளவானோர் நாடு முழுவதிலும் பரவலாக நகரசுத்தித் தொழிலாளர்களாக தொழில் புரிந்ததுடன், வர்த்தக நோக்கோடு வந்தவர்கள் தலைநகர் கொழும்பிலும் பெருந்தோட்டங்களை அண்டிய சிறு மற்றும் பெரு நகரங்களிலும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வரலாயினர்.

இலங்கையிலிருந்த இந்தியர்கள் பல்வேறுபட்ட துன்பங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும் உள்ளானார்கள். இதிலிருந்து விடுபட சிறு சிறு முயற்சிகள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்ட போதிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டிலிருந்து வந்த கோ.நடேசய்யர் மற்றும் அவரது துணைவியார் மீனாட்சியம்மாள் ஆகியோரின் பங்களிப்பானது மலையகத் தோட்டப்புறங்களில் தமிழரிடையே விழிப்புணர்வுக்கான ஒரு ஆரம்பத்தைத் தோற்றுவித்தது எனலாம். இது தனிமனித முயற்சியாக இருந்த போதிலும் அதன் வீச்சு விசாலமானது.

நடேசய்யர் தொழிற்சங்கம் அமைத்து தோட்டப்புறங்களிலுள்ள தமிழர்களை





அமைப்பாக்கும் முயற்சிகளுக்கு களமமைத்தார். இதன் பின்னர் இலங்கையிலிருந்த இந்திய வர்த்தக சமூகத்தினர் இந்தியாவின் துணையுடன் ஒரு அமைப்பைத் தோற்றுவித்தனர். இவ்வமைப்பு 1939ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து (பின்னர் இந்தியப் பிரதமரான) ஜவகர்லால்நேருவின் தலைமையில் தோற்றுவிக்கப்பட்ட "இலங்கை இந்திய காங்கிரஸ்" ஆகும். இதன் தொழிற்சங்கப் பிரிவு 1940ஆம் ஆண்டு ஹப்புத்தளை கதிரேசன் கோயிலில் வைத்து அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சுதந்திரத்தின் பின்னர் 1952ஆம் ஆண்டு இவ்வமைப்பின் பெயர் "இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்" என மாற்றப்பட்டது. 1942 ஆம் ஆண்டு கம்பளை நகரில் நடந்த இலங்கை இந்திய காங்கிரஸின் மாநாட்டில் அதன் ஏற்பாட்டுக்குழுத் தலைவராக இருந்த சௌமியமூர்த்தி தொண்டமான் பின்னர் தான் இறக்கும் வரை அதன் தலைவராக விளங்கினார்.

இலங்கையிலிருந்த இந்தியத் தமிழருக்காக அமைப்புகள் தோற்றுவிக்க இந்தியா உதவிய போதிலும் அம்மக்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த போதெல்லாம் உதவியதா என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும். 1931 – 1947 வரையிலான டொனமூர் அரசியலமைப்புச் சட்டம் இலங்கையில் நடைமுறையில் இருந்த போது ஆசிரியர்களாகவும், வங்கி உத்தியோகஸ்தர்களாகவும் துறைமுக ஊழியர்களாகவும் அரச சேவையில் இடைநிலை உத்தியோகஸ்தர்கள், அதிகாரிகளாகவுமிருந்த பெரும்பாலானோரின் தொழில் நிறுத்தப்பட்டு இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். மேலும் 1938ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது தோட்டப் புறங்களிலிருந்த தமிழர்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது. இதற்குச் சொல்லப்பட்ட காரணம் தோட்டங்கள் உள்ளூராட்சி வரம்பிற்குள் உள்ளடங்கவில்லை என்பதாகும். ஆனால் இதனை எதிர்த்துக் கேட்க வேண்டிய இந்தியா அவை பற்றி எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்க முயற்சிக்கவில்லை. அந்தக் காலப்பகுதியில் இலங்கையும் இந்தியாவும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதைத் தடுப்பதற்கு வாய்ப்பிருந்தும் இந்தியா அதைச் செய்ய முயலவில்லை.

1947ஆம் ஆண்டு நேரு, டீ.எஸ்.சேனநாயக்க ஆகியோர் இலங்கையிலிருந்த இந்திய வம்சாவளியினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதிலும், நடைமுறையில் அவ்வொப்பந்தம் எந்தவிதத்திலும் பயனுடையதாக அமையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரு, டீ.எஸ்.சேனநாயக்க ஆகியோர் முறையே சுதந்திர இந்தியாவினதும், இலங்கையினதும் முதற் பிரதமர்களாக பதவி வகித்த போதிலும் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. நடைமுறைப்படுத்தும்படி நேரு தலைமையிலான இந்திய அரசாங்கம் அழுத்தம் செலுத்தக் கூடிய வாய்ப்பிருந்தும் அதைப் பற்றிய தமது பொறுப்பை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற முயற்சிக்காமையானது இந்தியா தனது பொறுப்பிலிருந்து விலகியிருந்தமையையே எடுத்துக் காட்டுகிறது.

டீ.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இலங்கை சுதந்திரம் பெற்ற 1948ஆம் ஆண்டு பிரஜாவுரிமை சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இச்சட்டத்தின் பிரகாரம் இலங்கைப் பிரஜாவுரிமை பெற குறித்த நபர் அல்லது அவரது தந்தை இலங்கையிற் பிறந்தவர் என்பதை நிரூபிக்க வேண்டும். இதனை அடுத்து 1949ஆம் ஆண்டு இந்திய - பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டத்தையும் நிறைவேற்றியது. இச்சட்டத்தின் பிரகாரம் இலங்கைப் பிரஜாவுரிமை பெற திருமணம் முடித்தவராயின் ஏழு ஆண்டுகளும், திருமணம் முடிக்காதவராயின் பத்து ஆண்டுகள் தொடர்ச்சியாக இலங்கையில் வாழ்ந்தவராக இருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட இரு சட்டங்கள் மூலம் இலங்கையிலிருந்த இந்தியத் தமிழர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1949ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தேர்தல்கள் திருத்தச் சட்டமானது பிரஜாவுரிமை இல்லாதவர்களுக்கு வாக்குரிமையும் இல்லை என்ற நிலையை உருவாக்கியது. இதன் தாக்கத்தை பின்னர் வந்த தேர்தல்களில் காணக் கூடியதாக இருந்தது. 1947ஆம் ஆண்டு தேர்தலில் ஏழு உறுப்பினர்களை கொண்டிருந்த இந்திய வம்சாவழித் தமிழர்கள் 1952ஆம் ஆண்டு தேர்தலின் போது ஒரு உறுப்பினரைக் கூட பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

மேற்குறிப்பிட்ட சட்டங்கள் சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோதோ அல்லது அதன் விளைவுகளை இந்திய வம்சாவழித் தமிழர்கள் எதிர் கொள்ள நேரிட்டபோதோ இலங்கையிலிருந்த இந்திய வம்சாவழித் தமிழர்கள் சார்பாகக் குரல் கொடுக்கவோ அல்லது குறித்த சட்டங்களின் பாதிப்புகளிலிருந்து அம் மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கோ இந்தியா முயற்சிக்கவுமில்லை, இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கான வாய்ப்பிருந்தும் அதனைச் செய்யவுமில்லை. இதன் மற்றுமொரு வெளிப்பாடாக 1954ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட நேரு – கொத்தலாவல ஒப்பந்தத்தின் மூலம் குறிப்பிட்ட தொகையினரை மீள இந்தியாவிற்கு அழைத்துக் கொள்வதற்கும் இந்தியா இணக்கம் தெரிவித்தது. நேரு – பண்டாரநாயக்க உறவுநிலை மிகவும் சுமுகமாக இருந்த வேளையிலேயே 1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்க பிரதமரானார். இச்சந்தர்ப்பத்தில் கூட இலங்கையிலிருந்த இந்தியத் தமிழர்கள் தொடர்பாக இந்தியா பாராமுகமாகவே நடந்து கொண்டது. அம்மக்களின் பிரச்சினைகளை ஒரு பொருட்டாகக் கருதாது தன் பிராந்திய ஆதிக்க வலு சேர்க்கும் முயற்சியையே முக்கியத்துவப்படுத்தி நின்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இலங்கையிலிருந்த இந்திய வம்சாவழித் தமிழ் மக்கள் தங்கள் இருப்பைத் தக்க வைப்பதற்கும், இன அடையாளத்தைப் பாதுகாப்பதற்குமான வழிவகைகள் பற்றிச் சிந்திக்கத் தொடங்கலாயினர். "இந்திய வம்சாவழி" என்ற அடைமொழிக்கான மாற்று பற்றிய கருத்துக்கள் மேலெழுந்தன. தங்கள் வாழ்வாதாரப் பிரதேசத்தைக் குறித்து நிற்கும் "மலையகம்" என்ற மாற்று அடைமொழி பெரும்பாலானோரால் பிரேரிக்கப்பட்டது. 1960களில் இலங்கை திராவிட இயக்கத்தின் முன்னோடி இளஞ்செழியன் மற்றும் இரா.சிவலிங்கம் ஆகியோரால் முதன் முதலில் "மலையகத் தமிழர்" என்ற பதம் பொது பிரயோகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதன் தாக்கம் மலையகத் தமிழ் மக்கள் சார்ந்து பின்னாளில் தோன்றிய அமைப்புகள் அனைத்தும் 'இந்தியத் தமிழர்' என்ற பதத்திற்குப் பதிலாக 'மலையக தமிழர்' என்ற இன அடையாளத்துடனேயே தோன்றின. இதற்கு விதிவிலக்காகத் தோன்றிய 'இலங்கை இந்திய சமுதாய பேரவை' கூட இந்தியத் தொடர்புடைய கொழும்புவாழ் இந்திய வர்த்தகர்களை மையமாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியா ரஷ்யா சார்பு நிலைப்பாட்டை எடுத்த நிலையில் மற்றுமொரு சோஷலிச நாடான சீனாவுடன் எல்லைப் பிரச்சினை காரணமாக 1962ஆம் ஆண்டு போரிலும் ஈடுபட்டது. மறுபுறத்தில் இலங்கை சீனாவுடனான தனது உறவை மிகவும் பலப்படுத்தியிருந்தது. பிராந்திய வல்லரசாக முயற்சித்துக் கொண்டிருந்த இந்தியாவிற்கு இலங்கையுடனான உறவை வலுப்படுத்த வேண்டிய தேவையும் இருந்தது. இந்நிலையில் இந்தியா இலங்கையுடனான உறவை வலுப்படுத்துவதற்காக இலங்கையிலிருந்த இந்தியத் தமிழர்களின் நிலையை விட்டுக் கொடுப்பதற்கு இணங்கியது. இதன் வெளிப்பாடே 1964ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தம். இவ்வொப்பந்தத்தின் பிரகாரம் அன்றைய நிலையில் இலங்கையில் இருந்ததாகக் கணிக்கப்பட்ட 9 இலட்சம் மலையகத் தமிழரில் 6 இலட்சம் பேரை இந்தியாவும் இலங்கையும் 4:3 என்ற விகிதாசாரத்தில் பொறுப்பெடுக்க இணங்கியதுடன் மீதமுள்ள மூன்று இலட்சம் பேர் பற்றிய முடிவை பின்னர் எடுப்பதெனவும் இணங்கப்பட்டது. அன்றைய அரசாங்கத்தில் இ.தொ.கா தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஒரு நியமன உறுப்பினராக இருந்த போதும் அவர் சார்ந்த மக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் குறித்து அவருடன் கலந்தாலோசிக்கப்படாததையிட்டு அவர் இவ்வொப்பந்தத்தை எதிர்த்தார். ஆனால் இந்த ஒப்பந்தம் அமுலாக்கல் சட்டம் 1967ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டபோது குறைந்தளவானோருக்காவது இலங்கைப் பிரஜாவுரிமை கிடைக்கும் என்ற ரீதியில் தொண்டமான் அதனை ஆதரித்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஆதரவு வழங்க, அதன் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் வீ.நவரட்ணம் அனைத்து மலையகத் தமிழ் மக்களுக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து இச்சட்ட மூலத்தை எதிர்த்ததுடன் தனது கட்சி உறுப்பினர் உரிமையையும் இராஜினாமா செய்ததுடன் தமிழர் சுயாட்சிக் கழகத்தையும் ஸ்தாபித்தார்.

இந்தியாவின் இயலாமையை வெளிப்படுத்திய மற்றுமொரு விடயம்தான் 1974ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஸ்ரீமா- இந்திரா ஒப்பந்தம். இதன் பிரகாரம் மீதமாக இருந்த மூன்று லட்சம் மலையகத் தமிழர்களைச் சரி பாதியாக இந்தியாவும், இலங்கையும் ஏற்றுக் கொள்வதென இணங்கப்பட்டது. இவ்விரண்டு ஒப்பந்தங்களின் பின்னரும் இரு நாட்டிற்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விண்ணப்பிக்காத 95,000 பேர் தொடர்ந்தும் நாடற்ற பிரஜைகளாகவே இருந்தனர். தொடர்ந்து 1977ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை இலங்கையில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழரில் குறிப்பிடத்தக்க தொகையினர் இந்தியாவுக்கும், இலங்கையின் வட – கிழக்கே முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கும் இடம்பெயர்ந்து குடியேறலாயினர். மீள இந்தியா திரும்பியோரில் பெரும்பாலானோர் தென்னிந்தியாவில் நிலப்பிரபுக்களின் கொத்தடிமைகளாகவே இன்றும் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது பற்றி இந்தியா பெரிதாகக் கதைத்த போதும் செயலில் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை.

இந்தியா செல்ல விண்ணப்பித்து இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்றவர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் 1983ஆம் ஆண்டு இந்தியாவிற்கான கப்பல் சேவை நிறுத்தப்பட்டதுடன் இந்தியா செல்லவில்லை. 1985ஆம் ஆண்டு திம்புவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது வட – கிழக்குப் போராளி இயக்கங்கள் கூட்டாக முன் வைத்த நான்கு அம்சக் கோரிக்கையில் ஒன்றான நாடற்றவர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையின் பயனாகப் பின்னாளில் நாடற்ற மலையகத் தமிழர்களுக்கு இலங்கைக் குடியுரிமை (1989 ஆம் ஆண்டு நாடற்றவர் பிரஜாவுரிமைச் சட்டம்) வழங்கப்பட்டது. இந்தப் பின்னணியிலேயே 1948ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த சனத்தொகையில் 13வீதமாக இரண்டாவது இடத்திலிருந்த மலையகத் தமிழர்கள் இன்று 5.1வீதமாக நான்காவது இடத்திலுள்ளனர்.

வரலாற்று ரீதியிலான படிப்பினையானது இந்தியா தனது சொந்த நலனுக்காக முதலில் மலையக மக்களையும், பின்னர் வட – கிழக்குத் தமிழர்களையும் இன்று மீண்டும் மலையக மக்களையும் பயன்படுத்திக் கொள்வதை அவதானிக்கலாம். முதலில் தொண்டமான் மூலமாக மலையக மக்கள் மீதான கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்ட இந்திய ஆளும் வர்க்கம் இன்று மலையகத்தில் இருக்கக் கூடிய அனைத்துப் பிரதான தொழிற்சங்க அரசியல் தலைமைகளையும் தன் ஆதிக்கத்தின் கீழ் செயற்பட அழுத்தங்களைப் பிரயோகித்துள்ளது. இதன் மற்றுமொரு வெளிப்பாடாக இன்று மலையகத்தில் ஒரு சில வளர்ந்து வரும் மாற்று சக்திகளைத் தவிர வேறு எந்தவொரு பிரதான கட்சியும் எதிர்க்கட்சி அரசியலை நடத்தக் கூடிய நிலையிலில்லை. இது ஒரு சமூகத்தைப் பொறுத்த வரையில் ஆரோக்கியமான சூழலல்ல!

மேலும் மலையக மக்கள் ஒரு சமூகமாக எழுச்சி பெற முயற்சித்த போதெல்லாம் இந்தியா என்றுமே பின்புலத்தில் உதவிக்கு நிற்கவில்லை. உதாரணமாக மலையகத் தமிழ் மக்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த போதெல்லாம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்கவோ அல்லது அச்சமூகத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவோ எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லை. பெயரளவில் மேலோட்டமான சில உதவித் திட்டங்களை மட்டுமே முன்னெடுத்துள்ளனர். உதாரணமாக மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கல், இலவச மருத்துவ





முகாம்கள், போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆகக் குறைந்தது சுவீடன் நாடு மலையக மக்களின் கல்வி முன்னேற்றத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் காட்டிய அக்கறையைக் கூட இந்தியாவினால் செய்ய முடியாதது மலையக மக்கள் மீது இந்தியா காட்டக் கூடிய உதவிகளையிட்டுச் சந்தேகம் கொள்ளத் தூண்டுகிறது.

இலங்கையில் மலையகத் தமிழர்களதும், வட – கிழக்குத் தமிழர்களதும் பிரச்சினைகள் வேறுவேறானதாக இருந்த போதிலும் தமிழர் என்ற ரீதியில் இணைந்து செயற்படக் கூடிய ஒரு சில சந்தர்ப்பங்களையும் இந்தியா தனது உளவுப் பிரிவுகள் மூலம் தடுத்துள்ளது. உதாரணமாக பாராளுமன்றத்தில் மலையகக் கட்சிகளை ஆளுந்தரப்போடு இணைத்து வைத்திருப்பது, தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத்தடைச் சட்டம் என்பவற்றிற்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்வது, வட – கிழக்குப் பிரச்சினையில் தமிழர்களுக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுப்பதை தவிர்க்கச் செய்தல் என பட்டியலிடலாம். வட-கிழக்குப் போராட்டத்தில் இந்தியாவின் எதிர்மறையான நடவடிக்கைகளின் வீச்சு மலையகத் தமிழர்களையும் பாதித்துள்ளது. இந்நிலையிலேயே இரண்டரை இலட்சம் வரையிலான மலையகத் தமிழர்கள் பாதுகாப்புக் கருதி வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களில் குடியேறியுள்ளனர்.

இந்தியாவின் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக மலையக சமூகம் தொடர்ந்தும் பின் தங்கிய சமூகமாகவே இருப்பதுடன், வலிமையான தலைமைத்துவ உருவாக்கத்தையும் தடுத்துள்ளது. மேலும் மலையக மக்களின் பிரச்சினைகளை சர்வதேச ரீதியாகப் பேசு பொருளாக்குவதை இந்தியாவின் நடவடிக்கைகள் அல்லது அவர்கள் சார்ந்து மலையகத்தில் செயற்படும் தலைமைகளின் நடவடிக்கைகள் இன்னும் தடுப்பதாகவே உள்ளது. இதன் மற்றுமொரு நிலைப்பட்ட வெளிப்பாடே தமிழ்நாட்டில் இப்பிரச்சினையைத் தெரிந்தவர்கள் கூட அக்கறையற்று இருப்பதையும், மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க பின் நிற்பதையும் காணலாம்.

இன்றைய நிலையில் மலையகத் தமிழர்களுக்கு விடிவு கிட்ட வேண்டுமாயின் இம் மக்களின் பிரச்சினைகளைச் சர்வதேச ரீதியாகப் பேசு பொருளாக்க வேண்டும். தமிழ்நாடு மட்டத்திலும், இந்திய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் ஆதரவான சக்திகளை அணிதிரட்ட வேண்டும். மலையக மக்கள் துணைச் சக்திகளின் நேசக்கரங்களைப் பற்ற முன்னர் அக நிலையில் சக்திகளைக் கட்டியெழுப்புவது இச்சமூகம் எழுச்சி பெற்று முன்னோக்கி செல்வதற்கு இன்றியமையாததாகும். அடுத்ததாக துணைச் சக்திகளான தமிழகம், வட – கிழக்குத் தமிழர், உள்நாட்டு முஸ்லீம்கள், முற்போக்குச் சிங்களவர் என அனைத்து தரப்பினரையும் ஒன்று திரட்ட வேண்டும். இதை முதலில் தமிழ் நாட்டிலேயே ஆரம்பிக்க வேண்டும். தமிழ்நாடு இதற்கு ஒத்துழைக்காதவிடத்து துணைச்சக்திகளை அணி திரட்டும் செயற்பாட்டை வேறொரு இடத்தில் ஆரம்பிப்பது தவிர்க்கவியலாத ஒன்றாகிவிடும். அந்த ஆரம்பம் இலங்கைவாழ் சிங்களவர்களாகக் கூட இருக்கலாம்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜனாதிபதியின் பொறுப்பு என்ன?

**விமலநாத் வீரரத்ன**

சமாதானத்திற்காக பிரபாகரனை வன்னிக்கு சென்று சந்திக்க தயாராக உள்ளதாக ஜனாதிபதி பதவியை ஏற்பதற்கு அண்மித்தான தினமொன்றில் மகிந்த ராஜபக்ச ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். அவர் பிரபாகரனை சந்திக்க செல்ல தேவையில்லை. ஆனால் சகல முயற்சிகளையும் எடுத்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அவர் நடவடிக்கைகளை எடுக்கலாம். ஜனாதிபதி என்பவர் அனைத்தையும் செய்யக் கூடிய விசேட சக்தியைக் கொண்டவர் அல்லர். எனினும் நீதியான வழியைத் தெரிவு செய்யாமல் சிங்கள அடிப்படைவாதத்தின் இரையாக மாறுவதற்கு அவர் தன் சுய விருப்புடன் முன் வந்திருப்பதனை அனுமதிக்க முடியாது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது விளையாட்டான விடயமல்ல. அதனை தனி நபரால் தீர்க்க இயலாது. ஜனாதிபதி என்பவர் நாட்டின் தலைவர் என்ற முறையில் தன்னுடன் அனுசரிக்கும் மற்றும் அனுசரிக்காத சக்திகளை தேசிய கடமை ஒன்றுக்காக வழிப்படுத்தக் கூடிய சூட்சுமத்தையும் பொறுப்பையும் கொண்டிருக்க வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் சார்புடன் செயற்படுவதாக சர்வதேசப் பிரஜைகள் முன்னிலையில் ஜனாதிபதி தெரிவிக்கின்றார். சர்வ கட்சி மாநாட்டில் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வை மேற் கொள்வது குறித்து பேசப்படுகின்றது. கிராமிய சிங்கள மக்களிடம் சென்று கொடூரமான பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றி ஐக்கியப்படுத்தப் போவதாக அவர் தெரிவிக்கின்றார். இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்தும் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்தும் பேசும் சர்வதேச அமைப்புகள் ஜனாதிபதியின் இந்த கொள்கையற்ற நடைமுறைகள் குறித்து வினாவெழுப்பா விட்டாலும் சர்வதேச ஊடகங்களில் இவ்விடயம் ஆராயப்படுகின்றன. உதாரணத்திற்கு ஜோன் ஹோம்ஸ் ஜனாதிபதியின் இந்த இரட்டைக் கொள்கை நிலைப்பாடு குறித்து கேள்வியெழுப்பா விட்டாலும் ஊடகங்களுக்கு இலங்கையின் கொள்கையற்ற நிலைமையை விளக்கியிருந்தார்.

சர்வதேசத்தை புறக்கணித்து விட்டு எம்மால் முன்னோக்கிச் செல்ல இயலாது. குத்துச்சண்டை எல்லைக்கப்பால் நின்று கொண்டு வாய்ப் பேச்சின் மூலம் குத்துச் சண்டை போட்டியில் குத்துச் சண்டை வீரரினால் வெல்ல முடியாது. குத்துச்சண்டைப் போட்டியில் உரிய பயிற்சி நடைமுறைகள் ஏதுமின்றி களத்தில் குதித்தால் பயங்கரவாதியின் குத்துக்களுக்கு நாம் கீழே விழ வேண்டியேற்படும். கிராமப்பகுதிகளுக்கு சென்று புலிகளின் தோலினை உரிக்கப் போவதாகக் கூச்சலிட்டு விட்டு சர்வதேச நாடுகளுக்கு சென்று அதற்கு முரணாக கருத்தினைத் தெரிவிப்பதனால் எந்த கருத்து உண்மையான கருத்து என்று எவராலும் விளங்கிக் கொள்ள முடியாத நிலை ஏற்படும். எனினும் இந்த நிலைமை நீடித்தால் பயங்கரவாதியிடம் மட்டுமன்றி மற்ற தரப்பினர் மத்தியிலும் நகைப்புக்குரிய நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது.

உறுதிப்பட ஒரு வார்த்தையை வெளிப்படுத்த முடியாதவராக ஜனாதிபதி இருப்பது ஏன்? ஜே.வி.பியும் ஹெல உறுமய கட்சியும் அரசாங்கத்தை இனவாதத்தை நோக்கி கட்டி இழுத்துச் செல்வதால் தான் அப்படி என்று ஒருவரால் கூறி விட முடியும். ஆனால் யதார்த்தம் அதுவல்ல. இந்த கூட்டணி அரசாங்கத்தில் பிரதான சக்தியாக சுதந்திரக் கட்சி திகழ்கின்றது. சுதந்திரக் கட்சிக்கு தேசியப் பிரச்சினை குறித்து தெளிவான உறுதியான நிலைப்பாடு இன்மையே இந்த முரண்நிலைகளுக்கு காரணமாகும். கட்சியின் தலைமைக்கு ஏற்ப மாறுபடும் கொள்கையே சுதந்திரக் கட்சிக்குள் நிலவுகின்றது. சந்திரிகா அம்மையார் காலத்தில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ஓரளவு ஏற்கத்தக்க நிலைப்பாட்டினை சுதந்திரக் கட்சி கொண்டிருந்தது. ஜனாதிபதி ராஜபக்ச தலைமையில் இந்நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. சந்திரிகா தலைமையில் முற்போக்கான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தவர்கள் இன்று தீவிர இனவாதிகளாகி விட்டனர். சர்வ கட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட சுதந்திரக் கட்சியின் தீர்வு யோசனைகள், ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமயவின் இனவாதத்தினை அன்றி சுதந்திரக் கட்சியின் வடகிழக்கு பிரச்சினையை புறக்கணித்து செயற்படும் தற்போதைய நிலைப்பாட்டினையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

தம்மால் வழங்கப்படும் தீர்வினை புலிகளும் தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினையே சிங்களத் தலைவர்கள் கொண்டுள்ளனர். தீர்வொன்றை முன்வைக்க அல்லது சிங்கள சமூகத்தின் தீர்வு திட்டம் குறித்து அபிப்பிராயம் தெரிவிக்க தமிழ் மக்களுக்கு உரிமை இல்லையா? அத்துடன் இலங்கை சிங்கள பௌத்தர்களின் நாடு என்ற விடயத்தை ஜனாதிபதி நேரடியாக தெரிவிக்கா விட்டாலும் அவரின் செயற்பாடுகள் அவ்விடயத்தையே உள்ளார்ந்த ரீதியில் புலப்படுத்துகின்றன.

இந்த நிலைமையிலிருந்து ஜனாதிபதி மீள வேண்டுமாயின் முதலில் ஜனாதிபதி இவ்விடயங்கள் தொடர்பில் தம்மை தாமே வெற்றி கொள்ள வேண்டியது அவசியமாகும். தீவிர சிங்களப் போக்கு நிலையினை மற்றும் அம்பாந்தோட்டைவாத மனப்பான்மையை மாற்றிக் கொள்வது அவசியமாகும். எதிரியை உருவாக்கி அந்த எதிரியுடன் மோதுவதற்கு சிங்கள சமூகத்திற்கு இடமளித்து நாட்டின் ஏனைய அடிப்படைப் பிரச்சினைகளை மறந்து செயற்படும் 12 ஆண்டு கால நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து ஜனாதிபதி உடனடியாக தம்மை விடுவித்துக் கொள்வது அவசியமாகும். அவ்வாறில்லாவிடின் அவருக்கோ நாட்டிற்கோ அல்லது எமக்கோ எந்தவிதமான மீட்சியும் கிட்டாது.

'உங்களது மிகவும் நெருங்கிய நண்பரைக் கூட இணங்கச் செய்ய முடியாவிட்டாலும் வாழ்வின் தீர்க்கமான கால கட்டத்தினை அண்மித்த பின்னர் நீங்கள் மனச்சாட்சியின் படியே நடந்துக் கொள்ள நேரிடும். அந்த குரல் எவ்வளவு தான் பலவீனமாகவிருந்தாலும் பொறுப்பு தொடர்பான பிரச்சினையை சந்திக்கும் போது இறுதி தீர்மானத்தை எடுக்க வேண்டியவர் நீங்களே' - மகாத்மா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# படிக்க வேண்டியது என்ன?


சி.ஆர்.மூர்த்தி

**நா**ட்டில் இருள் சூழ்ந்துள்ளது.

இருள் நல்லது என்று ஒருவர் கருதுகிறார். இருள் மோசமானது என்று மற்றவர் நினைக்கிறார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ நாட்டைச் சூழ்ந்துள்ள இருளைப் பற்றிய சிந்தனையில்லாமல் "இருளே எனக்கான ஒளி" என்று மிதப்புடனும் நம்பிக்கையுடனும் தொழில்படுகிறார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருளையும் ஒளியையும் பயன்படுத்த வல்லவர் என்றாலும் அவருடைய பயன்படுத்தல்கள் இராணுவ மூளைக்கூடாகவே பிறப்பன என்பதால் பொதுமக்களுடைய நலன் என்ற கோணத்திலிருந்து பார்க்கிற போது எது நன்மை? எது தீது? என்பதில் சங்கடங்கள் தான் மிஞ்சும்.

மகிந்தவைப் பொறுத்தவரையில் வெற்றித்திளைப்பில் ஊறிய ஒரு குறுநில மன்னனைப் போலவே அவர் நடந்து கொள்கிறார். பொறுப்புணர்வு, தொலைநோக்கு, மனித நேயம், மக்கள் சார்பு, போன்ற எந்த விழுமியங்களும் அவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. பொய்யும் புரட்டும் பெருகிப் பரக்க இராணுவ வெற்றியே ஒரே வழி என்றும் அது கை கூடி வருகிறது என்றும் அவர் கருதுகிறார். ( அவர் மட்டுமல்ல: தென்னிலங்கையில் மிகப் பலமான ஒரு கண்ணோட்டமாக இது இருக்கிறது.) பிரபாகரனோ, ஒரு வகையான தற்காப்பு நிலையில் முடங்கிக் கொண்டு தன்னுடைய அடுத்த நகர்வு என்ன என்பதே ஒருவரும் ஊகிக்க முடியாதவாறு ஒரு மர்மச் சுற்றுக்குள் பதுங்கி இருக்கிறார் என்று தோன்றுகிறது. இந்த நிலையில் சமாதானப் பேச்சுக்களை நோக்கி இருவரையும் எப்படி இழுத்து வருவது என்பது ஆயிரங்கோடி பெறுமதியான கேள்வியாகும்.

இப்போதுள்ள நிலைமையில் பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்புக்களோ, சூழலோ எதுவுமே இல்லை என்பது தான் உண்மை. இது ஒரு துயரமான நிலைமை. இணக்கம் என்பது ஏற்பட வேண்டுமானால் இரு தரப்பினரும் நெகிழ்வு நிலையை நோக்கிச் செல்ல வேண்டும் என்பது அடிப்படையான விதி. இந்த நெகிழ்வு நிலையை எந்தவொரு வெளிநாட்டு அல்லது சர்வதேச சமூகமும் உருவாக்கி விட முடியாது. போருக்கு எதிர்ப்பான ஒரு பலமான மக்கள் இயக்கம் மெல்ல மெல்ல உருவானால் மட்டும் தான் இத்தகையதோர் நெகிழ்வ நிலை உருவாக முடியும் என்று தோன்றுகிறது. இலங்கையின் "சமாதான இயக்க" வரலாற்றிலும் போருக்கெதிரான வெகுஜன எழுச்சி தொடர்ச்சியானதாகவும் பலமானதாகவும் ஒரு போதும் இருந்ததில்லை. இதற்கு முக்கியமான காரணங்களுள் ஒன்று போரின் அவலங்களும் குரூரமும் பெருமளவுக்கு வடக்குக் கிழக்குப் பகுதிகளிலேயே உள்ளதென்பதும் அவை பற்றிய புரிந்துணர்வும் அனுபவங்களும் கொழும்பிலும் மேல்மாகாணத்திலும் இல்லை என்பதுமாகும். இலங்கையில் முடிவு



எடுக்கும் அதிகாரம் உள்ளவர்களும் அவர்களது அரசியல் பொருளியல் கேந்திரங்களும் மேல்மாகாணத்திலேயே உள்ளன / உள்ளனர்.

உண்மையில் முழு இலங்கையையும் ஆட்டிப் படைப்பதும் கட்டுப்படுத்துவதும் மேல்மாகாணம் தான். கொழும்பும் மேல்மாகாணமும் ஒரு தனித் தீவு போலத் தான் தொழிற்படுகின்றன. இந்த நிலை தொடர்ந்து நீடிக்கும்வரை கொழும்புத் தலைமைகளுக்கு நாட்டு யதார்த்தம் தெரியவராது. தாங்கள் கட்டியெழுப்பிய ஒரு கண்ணாடிக் கோட்டையுள்ளே இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். கொழும்பு மையவாதம் என்ற இந்தக் கண்ணாடிக் கோட்டையைத் தகர்ப்பதே பேச்சுவார்த்தைகளுக்கான முதலாவது படி.

இந்த அடிப்படையை ஜனாதிபதி உணர வேண்டும். அவரைச் சுற்றிவர வீற்றிருப்பவர்களுக்கும் அவருக்கு ஆலோசனை வழங்கும் புத்தி / புத்திசீவிகளும் ஜனாதிபதியை யதார்த்த நிலைக்கு இழுத்து வர வேண்டும். இது எவ்வளவு தூரம் என்பது காலத்துக்குத் தான் தெரியும்.

பிரபாகரனைப் பொறுத்தவரை. பொறுத்திருப்பதே இப்போதைய வழி என்ற என்ற தந்திரோபாயத்தைக் கடைப்பிடிப்பதைப் போலத் தோன்றுகிறது. அவர் மீது நேரடியாகப் பாதிப்பைச் செலுத்தக் கூடியவர்கள் எவருமே இல்லை என்பது யதார்த்தம். தனிமைப்படுத்தல் (Isolation) என்கிற தந்திரத்தைப் பயன்படுத்தி அவரைப் பேச்சுவார்த்தை மேடைக்கு இழுத்துவர முடியும் என்று சிலர் கருதுகிறார்கள். அது சாத்தியமில்லை என்பதை வரலாறு சொல்கிறது. போர் எப்போதுமே அவரை வளப்படுத்தியும் வலுப்படுத்தியுமே வந்துள்ளது. இதனைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் "யுத்தத்தில் நாம் வென்று வருகிறோம்: விரைவில் வடக்கையும் பிடித்து விடுவோம்" என்று உறுதியான மனோநிலையில் அரசு தொழிற்படுவது பிரபாகரனுக்குச் சாதகமாகவே அமையப் போகிறது. அவரைப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்து வருவதற்கு உள்ள ஒரேயொரு வழிமுறை ஒரு பொருத்தமான மாற்றுத் திட்டத்தை முன்வைப்பது. அந்த மாற்றுத் திட்டத்திற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது. இதனைச் செய்ய முடியாதவரை நிலைமை கவலைக்கிடந்தான். வரலாற்றிலிருந்து எந்தவிதமான பாடங்களையும் நாம் படிப்பதில்லை என்பது ஒரு துயரமான வரலாற்றுப் பாடம் ஆகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆசிரியர் குறிப்பு

பொருட்களின் விலை உயர்வினைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. பொருட்களின் விலை உயர்வுக்கேற்ப ஊழியர்களின் வேதனங்கள் அதிகரிக்கப்படுவதில்லை. அவ்வாறு வேதனங்களை அதிகரிப்பதும் எளிதான காரியமல்ல.

வாழ்க்கைச் செலவுக்கேற்ப வேதனங்களை அதிகரிக்குமாறு கோரும் ஊழியர் போராட்டங்கள் அதிகரித்துள்ளன. ஆனால் நடைபெற வேண்டியது என்ன? பொருட்களின் விலைகளைக் குறைக்கக் கூடிய திடமான உற்பத்திச் செயற்பாடுகளும் பொருளாதாரத் திட்டமிடல்களும் அவசியமாகும். டொலரின் பெறுமதியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர நாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே அவசியமாகும்.

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு



**அரச மற்றும் தனியார் துறை முரண்பாடு அதிகரித்துள்ளது**

கலாநிதி ஹர்ஷ டி சில்வா

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்ற விடயத்தில் இரு பகுதிகள் உண்டு. ஒன்று பொருட்களின் விலையும் அதன் அதிகரிப்பு வேகமும். மற்றையது தமது வருமானம். பொருட்கள் விலை அதிகரிப்புக்கேற்ப வருமானம் அதிகரிக்குமாயின் வாழ்க்கைச் செலவு மற்றும் பணவீக்கம் பற்றிய பிரச்சினைகள் ஏற்படாது. பொருட்கள் விலை அதிகரிப்புக்கேற்ப வருமானம் அதிகரிக்காமையே இங்கு பிரச்சினையாகும். அதனால் இந்த இரு விடயங்களையும் இருவாறு நோக்க வேண்டும்.

ஒரு விடயம் பொருட்களின் விலை. சிலர் இதனை நிரம்பலினால் உந்தப்படும் பணவீக்கம் என்கின்றனர். வரட்சியின் போது வெள்ளப்பெருக்கின் போது ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும் போது பொருட்களின் விலைகள் மீதான அழுத்தம் அதிகரிக்கும். அதனால் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும்.

அடுத்த விடயம் கேள்வியினால் ஏற்படும் பணவீக்க நிலை. பொதுமக்கள் மத்தியில் பணமிருக்குமாயின் அந்த பணத்திற்கு கொள்வனவு செய்ய பொருட்கள் சேவைகள் சந்தையில் இல்லாவிட்டால் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். உதாரணத்திற்கு இருவரிடம் பத்து ரூபாய் இருக்கும் அதேநேரம் தேங்காய் இரண்டு மட்டுமே இருக்குமாயின் தேங்காயின் விலை பத்து ரூபாயாகி விடும். அவ்விருவரிடமும் இருபது ரூபாய்கள் இருக்குமாயின் தேங்காயின் விலை இருபது ரூபாயாகி விடும். இது தான் எளிய விளக்கம்.

அரசாங்கம் பலவாறு செலவு செய்கின்றது. அமைச்சரவைக்கு யுத்தத்திற்கு மற்றும் மானியங்கள் என்றவாறு இந்த செலவுகள் அமைந்து விடுகின்றன. அவ்வாறு செலவு செய்ய அரசாங்கத்திடம் நிதி இல்லை என்பது நாம் அறிந்த விடயமாகும். அரசாங்கத்திடம் பணமில்லாததினால் அரசாங்கம் பணத்தை அச்சடித்து செலவுகளை மேற்கொள்கின்றது. கடந்த மூன்று மாதங்களில் அரசாங்கத்திடம் பணமில்லாத காரணத்தினால் அரசாங்கம் முப்பந்தைந்து பில்லியன் ரூபாய்களை அச்சடித்துள்ளது. இந்த பணம் அரசாங்கத்தின் செலவுகளுக்காக அச்சடிக்கப்பட்டுள்ளது. அந்த பணம் சாதாரண மக்கள் மத்தியில் சென்றடைந்திருக்காது. ஆனால் அரசாங்கம் இல்லாத பணத்தை அச்சடித்து செலவு செய்கின்றது. இதனால் பொருளாதாரத்தில் பணத்தின் அளவு பொருட்கள் சேவைகளுக்கு ஒப்பாக அதிகரித்திருக்கும். இந்த நிலைமையையே நாம் கேள்வியினால் ஏற்படும் பணவீக்க நிலை என்கின்றோம்.

அதே போன்று பொருளாதார வளர்ச்சி வேகத்திற்கு ஏற்ப புழக்கத்திற்கு சில்லறைக் காசுகள் மற்றும் நோட்டுத்தாள்கள் அவசியம் என்று கூறப்படுகின்றது. இந்த ஆண்டில் எமது பொருளாதார வளர்ச்சி வேகம் 8 சதவீதம் என்றே நாம் எண்ணியிருந்தோம். ஆனால் குடிசன மதிப்பீட்டு திணைக்களம் கடந்த முதல் ஆறு மாதத்தின் பொருளாதார வளர்ச்சி வேகம் 6 சதவீதம் என்று சில நாட்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது. 8 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகம் தேவையெனில் எஞ்சிய ஆறு மாதங்களுக்கு 10 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகம் அவசியமாகும். அதற்கு தேவையான பணத்தையே அச்சடித்து புழங்க விடப்பட்டுள்ளது. அதாவது தேவைக்கு அதிகமான பணம் தற்போது சந்தையில் புழங்குகின்றது. அதனால் கேள்வியினால் ஏற்பட்டுள்ள பணவீக்கமே பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளது.

இன்னொரு விடயமாக தமது வருமானம் எவ்வளவு அதிகரிக்கின்றது என்ற விடயத்தைக் குறிப்பிடலாம். தற்போது எடுத்து நோக்கினால் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கின்றது. அவர்களின் ஆகக் குறைந்த சம்பளம் பதினொராயிரம் ரூபாவிலிருந்து அதிகரித்துள்ளது. அதேபோன்று அரச ஊழியர் தொழிற்சேனையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அரச துறையில் பணவீக்கத்திற்கு ஏற்ற வகையில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் தனியார் துறையில் பணியாற்றுவோரின் நிலை அப்படியல்ல. அவர்களின் ஆகக்குறைந்த சம்பளம் மட்டும் ஆறாயிரமாகும். ஆனால் இவர்கள் இருவரும் ஒரே சந்தைக்கே செல்கின்றனர். கொள்வனவு செய்வதும் ஒரே விதமான பாண். அதனால் இங்கு மிகவும் அநீதியான நிலைமையே ஏற்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள் நலன்புரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விடயங்களுக்கென பணம் அச்சடிக்கப்பட்டு செலவு செய்யப்படும் போது அவர்களின் வாழ்க்கைச் சுமை ஓரளவு குறைக்கப்படும் நிலையில் அரச துறையை தவிர்ந்த ஐந்து மில்லியன் ஊழியர்கள் மிகவும் அநீதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

**விளிம்பு நிலை மக்களுக்கு ஆபத்து**

எஸ்.சிவராசா
மட்டக்களப்பு.

என்றுமில்லாதவாறு விலைவாசி அண்மைக் காலத்தில் உயர்ந்து செல்கிறது. இதற்கு முதலாவது காரணம் போர் என்றே நான் நினைக்கிறேன். போரில் அரசு பெருந்தொகை பணத்தை விரயமாக்குகிறது இதனால் மக்களுடைய அடிப்படைத் தேவைகளுக்கான மானியத்தை அரசாங்கம் குறைத்து வருகிறது. இது பொருட்களின் விலையேற்றத்திற்கு வழிவகுக்கிறது. துனியார் நிறுவனங்களுடைய உச்ச இலாப நோக்கும் மக்களைச் சுரண்டும் வகையில் அமைந்திருக்கிறது. போர் காரணமாக நாட்டின் உற்பத்தித் துறை வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்த நிலையில் அரசாங்கம் மேலும் பணத் தாள்களை அச்சிட்டதாக பத்திரிகைச் செய்தி கூறுகிறது. பணத் தாள்களின் அதிகரிப்பு மேலும் பொருட்களின் விலையேற்றத்திற்கே வழிவகுக்கும். இது அன்றாடம் உழைத்து வாழும் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக ஆக்கிவிட்டிருக்கிறது.



**மேலதிக விளைச்சல் பயன்பாட்டிற்கு திட்டம் அவசியம்**

கலாநிதி ரோகண லக்ஷ்மன் பியதாச

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பானது சமூகத்தில் அனைத்து மக்களினாலும் உணரப்படுகின்றது. தமக்கு வேண்டிய பொருட்களைக் கொள்வனவு செய்ய சந்தைக்கு சென்றவுடனேயே அந்த நிலை உணரப்படுகின்றது. இவ்வாறு பொருட்களின் விலை அதிகரிக்கின்றமையை நாம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்றே கூறுகின்றோம். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை நானும் உணர்கின்றேன்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு விடயத்தில் வெளிக்காட்டப்படும் எதிர்ப்புணர்வின் பின்னணியில் இருக்கும் விடயங்களை நாம் விளங்கிக் கொள்ளாத வரை இந்த எதிர்ப்பை நாம் வெறும் எதிர்ப்புணர்வாகவே காண்கின்றோம். உதாரணத்திற்கு கூறுவதாயின் இலங்கைக்கு இந்தியாவிலிருந்து முட்டைகள் இறக்குமதி செய்யப்படுகின்றது. அந்த முட்டை இறக்குமதியை கட்டுப்படுத்தியவுடன் உள்நாட்டில் முட்டைகள் விலை அதிகரிக்கின்றன.

அதேபோன்று எமது நாட்டில் காய்கறிகள், கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றின் விளைச்சல் குறையும் போது விலைகள் அதிகரிக்கின்றன. ஆனால் மேலதிக விளைச்சல் உள்ள போது அவற்றை ஒழுங்குப்படுத்தி பாதுகாக்கும் முறை ஒன்றுக்காக போராட எம்மால் இயலும். வாழ்க்கைச் செலவு என்ற விடயத்தின் பொதுவான எதிர்ப்புணர்வை பயன்மிக்கதாக்க முடியும் என்றே நான் கருதுகின்றேன்.

தேசிக்காய் விலையை எடுத்துக் கொண்டால் இலங்கையில் தேசிக்காய் விளையும் காலத்தில் ஒரு கிலோ தேசிக்காயை ஒரு ரூபாவிற்குக் கூட விற்க முடியாதளவுக்கு விலை குறைவடைகின்றது. அதேபோன்று தேசிக்காய் ஒரு கிலோவின் விலை எண்பது முதல் தொண்ணூறு வரை அதிகரிக்கும் காலமும் உண்டு.

அமோக விளைச்சல் இருக்கும் காலப்பகுதியில் விளைச்சலை ஒழுங்குப்படுத்தி வைக்கக் கூடிய நடைமுறைகளுக்காக ஆர்ப்பாட்டம் மற்றும் கருத்து நிலைகளை உருவாக்க முடியுமாயின் அவற்றை ஊடகங்கள் மக்கள் மத்தியில் பரப்ப முடியுமாயின் கொள்கை வகுப்பாளர்களினால் அது தொடர்பான கொள்கைகளை வகுக்க முடியுமாயின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு தொடர்பான எதிர்ப்பு நிலையை அர்த்தமுள்ளதாக்க முடியும் என்றே நான் கருதுகின்றேன்.

**தண்டனை**

ஏ.ஜி.எம்.ஸதக்கா
வாழைச்சேனை

போர், சுனாமி போன்ற நெருக்குவாரங்களுள் ஆட்பட்டுப் போயிருக்கும் வடக்கு கிழக்கு மக்களை நமது தேசம் வழங்கிக் கொண்டிருக்கும் 'உயர்ந்த பரிசாகிய' விலையேற்றம் மிக உயர்ந்தளவிலேயே பாதித்துக் கொண்டிருக்கிறது. இன்று வாழ்க்கைக்கும் அதற்கான வசதிகளுக்கும் இலங்கை தேசத்தில் விசேடமாக வடக்கு கிழக்கு மக்களே பெறுமதி சேர் விலையைக் கொடுத்து வருகிறார்கள். போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, தரகு முதலாளிகளின் சுரண்டல் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடுருவல் என்பனவும், புறக்காரணிகளாகின்றன. விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு என்ற முக்கியத்துவம் இழந்துவிடும் பாரம்பரியத் தொழில்களுக்குள் தமது ஜீவனோபாயத்தைத் தேடியலையும் எமது மக்களுக்கு இவ்விலையேற்றம் மிகப் பெரிய தண்டனையாக இருக்கிறது.



**வீண்விரயமே வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு காரணம்**

விரிவுரையாளர் பிரியதர்ஷனி ஆரியரத்ன

யுத்தம் காரணமாகவே வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு யுத்தம் மட்டும் காரணம் என்று கூறி விட முடியாது. அரசின் வீண்விரயம் மற்றும் தவறான பொருளாதாரக் கொள்கை நிலையே இந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்பில் செல்வாக்கு செலுத்துகின்றது.

தற்போதைய வரி அறவீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நடைமுறைகள் நீதியானது என்று நான் கூற மாட்டேன். வரிகளை சரியாக அறவிடுவதும் இல்லை. வரி மோசடிகள் அதிகளவில் நிகழ்கின்றன. அதனாலேயே அரசின் செலவுகளை ஈடு செய்ய தேவையற்ற முறையில் பொருட்களின் விலையை அரசாங்கத்தினால் அதிகரிக்க நேர்ந்துள்ளது.

அரசாங்கம் இந்த தவறான கொள்கைகளை செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் அவற்றை குறைக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்கள் அதனை அரசாங்கத்திடம் வினவ முயற்சிக்கும் போதே வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

குறிப்பாக வீட்டிற்கு தேவையான அத்தியாவசியமான பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது ஒரு முறைக்கு இரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் ஆகக்குறைவான வருமானம் பெறுவோரின் நிலையை சிந்தித்துப் பார்க்க முடியாதுள்ளது. அவர்கள் எப்படியாவது பசியைப் போக்கிக் கொள்வார்கள். ஆனால் நாட்டில் போஷாக்கின்மை எவ்வளவு தூரம் அதிகரிக்கும் என்பதனை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

நான் ஒரு ஆசிரியையாக மாணவர்கள் என்ன உணவை உட்கொள்கின்றார்கள் என்பதனை அறிந்திருக்கின்றேன். பெரும்பாலும் சோறும் சம்பலும் அதிலிருக்கும். இல்லாவிட்டால் பருப்பும் சோறும். மாணவர்களின் பெற்றோர்களிடம் உரையாடினால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். உணவுக்கான செலவை சமாளிக்க முடியாதுள்ள போது ஏனைய விடயங்களுக்கான செலவுகளை எவ்வாறு ஈடு செய்வார்கள் என்பதனை உணர்ந்து கொள்ள முடியும். நமது நாட்டைப் போன்று மக்களும் கடன் பெற்றே சீவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடன் பெற்று வீடு கட்டுவதனை விட கடன் பெற்றே அன்றாட பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. கிலோ மற்றும் ஐந்நூறு கிராமில் பொருட்களை வாங்கியவர்கள் இன்று நூறு இருநூறு கிராமில் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றார்கள். எதிர்காலத்தில் இருபது மற்றும் ஐம்பது கிராமில் பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்படும். எதிர்காலத்தில் ஒரு மூடை பணத்தை எடுத்துச் சென்று சிறிதளவு பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையே மக்களுக்கு ஏற்படும்.

**மக்கள் விரோதப் போக்கே காரணம்**

எம்.இந்திரகுமார்
யாழ்ப்பாணம்

இந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு மிக முக்கியமான காரணம் டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியை சரியவிடாது பாதுகாக்கும் அரசாங்கக் கொள்ளை இல்லாததே. ஒரு காலத்தில் டொலருக்கு எதிரான இந்தியாவின் நாணயப் பெறுமதி இலங்கையுடன் ஒப்பிடும் போது மிகத் தாழ்வாகவே இருந்தது. ஆனால் இந்தியாவின் பொருளாதார முறைமையிலிருந்த அரச தலையீடு அண்மைக்காலத்தில் டொலருக்கு எதிரான இந்தியாவின் நாணயப் பெறுமதியை அதிகரிக்க வைத்திருக்கிறது. ஆனால் இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கையும் ஆட்சிக்கு வந்த அரசுகளின் மக்கள் விரோதப் போக்கும், தொடர்ந்து முன்னெடுத்து வருகின்ற போர் முன்னெடுப்புக்களும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்குக் காரணமாகின்றன. அது மட்டுமல்லாமல் உலகவங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வழங்கும் ஆலோசனையின் பேரில் மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகளுக்கான மானிய வெட்டும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கக் காரணமாகின்றன.



**மக்கள் திருடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை**

நாடகக் கலைஞர் கௌசல்யா பெர்ணாந்து

சோறும் சம்பலும் சாப்பிட்டு வாழுவோம் என்று முன்பு கூறுவார்கள். இன்றோ சோறும் சம்பலும் சாப்பிட்டு வாழ முடியாத நிலையே மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. எமது வீட்டில் இருவர் உழைப்பில் கஷ்டப்பட்டு வாழ்க்கையை நடத்தும் நிலையில் சாதாரணப் பொது மக்களின் நிலைமையை பற்றி கூறவே தேவையில்லை.

மனிதனுக்கு உணவு மட்டும் போதுமானதல்ல. உணவுக்கு அப்பால் உடை, கல்வி, போக்குவரத்து என்பனவும் அவசியமான விடயங்களாக உள்ளன. இன்றைய நிலைமையில் குடும்பத்தில் இருவர் உழைத்தாலும் இத்தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொள்ள முடியும் என்று நான் கருதவில்லை. விரைவில் வீடுகளுக்குள் திருடர்கள் புகுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மக்கள் திருடிப் பிழைப்பதற்கான சூழ்நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது.


கீழ் மட்ட மக்கள் இரு வேளை உணவு மட்டுமே உட்கொள்வதாக நான் அறிகின்றேன். மூன்று வேளையும் உணவு உண்பதற்கு அவர்களால் இயலாமல் உள்ளது.

எரிப்பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்துச் செல்கின்றன. அதனால் பொருட்களின் விலைகள் அதிகரிப்பதாகவே அரசாங்கம் கூறி வருகின்றது. ஆனால் எரிபொருட்கள் விலை உயர்வு எம்மை மட்டும் பாதிக்கும் விடயமல்ல. அரசாங்கம் எவ்வளவு தூரம் விரயமான விடயங்களில் ஈடுபடுகின்றது? இந்த வீண்விரயங்களை மக்களின் நலன்களுக்காக பயன்படுத்துவது அவசியமாகும். யுத்தம், எரிப்பொருட்கள் விலை உயர்வு என்று மக்கள் எவ்வளவு காலத்திற்கு தான் துன்புறுவார்கள்?

மறுபுறம் அரசாங்கம் மக்களிடம் வரி அறவிடுகின்றது. அதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நலன்கள் என்ன? குறைந்தபட்சம் சிறந்த போக்குவரத்து நடைமுறைகளாவது நிலவுகின்றனவா? எனினும் பெருமளவு பணத்தை செலவு செய்யக் கூடிய வகுப்பினரும் இந்நாட்டில் உள்ளனர் என்பதனை மறந்து விட முடியாது. வீதியில் இறங்கினால் உலகில் உள்ள அனைத்து சொகுசு ஆடம்பர வாகனங்களையும் காணக் கூடியதாகவுள்ளது. சொகுசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனைகள், சமூக விடுதிகள் அவற்றின் மோதல்கள் என்று பல விடயங்களையும் அறியக் கூடியதாகவுள்ளது. இதன் மூலம் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துள்ளமையை காண முடிகின்றது. இந்த சமூக ஏற்றத்தாழ்வு நிலைக்கு தீர்வு அவசியமாகும்.

அதேபோன்று மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளுக்காக ஏங்கிக் கொண்டிருக்கவும் முடியாது. மக்களுக்கு இனிப்பு மிட்டாய் வழங்கி ஏமாற்றியுள்ளனர். அதிலிருந்து மக்கள் மீள வேண்டும். அது மட்டுமன்றி அரசாங்கம் உரிய நடவடிக்கையினை எடுத்து மக்களுக்கு உரிய மானியங்களை வழங்க வேண்டும்.

**இரட்டிப்பு சுமை**

**மரியதாஸ் சாவகச்சேரி**

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பது இலங்கை முழுவதற்கும் பொதுவானது. ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களுக்கு அது இரட்டிப்பாகி விடுகிறது. பால்மா பைக்கற் கொழும்பில் 200 ரூபாவென்றால் யாழ்ப்பாணத்தில் 400 ரூபாய்க்கும் கிடைப்பதரிது. இப்படி அத்தியாவசியப் பொருட்கள் எல்லாவற்றுக்கும் இரண்டு அல்லது மூன்று மடங்கு விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் தான் இங்குள்ள மக்கள் இருக்கிறார்கள். போருக்கான செலவும் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையும் விலை அதிகரிப்புக்குக் காரணமென்றால் யாழ்ப்பாணத்தில் இப்படி மும்மடங்கு விலை அதிகரிப்பதற்கு யார் காரணம்.? இன்று வரை யாரும் இது பற்றி வாய் திறக்கிறார்களில்லை. அரசாங்க அதிபரோ போதுமான பொருட்கள் கையிருப்பில் உள்ளன என்று கிளிப்பிள்ளை போல் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் மக்களுக்குத் தான் அத்தியாவசியப் பொருட்கள் கையில் கிடைப்பதாயில்லை. அப்படியானால் கையிருப்பில் உள்ள பொருட்களுக்கு என்ன நடக்கிறது? ஏன் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது? கொழும்பை விட பல மடங்கு விலையில் ஏன் விற்கப்படுகிறது.? சாதாரண மக்கள் இந்தக் கேள்விகளை யாரிடம் கேட்க முடியும்? குற்றம் செய்பவரை விட்டுவிட்டு குற்றம் இடம் பெறுகிறது என்று சுட்டிக் காட்டுபவரை விசாரிக்கிற அரசாங்கம் இது. தமிழ் மக்கள் தமது தலைவிதி இது என்று நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கிறதா என்பது தெரியவில்லை.



**தவறான கொள்கைகள் வாழ்க்கைச் செலவை அதிகரித்துள்ளன**

**சிறு இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் - கித்சிறி விஜேசூரிய**

அரசாங்கத்தின் நிதிச் செயற்பாடுகளில் நிலவும் தவறுகளே வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு காரணமாக உள்ளன. தனியார் நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்ப ஒழுங்குப்படுத்தப்படவில்லை. பொருளாதாரமற்ற செயற்பாடுகளுக்கே அரசாங்கம் முன்னுரிமை வழங்கி செயற்படுகின்றது.

குறிப்பாக தற்போது தனியார் துறையினர் அவர்களினால் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு தேவையான அளவு இலாப தீர்வை சேர்த்துள்ளனர். வரி முறையில் நிலவும் முரண்பாடுகளே இதற்கு காரணம். வரி முறையில் முரண்பாடுகள் நிலவும் போது தனியார் துறை தொழிலாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் அது குறித்து அச்சமடைகின்றனர். அதற்கு அஞ்சி அவர்களின் இலாப தீர்வையினை அதிகரிக்க முயற்சிக்கின்றனர். இவ்வாறான இயல்பே தற்போது காணப்படுகின்றது.

வருமான வரி திணைக்களம் மற்றும் அரச வரி முறைகள் என்பன குழப்பியடிக்கப்பட்டுள்ளன. துறைமுக வரி முறைகளுக்கும் அவ்வாறே நேர்ந்துள்ளன. வருமான வரி முறையின் நிலையும் அதுவே. பலதரப்பட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கூறுகின்றனர். மறுபுறம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உள்நாட்டு முதலீட்டாளர்களை விட அதிகபட்ச வாய்ப்புகளையும் நலன்களையும் வழங்குகின்றனர். சாதாரண பொதுமக்களின் தேவைகளுக்காக நாட்டில் உள்நாட்டு முதலீட்டாளர்களும், வர்த்தகர்களும், விநியோகஸ்தர்களும் அதிகளவில் செயற்படுகின்றனர். ஆனால் இவர்களின் நலன்களை பேணும் வகையில் வரி முறைகள் வகுக்கப்படவில்லை. இது பெரும் பிரச்சினையாகவே உள்ளது. அரசாங்கத்திற்கோ, சிவில் அமைப்புகளுக்கோ, ஊடகங்களுக்கோ இவ்விடயம் மறைக்கப்பட்டதாகவே உள்ளது.

நாட்டிற்குள் பணப் புழக்கம் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. நாட்டில் பணப் புழக்கம் இன்றி பொருளாதார சுழற்சி இல்லை. இலங்கையில் போதிய பாதுகாப்பு இன்மையால் இலங்கை முதலீட்டாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் வேறு நாடுகளுக்கு சென்று முதலீடுகளை மேற்கொள்கின்றனர் எனக் கூறுகின்றனர். அதனை நான் ஏற்க மாட்டேன். அவர்களினால் உள்நாட்டில் செயற்பட முடியாதுள்ளது. அதற்கு காரணம் வரி முறைகள் உட்பட உட்கட்டமைப்பு வசதிகள் தேவையானளவுக்கு செயற்படுவதில்லை.

மறுபுறம் நிதிச் சந்தையில் நிலவும் சமனற்ற நிலை. பிராந்தியத்திலேயே அதிக வட்டி வீதத்தை வைத்துக் கொண்டு பொருளாதாரத்தை உயர்த்த முடியுமா? ஏற்றுமதியை அதிகரிக்கக் கோருகின்றனர். ஏற்றுமதிக்கு வட்டி வீதங்களின் பாதிப்புள்ளதை அரசாங்கம் மறந்து விடுகின்றது.

இவையெலாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளவை. இவ்வாறு சகல விடயங்களையும் பரீட்சித்து சிறந்த திட்டங்கள் கொண்ட பொருளாதார முறையை வகுக்க எவரும் முன்வரவில்லை. பணத்தை தேவையற்ற வகையில் சந்தையிலிருந்து எடுத்துக் கொண்டால் சந்தையில் பொருளாதார சுழற்சி ஏற்படாது. இதனாலேயே பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓலம்

வெண்மேகம் தொலைத்த
இருள் வானடியில்
எம் மூச்சுக் காற்றுகள்
எதையோ எதிர்பார்த்தபடி

காலைக் குயிலோசை
செப்பனிடப்பட்டு
முகாரி மட்டும் கலக்கப்பட்டதாய்

தேடத் தொடங்கியுள்ளேன்-
சேர்த்து வைத்த
இயற்கையை
இனிமையை
சாதாரணங்களை
எங்கே?
எப்படித் தொலைத்தோம்?

ஒவ்வொரு விடியலும்
ஆணிவேரை உசுப்பி
இடப்பெயர்வுகளை
ஏற்படுத்தி விட்டிடுமோ?

குரல்வளைகள் இறுக்கப்பட்டு
காற்றுவெளிகள் நிசப்தத்தில்
அசைவது இமைப்பதின்-
இயக்கங்களை நிறுத்துவதற்காய்

சடத்துவப் பொருள் மட்டும்
சத்தமாய்ப் பேச-
அனுமதியுண்டு

பொம்மைகள் கூட்டாஞ்சோறுகள்
மறுதலிக்கப்பட்ட உலகில்
எம் குழந்தைகள்
உத்தரத்தில் தொங்குகிறார்கள்
தரையில் சிதறுகிறார்கள்-
காரணமற்று

மனிதமற்ற விளைநிலத்தில்
உயிர்ப் பிணங்கள்
அதையும் மீறி
அகால மரணங்கள்-
எப்போதும் சாத்தியமாய்

எங்கள்
மரணத்தை மட்டுமாவது
அர்த்தப்படுத்துங்கள்-
விசாரணைகள்
தீர்ப்புக்கள்
காரணங்களுடன்.



## மலரா

கல்முனை-பாண்டிருப்பை(இலங்கை)ச் சேர்ந்த டொக்டர். புஸ்பலதா லோகநாதன். போர் சுனாமி வறுமை போன்றவற்றினிடையான பொதுமக்கள் மீள்கட்டுமானத்தில் தன்னை முற்றிலுமாய் ஈடுபடுத்திக் கொண்டுள்ள சமூக செயற்பாட்டாளர். கிழக்கு மாகாணத்தின் கடந்த இருபதாண்டுகால அரசியல் சமூகவியல் ஆயுதவியல் தளங்களிலான அத்தனை மோசமான அனுபவங்களையும் எதிர்கொள்ள நேர்ந்த- நேர்ந்து வருகின்ற ஒருவர். தீவிரமான மற்றும் கூர்மையான படிப்பாளி. தனக்குள் துளிர்த்து மெருகேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்த தன் படைப்பீடுபாட்டை இருபது வருடங்களின் பின் அண்மைக் காலத்தில் மீட்டுக்கொண்டு உணர்வின் பச்சை உலராத விதமாக நவீன கவிதைகளாக்கிக் கொண்டு வருகிறார். பிரவாகம்(காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி) உயிர் எழுத்து என்பன இவரது படைப்புகளை இதுவரை வெளிப்படுத்தியிருக்கின்றன. அவரது கவிதைகளின் தொகுதியொன்று விரைவில் வெளிவரவிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் விழு

அம்மா
எனக்குத் தொட்டில் வேண்டாம்
தொட்டில் சட்டங்கள் என்னைக்
குறுக்கப் பார்க்கின்றன.

என் கை கால்களை உதைத்து
இந்த வியாபகத்தை
நான் அளைந்து பார்க்க வேண்டும்.
கருவறைக்குள் இருந்த சிறை
மறந்து போயிற்று எனக்கு
உன்னிப் பார்க்க வேண்டும்
அண்டவெளியின்
பரிச்சயங்கள் வேண்டும்.

எந்தப்பாலும்
எனக்குச் சம்மதம்
உன் வசதிப்படி கொடு.
நீ என் அம்மா
நான் உன் குழந்தை.

யதார்த்தங்களை அறிமுகம் செய்.
என் இருப்பு பூமியில்.
வானிலிருந்து தேன் வடியும்
வெறுங்கதைகளை நிறுத்து
எனக்குத் தேவை
ஒரு சாதாரண இருப்பு.

உன் விருப்பப்படி
நறுக்கி விடாதே
என் சிறககளை.
அன்பிருந்தால்
உலகம் பற்றிச் சொல்

போலி எது? பொய் எது?
ஏமாற்றுவது எப்படி -
கற்றுக் கொடு
நிஜங்களைக் காணவும்
ஏமாறாதிருக்கவும்



என் கை உன்னிடமும்
உன் கை என்னிடமுமே!
உனக்கு முடியாத
சமுதாய வேலிகளில்
என்னை முன்னே விடு!
சிலுவைகளைத்
தூரமாக்கு
இலேசாக வாழ்வோம்.

நல்ல
நண்பர்களாயிருப்போம்
அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ காற்றாய் மழையாய்...

மழை பெருத்த நாளில்
பிரயாணப் பாதையில்
மழை நனைத்து-
சிறகடிக்க முடியாப் பறவை-
கொணர்ந்த சேதி-
உன்னைச் சுட்டு விட்டார்கள்

என்னுள் எனை இழந்து
உடல் பாரமற்று
இமை மட்டும் பாரமாகி
உன் சேதியை எதிர் கொண்டேன்

ஏன்?
எப்படி?
புரியவில்லை

காரணமற்று-
என் வீதியில்
சில மாதங்கள் மட்டும்
நிறையும்
நெருப்பு வாகை-
சிவப்புப் பூக்கள்
காரணமின்றி-
ஞாபகத்தில்

இனி
இருப்பும் வெறுமையும்
உனை ஞாபகமாக்கும்

வர்ணமற்று-
அலைவெளிகளில்
பட்டுத் தெறிக்கும்
ஒளிக்கற்றைகளின்
யதார்த்தத்துடன்
அறிமுகமானாய்

அதே
தொலைதூர
அலைவெளியில்
சுருண்டு விட்ட
ஒளிக்கற்றைகட்குள்
தேடுகின்றேன்..

மழைத்தூறலின்
ஒவ்வொரு கம்பியும்
எனை நனைத்தாற்போல்
உனை நனைத்திருக்கும்-
நீ இருந்திருந்தால்

இல்லா வெளியில் கூட
நீ - இல்லை..
ஏன்?
எதற்கு?
எப்படி?

தொக்குகின்ற கேள்விகளில்
உனது முடிவுரை
பதிலும்-
தொலைந்த பெருவெளியில்..

தேடுகின்றேன்-
வானப் பெருவெளியில்
எனக்குப் பிடித்த
ஒற்றை விண்மீனுக்குப் பக்கத்திலாவது-
இருக்க மாட்டாயா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் தன் துணிக்கை தோறும்
மழைத் துகள்களைப் பரவ விட்டிருக்கிறது
காற்றெங்கிலுமான குளிரை
தூரத்தே உராய்ந்து நகரும்
சப்பாத்தொலிகளுடன் எதிர் கொள்கிறேன்
ஒரு யாசகனைப் போல

என் கண்ணாடி விளிம்புகளை
தொடத் துவங்குகிறது மழை
மழையின் சட்டகங்களை
உடைத்தெறிய முடியாதபடி
சோம்பித்த என்னை
அதன் முழுதுமாய் மெது மெதுவாய்
படர விடுகிறேன்

கண்ணாடி, சிதறல் பொழுதுகளிடம்
விடுவித்து
மழையிடம் பறி கொடுக்கிறது
அதன் விம்பங்கள்
கோடுகளாகி உருவித்து
நீயாகிறது... மழையோவியம்

கரங்களை நீட்டியபடி
மழையுடன் சிந்துமுன் புன்னகை - இப்போது
கண்ணாடி முழுதிலும் மழையில்லை
நீயாகியிருக்கிறாய்

ஜன்னலைத் திறக்கிறேன்
ஒரு மழையைப் போல
கிண்ணப் பூவுள்
ததும்பித் துளிர்க்க
தூறல் மட்டும் இன்னும்
பெய்யக் காண்கிறேன் - இப்போது
காற்றோடு மட்டும் கலந்து
மழை போல பறந்து போகிறாய்




# மழையோவியம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் எல்லோரினதும்
முகங்களும் ஏதோ ஒன்றைப் பற்றியே
பிரமிக்கின்றன
இத்தருணங்களில்தான் நான் வாழ்வை
வென்று கொண்டிருந்தேன்

இப்போதும் ஏதோ ஒன்றின் நிமித்தம்
தேடலாயும் தொலைதலாயும்
மறத்தலாயும் நினைத்தலாயும்
எம் நிழல்களைப் படரவிட்டு
பிரமிக்கிறோம்

உலகின் அந்திமங்களை
ஞாபிகிக்கும் கண அவிழ்ப்பு
உமை விட எனக்கு பிரமிப்பிற்குரியது
அது ஒரு இலையுதிர்வைப் போல

எனக்கென்னவோ
பிரமிப்பை விடுத்த வாழ்வு
இன்பமாய் உயர்ந்து
கோபுரமாய்த்தான் சரிகிறது




## வாழ்வு பிரமிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடம் மிகைத்திருக்கும் இந்த
வீதியின் புள்ளிகளை. என் நகநுனியால்
கோர்க்கத் துணிந்த பேதமையில்
வெற்றிடங்களின் ஊடறுத்தலுடன் இப்போதெல்லாம்
வெளிக்கிடுகிறேன்


ஏன் நீரோட்டங்களுடன்
இணைந்து, பிணைந்து
மரவடுக்கின் பிளவுகளாய்
ஒருமித்த பலருடனான வாகனமது

என் ஏறுதலுக்காய்
விரையும் அதனவன்
நுழைவினையடுத்த என் திகைப்பில்
அதன் முழுதுமாய்
சடைத்து என் முன்னாய்
நீளும் அத்தனையும்
- ஆண்குறிகள் -

செய்வதறியாது
வாகன விளிம்புகளில்
நெரிபடுகிறது என் பயணம்
அடுத்த கணங்களில்
விரட்டலின் வாயிலில் துன்பப்படுகிறேன்

மீண்டும் வீதிகளில்தான்
பாதங்களை ஊன்றத் துணிகிறேன்
சடைத்த அவ்வளவும் - இப்போது
அடுத்த தரிப்பில்
வேறெவளையும் முகரலாம்


இன்னுமின்னும் கால் தாவாத
புயணங்களை முள்ளந் தண்டில்
தொங்கப் போட்டுத்தான் திரிகிறேன்




# சடைப்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# PROVOKED ஐ முன் நிறுத்தி பெண்கள் மீதான வன்முறை குறித்து சில குறிப்புகள்

**மணிதர்ஷா**

* கனடாவைச் சேர்ந்த பல்தேவ் முத்தா சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சொல்கிறார், நான்கு தெற்காசியப் பெண்களில் ஒருவர் உடல்ரீதியாக, உணர்வுரீதியாக, பொருளாதார ரீதியாக, உள ரீதியாக, துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்களென.

*கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வரும் பெண்களில் பத்து வீதமானவர்கள் கணவரைக் கொலை செய்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவர்கள் என இலங்கையின் பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது. மகஸின் சிறைச்சாலையில் 550 பெண் கைதிகள் இருக்கிறார்கள்.அவர்களில் எட்டுப்பேர் 16வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் என்றும் அந்தக் குறிப்புக் கூறுகிறது.

"ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை. பெண்ணாக உருவாக்கப்படுகின்றாள்" என்கிறார் சிமோன்தி பூவா. உண்மைதான் பெண் பிறக்கும் போதே மூடக்கருத்துக்களை மூட்டையாகத் தொப்புள் கொடியில் கட்டிக் கொண்டு பிறப்பதில்லையே. அவர்களைத் தங்களுக்கு ஏற்றவளாக இந்த சமூகம் உருவாக்கி விடுகின்றது. தாங்கள் விரும்பிய மகளாக, தங்களுக்கு ஏற்ற சகோதரியாக, தங்களுக்கு ஏற்ற காதலியாக, தங்களுக்கு ஏற்ற மனைவியாக, தங்களுக்கு ஏற்ற தாயாக என்று தங்களுக்கேற்றாற் போல அவளை உருவாக்கிக் கொள்கின்றனர். அவளை அவளாக வாழ அனுமதிப்பதில்லையல்லவா?

ஏற்கெனவே நாம் உருவாக்கி வைத்திருக்கும் சாத்திரங்கள், சம்பிரதாயங்கள், கலாசாரப் போலிமைகள் எல்லாவற்றினதும் காவியாக அவளை உருவாக்கி விடுகிறோம். பெண் குழந்தையாக இருக்கும் போதே இந்த 'புடம் போடும்' பணி ஆரம்பித்து விடுகிறது. பெண்குழந்தையை சுய கௌரவமிக்கவளாக, தனது பிரச்சினைகளைத் தானாகவே எதிர் கொள்பவளாக, தைரியமிக்கவளாக எமது ஆண் குழந்தைகளை வளர்ப்பதைப் போல வளர்ப்பதற்கு எமது பெற்றோர்களால் முடிவதில்லை. அப்படி யாராவது ஒரு பெண் சுயமான ஆளுமையுடன் வளர ஆரம்பித்து விட்டால் அவள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் சங்கடங்களும் ஏராளம்.

இந்த நிலையில் ஈழத்தமிழ்ச் சமூகத்தில் பெண் என்பதால் அவள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை விட போரும் அவள் மீது மேலதிகச் சுமைகளைத் திணித்து விடுகின்றது. கடந்த பத்தாண்டுகளில் போரின் காரணமாக புலம் பெயர்ந்த ஈழத் தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் இன்னொரு பரிமாணத்தையன. அவர்கள் அடையாளப் பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள். தங்களது தனித்துவத்தை நிலைநாட்ட அவர்கள் பாரம்பரியங்களுக்குள் சென்று விடுகிறார்கள். இவர்கள் எவ்வளவுதான் முன்னேறிய சமூகத்துள் வாழ்ந்தாலும் தங்களது தனித்துவத்தை வெளிப்படுத்த கலாசாரக்காவியான பெண் தேவைப்படுகிறாள். தாலியும் குங்குமமும் வந்து சேர்ந்து விடுகின்றன. சாதியும் மதமும் இதற்குத் துணைக்கழைக்கப்பட்டு விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்கு பிறந்து வளர்ந்த பெண்கள் இந்தப் பாத்திரத்திற்குப் பொருந்துவது சற்றுக் கடினம் என்று தெரிந்து கொண்டதால் இங்கிருந்து பெண்களைத் தருவித்து மணம் முடித்துக் கொள்கின்றனர் பெரும்பாலான இளைஞர்கள்.

அந்த வகையில் இங்கிருந்து கூட்டிச் செல்லும் பெண்கள் அங்கு எதிர்கொள்ளும் நெருக்கடிகள் ஏராளம். அவர்கள் மேற்கு கிழக்கு என்ற இரண்டு வேறுபட்ட கலாசாரங்களுக்கிடையில் சிக்கித் தவிக்கிறார்கள். அவ்வாறு சிக்கித் தவித்த ஒரு பெண் சிறையிலேயே தனது சுதந்திரத்தைக் காண்கிறாள். ஜக் மோகன் முந்ராவின் Provoked திரைப்படம் அந்த உண்மைக் கதையை எங்கள் முன் கொண்டு வந்திருக்கிறது.

2001 லண்டன் திரைப்பட விழாவில் பவாந்தர் என்ற என்னுடைய திரைப்படத்தைப் பார்த்துவிட்டு மூன்று சமூக செயற்பாட்டாளர்கள் Circle of Light என்ற புத்தகத்தை வாசிக்கும்படி என்னிடம் தந்தார்கள். அவர்கள் தாங்கள் பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைகள் குறித்து செயற்படுவதாக என்னிடம் தெரிவித்தார்கள். லொஸ் ஏஞ்சலுக்குப் போகும் வழியிலேயே நான் அதனை வாசித்து முடித்தேன். சிறையிலிருந்த கிரண்ஜித்திடம் "நீ எப்படி உணருகிறாய்" என்ற கேள்வி கேட்கப்படுகிறது. அவள் சொல்கிறாள் "நான் சுதந்திரமாக இருப்பதாக உணர்கிறேன்" என. சிறையில் அவள் சுதந்திரமாக இருப்பதாக உணர்கிறாள். இது திரைப்படத்திற்கு ஒரு முக்கியமான அம்சமென நான் உணர்ந்தேன். அப்போதே நான் தீர்மானித்தேன் இதனை நான் படமாக்குவதென என்று கூறுகிறார் இத் திரைப்படத்தின் நெறியாளரான ஜக் மோகன் முந்ரா.

ஏப்ரல் 2007இல் லண்டன் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட இந்தத் திரைப்படம் 1989ஆம் ஆண்டு லண்டனில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை கூறுகிறது. இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் ஒரு சிறு கிராமத்தைச் சேர்ந்தவள் கிரண்ஜித். பல்கலைக்கழகம் செல்ல வேண்டும். நன்றாகப் படிக்க வேண்டும். வழக்கறிஞராக வேண்டும். உலகைச் சுற்றிப் பார்க்க வேண்மென்று பல கனவுகளைச் சுமந்து கொண்டு வாழும் தாய் தந்தையரை இழந்த 19 வயது கிரண்ஜித்திற்கு அவளுடைய கனவுகள் ஒரு நாள் முடிவுக்கு வருகின்றன. லண்டனிலிருந்து அவளுடைய உறவினனான தீபக் என்பவன் வந்ததே அதற்குக் காரணமாகி விடுகிறது. அவளது சகோதரி தீபக்கிற்கு கிரண்ஜித்தைக் கல்யாணம் செய்து வைக்கிறாள். கல்யாணத்தின் போது கிரண்ஜித் தனது சகோதரியிடம் கேட்கிறாள் எனக்கு அவனைத் தெரியாது. என்னுடைய படிப்பு என்னாவது என்று. அவன் நல்லவன் உன்னைத் தொடர்ந்து படிப்பதற்கு அனுமதிப்பான் என அவளுடைய சகோதரி கூறுகிறாள். தனது சகோதரியின் கூற்றை நம்பி கிரண்ஜித் தீபக்கை திருமணம் செய்து லண்டன் செல்கிறாள்.

ஆனால் லண்டன் வாழ்க்கை அவள் நினைத்ததற்கு மாறாக இருக்கிறது. அவள் 'நல்ல மனைவியாக' இருக்கவே வேண்டப்படுகிறாள். அவனுக்குப் பிடித்த உணவு வகைகளைச் செய்து வைப்பது. அவனுடைய ஆடைகளைத் தோய்த்து உலர்த்தி வைப்பது. அவனுடைய இச்சைக்கு இணங்கிப் போவது. அவனுடைய நண்பர்களுடைய கேளிக்கை விருந்துகளில் 'நல்ல மனைவி'யைப் போல கலந்து கொள்வது. அவனுக்காகக் குழந்தையைச் சுமப்பது. என்று அவள் அவனுக்காகச் செய்பவைகள் ஏராளம். இப்படி அவனுக்காகவே தனது வாழ்க்கையை வாழ்ந்தவள் ஒரு நாள் தூங்கிக் கொண்டிருக்கும் கணவன் மீது எண்ணெய் ஊற்றி எரித்து விடுகிறாள்.

அவனுக்காகவே வாழ்ந்தவள் ஏன் அவனைக் கொலை செய்தாள்? ஏன் அவ்வாறு அவள் தூண்டப்பட்டாள்?

Provoked திரைப்படம் அதனை விரித்துச் சொல்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படையாகப் பார்த்தால் அவள் ஒரு கொலைக் குற்றவாளி. அதுவும் வேறுயாரையுமல்ல, தன்னை லண்டனுக்கு அழைத்து வந்த, தனக்கென ஒரு அழகான வீட்டை வாங்கித் தந்த, தனக்கு உணவளிக்கின்ற, தனக்கு உடுபுடவைகள் வாங்கித் தருகின்ற, சினிமாவுக்கு அழைத்துச் செல்கின்ற என்று தன்னுடைய தேவைகள் எல்லாவற்றையும் கவனிக்கின்ற கணவனைக் கொன்றவள்.

இவற்றையெல்லாம் தாண்டி அவளைத் தூண்டியது எது?

அவனுடனான பத்து வருட வாழ்வில் அவள் பட்ட உடல் உள வதைகளும் வலிகளும் தான் என்று சுருக்கமாகக் கூறிவிட முடியும். ஆனால், அந்தப் பத்து வருடத்தில் என்ன நடந்தது? அவள் எவ்வாறு இம்சைப்படுத்தப்பட்டாள்? அவளுடைய உடலெங்கும் யாருக்கும் காட்டிட முடியாதபடி காயங்கள் ஏற்படக் காரணமென்ன? அவள் எப்படி கணவனாலேயே பலாத்காரப்படுத்தப்பட்டாள்? ஆணாதிக்கமும் அதனூடாகக் கிடைக்கிற அதிகாரமும் அவனுடைய சுயநலமும், பொறாமையும் ஒரு பெண்ணின் வாழ்க்கையை எப்படி நரகமாக்கி விடுகிறது.

இந்தக் கேள்விகளுக்கான பதில்களாக திரைக்கதை விரியும் முறை எங்களை அதிர வைக்கிறது.

ஆனால், சட்டத்தின் கண்களுக்கு இவை எதுவுமே அகப்படுவதில்லை. அது மட்டுமல்ல தனது நிலையை எடுத்துச் சொல்லுமளவிற்கு அவளுக்கு துணிவையோ, ஆங்கில அறிவையோ இந்தச் சமூகம் கொடுக்கவும் இல்லை. கணவனைக் கொன்றதற்கான தண்டனையை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை. 'இந்த வழக்கில் தற்காப்பு என்பதைப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் அவள் உடல் ரீதியாகத் தாக்கப்பட்டது அவன் கொல்லப்படுவதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர். ஆகவே அந்தக் கொலை தற்பாதுகாப்புக்கானதல்ல, முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்யப்பட்டது' என்று நீதிமன்றம் கூறி விடுகின்றது. எனவே அவள் சிறை செல்ல நேர்கிறது. இந்த இடத்தில் தான் குறுக்கிடுகிறார்கள் Southall Black Sisters என்ற அமைப்பினர்.

Southall Black Sisters அமைப்பு 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் Southall இல் நடந்த இனக்கலவரத்தின் போது கட்டியெழுப்பப்பட்டது. இவ்வமைப்பு கறுப்பின மற்றும் ஆசியப் பெண்களுக்கான மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சட்டத்தினால் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் முகமாகவும் உருவாக்கப்பட்டது. அவர்கள் கிரண்ஜித்துக்கு அநீதி இழைக்கப்பட்டதாக உணர்ந்தார்கள். அந்த வழக்கை மீள எடுப்பதற்கான முயற்சிகளில் இறங்கினார்கள். சிறையிலே இருந்த கிரண்ஜித்தைச் சந்தித்து அவளுக்கு நம்பிக்கையூட்டினார்கள். அவர்கள் கொடுத்த நம்பிக்கை கிரண்ஜித்தை தன்னுடைய கடந்த காலத்தைப் பற்றிப் பேச வைக்கிறது. ஆங்கிலத்தை சிறையிலேயே கற்பதனூடாக தன்னை தனக்கு நேர்ந்தவைகளை அவளாகவே வெளிப்படுத்த முடிகிறது.



Southall Black Sisters உடனடியாக கிரண்ஜித்தின் விடுதலைக்காக களத்தில் இறங்கிப் போராடுகிறார்கள். ஊடகங்கள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் இந்த வழக்கில் நேர்ந்த அநீதியை மக்களுக்குக் கொண்டு செல்கின்றனர். கிரண்ஜித்திற்கு நீதி கிடைக்க வேண்டுமென்று வேண்டுகின்றனர். சிறையில் இருக்கும் சக பெண் கைதியின் சகோதரரின் உதவியுடன் கிரண்ஜித்தின் வழக்கை திரும்பவும் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்கின்றனர். கொலையை விட அவளை அதற்குத் துண்டிய காரணங்கள் வலிமையானவை என்பது நிரூபிக்கப்படுகிறது. இவர்களின் அயராத முயற்சியின் காரணமாக இறுதியாக கிரண்ஜித் விடுதலையாகுகிறாள்.

கிரண்ஜித் வழக்கின் தீர்ப்பு பிரிட்டிஷ் நீதித்துறையில் ஒரு பரபரப்பை ஏற்படுத்திய விவகாரமானது. அவளுடைய மனுவும் வழக்கு விசாரணையும் சட்டங்கள் தொடர்பான முன்னுதாரணமானது. இவ்வழக்கு லண்டனில் வீட்டு வன்முறை தொடர்பான ஒரு முக்கியமான வழக்காக கருதப்பட்டது. அது பிரிட்டிஷ் சட்டத்திலேயே மாற்றத்தை ஏற்படுத்தியது. 'Provoked' எனும் சொல்லின் அர்த்தமே மறுவார்ப்புச் செய்யப்பட்டது

பிரிட்டன் நீதிமன்றம் முதன்முறையாக 'பொறுப்பற்ற தன்மையுடன் நடந்து கொண்டதையும், தூண்டப்படுவதற்கு காரணமாக இருந்ததையும்' ஏற்றுக் கொண்டது. எப்போதும் பாதிப்புக்காளாகும் பெண் தனது எதிர்ப்பு நடவடிக்கையை உடனடியாக எடுப்பதில்லை என்பதையும் அங்கீகரித்து, காலம் தாழ்த்தியேனும் தாக்குதல் நடவடிக்கையில் இறங்கலாம் ஏனெனில் அவளுக்கு எப்போதும் ஒரு பயம் இருக்கும், மீண்டும் தான் அவ்வாறு தாக்கப்படலாமென என்பதையும் ஏற்றுக் கொண்டது. அந்த வகையில் இத்திரைப்படம் மிக முக்கியமானதாகிறது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUMUMBA


# லுமும்பா ஒரு துன்பியல் வரலாற்று நாயகன் !

ஜி.ரி. கேதாரநாதன்

மென்மையான மங்கிய புகார் சூழ்ந்த அமானுஷ்யத் தன்மை கொண்ட நிசப்தமான இரவில் வீடுகளோ, மனிதர்களோ அற்ற ஆனால் அடர்ந்த மரங்கள் செறிந்த பாதையொன்றின் ஊடாக, ஒன்றன் பின் ஒன்றாக வெளிச்சத்துடன் அகால வேளையில் நகர்ந்து கொண்டிருக்கும் கார்கள் சிலவற்றின் காட்சியுடன் திரைப்படம் ஆரம்பமாகும் முதல் காட்சியிலேயே லுமும்பா திரைப்படம் களைகட்டி விடுகிறது. திரைப்படத்தின் முடிவுடன் தொடர்புபட்ட தீவிர முன்னுணர்வு அழுத்தங்களுடன் கூடிய இக்காட்சியே தொடக்கக் காட்சியாக இருப்பது படத்தின் முடிவினை தரிசிக்கும் போது அர்த்தமுள்ளதொரு தொடக்க எடுப்புத்தான் இது என எம்மையீர்த்து உணரவைக்கும் அதே வேளை எமக்குள் பலத்த அதிர்வினையும் ஏற்படுத்தி விடுகிறது.

"புருசல்சிலோ, பாரிஸிலோ, வாஷிங்டனிலோ அல்லது வேறு எந்த நாட்டிலுமோ எழுதப்படுவதாக இருப்பது அல்ல வரலாறு! அது ஆபிரிக்க மண்ணில் நாங்கள் எழுதும் வரலாறாக இருக்க வேண்டும். புதிய ஆபிரிக்காவின் வீறார்ந்த வரலாறாக அது இருக்க வேண்டும்."

திரைப்படத்தின் இறுதிக் காட்சியில், ஒன்றுபட்ட ஆபிரிக்கப் பேரண்டத்தையும் அத்துடன் அமைதியும் செழிப்பும் நிலவும் கொங்கோவையும் அவாவி, லட்சிய நோக்கில் நீண்டதொரு பயணத்திற்கு ஆயத்தமாகிய தீர்க்கதரிசியாகிய லுமும்பா அவரது பயண ஆரம்பத்திலேயே கொலை செய்யப்படும் அவலம் நேர்கிறது. அவரது இலட்சிய நோக்கு அதற்கான தாகம் காரணமாக மிகப் பலம் வாய்ந்த பயங்கரமான எதிரிகள் பலரை ஒரே நேரத்தில் லுமும்பா தேடிக் கொள்கிறார். சுட்டுக் கொல்லப்படுவதற்குச் சற்று முன்னதாக சித்திரவதைகளால் இம்சிக்கப்பட்டு இரத்தக் காயங்களுடன் குற்றுயிராக இருக்கும் லுமும்பா தனது அருமை மனைவி போலினுக்கு மனதிற்குள்ளேயே எழுதிக் கொண்டிருக்கும் உருக்கமான கடிதத்தின் ஒரு சில வரிகள் தான் இவை. பாஸ்கல் பொனிற்ஸர் என்பவருடன் இணைந்து திரைக்கதையை எழுதிய திரைப்படத்தின் நெறியாளரான றோல் பெக் கையாளும் இந்தச் சொற்கள், வரிகள் மற்றும் உரையாடல்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பிரதி (Text) மிகவும் வலிமையானது. நல்லதொரு திரைப்படத்தில் திரைமொழியின் கூறுகளில் படிமங்கள் எவ்வளவிற்கெவ்வளவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருக்கின்றனவோ அதுபோல் அதேயளவு முக்கியத்துவம் மிக்கனவாக திரைக்கதையின் உள்ளீடுகளான சொற்கள், வரிகள், உரையாடல்கள் அடங்கிய பிரதி இருக்கின்றது.

உண்மைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் வரலாற்றுத் திரைப்படத்தில், உத்தி என்ற ரீதியில் வரலாற்றின் உண்மைத் தன்மைக்கு ஊறு நேர்ந்து விடாது கதை கூறலில் புதுமைத் தன்மைக்குத் தடம் பதிப்பது வழமையான வரலாற்றுத் திரைப்படங்களில் அயர்சியினை ஏற்படுத்தும் ஆவணத் தாக்கத்தினை நீக்க உதவும். இது திரைப்படத்திற்கு ஒரு விரைவுத் தன்மையினையும் விறுவிறுப்பினையும் கொண்டு வருகின்றது. நவீன பிரக்ஞையுடன் கூடிய கதைப்பாங்கான வரலாற்றுத் திரைப்பட உருவாக்கத்தில் எதிர் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சங்களில் இது பிரதானமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்தவகையில் போலினுக்கு எழுதப்படும் கடித வரிகள் லுமும்பாவின் குரலிலேயே ஏற்ற இறக்கங்களுடன் உணர்வுபூர்வமாக ஒலித்து எம்மை ஈர்ப்பது திரைப்படத்திற்கு புதியதொரு பரிமாணத்தை அளிக்கின்றது. திரைமொழியின் கூறுகளில் பிரதி, படிமங்கள், ஒலி (குரல்) ஆகியவற்றின் பரிமளிப்பான இணைவு சாத்தியப்படுவதுடன் அவற்றுக்கான பரஸ்பர அர்த்தப்பாடுகளும், ஆழப்படுத்தல்களும் பல தளங்களிலுமாக விரிகிறது. இறுக்கமானதொரு படத்தொகுப்பின் மூலம் இவை மேலும் கூர்மையடைகின்றன. கதாசிரியரே நெறியாளராகவும் இருப்பது எழுத்து - இயக்கம் ஆகிய இருவேறு தளங்களிலுமாக மாறி மாறி தனது இருப்பினை நிர்ணயம் செய்து கொண்டு பிரக்ஞைபூர்வமாக இயங்குவதற்கு அனுகூலமாக இருக்கின்றது. இதனாலோ என்னவோ இந்த விடயத்தில் தாம் ஆபிரிக்காவை விட பிரான்சிய திரைப்பட மேதை கோடார்ட்டுடன் கொண்டிருக்கும் உறவு மிக நெருக்கமானதொன்றென றோல் பெக் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார்.

இந்தவகையில் இதே கடிதத்தின் முற்பகுதியில் லுமும்பா கூறுகிறார்: "அன்றிரவு கட்டங்காவில் நடந்தது உனக்கு ஒருபோதும் தெரியவரப் போவதில்லை. ஏன் ஒருவருக்குமே தெரியவரப் போவதில்லை. அவர்கள் ஏற்கெனவே திட்டம் தீட்டியிருந்தவாறு சகலதையும் கச்சிதமாக நிறைவேற்றி விட்டார்கள். இன்னும் அவர்களுக்கு எஞ்சியிருப்பது ஒன்று தான் வேறொன்றுமில்லை. மூன்று சடலங்களையும் எடுத்து தடயங்கள் எதுவுமின்றி எரித்து விடுவதுதான் அது. நினைவுச் சின்னமோ, அஞ்சலியோ, புகழுரையோ எதுவும் இல்லை. இறந்த நிலையிலும் அவர்களுக்கு அச்சுறுத்தலாகவே இன்னும் இருக்கிறேன்."

லுமும்பாவுடன் அவருக்கு நெருக்கமான இரு சகாக்களான மோரிஸ் மொப்போலோ, ஜோசப் ஒக்கிற்றோ ஆகியோரும் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். அவர்கள் மூவருடைய சடலங்களும் துண்டாடப்பட்டு அவர்கள் இறுதியாக அணிந்திருந்த உடுப்புகளையும் சேர்த்து பீப்பா ஒன்றுக்குள் போட்டு அஸ்தியாக சாம்பல் கூட மிஞ்சாத விதத்தில் எரிக்கிறார்கள். அந்த சுவாலை மூன்று சடலங்களிலிருந்து மாத்திரம் எழும் சுவாலையாகக் காட்டப்படாது எத்தனையோ கோடி மக்களின் இதயங்களிலிருந்து கோப அக்னியாக மூண்டெழுந்து நீடித்தெரியும் சுவாலையாக அக்காட்சி திரையில் நீண்ட நேரம் காட்டப்படுவது கூட அர்த்தச் செறிவுடன் கூடியதொரு குறியீடாகும்.

திரைப்படத்தை கொங்கோவிலேயே எடுத்துவிட முடியாதபடி அங்கு நிலவிய அசாதாரண சூழ்நிலை தடையாக இருந்தது. மொசாம்பிக், சிம்பாவே மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளில் வரலாற்றின் சூழலமைவு பல்வேறு நுணுக்க விபரங்களுடன் நம்பகத்தன்மை மிக்கதாக காலகட்டம், பாவனைப்பொருட்கள், மக்கள் போன்ற ஏனைய அம்சங்களும் பொருந்தக்கூடிய விதத்தில் நேர்த்தியாக ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் திரைப்படத்தின் காலம், அரசியல், சமூகசூழல் ஆகியன பகைப்புலன்களாக மிக அருமையான முறையில் மீளுருவாக்கம் பெற்றிருக்கின்றன. றோல் பெக் குழுவினரின் அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பு இல்லையேல் அது சாத்தியமாகியிராது. சினிமா



## உண்மையை வெளிப்படுத்துவதே எனது நோக்கம்!

- றோல் பெக் -

**பற்றிஸ் லுமும்பாவில் ஈடுபாடு எவ்வாறு முதலில் ஏற்பட்டது?**

நான் இளைஞனாக இருந்த காலத்தைய கதை தான் லுமும்பா. நான் கொங்கோவுக்கு எனது பெற்றோர்களுடன் சென்றேன். அவர்கள் இருவரும் ஆசிரியர்களாக (1961-1962) பணிபுரிந்தனர். எனது தந்தையார் இருமுறை கைது செய்யப்பட்டார். இதன் காரணமாக அவர் கெயிற்றியை விட்டு வெளியேற நேர்ந்தது. அதேவேளை கொங்கோ அரசாங்கமும் ஐநாவும் தொழில்சார் நிபுணர்களைத் தேடிக் கொண்டிருந்த காலகட்டம் அது. பெல்ஜியர்கள் கொங்கோவை விட்டு வெளியேறியதை அடுத்து தொழில்சார் நிபுணர்களுக்கான தேவை அந்த நாட்டில் பெருமளவில் உருவாகி இருந்தது. இதனால் எனது தந்தையார் அங்கு செல்வதற்கு முடிவெடுத்தார். அவர் அங்கு 30 வருட காலத்திற்கு மேல் தங்கியிருந்து பணிபுரிந்தார். இத்தகைய வாய்ப்பினால் கொங்கோவுடனான பரிச்சயமும் நெருக்கமும் கூடுதலாக எனக்கும் ஏற்பட்டது. அதன் வரலாறும் நன்கு தெரிய வந்தது. ஒரு வகையில் கொங்கோ எனது இரண்டாவது தாயகமாக மாறியது என்றும் கூறலாம். தயாரிப்பாளர் ஒருவர் ஆபிரிக்கப் பின்னணி கொண்ட திரைக்கதை ஒன்றுடன் என்னை அணுகினார். உண்மையில் அது என்னை ஈர்க்கவில்லை. எனவே எனக்கு நன்கு தெரிந்த ஒன்றில் நானே ஈடுபட்டால் என்ன என்று சிந்திக்கத் தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் மிக முக்கியமானதொரு அரசியற் திரைப்படமாக வீரியமும் கலகமும் இணைந்ததாக லுமும்பா வெளிக் கொணரப்படுவதற்கு இதன் அழுத்தமான திரைக்கதையும், காலஞ்சென்ற மிகச் சிறந்த ஒளிப்பதிவாளரான பேர்னாட் லுற்றிக்கின் அசாத்தியமான நேர்த்தியுடன் கூடிய ஒளிப்பதிவும் நிச்சயம் பிரதான காரணங்களாக குறிப்பிடப்பட வேண்டியவையாகும். லுமும்பாவாக நடித்த எரிக் எபோனியின் பங்களிப்பு மிக அரிதான ஒன்றாகும். வெளித்தோற்றத்தில் அல்லது சாயலில் புறவயமாக மாத்திரமன்றி எரிக் எபோனி அகவயமாகவும் லுமும்பாவின் பாத்திரத்திற்கு மிக நெருக்கமாக ஒத்து வந்து விடுகிறார். இதனால் அப்பாத்திரம் ஆன்ம உறுதியும், ஈர்ப்பும் பெறும் பரிமாணத்தைை எய்துகின்றது. இதேபோலவே அலெக்ஸ் டெஸ்காஸ் என்ற மொபிட்டுவாக நடித்த நடிகரும் அப்பாத்திரத்துடன் ஒன்றி விடுகிறார். நண்பர்களாக இருந்த இவர்கள் இருவருக்குமிடையே நிலவும் முரண்பாடுகள், விரிசல்கள், போராட்டங்கள் என்பன மிக அருமையாக வெளிக் கொண்டு வரப்படுகின்றன. குறிப்பாக மீண்டும் பிரதியின் பங்கினை வலியுறுத்தும் வகையில் கதைக்களத்தில் அரசியல், உளவியல் சார்ந்த தீவிர தொனியில் இருவருக்குமிடையிலான இந்த உரையாடல்கள் மிகுந்த நயத்துடன் அழுத்தமாகப் பதிவாகியுள்ளன.

லுமும்பா:- நீயென்னை வெகு மோசமாக அந்நியப்படுத்தி விட்டாய்! இந்தக் கைங்கரியத்தில் நீ தனியாளாகச் செயற்படவில்லை.

மொபிட்டு:- உனக்கருகிலேதான் நான் எப்போதும் நிற்கிறேன்.

லுமும்பா:- இல்லை! ஒருபோதும் இல்லை! நீ எனக்குப் பின்னால் தான் நிற்கிறாய்!

திரைப்பட நெறியாளரும் திரைக்கதை எழுத்தாளர்களில் ஒருவருமான றோல் பெக் கெயிட்டியில் பிறந்தவர். கொங்கோ போன்று அரசியற் கொடுங்கோன்மை நிலவிய பிரதேசம் தான் கெயிட்டியும். றோல் பெக்கின் பெற்றோர் பல அறிவுஜீவிகளைப் போன்று டுவாலியர் (Duvalier) சர்வாதிகாரப் பிடியில் இருந்து தப்பி ஓடி வந்து கொங்கோவில் குடியேறியவர்கள். கட்டங்காவில் லுமும்பா படுகொலை செய்யப்பட்ட காலப்பகுதிக்குச் சற்றுப் பின்னர் இது நிகழுகிறது. றோல் பெக் இளைஞனாக பாடசாலையில் அப்போது படித்துக் கொண்டிருந்தார். நீண்ட காலம் பெற்றோர் கொங்கோவிலேயே தங்கியிருந்து பணிபுரிந்ததால் கொங்கோ றோல் பெக்கிற்கு ஒரு இரண்டாவது தாயகமாக மாறியது. பாடசாலை நாட்களில் இருந்தே றோல் பெக்கிற்கு லுமும்பா மீது மிகுந்த ஈடுபாடு இருந்தது. ஒரு வகையில் லுமும்பா அவருடைய கதாநாயகனாக, ஈர்ப்புக்குரிய ஒரு தலைவராக இருந்தார். லுமும்பா பற்றிய திரைப்படம் எடுக்க வேண்டுமென்ற எண்ணம் நீண்ட காலமாக அவருடைய ஆழ் மனதில் வேரோடிப் பதிந்திருந்த ஒன்றாகும். நீண்டகாலமாக பக்குவமாக அடைகாத்து வந்த அத்திட்டம் 2000ஆம் ஆண்டிலேயே உருப்பெற்றது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட கொங்கோ நாட்டுப் பிரதமர், பற்றிஸ் லுமும்பா ஒருவர் தான். இதற்குப் பின்னர் சுதந்திரமான தேர்தல் எதுவும் கொங்கோவில் நடைபெற்றதில்லை. வசீகரமான தோற்றமும் பேச்சாற்றல் திறனுடன் மக்கள் செல்வாக்கும் கொண்ட லுமும்பா கொங்கோ மக்களை உண்மையாக நேசித்த ஆபிரிக்கத் தலைவராவார். அவரின் இந்த உயர்ச்சி, ஐரோப்பிய காலனியாதிக்கத்திற்கெதிரான எழுச்சியாக அதனுடைய இரும்புப் பிடிக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாக உலகிலுள்ள பல கோடிக்கணக்கான மக்களால் பூரிப்புடன் கொண்டாடப்பட்டது. இதையடுத்து லுமும்பாவின் ஆட்சிக் காலம் முழுவதும் அவருக்கு எதிராக அரசியல் கொந்தளிப்புகளும் நெருக்கடிகளுமாகிய சதி நடவடிக்கைகள் முடுக்கி விடப்படுகின்றன. இதன் உச்சமாக, பெல்ஜியத்தின் ஆதரவுடன் லுமும்பாவின் பரம வைரியான மொய்ஸ் ஸொம்பியின் தலைமையில் கனியவளம் நிறைந்த மாநிலமான கட்டாங்கா, சுதந்திர தனி மாநிலமாகப் பிரகடனம் செய்யப்படுகிறது. இது 1960 ஜூன் காலப்பகுதியில் நடைபெறுகிறது. ஐ.நா துருப்புகளின் வருகையின் பின்னரும் குழப்பநிலையும்

**லுமும்பா உங்களுக்கு அவரைப் பற்றிய இரண்டாவது படமாகும். பத்து வருடங்களுக்கு முன்பு அவரைப் பற்றிய ஆவணத் திரைப்படம் ஒன்றை எடுத்தீர்கள். மீண்டும் கதைப்பாங்கான ஒரு வடிவத்தில் வரலாற்றுப் பாத்திரமான லுமும்பாவிடமே திரும்பியுள்ளீர்கள். இத்தகையதொரு அவசியம் எழக் காரணமென்ன?**

இந்தக் கேள்வியைப் பலர் என்னிடம் கேட்டார்கள். எனது மூலத் திட்டம் கதைப்பாங்கான திரைப்படமே. ஆனால் முதலில் ஆவணத் திரைப்படத்தை எடுக்க நேர்ந்தது. கதைப்பாங்கான திரைப்படத்திற்கான ஆராய்ச்சியில் நான் ஈடுபட்டதையடுத்து பக்கம் பக்கமாக நிறைய எழுதினேன். அது வேறொரு திட்டமாக உருமாறியதைப் பின்னர் உணர்ந்தேன். ஆவணத் திரைப்படம் எனது குடும்பத்தினரதும் மற்றும் என்னுடையதுமான கொங்கோ பற்றிய நினைவுகள், அனுபவங்கள் போன்றவற்றை உள்ளடக்கியது. ஆவணப் படத்தில் கொங்கோவுடனான எனது பதிவு வெளிப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில் ஆவணத் திரைப்படத்திற்கும் கதைப்பாங்கான திரைப்படத்திற்குமான கதைகள் வெவ்வேறானவை. கதைப்பாங்கான லுமும்பா திரைப்படத்தில் லுமும்பா என்ற மனிதருடனான எனது நேரடித் தாக்கம் வெளிப்படுகிறது.

**லுமும்பா வரலாற்றுச் சம்பவங்களை உள்ளபடியே கூறுவது என்ற வகையில் பெரும்பான்மையானோருக்கு அவற்றுடனான பரிச்சயம் போதியளவுக்கு இருந்திராது. ஆனால் ஆவணத் திரைப்படமானது பார்வையாளருக்கு நீங்கள் கூறவேண்டும் என்று கருதுபவற்றை கூறும் அதேவேளை வரலாற்று நிகழ்வுகளுக்கு உண்மையானதாக அவற்றை அடியொற்றியதாகவும் இருந்திருக்க வேண்டும். எவ்வாறு இதனை எதிர்கொள்ள முடிந்தது?**

திரைப்படத் துறைக்குள் பிரவேசித்த காலம் தொட்டே எளிமையாகக் கூறுவதானால் இருவகையான திரைப்படங்களை எடுக்க முடியும் என்பதை நான் நன்கு அறிந்திருந்தேன். அவை உண்மையான யதார்த்தப்பாங்கான திரைப்படங்கள் மற்றும் ஒருவகையிலான மகிழ்வூட்டும் திரைப்படங்கள். முன்னையதற்கு கடின உழைப்பும் ஆய்வு நோக்கும் அவசியம். இந்த வகையில் எனது படைப்பில் உள்ளடக்கம் மிக முக்கியமானது. இதில் கூடிய கவனம் எடுத்துக் கொள்வேன். இதனால் எப்போதும் இடைவிடாத ஒரு சவாலை எதிர்கொண்டு வருகிறேன். லுமும்பாவின் கதை பல விபரங்களை உள்ளடக்கிய மிகவும் சிக்கலான கதை. பல அடுக்குகளைக் கொண்ட வளமான அரசியற் பின்னணியுடன் கூடிய கதை. பல கதாபாத்திரங்களை உள்ளடக்கியது. படைப்பு என்ற ரீதியில் இதனைப் பல வழிகளிலும் அணுக முடியும். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிகளும் தணியவில்லை. பிரதமர் லுமும்பா வேறு மார்க்கம் எதுவுமின்றி சோவியத்தின் உதவியைக் கோருகிறார். சோவியத் இராஜதந்திர நடவடிக்கைகள் சிலவற்றை எடுத்த போதும் அவற்றுக்கு உடனடியாகப் பலன் உரிய நேரத்தில் கிட்டவில்லை. இதற்குக் காரணம் ஐநா. மேற்கத்திய அரசாங்கங்களின் கைப்பொம்மையாக பாரபட்சமான ரீதியில் இயங்கியமையே ஆகும். குறிப்பாக கொங்கோ நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக அப்போதிருந்த ஐநா செயலாளர் நாயகம் டாக் காமர்ஸ்க் ஜோல்டின் நடவடிக்கைகள் குறித்து சோவியத் உட்பட வேறு சில நாடுகளும் அதிருப்தியுடன் கண்டனங்கள் தெரிவித்து கடுமையாக விமர்சித்திருந்தன. செப்ரம்பரில் பிரதமர் லுமும்பா அரசாங்கத்திலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுகிறார். இதையடுத்து ஜனாதிபதி கஸாபுவுவின் ஒத்துழைப்புடன் கேணல் மொபுட்டு அதிகாரத்தைக் கைப்பற்றுகிறார். வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த லுமும்பா தப்பி ஓடும்போது மொபுட்டுவின் படையினரால் 1960 டிசம்பர் முதலாந் திகதி கைது செய்யப்படுகிறார்.

பெரும்பாலும் படுகொலை செய்யப்படும் தலைவர் ஒருவரின் வாழ்க்கைப் பின்னணியினை அலசும் வரலாற்றுத் திரைப்படங்களில் தவிர்க்க முடியாத வகையில் விபர அழுத்தங்களினால் ஏற்படும் பளு காரணமாக, அதன் சரளமான ஓட்டம் தடைப்பட்டுப் போய்விடக் கூடிய சந்தர்ப்பங்கள் நேர்வதுண்டு. ஆனால் வரலாற்று அரசியல் திரைப்படத்தின் நவீனத்துவத்தைப் பேணும் விதத்தில் விறுவிறுப்பு அம்சங்களான திகில், பரபரப்பு மற்றும் கலகம் போன்றவற்றை ஆரம்ப முதல் இறுதி வரை வியாபகம் கொண்டு நீடிக்கும் விதத்தில் இறுக்கமான படத் தொகுப்பு, நேர்த்தியான ஒளிப்பதிவு என்பவற்றின் மூலம் நிலை நிறுத்தி துரிதமாக நகர்த்துவதில் ரோல் பெக் வெற்றி கண்டுள்ளார். திரைப்படத்தின் சகல அம்சங்களிலும் நெறியாளருக்கு இருக்கக் கூடிய முதிர்ச்சியான கட்டுப்பாடே இதற்கான அடிப்படைக் காரணமாகும். லுமும்பாவின் சமூக, அரசியல் பகைப்புலனுடன் நின்று விடாது அவரது குடும்பப் பின்னணியும் உள்ளார்ந்த சோகத்துடன் வெகு இயல்பாக சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் திரைப்படம் ஒரு முழுமையான பரிமாணத்தை எய்தியுள்ளது. குறிப்பாக லுமும்பா- மனைவி –மகள் (சிறுமி) ஆகியோருக்கிடையிலான பாசமும் பரிவும், மிகுந்த சிக்கனத்துடன் ஒரு சில காட்சிகளின் மூலமே மிகுந்த உருக்கமாக சித்திரிக்கப்பட்டுள்ளது. மேலும் உயிராபத்துமிக்க நெருக்கடியானதொரு காலகட்டத்தில் லுமும்பாவுக்கு குழந்தை பிறப்பதுவும், பாதுகாப்பு கருதி வெளிநாடு கொண்டு




வகையில் தவிர்க்கக்கூடிய கதாபாத்திரங்களையும் சம்பவங்களையும் நீக்கி முக்கியமானவற்றைக் கோர்வைப்படுத்தி உள்ளீடுகளாக வெளிக்கொணர வேண்டும். வரலாற்றுடனும் சம்பவங்களுடனும் அவற்றை ஒட்டிய விபரங்களுடனும் அதிகளவில் ஆய்வு ரீதியானதொரு நெருக்கமும் ஈடுபாடும் இருந்ததனால் எனக்கு எத்தகைய மலைப்போ பதட்டமோ ஏற்படவில்லை. எனது வழியில் அவற்றை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும் கைகூடி வந்ததாகக் கருதுகிறேன். நான் சுயாதீனமாகச் செயற்பட முடிந்தது.

**லுமும்பா திரைப்படத்தில் என்னை ஈர்க்கும் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இதனைக் குறிப்பிட விரும்புகிறேன். உங்களுடைய திரைப்படம் பிரான்ஸிய மொழி பேசும் திரைப்படம். மூன்றாம் உலக நாட்டைக் களனாகக் கொண்டு எடுக்கப்பட்டிருக்கிறது. கறுப்பினத்தவரே பிரதான கதாபாத்திரம். இரண்டாவது துணைப் பாத்திரமாகக் கூட வெள்ளையர் எவரும் சித்திரிக்கப்படவில்லை. ஆபிரிக்காவை நிலைக்களனாகக் கொண்ட சர்வதேசப் பார்வையாளர்களுக்கான திரைப்படங்கள் பலவற்றிலும் பெரும்பாலும் வெள்ளையர் ஒருவர் துணைப்பாத்திரமாகவேனும் சித்திரிக்கப்படுவது வழமை எனலாம். உதாரணமாகக் 'கிறை பிறீடம்' (Cry Freedom). இந்த விடயத்தில் பிரக்ஞைபூர்வமாகவே செயற்பட்டு இதனைத் தவிர்த்துக் கொண்டீர்களா?**

ஆரம்பத்திலிருந்தே இரு முக்கிய விடயங்களில் மிகத் தெளிவான நிலைப்பாட்டுடன் உறுதியாக இருந்தேன். முதலாவதாக ஆபிரிக்க நடிகர்களை முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க வைப்பதற்கு முடியாவிடில் திரைப்படம் எடுக்கும் யோசனையையே எத்தகைய தயக்கத்திற்கும் இடமளியாது உடனடியாகவே கைவிட வேண்டும் என்பது. ஏனெனில் எனது நோக்கம் லுமும்பாவின் வாழ்க்கையில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்களை வெளிப்படுத்துவதாகும். இதற்கு முட்டுக்கட்டையாக எதனையும் அனுமதித்தால் எனது எண்ணம் ஈடேறாது. இரண்டாவதாக ஒரு சர்வதேசக் கூட்டுத் தயாரிப்பு என்ற ரீதியில் பெருமளவிலான செலவினங்களை எதிர் கொள்ள நேர்ந்தாலும் கூட திரைப்படம் மீதான முழு அளவிலான கட்டுப்பாடும் எம் வசம் இருந்தாக வேண்டும் என்பது. இந்த வகையில் எத்தகைய சமரசங்களுக்கும் இடமில்லை என்பது தெளிவு. இவற்றில் சறுக்கி விடாமல் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் செயற்பட்டேன். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இத்தகைய எம்முடைய நிபந்தனைகளுக்கு இணங்கி ஒத்துழைக்கக் கூடிய நிதியாளர்களிடமிருந்து மாத்திரமே நிதியினைப் பெற்றுக் கொள்வது என மட்டுப்படுத்திக் கொண்டதால் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்லப்படும் குழந்தை அங்கு நோய்வாய்ப்பட்டு மரணிப்பதும் அச்செய்தியைத் தாங்க முடியாது லுமும்பா கலங்குவதும் உள்ளார்ந்த சோகத்துடன் வெளிப்படுகின்றது. வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த போது தப்பியோடிய லுமும்பாவும் குடும்பத்தினரும் நடுவழியில் ஏரியொன்றுக்கு அருகாக மொபிற்றுவின் படையினரிடம் சிக்குவது, மிகுந்த பரிதவிப்பை ஏற்படுத்துகிறது.

ஒரு விழிப்புணர்வுமிக்க மென்மையான கலைச்சாதனம் என்ற வகையில் லுமும்பாவின் புற உலகை மாத்திரமின்றி, அக உலகை ஊடுருவிப் பார்ப்பதிலும் ஆழ்ந்த தன்மைகளையும், எண்ணங்களையும்உணர்வுகளையும் வெளிக்கொணர்வதிலும் சினிமா கொண்டிருக்கும் அசாத்திய ஆற்றல் முழுமை குன்றாது வெளிக்கொணரப்படுகின்றது.

அரசியற் பிரக்ஞையும் பற்றுறுதியும் கொண்ட நெறியாளரான றோல் பெக் கெயிட்டி நாட்டின் கலாசார அமைச்சராக பதினெட்டு மாதங்கள் கடமையாற்றியவர். கொள்கைப் பற்றாளர் என்ற காரணத்தினாலேயே அரசாங்கத்தின் ஊழலை எதிர்த்து குறுகிய காலத்தில் அதிருப்தி காரணமாக பதவியைத் துறந்தவர். ஆபிரிக்க நாட்டின் சுதந்திரம், இறைமை, ஐக்கியம் என்பவற்றில் பற்றுறுதிமிக்கவர். காலனித்துவ ஆய்வுகளில் விசாரணைகளுடன் கூடிய ஈடுபாடு கொண்டவர். பல நாடுகளில் வாழ்ந்த பயிற்சியும் அனுபவமும் கொண்டவர். உலகில் சுதந்திரத்திற்காகப் போராடியவர்களுடன் ஒப்பிடுகையில் பற்றிஸ் லுமும்பாவின் முக்கியத்துவம் எந்தவிதத்திலும் குறைந்த ஒன்றல்ல. இருப்பினும் ஒரு

செலவினங்களை ஒரு கட்டுப்பாட்டிற்குள் சுருக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. ஏற்கெனவே எனது படைப்புகள் சிலவற்றிக்கு குறிப்பிட்ட இதே நிதியாளர்களிடமிருந்து நிதியுதவி பெற்றுக் கொண்ட காரணத்தினாலும், அவர்களுக்கு எனது படைப்பின் தரத்தில் பூரண நம்பிக்கை ஏற்பட்டிருந்த காரணத்தினாலும் அவர்கள் இத்திட்டத்தில் பங்காளர்களாக இணைந்து கொள்ளத் தயக்கம் காட்டவில்லை. இந்த வகையில் நீங்கள் உதாரணமாகக் குறிப்பிட்டதனைப் போன்று வெள்ளையரை முக்கிய கதாபாத்திரமாக உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் எதனையும் நான் எதிர்கொள்ள நேரவில்லை. உண்மையிலேயே 'கிறை பிறீடம்' ஸ்ரீவ் பிக்கோவ்வைப் பற்றிய திரைப்படம் அல்ல, வெள்ளையரான பத்திரிகையாளரைப் பற்றிய திரைப்படமே அது. அத்தகையதொரு அணுகுமுறை ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் குறியாக இருந்து மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் செயற்பட்டேன். திரைப்படத்தின் தரம் அதன் நேர்த்தி ஆகியன சகல அம்சங்களிலுமே சிறந்ததாக இருக்க வேண்டும் என்பதற்காக நானும் எனது குழுவினரும் எத்தகைய சோர்வுமின்றி கடும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். செலவைச் சுருக்குவது எந்த விதத்திலும் திரைப்படத்தின் தரத்திற்கு ஊறினை ஏற்படுத்தி விடக் கூடாது என்பதில் நானும் எனது குழுவினரும் கண்ணும் கருத்துமாக இருந்தோம். இந்த வகையில் பல சவால்களை நான் முன்னின்று எதிர்கொள்வதற்கு துணையாகவும் பக்கபலமாகவும் இருந்தவர்கள் எனது குழுவினரே. இந்தக் குழு முயற்சி காரணமாகவே நான்கு மில்லியன் டொலர் செலவிலான லுமும்பா திரைப்படம் ஏனையோர் 15 அல்லது 20 மில்லியன் டொலராக இருக்குமோ அதன் பெறுமதி என்று வியக்க வைக்க வைத்தது. இத்தகைய குழுவினரைப் பெற்றவகையில் நான் மிகப் பெரிய அதிர்ஷ்டசாலி என்றே கருதுகிறேன்.

**மூன்றாம் உலக நாடொன்றில் திரைப்படம் ஒன்றை எடுக்கவிருக்கும் சுதந்திர திரைப்பட நெறியாளர்களுக்கு நீங்கள் கூறக் கூடிய ஆலோசனை என்னவாக இருக்கும்?**

நீங்கள் எடுக்கவிருக்கும் திரைப்படத்தின் தன்மை அதற்கான நோக்கம் மற்றும் எல்லைப்பாடுகள் போன்றவற்றில் இவை தங்கியுள்ளது. அது ஒரு ஆவணப்படமா அல்லது கதைப்பாங்கானதா என்பதையும் பார்க்க வேண்டும். ஆனால் நான் சொல்லக் கூடிய பிரதான அம்சம் என்னவெனில், குறிப்பிட்ட அந்த நாடு என்ன எத்தகையது என்பது குறித்து நன்கு தெரிந்திருக்க வேண்டும். மேலும் அதன் வரலாறு, மக்கள், அரசியல் போன்ற பின்னணி குறித்து ஆய்வு நோக்கிலான பார்வை அவசியமாகும். உங்களுக்கு உங்களுடைய முயற்சிக்கு அங்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரே உதாரணத்திற்கு எடுக்கப்பட்டு வரும் வேளைகளில் அவருடைய பெயர் ஏனோ விடுபட்டுப் போவது துரதிர்ஷ்டவசமானது. இதனை நிவர்த்திக்கும் வகையில் ஆபிரிக்காவின் இருண்ட கால வரலாற்றுப் பகைப்புலனில் லுமும்பாவின் வாழ்க்கைப் பின்னணி அலசப்படுகின்றது. இந்த வகையில் ஆபிரிக்க மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திப் போராடிய முன்னோடித் தலைவராக, ஒரு தீர்க்கதரிசியாக அவர் என்றும் நினைவு கூரத்தக்கவராகிறார். அவர் தாம் வாழும் காலத்தில் பலவாறாக அர்த்தப்படுத்தப்பட்டார். நாட்டுப்புற அரசியல்வாதி, பிசாசு, தீர்க்கதரிசி, சுதந்திரஞானி என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டார்.

**அரசியல் மற்றும் தனிப்பட்ட ரீதியில் இரு உலகங்களுக்குள் சிக்கிக் கொண்ட, கொங்கோ மக்களை உண்மையாக நேசித்த லுமும்பா ஒவ்வொரு கட்டத்திலும் தொல்லைகளாலும், பயங்கர சதிகள் மற்றும் துரோகத்தனங்களாலும் வேட்டையாடப்பட்டு ஈற்றில் படுகொலை செய்யப்படுகிறார். எத்தகைய மனக்கிலேசங்களுக்கும் ஆளாகாது, எவராலும் வஞ்சிக்கப்படக் கூடிய ஒரு துன்பியல் தோய்ந்த பாத்திரம்தான் லுமும்பாவென ஜீன் போல் சார்த்தர் கூறிய கூற்றை இத்திரைப்படம் மெய்ப்பிக்கின்றது.**

றோல் பெக்கின் இத்திரைப்படம் மக்கள் செல்வாக்கின் மூலம் லுமும்பா தேசிய அளவில் பிரபல்யம் அடைந்து கொங்கோவின் முதலாவது பிரதமராகப் பதவியேற்றதிலிருந்து மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் அவர் குரூரமாகப் படுகொலை செய்யப்படும் காலம் வரை லுமும்பாவின் எழுச்சியிலிருந்து அவரது வீழ்ச்சிவரை முழுமை குன்றாத ஒரு பார்வையைச் செலுத்தியிருக்கிறது. ஒரு வரலாற்றுப் பின்னணியில் உணர்வுகள், கருத்தாக்கங்கள், சித்திரிப்புகள் என்பன நம்பகத்தன்மையுடன் காட்சிப்படிமங்களாக வெளிக் கொணரப்படுவதற்கு ஆய்வடிப்படையில் அமைந்த வலுவானதொரு திரைக்கதை அவசியமானது என்பது இத்திரைப்படத்தின் மூலம் நிரூபணமாகிறது. நவ காலனித்துவ பகுப்பாய்வு, மிகக் காத்திரமான முறையில் அரசியற் பரிமாணங்களுடன் கூடிய படிமங்களில் நெறியாளரால் வெளிக் கொணரப்படுகிறது. அவற்றின் சமூக, அரசியல் தாக்கங்கள் மற்றும் விளைவுகள் போன்றனவும் வெகு கூர்மையாக அலசப்படுகின்றன. சகல பிரச்சினைகளையும் ஒரு தரிசன வீச்சுடன் கிரகித்துக் கொண்டதுடன் மெய்மை குன்றாததொரு சிருஷ்டி அனுபவமாகவும் தர றோல் பெக் முற்பட்டிருக்கிறார். ஊழல், இனக்குழுக்களின் ஒற்றுமையின்மை, முதலாம் உலக நாடுகளின் உள்நோக்கு அடிப்படையிலான சதி நடவடிக்கைகள், அவற்றின் ஏக போக சுரண்டல்களுக்கான பேராசை போன்றவற்றை திரைப்படம் நன்கு அம்பலமாக்குகிறது. விறுவிறுப்பான கதைப்பாங்கான வரலாற்றுத் திரைப்படம் என்ற ரீதியில் உள்ளடக்கம், நவீன வடிவம் போன்றவற்றில் அக்கறை செலுத்தி எத்தகைய அதீதங்களும் இன்றி முதிர்ச்சியான கட்டுப்பாட்டுடன் சமநிலை குன்றாமல் அரசியல் தளத்தில் இயங்கி குறிப்பிடத்தக்க அரசியற் திரைப்படங்களைப் படைத்த நெறியாளர்கள் வரிசையில் றோல் பெக்கிற்கு என்றும் தனியிடம் உண்டு. நவ காலனித்துவப் பிடிக்குள் நீண்டகாலம் சிக்கிச் சீரழிந்த கொங்கோ, கெயிட்டி போன்ற நாடுகளின் வரலாற்றுப் படிப்பினைகளை வெளிக் கொணர வேண்டிய தேவையும் நெறியாளருக்கு இருந்திருக்கிறது. அந்த வகையில் லுமும்பா திரைப்படம் காத்திரமானதொரு சீரிய முயற்சி எனலாம்.

லுமும்பா பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதும் அவர் தனது கடமைகளை ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட கசாபுவுடன்

மக்கள் எப்போதும் ஆதரவாகவும் பக்கபலமாகவும் இருப்பார்கள் என்பதில் நம்பிக்கை இருந்தாக வேண்டும். இந்த அடிப்படையில் அங்குள்ள மக்களுடன் உறவினை வளர்த்துக் கொள்ள திறந்த மனத்துடன் அவர்களுடன் உறவாட வேண்டும். உங்களுடைய திட்டம் என்ன என்பது குறித்து அவர்களுக்கு ஓரளவேனும் தெரிந்திருக்க வேண்டும். அவர்களை மதித்து அவர்களுடன் கருத்துப் பரிமாற வேண்டும். உங்களுடைய முயற்சியில் அவர்களும் பங்காளர்கள் தான் என்பதை அவர்கள் தாமே உணருமாறு செய்வது உங்களுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும். அங்குள்ள மக்களுடைய நிலைமைகள், அவர்களுடைய மட்டுப்பாடுகள், வாழ்க்கைமுறை என்ன என்பதை கூர்மையான நுண்ணுணர்வுடன் அவதானித்து புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய குழுவினர் ஏதேனும் அங்குள்ள மக்களுக்குப் பழக்கப்படாத அந்நியமானவற்றைக் கொண்டு செல்கிறார்களா என்பதை நன்கு அவதானித்து விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். நீங்கள் அங்கு வந்து திரைப்படத்தை முடித்துக் கொண்டு விட்டு வெளியேறுவதாக ஒரு போதும் இருந்து விடக் கூடாது.

**கடந்த பல ஆண்டுகளாக ஆவணப் படங்களையும் கதைப்பாங்கான திரைப்படங்களையும் எடுத்து வருகிறீர்கள். இரு வேறுபட்ட முயற்சிகளிலும் உங்களது உணர்வு நிலை எத்தகையது?**

எனது ஆவணத்திரைப்படங்கள் புனைவுப்பாங்கான தன்மை கொண்டவை. அவற்றில் கதைத் தடங்களும் புனைவான கதாபாத்திரங்களும் இருக்கும். எனது கதைப்பாங்கான படங்கள் உண்மைக் கதைக் கூறுகளை நடந்த சம்பவங்களை மற்றும் உண்மையான அனுபவங்களை உள்ளடக்கியவை. எனவே என்னைப் பொறுத்தவரையில் வேறுபாடுகள் ஏதேனும் இருந்தாலும் அடிப்படையில் பெரிய வித்தயாசங்கள் இருப்பதில்லை என்றே கருதுகிறேன். படைப்பில் எமக்கிருக்கும் அணுகுமுறையே முக்கியமானது. எனினும் உணர்வு நிலைகள் சார்ந்ததாக வெளிப்பாடுகளுக்கு ஏற்ற வடிவங்களின் தெரிவும் இருக்கலாம் என்றே நான் கருதுகிறேன். படைப்பு என்ற ரீதியில் எனக்கிருக்கும் அனுபவங்கள் மற்றவர்களுக்கும் இருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்த்து விட முடியாது. எனினும் அர்த்தப்பாடுகளை திரைமொழியின் கூறுகளில் அவர்களிடம் தொற்ற வைத்துவிட வேண்டும்.

**வேறு வேறான பல நாடுகளில் நீங்கள் வாழ்ந்திருக்கிறீர்கள். பல மொழிகளில் திரைப்படங்களை எடுத்தும் இருக்கிறீர்கள். உங்கள் திரைப்படைப்புக்களை எத்தகைய**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்து கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார். கசாபுவு தீர்க்கமான முடிவு எடுக்க முடியாத, சகலதுக்கும் சமரசத்தையே நாடுகின்ற ஒரு திடமற்ற அரசியல்வாதியாவார். கொங்கோ சுதந்திர தின வைபவத்தின் போது பெல்ஜிய அதிகாரிகள் கொங்கோலியர்களை பின்வருமாறு அச்சுறுத்துகின்றனர். "அவசர சீர்திருத்தங்களையிட்டு என்றும் எச்சரிக்கையாக இருங்கள்! உங்களால் திறம்பட முடியும் என்ற ஒரு நிலை வரும்வரை பெல்ஜிய நிறுவனங்களை மாற்றுவதற்கு முற்பட வேண்டாம்" என பூச்சாண்டி காட்டுகின்றனர். சுதந்திரம் அளிக்கப்பட்ட பின்னரும் கூட எத்தகைய மாற்றங்களையும் வரவேற்று அனுமதிக்காதது மீண்டும் கொங்கோலியர்களைத் தமது கைப்பிடிக்குள்ளேயே வைத்திருக்க வேண்டுமென்ற பெல்ஜியர்களின் கபடத்தனமான நெகிழ்ச்சியற்ற மனப் போக்கினையே எடுத்துக் காட்டுகின்றது.

சுதந்திரதின உரையின் போது பெல்ஜியர்களை மனங்கோணச் செய்து பகைத்துவிட வேண்டாமென பிரதமர் லுமும்பாவுக்கு ஆலோசனை கூறப்பட்ட போதும், அவர் எதனையும் பொருட்படுத்தாது சுதந்திர உணர்வுடனேயே செயற்படுகிறார். அவர் பேசிய பேச்சின் ஒரு பகுதி பின்வருமாறு – "சொற்ப கூலிக்காக எம்மிலிருந்து பிழியப்பட்ட கடின உழைப்பினைப் பொறுத்துக் கொண்டோம். நாளாந்தம், காலை, நடுப்பகல், இரவு என இடைவிடாது ஓயாது தொடர்ந்த துன்புறுத்தல்கள், அவமானங்கள், அடிகள், உதைகள் போன்றவற்றையும் சகித்துக் கொண்டோம். ஏனெனில் நாங்கள் கறுப்பர்கள்!

... ... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ... ...

எமது காயங்கள் இன்னும் ஆறவில்லை! அவற்றை எமது மனதிலிருந்து நீக்குவது என்பது தாங்க முடியாத வலியினை எமக்கு ஏற்படுத்துகிறது". இப்பேச்சு ஜனாதிபதியான கசாபுவுக்கு பெரிய சங்கடத்தினை ஏற்படுத்தி விடுகிறது. அவர் தமது இருக்கையில் ஒட்ட முடியாது அஷ்ட கோணலாக நெளிகிறார். அடிவருடியான அவர் பெல்ஜியர்கள் என்ன நினைக்கப் போகிறார்களோவென ஏங்கிப் பதைபதைக்கிறார்.

கசாபுவைப் போன்று அரைகுறை நிலையில் உள்ளவர்களல்ல ஏனைய இருவர்களான மொபிட்டுவும், மொயிஸ் ஸொம்பியும். உள்நோக்கங்கள் வெளிப்படாது சதி செய்யும் திறன் கொண்டவர்கள். அவர்கள் இருவரும் முழுஅளவில் வெளிப்படையாகவே நவ காலனித்துவத்தின் ஆதரவாளர்களாக தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டவர்கள். சுதந்திரக் கொங்கோவின் முதலாவது அரசாங்கத்திற்கு எதிரான ஆரம்பக் காலகட்டக் கிளர்ச்சியினை அடக்குவதன் மூலம் இராணுவத்தில் தனது ஸ்தானத்தைப் பலப்படுத்திக் கொண்டவர் மொபிட்டு. தனி மாநிலமாகப் பிரிந்த கட்டங்காவின் தலைவரான மொயிஸ் ஸொம்பி கடும் கம்யூனிஸ எதிர்ப்பாளர். இங்குதான் கொங்கோவின் மிகப் பெரும் செல்வமாக எழுபது வீதமான கனியப் பொருள் வளம் உள்ளது. இவர்கள் மூவருமே காலனித்துவத்தினருடன் நெருக்கமான உறவு பூண்டவர்கள். இவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒருவரே லுமும்பா. கொங்கோலிய மக்களை உண்மையிலேயே நேசித்த இலட்சியவாதி அவர். மக்களும் அவரை உண்மையாகவே நேசித்தனர். இதனாலேயே ஜனாதிபதி கசாபு சட்டபூர்வமற்ற விதத்தில் அவரைப் பிரதமர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்த போது பாராளுமன்றக் கட்டிடத்தின் முன் வாசலில் பெருந்தொகையினராக சாமானியர்களான ஏழை எளிய மக்கள் லுமும்பாவைச் சூழ்ந்து நின்று ஆவேச உணர்ச்சியுடன் அவருக்கு ஆதரவுக் குரல் எழுப்புகின்றனர். ஒரு நவ காலனித்துவ பகைப் புலனில் இந்த நால்வராகிய லுமும்பா, கசாபுவு, மொபுட்டு மற்றும் ஸொம்பி ஆகியோரது அதிகார உறவுகள், அவற்றில் ஏற்படும் ஏற்ற, இறக்கங்கள், மாற்றங்கள், விளைவுகள், போன்றன குறித்து இத்திரைப்படம் ஆழமானதொரு பகுப்பாய்வில் ஈடுபட்டிருக்கிறது. இந்தவகையில் சுதந்திரப் போராட்டங்களது தீவிரங்களைத் தாங்கிக் கொள்ள முடியாது கொங்கோவை விட்டு வெளியேறிய பெல்ஜிய அதிகார வர்க்கத்தினர் தமது பிடியினைத் தளர விடாமல் மீண்டும் இராணுவத்தினையும் மற்றும் நாட்டின் 70 வீத கனியவளம் நிறைந்த கட்டங்காவையும் தமது

**பார்வையாளர்களிடம் கொண்டு செல்ல விரும்புகிறீர்கள்?**

படைப்பு என்று வரும் போது நான் என்னை ஒரு கலைஞனாகவே கருதுகிறேன். படைப்பு எனது வேலை. இதற்கு யாரையும் இலக்கு வைப்பது எனது நோக்கமல்ல. கூடுதலான மக்களிடம் அது சென்றடைய வேண்டும் என்று விரும்புகிறேன். எனது பிரதான அக்கறை என்னவெனில் ஓரங்கட்டப்பட்டு விடக்கூடாது என்பதும் அதேவேளை சமரசத்திற்கு ஆட்பட்டு விடக் கூடாது என்பதுமாகும். இந்த இரண்டுக்கும் இடையிலான வெளியில் எனது இருப்பும் சஞ்சாரமும் உள்ளது. மிகக் கூடுதலான தொகையினரிடம் எனது படைப்புச் செல்வது எனக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. வணிக நோக்கத்துடன் பெரிய வசூலைச் சம்பாதிக்க வேண்டும் என்று எதிர்பார்த்து திரைப்படங்களை நான் ஒரு போதும் படைப்பதில்லை. ஆனால் எனது திரைப்படங்களைப் படைப்பதற்கு எனக்குப் பணம் தேவை. இதனை நான் முற்றாகப் புறக்கணித்து விட முடியாது.

**லுமும்பா, ஒரு ஒன்றுபட்ட ஆபிரிக்கப் பேரரண்டமும் அமைதியும் செழிப்பும் நிலவும் கொங்கோவும் சாத்தியம் என்று கூறி அதற்காகப் பாடுபட முற்படுகிறார். ஆனால் மிகப் பாரிய அந்த முயற்சிக்கான பயண ஆரம்பத்திலேயே துக்ககரமாக அவர் படுகொலையும் செய்யப்படுகிறார். இதனால் அவர் படுகொலையை அடுத்து கிட்டத்தட்ட 30 ஆண்டு காலம் தக்க தலைவன் இன்றி யோசெப் மொபிட்டுவின் கொடுங்கோல் ஆட்சிக்கு கொங்கோ இரையாக நேர்கிறது. அரசாங்கத்தின் ஊழல், இனக்குழுக்களிடையேயான ஒற்றுமையின்மை, முதலாம் உலக நாடுகளின் உள்நோக்கு அடிப்படையிலான சதி நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் ஏகபோக சுரண்டல் நடவடிக்கைகள் என்பன குறித்து உங்கள் திரைப்படம் மிக ஆழமான பரிசீலனைகளிலும் விசாரணைகளிலும் ஈடுபட்டிருக்கிறது என நான் கருதுகிறேன். இந்த வகையில் எனக்கு 'த எக்கனமிஸ்ற்' சஞ்சிகையில் வெளியான விரிவான ஆய்வுக்கட்டுரை ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. 'ஆபிரிக்கா- நம்பிக்கையிழந்த கண்டம்' என்ற தலைப்பு என நான் நினைக்கிறேன். பிரக்ஞைபூர்வமாக ஆய்வுகள், பகுப்பாய்வுகளில் ஈடுபாடு காட்டி வரும் ஒரு நெறியாளர் என்ற வகையிலும் லுமும்பா திரைப்படத்தில் இது குறித்து ஒரு ஆழமான பார்வையினைச் செலுத்தியிருப்பவர் என்ற வகையிலும் ஆபிரிக்கா 'ஒரு நம்பிக்கையிழந்த கண்டம்' தானா? என்ற கேள்வியை உங்களிடமேயே கேட்டு விடுவது பொருத்தமென நான் கருதுகிறேன்.**

ஏதோவொரு விதத்தில் அபிவிருத்தி தடைப்பட்ட ஏனைய இடங்களைப் பார்க்கிலும் கூடுதலான மோசமான இடமல்ல ஆபிரிக்கா. திரைப்படத்தைப் பார்க்கும் மக்கள் இன்றைய ஆபிரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க கபடத்தனமான சதி முயற்சிகளில் இறங்கியதன் விளைவே லுமும்பாவின் படுகொலையாகும்.

திரைப்பட நெறியாளரும் திரைக்கதை எழுத்தாளர்களிலும் ஒருவருமான றோல் பெக் நேர்காணல் ஒன்றின் போது லுமும்பாவின் அசாதாரண மனித மேன்மை சுட்டுக் கொல்லப்படுவதற்குச் சற்று முன்னதாக அவர்

பரிமாணங்களுடன் உருக்கமாகவும் கூர்மையாகவும் இத்திரைப்படம் வெளிக் கொணர்ந்துள்ளது. இது சம்பவங்களுடன் தொடர்புடைய மனிதர்களையும் உண்மைச் சம்பவங்களையும் வெளிக் கொணர்ந்துள்ளது. யு.எஸ் புலனாய்வுத்துறை, பெல்ஜிய அரசாங்கம் மற்றும் உள்நாட்டுத் துரோகிகள் ஆகியோரின் கூட்டுச் சதிகளின் பின்னணியில் ஆபிரிக்க மக்களுக்குப் பேரளவில்



சித்திரவதைகளால் இம்சிக்கப்பட்டு படுகாயம் அடைந்திருந்த நிலையில் சாதாரணர்களது சீண்டல்கள் அவமரியாதைகள் போன்றவற்றை புதிரானதொரு ஆழ்ந்த மௌனத்துடன் ஏற்றுக் கொள்வதில் வெளிப்படுவதாகவும். இந்த அனுபவம் யேசுவின் வதைபாடுகளுக்கு இணையான ஒன்றெனக் கூறி பரவசமும் அடைகிறார். இது இறப்பையும் கடந்ததாக எதிர் கொள்ளப்படும் அபூர்வமானதொரு ஆன்மீக அனுபவம் எனவும் விபரிக்கிறார். இறுதியாக காலனித்துவக் கெடுபிடி வரலாற்றுப் பின்னணியில் ஒரு சுதந்திர நாடாக கொங்கோ உருமாறிக் கொண்டு வருவதற்கான போராட்டங்களையும் அதற்கான அதன் வலிகளையும் அது எதிர்கொண்ட சதிகளையும் இரத்தக்களரி மற்றும் துன்பியல் தோய்ந்த படுகொலைகளையும் மிகக் காத்திரமான அரசியற்

கிடைக்கப் பெற்ற சுதந்திரம் உண்மையில் எவ்வாறு அவர்களுக்கு முற்று முழுதாக மறுக்கப்படுகின்றது என்பது நன்கு அம்பலமாக்கப்படுகின்றது.

அரசியல் மற்றும் தனிப்பட்ட ரீதியில் இரு உலகங்களுக்குள் சிக்கிக் கொண்ட, கொங்கோ மக்களை உண்மையாக நேசித்த லுமும்பா ஒவ்வொரு கட்டத்திலும் தொல்லைகளாலும், பயங்கர சதிகள் மற்றும் துரோகத்தனங்களாலும் வேட்டையாடப்பட்டு ஈற்றில் படுகொலை செய்யப்படுகிறார். எத்தகைய மனக்கிலேசங்களுக்கும் ஆளாகாது, எவராலும் வஞ்சிக்கப்படக் கூடிய ஒரு துன்பியல் தோய்ந்த பாத்திரம்தான் லுமும்பாவென ஜீன் போல் சார்த்தர் கூறிய கூற்றை இத்திரைப்படம் மெய்ப்பிக்கின்றது. ●

அவல நிலைக்கும் அவ்வாறு அது கொண்டு வரப்பட்டதற்கான தேவைப்பாடுகள் அல்லது சார்பு நலன்கள் என்னவாயிருந்தன போன்ற வெளிப்பாடுகளுக்குமிடையே பின்னிப்பிணைந்து இழையோடும் நெருக்கங்களை இனங்காட்டும் அல்லது அம்பலமாக்கும் ஒரு திரைப்படமாக லுமும்பா திரைப்படத்தைப் பார்க்க வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். குறிப்பாக பெல்ஜியர்களின் எண்பது வருட கால காலனித்துவ ஆட்சிக்குப் பின்னான கொங்கோவை 30 வருட கால ஏகாதிபத்திய நலன்களால் ஆசீர்வதிக்கப்பட்ட மொபிட்டுவின் கொடுங்கோலாட்சிக்குப் பின்னான கொங்கோவுடன் ஒப்பிடுவீர்களானால் தமது நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கான உரிமை கொங்கோ மக்களுக்கு ஒருபோதும் இருக்கவில்லை என்பது தெரியவரும். மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த தலைவர்களாக நியமிக்கப்படுவோர் எவ்வாறு பதவிக்கு வருகிறார்கள் என்பதைப் பாருங்கள். அதிகாரத்தில் யார் யார் இருக்க வேண்டுமென பாரிசிலிருக்கும் எவரோ வாஷிங்டனிலிருக்கும் எவரோ புருசல்ஸில் இருக்கும் எவரோ தான் தீர்மானிக்கிறார்கள். இதனால் அத்தலைவர்கள் பதவியில் அமர்த்தப்படுகிறார்கள். ஆனால் லுமும்பா மக்களால் தெரிவு செய்யப்படுகிறார். அவர் ஒருவர் தான் கொங்கோவின் வரலாற்றில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு தலைவர். அதற்கு முன்னரும், அதற்குப் பின்னரும் கொங்கோவில் தேர்தலே நடைபெறவில்லை. வேறுநாடுகளிலும் இதையொத்த சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். உதாரணமாக யோசெப் மொபிட்டுவால் பதவியில் இவ்வளவு காலமும் நீடிக்க முடிந்ததற்குக் காரணம் வாஷிங்டனால், பிரான்ஸால் மற்றும் பெல்ஜியத்தால் அவர் காப்பாற்றப்பட்டது தான். பல தடவைகளிலும் அவர் காப்பாற்றப்பட்டார். ஆதிக்க சக்திகள் 'இனி மொபிட்டுவை வெளியேற்றும் காலம் வந்து விட்டது' என்று தீர்மானித்ததையடுத்து அவர் தோற்கடிக்கப்பட்டார். எனவே இவை ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற இருவேறு கதைகள் அல்ல. அவை அதே நலன்களைப் பிரதிபலிக்கும் ஒரே கதை தான்.


**(பல்வேறு இதழ்களுக்கு வழங்கப்பட்ட நேர்காணல்களில் இருந்து தொகுப்பும் மொழிபெயர்ப்பும் ஜி.ரி.கே.)** ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நீரளவே தானா நீராம்பல்'

## சில கேள்விகள்



அரவிந்தன்

சரிநிகர் மே-ஜுன் இதழில் 'மித்ரா' எழுதிய "நீரளவே தானா நீராம்பல்" என்ற கட்டுரை வெளிப்படுத்தியிருக்கும் கருத்துக்கள் குறித்த எனது மனப்பதிவுகளை சரிநிகர் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் இக்குறிப்பு எழுதப்படுகிறது

வளர்ந்து கொண்டிருக்கும் கவிதை வெளிக்குள் "பெண்ணின் தனித்துவம் மிக்க குரலைச் செப்பமாக ஒலிக்கச் செய்பவர்களுக்காக காத்திருக்க வேண்டித்தான் இருக்கிறது" என்று ஆதங்கத்துடன் முடிந்திருக்கும் மித்ராவின் இந்தக் கட்டுரை 90களிலும் 2000 ஆம் ஆண்டுகளிலும் வெளிவந்த பெண் கவிஞர்கள் எழுதிய கவிதைகள் தொடர்பான பெண்மொழி, பெண் அரசியல் சார்ந்த விமர்சனமாக அமைந்துள்ளது. கவிஞர்களை அவர்களது பெண்நிலை சார்ந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் விமர்சனத்திற்குள்ளாக்கும் இக்கட்டுரை முக்கியமான இரண்டு விடயங்களை முன் வைத்துள்ளது.

ஒன்று, ஈழத்துப் பெண் கவிஞர்களிடை யே "பெண் மொழி" இன்னமும் முழுமையாக வெளிப்படவில்லையென்பது.

இரண்டாவது கலா, கற்பகம் யசோதரா, மைதிலி ஆகியோரை முன்னுதாரணமாகக் கொண்ட "தமக்கான அரசியலை உருவாக்க" முனைவோருடன் சேர்ந்து இவர்களிடம் "தென்படும் வலிமையான அரசியலையும் கவித்துவத்தையும் சாதிக்கக் கூடியவர்கள்" என்று பிரதீபா, ஆழியாள், தான்யா, ஆகர்ஷியா, அனார், றஞ்சனி, நிவேதா போன்ற "நம்பிக்கையளிக்கும் கவிஞர்களை"யும், பஹீமா ஜகான், தில்லை, ஔவை, பெண்ணியா, மலரா, சித்தி ரபீக்கா, ராக என நீளும் இதர பெண் கவிகள், "எழுத்து பெண்களிடம் கோரி நிற்கிற விடயங்களைப் பூர்த்தி செய்வதாயில்லை" என்றும் மதிப்பீடு செய்து வகைப்படுத்தியுள்ளமையாகும்.

இந்த வகையான தீவிரமான விமர்சனமும், மதிப்பீடும் மிகவும் அவசியமான ஒன்று என்பது குறித்து யாருக்கும் எந்தக் கருத்து முரண்பாடும் இருக்க நியாயமில்லை. தமிழும், கவிதையும், பெண்ணிய அரசியலும் மேலும் ஆழமும் அகலமும் வீரியமும் பெற்று வளர இவை அவசியமானவைதான்

ஆனால் என்னுடைய கேள்வி எல்லாம், மித்ரா இத்தகையதொரு விமர்சன மதிப்பீட்டை மேற்கொள்ளும் போது, அவர் தான் சார்ந்து நிற்கும் நிலைப்பாட்டை தெளிவுபடுத்திக் கொண்டு செய்திருப்பாரானால் இந்த விமர்சனங்கள் மிகவும் பயனுள்ள விளைவைத் தந்திருக்குமே என்பது தான். அப்படிச் செய்திருந்தால் அவரது முடிவுகளும் கூட நியாயமானவையாக அமைந்திருக்கும். இந்த விமர்சனத்தில் அவர் வகைப்படுத்தியிருக்கும் வகைப்படுத்தலும் தர்க்கப் பொருத்தமாகவேனும் இருந்திருக்கும். மித்ராவின் கருத்து நிலை, அல்லது அவர் கவிதைகளை ஆய்வு செய்யும் கோட்பாட்டுப் பின்னணி இன்னது தான் என்று வெளிப்படையாக அவர் எவ்விடத்தும் சொல்லவில்லை. ஆயினும், கட்டுரையின் போக்கில் அவர் வெளிப்படுத்தியுள்ள சில கருத்துக்கள் அவரது தளம் இதுவாகத்தான் இருக்க வேண்டுமென்று ஊகிக்க உதவுகின்றன.

உதாரணத்திற்கு மித்ராவின் சில வரிகளைக் கீழே பார்க்கலாம்:

1. ஆயினும் "பெண் எழுத்து" என்ற வகைமையினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில், ஈழத்துப் பெண்கவிதையின் போதாமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவில் புலப்படும்.
2. "விமர்சனம் என்பது மிஞ்சிப் போனால் கவிதையியல், மொழிப் பிரயோகம் சார்ந்ததாக தன்னை மட்டிறுத்திக் கொள்கிறது. இவற்றையொட்டியே சி.சிவசேகரத்தின் ஏற்பும், மறுப்பும் அமைந்து விடுதலை துல்லியமாகக் காண முடியும். குறித்த கவிதைப் பிரதிகள் கோரி நின்ற அரசியல் வாசிப்புகளை சிவசேகரமோ அல்லது தாமும் கதைத்ததாய் நினைப்பவர்களோ செய்யவில்லை."
3. "ஈழத்துப் பெண் கவிதைகளில் சிறப்பாகக் குறித்துச் சொல்லப்பட வேண்டியது ஆயுத வன்முறைக்கெதிராக அக்கவிதைகளில் எழுந்து கொண்டே இருக்கும் ஈனக் குரலிலான எதிர்ப்பும் மறுப்பும் தான்."
4. "கலா அரசியல் சரி பிழைகளுக்குள் குறுகி நின்று விட கற்பகம் யசோதரா எல்லாவற்றையும் புறக்கணித்து இயங்குகிறார். கழிவிரக்கத்தையும், கையாலாகாத உணர்வையும்



**பின்நவீனத்துவம் ஏற்படுத்திய அதிர்வுகள் வரலாற்றில் மிகவும் முக்கியமானவை. சிந்தனைத் தளத்தில் அது ஏற்படுத்திய கேள்விகள் மாபெரும் உடைவுகளுக்கு வழிவகுத்தன. அந்த உடைவுகள், கேள்விகளுக்கும் மாற்றத்திற்குமான பங்களிப்பை மேற்கொண்டிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதன் சாதனையும், பணியும் அந்தளவு தான். மாற்றத்திற்கு வழிகாட்டும் ஒரு தத்துவப் போக்காக அது இன்னமும் உருப் பெற்றுவிடவில்லை. ஆக, இந்தச் சிந்தனையால் வரலாற்றுப் போக்கினை வழிகாட்டிவிட முடியாது. பெண்மொழிக்கும் சரி, பெண் அரசியலுக்கும் சரி அது வழிகாட்டும் தத்துவமாக அமைந்து விடப் போவதில்லை.**

இன்னும் என்னென்னவோ அந்தரமிக்க உணர்வுகளையும் தொற்றச் செய்துவிடும் கவிதைகள் முதன் முதலாக கற்பகம் யசோதராவிடமிருந்தே கிடைக்கின்றன."
5. "ஆயினும் தமது கவிதைக்குள் எந்தளவு தூரம் "பெண்களாய்" இவர்கள் இருக்கிறார்கள்."
6. "தமது எழுத்துக்கள் உருவாக்க வேண்டிய இந்த அரசியல் போர்க்குணத்தை (மாலதி மைத்திரி குறிப்பிடும் பெண்ணின் மாற்று அரசியல்) அதன் வரலாற்று நிர்ப்பந்தத்தை ஆழமாக பல ஈழப் பெண்கள் உணரவில்லை. உணர்ந்த ஒரு சிலர் ஆண் எதிர்ப்புப் பிரகடனங்கள், அறிவுரைகள், துறவு என முடங்குகின்றனர். உணர்ந்தவர்களில் வேறுசிலர் அந்த அரசியலுக்கு முரணாகவும் இயங்குவதைக் காணலாம்."
7. "புலம்பலும் சபித்தலும், திட்டலும் பிறிதொரு சமயம் சமரசம் செய்தலுமாய் இவர்களது கவிதைப் பரப்பு நிரம்புகிறது. தொகுத்துப் பார்த்தால் இந்தப் பெண் கவிகள் சாடலும், ஊடலும், கூடலுமாய் கணவன் காலடியில் கிடக்கும் தமிழ்ப் பொண்டாட்டி வகைமாதிரிகளே தவிர வேறில்லை."
8. "கற்பகம் யசோதராவின் கவிதை வரிகள் ஔவை போன்றவர்களின் போலித்தனங்கள் நீங்கி அதீத பின்நவீனத்துவப் பாங்கில் நகரும் வரிகள். மொழியின் அர்த்தம், தொடர்ச்சியற்றுப் போக ஒரு ஒப்பாரியைப் போல அல்லது இடப்பெயர்வின் நடுவே அந்தரமிக்க துக்க விசாரிப்பைப் போல ஒலிப்பவை இவை."

மித்ராவின் ஆறுபக்கக் கட்டுரையில் இருந்து எடுத்துக் கொண்ட மேற்கொண்ட வரிகள் மூலமாக அவர் கவிதை தொடர்பாகக் கொண்டிருக்கும் அல்லது இந்தக் கட்டுரை எழுத அவர் பயன்படுத்தியிருக்கும் கருத்துக்களைச் சுருக்கமாக இவ்வாறு கூறலாம்:
1. பெண் அரசியல் - பெண்ணாய் இருத்தலின் அரசியல் நிலை
2. வன்முறை எதிர்ப்பு நிலை.
3. மொழியின் அர்த்தம், தொடர்ச்சியற்றுப் போகிற பின்நவீனத்துவப் பாங்கில் நகரும் மொழியைக் கையாளும் சிறப்பு.

இந்த அரசியல் மற்றும் மொழி சார் கருத்துநிலை அடிப்படையில் நின்று கிட்டத்தட்ட இரண்டு தசாப்த காலத்துக் கவிதைகளை - பெண் கவிஞர்களால் எழுதப்பட்ட கவிதைகளை - அவர் விமர்சனத்திற்கு உள்ளாக்கியிருக்கின்றார் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு அவர் வரையறை செய்து கொண்டிருக்கும் நிலைப்பாட்டில் என்ன தவறிருக்கின்றது என்று ஒருவர் நினைக்கக்கூடும். உண்மையில் மேலோட்டமாகப் பார்த்தால் அதில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியாது. ஆனால் ஒரு நல்ல விமர்சனம் வெறுமனே ஒரு கருத்துநிலையை அடிப்படையாகக் கொண்டு விடுவதால் மட்டும் செய்துவிடக் கூடியதல்ல. அந்தக் கருத்து நிலையின் அடிப்படையில் படைப்புகளை கணிப்பிடுவதற்காக ஆய்ந்தறியும் பொறுமையும், அந்தக் கருத்துநிலை நோக்கி படைப்பாளிகளை வழிநடாத்துகின்ற அக்கறையான நோக்கமும் இருக்க வேண்டும். கோட்பாட்டடிப்படை படைப்புகளை ஆய்ந்தறிவதற்கு ஒரு விமர்சகருக்கு வழிகாட்டும் சாதனமாக அமைய வேண்டுமே அன்றி, விமர்சகரின் எடுகோள்களை நியாயப்படுத்தும் சாதனமாகப் பயன்படுத்தப்படக்கூடாது. அது அறிவுத்துறை அறமும் அல்ல. தவிரவும் எந்தக் கருத்துநிலையும் காலம் இடம் பொருள் சார்ந்து சந்தர்ப்பப் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் (context) கவனமாகப் பொறுப்புணர்வுடன் பயன்படுத்தப்பட வேண்டும். அல்லாத போது, அது பல்வேறு சமூக அரசியல் வரலாற்றுத் தவறுகளுக்குக் காரணமாக அமைந்துவிடும் ஆபத்து இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

மித்ராவின் கட்டுரை இந்த அவசியத்தைக் கணக்கெடுக்காததால் அவர் மனதுக்குப் பிடிக்காத கவிதை வெளிப்பாடுகளை மிகவும் இலகுவாகப் புறந்தள்ளி விடுகிறது. இந்தக் கவிதைகள் தனக்குப் பிடிக்காததற்கான காரணம் என்ன என்பதை அறிந்து கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்குப் பதிலாக, அவர் பிடிக்காமல் போனதை நியாயப்படுத்தக்கூடிய கருத்துநிலையை இலகுவாகக் கையில் எடுத்துக் கொண்டு விடுகிறார். இது ஈழத்துத் தமிழ்ச் சூழலில் அவர் பேசுகிற பெண் அரசியல் சிந்தனையின் தோற்றம் வளர்ச்சி குறித்த வரலாற்று நிலைமைகளை கணக்கெடுக்க வேண்டிய அவசியத்தை அவருக்கு உணர்த்தவில்லை. இதன் காரணமாக தவிர்க்க முடியாமல் எழுகின்ற தெளிவீனம், குழப்பமான முறையில் கவிதைகளை அடையாளம் காணும் நிலைக்கு அவரைத் தள்ளி விடுகிறது. ஒரே விடயம் ஒரு கவிதையில் சிறப்பாகவும் இன்னொன்றில் மோசமானதாகவும் அவருக்குத் தோன்ற வைத்து விடுகிறது. இந்த நிலைக்கு அவர் வருவதற்குக் காரணம் அவர் கவிதை வரிகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் சொற்களின் தீவிரத்தன்மையால் வழிநடாத்தப்படுவது தான். கவிதையில் சொற்களும், படிமங்களும் முக்கியமானவை என்ற போதும், அவை கவிதைப் பொருளுக்கான பரந்து விரிந்ததும் ஆழமானதுமான அர்த்தங்களைத் தரவல்லவையாக அமைவதற்குப் பதிலாக அதிர்ச்சியையும் தீவிரத்தையும் வெளிப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருப்பது கவிதையைப் பயனற்றதாக்கிவிடும். இத்தகைய வார்த்தைகளும் படிமங்களும் ஏற்படுத்தும் கவர்ச்சி, இவற்றின் பின்னாலுள்ள அரசியலின் தன்மையை தவறாக அடையாளம் காணும் நிலைக்கு அவரை நகர்த்தி விடுகிறது.

கற்பகம் யசோதராவின் கவிதைகள் மீது அவருக்கு, அவருடைய அரசியல் மற்றும் கவிதைக் கோட்பாட்டின் அடிப்படையில் (பெண் அரசியல், வன்முறை எதிர்ப்பு, பின் நவீனத்துவ மொழி) இயல்பாகவே இருக்கக் கூடிய ஈர்ப்பு விளங்கிக் கொள்ளக்கூடியது தான். ஆனால் அதுவே பிற கவிதைகளை புலம்பல் என்றும், போலி என்றும் அரசியல் குறுக்கம் என்றும் பெண்டாட்டி வகை மாதிரி என்றும் கூறிப் புறக்கணிக்க வைத்து விடுகையில், அது அவரை குறுகிய பார்வை வட்டத்துள் (Myopic perception) தள்ளி விடுகிறது. அவர் புறக்கணித்த கவிதைகளில் வன்முறை எதிர்ப்பை மட்டுமே அடையாளம் காணும் அளவுக்கு இது அவரைக் குருடாக்கி விடுகிறது. பெண்ணாய் இருத்தல், பெண் நிலை நிற்றல் (மாக்சியத்தின் தானேயாகிய வர்க்கம், தனக்கே ஆகிய வர்க்கம் என்ற கருதுகோளின் அடிப்படையில் இந்தப் பெண், பெண்ணிலை என்ற கருதுகோள் வளர்த்தெடுக்கப்பட்டது. புரட்சிகர வர்க்கத்திற்கும், வர்க்க உணர்வு பெற்ற புரட்சிகர வர்க்கத்திற்கும் இடையிலான வேறுபாடு புரிதல் சார்ந்ததே அன்றிப் போர்க்குணம் சார்ந்ததல்ல என்ற கருத்தை இவ்விடத்தில் நினைவூட்டிக் கொள்வது பொருத்தமானது என்று நினைக்கிறேன்.) பற்றி மிகவும் தீவிரமாகப் பேசும் அவரது நிலைப்பாடு வரலாறு நமது சமூகத்தில் கடந்த இரண்டு தசாப்தங்களில் ஏற்பட்ட பாரிய உடைவுகளும், மாறுதல்களும் பற்றிய கணக்கெடுப்பின்றி உருவமைக்கப்பட்டிருப்பதால் அடிப்படையிலேயே தவறான புரிதலை நோக்கி அவரைத் தள்ளி விடுகிறது.

"நீரளவே தானா நீராம்பல்" என்ற கேள்வியை எழுப்பும் அவர் நீரோடிணைந்து வாழும் இயற்கை நியதி கொண்ட நீராம்பல் தொடர்பாக அக்கேள்வியை எழுப்புவது பொருத்தமற்றது. அவரது கேள்வியின் ஆதங்கம் நியாயமானது தான். சமூகத்தை மீறி அதனை மாற்றுகின்ற, மாற்றத்தை நோக்கி அதை உந்தித் தள்ளுகின்ற கருத்துக்களை வெளிப்படுத்துகிற கவிஞர்களை எதிர்பார்க்கும் மித்ரா நீராம்பல்கள் பற்றியல்ல சிந்திக்க வேண்டும். அவர் நீரின் அளவு ஏன் இப்படியிருக்கிறது என்று தான் கேள்வி எழுப்பியிருக்க வேண்டும். அதுதான் மாற்றம் பற்றிய சிந்தனையை வளர்ப்பதற்கான கேள்வியாக அமைய முடியும்.

ஈழத்துப் படைப்புக்களில்



சமூகத்தை மீறி அதனை மாற்றுகின்ற, மாற்றத்தை நோக்கி அதை உந்தித் தள்ளுகின்ற கருத்துக்களை வெளிப்படுத்துகிற கவிஞர்களை எதிர்பார்க்கும் மித்ரா நீராம்பல்கள் பற்றியல்ல சிந்திக்க வேண்டும். அவர் நீரின் அளவு ஏன் இப்படியிருக்கிறது என்று தான் கேள்வி எழுப்பியிருக்க வேண்டும். அதுதான் மாற்றம் பற்றிய சிந்தனையை வளர்ப்பதற்கான கேள்வியாக அமைய முடியும்.

பெண்ணியம் பற்றிய பிரக்ஞையின் அறிமுகம் எண்பதுகளின் நடுப்பகுதிக்குப் பிற்பட்டது. பெண்மொழிப் பிரக்ஞை அதற்கும் பிற்பட்டது. 90களின் நடுப்பகுதியில் தான் பெண் மொழி பற்றிய உரையாடலே நடைபெற்றது. இங்கு பேசப்படும் பெண் கவிஞர்களில் பலர் பெண்ணியத்தின் வளர்ச்சியோடு சேர்ந்து வளர்பவர்கள் பெண்ணிய சிந்தனையின் நிலை ஈழத்தமிழ்ச் சூழலில் உள்ள அளவைப் பற்றிப் பேசாமல் (நீர் பற்றிப் பேசாமல் நீராம்பல் பற்றிப் பேசுவது) கவிஞர்களைப் பற்றிப் பேசுவதில் நிறைய ஆபத்திருக்கிறது. ஆழியாள், கற்பகம் யசோதரா போன்ற புலம்பெயர் கவிஞர்களுக்கு வாழிடம் மாறியதன் காரணமாக ஏற்பட்டிருக்கக் கூடிய அனுபவம் ஈழத்துத் தமிழ்ச் சூழலின் மட்டத்தை மீறி சிந்திக்கவும், பார்க்கவும் உதவியிருக்கிறது. ஆனால் தமிழ்ச் சூழலில் பெண்ணியச் சிந்தனையின் வளர்ச்சி மட்டம் இன்னமும் சமூகம், அரசியல், கலை பண்பாடு என்று அனைத்துத் தளங்களிலும் நியாயம் கோரும் மட்டத்திலேயே உள்ளது. எந்தத் தளத்திலும் ஆதிக்கம் செலுத்தும் அளவிற்கு அது வளர்ச்சி பெற்று விடவில்லை. ஆகவேதான் அங்கு பெண் எழுத்துக்கள் சமூகத்தின் நெருக்கடிகளை, உடைவுகளை, போலிகளை, நியாயங்களைப் பற்றிப் பேசுகின்றன. கற்பகம் யசோதராவிடம் காணப்படும் அரசியல் தீவிரமானதும் நியாயமானதும் தான். அவரது உணர்வும் மொழியும் படிமங்களும் தீவிரமானதும் அதிர்வுகளை ஏற்படுத்தும் வீச்சைக் கொண்டதும் தான். தமிழ்க் கவிதைகளில் அதற்கென நிச்சயம் ஒரு இடம் உண்டு. ஆனால் யசோதரா வெளிப்படுத்தும் அரசியலின் சிந்தனை மட்டம் இன்னமும் எதிர்ப்புணர்வு என்ற மட்டத்தினைத் தாண்டி வெளிப்பட்டு விடவில்லை. வார்த்தைகளின் தீவிரமும் அது ஏற்படுத்தும் அதிர்வுகளும் பிரமிப்பை ஊட்டுகின்ற போதும் அரசியல் சிந்தனை மட்டம் அதே மட்டத்தில் தான் உள்ளது. பெண் அரசியலில் - பெண்மொழியில் மாலதி மைத்திரேயி சொல்லும்."ஆண்மைய மொழிக் கலாசாரத்தின் அகப்புற வெளிகளை மீறி மொழிக்குள் இயங்குவதன் மூலம் பெண்மொழியை உருவாக்கும்" செயலை அது இன்னமும் எட்டவில்லை. எட்டியதற்கான அடையாளங்களை இதுவரை கிடைத்த அவரது கவிதைகளில் காண முடியவில்லை.

ஆண்மைய கலாசாரத்திற்கு எதிரான போராட்டம், ஆண்மைய மொழிகளைப் பெண்கள் பயன்படுத்துவதோ அதன் மையச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உண்மையில், பெண்மொழி, பெண் கவிதை என்பனவற்றின் வரவு குறித்தும் அவற்றின் தாக்கம் குறித்தும் பெண்ணிய சிந்தனை குறித்த வரலாற்று ரீதியான ஒரு புரிதலுடன் அல்லாமல் அங்கொன்று இங்கொன்றாக ஒரு சில கவிதை வரிகளை பிய்த்தெடுத்து விமர்சனம் செய்து விட முடியாது. ஆயுதப் போராட்டம் ஆரம்பமான காலத்தில், ஆண்களுக்குத் தாதியாகவும், தையல்காரர்களாகவும பெண்கள் உள்வாங்கப்பட்ட நிலைமாறி களத்தில் நின்று போராடும் போராளிகளாக அவர்கள் உள்வாங்கப்பட்ட மாறுதல் நடைபெற்ற வரலாறும் ஈழத்துப் பெண்ணிய சிந்தனையின் வரலாறும் சமாந்தரமாக வளர்ந்து வந்தவையே. இவையிரண்டும் ஒன்றையொன்று பாதித்ததன் வெளிப்பாடே கவிதைகளில் ஏற்பட்ட சிந்தனை, மொழி என்பவற்றின் மாற்றங்களும் கூட. இன்று எழுதுகின்ற அனைத்துப் பெண் கவிஞர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல.**

சிந்தனையைப் பெண்களும் உள்வாங்கிக் கொண்டு அதனைப் பெண்மையச் சிந்தனையாக உருவாக்கிக் கொண்டு மறு வார்ப்புச் செய்வதோ அல்ல. அல்லது தீவிர ஆண் எதிர்ப்போ அல்ல. அது பெண் அரசியலாக இருக்க முடியாது. இவையெல்லாம் பெண் நிலை அரசியலுக்கான பிரக்ஞையுடன் கூடிய ஒரு மாற்றத்தை நோக்கிய தன்வயமான வெவ்வேறு மட்டங்களிலான போராட்டங்களே. யசோதராவிடம் மட்டுமல்ல மித்ராவிடம் கூட இந்த மாற்றுச் சிந்தனை இன்னமும் முழுமை பெற்று விடவில்லை. இது தவிர்க்க முடியாததும் கூட. பெண்மைய மொழியின் வெளி பற்றிய பிரக்ஞையுடனான -மாலதி சொல்வது போல -அதிகமதிகம் படைப்புகள் உருவாகும் போது தான் அது சாத்தியம். ஆனால் பெண்கவிதை, பெண்ணியம், பெண்அரசியல், பெண்மொழி போன்ற விடயங்கள் விவாதிக்கப்படுவதே இந்தப் போக்கினைச் சென்றடைவதற்கான ஒரு இயக்கப் போக்குத்தான் என்பதை மறுப்பதற்கில்லை.

மித்ராவின் விமர்சனம், கவிதைகளை ஆய்வு செய்த விதத்தில் இந்த இயக்கப் போக்கிற்குப் பங்களிப்புச் செய்ததாகத் தெரியவில்லை. அது இப்போக்குக்குப் பங்களிப்புச் செய்த, இப்பங்களிப்புக்குக் காரணமாக உருவாகி இன்று வளர்ந்து வரும் பெண் கவிஞர்களுக்கு அச்சமூட்டுமொன்றாக அமைந்திருக்கிறதே தவிர வழி காட்டுவதாக அமையவில்லை. புலம்பல், அரசியல் குறுக்கம், போலித்தனம் என்ற "அளவு கோல்களால்" கவிஞர்களை எடைபோடும் மித்ரா அதே அளவு கோல்களை யசோதராவிடம் பயன்படுத்தவில்லை. தவிரவும், இந்த அளவுகோல்களினால் ஒதுக்கப்பட்ட கவிஞர்களின் பிரதிகளை எமது சூழலில் வாழும் பெண்களின் நிலைசார்ந்த வெளிப்பாடுகளாக அவரால் அடையாளம் காணவும் முடியவில்லை. இவை பெரும் ஆச்சரியம்தான். "கழிவிரக்கத்தையும், கையாலாகாத்தனத்தையும் இன்னும் என்னென்னவோ அந்தரமிக்க உணர்வுகளையும் தொற்றச் செய்தல்" காரணமாக மித்ராவின் மதிப்பில் உயர்ந்து விடும் யசோதராவின் சிறப்பாக "எல்லாவற்றையும் புறக்கணித்து" இயங்குதலை அடையாளம் காண்கிறார் அவர். ஆனால் அவர் காணத்தவறியது என்னவென்றால் யசோதரா உள்ளிட்ட இவர் ஒதுக்கிய எல்லாக் கவிஞர்களிடமும் அடிநாதமாக இருக்கும் எதிர்ப்புணர்வு கவிஞர்கள் ஒவ்வொருவரையும் பொறுத்து வெவ்வேறு வடிவில் வெளிவந்திருக்கிறது என்பதுதான்.

கலாவின் கோணேஸ்வரிகள் வெறும் அரசியல் குறுக்கம் என்றால் (அரசியல் குறுக்கம் என்பதை எப்படிப் புரிந்து கொள்வது? அரசியலுக்குள் குறுக்கி விடுவதாகவா, குறுகிய அரசியலை வெளிப்படுத்துவதாகவா? இவை இரண்டும் கோணேஸ்வரிகள் கவிதைக்குப் பொருத்தமானவை தானா?), யசோதராவின் ஐக்கிய அமெரிக்க இராணுவம் X ஐ.நா. அறிக்கைக்கும் அவரது மதிப்பீடு அவ்வாறு தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் ஆச்சரியப்படும் விதத்தில் "எழுதும் பெண்களுக்கு முதலாவது தணிக்கையாளனாய் இருக்கும் (கவனிக்கவும்: தணிக்கையாளனாய்!) இந்தப் பொறுப்புணர்வில் இருந்து (என்ன அறம் அது?) விடுபட்டு ஆண் அரசியல் மீது விமர்சனம் செய்கிறார் யசோதரா என்று எழுதுகிறார் மித்ரா. தவிரவும் கழிவிரக்கமும், கையாலாகாத்தனமும், இன்னும் என்னென்னவோ அந்தரமிக்க உணர்வுகளையும் (என்ன உணர்வுகள் அவை, மித்ராவுக்கே தெரியாத உணர்வுகள்?) முதன் முறையாக யசோதரா வெளிப்படுத்துவது என்று கூறி மேற்கோள் காட்டும் "யுத்தத்தை நிறுத்தியிருந்த போது" கவிதை அவரது நியாயங்களை நியாயப்படுத்துகிறதா என்பதை அவரே இன்னொருமுறை படித்துப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். அவரிடம் மேலோங்கி இருக்கும் தீவிர எதிர்ப்புணர்வு அரசியல் அர்த்தத்தில் நியாயத்திற்கான போர்க்குரல், தீவிரவாத (radical) இயல்புடைய போர்க்குரல். ஆனால் தீவிரவாதம் (radicalism) ஒரு போர்க்குணாம்சம் மட்டுமே. அது அரசியல் வழிக்கான சிந்தனையின் வெளிப்பாடாக எப்போதும் இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. இல்லாமலும் இருக்கலாம். அது ஒருவர் கவிஞராக இருப்பதற்கான முன்நிபந்தனையும் அல்ல. யசோதரா தனக்கேயுரிய தனித்துவங்களைக் கொண்ட ஒரு கவிஞராக இருக்கிறார். மித்ரா அதற்கும் மேலாக கற்பிதம் செய்து கொள்வது ஈழப் பெண்கள் கவிதைக்கு ஊறு செய்யாதவரை ஆட்சேபத்திற்கு உரியதல்ல. பெண்ணியாவின் பிரகடனங்கள் 80களுக்குரியவை, வழக்கொழிந்து போனவை என்று ஒதுக்கும் மித்ரா (போகிற போக்கில், அவற்றுட் சிலவற்றுக்கு வலிமை இருப்பதாக அவர் சொல்ல மறக்கவில்லை!) எந்த உலகில் வாழ்கிறார் என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

இப்பிரகடனங்கள் 2001 இலும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானவைதான் என்பதை பெண்ணியாவின் அவர் மேற்கோள் காட்டிய வரிகளே உணர்த்துகின்றன. *"என் சிறகுகள் மீது நீளும் எல்லா கைகளுக்கு எதிராகவும், என் கனவுகள் மீது கொடூரங்கள் வரைய நீளும் எல்லாத் தூரிகைகட்கு எதிராகவும், என் பயணம் ஆரம்பித்தாயிற்று"* என்பதை 80களுக்கு உரியதாக அவர் குறிப்பிடுவதாக இருந்தால், இன்று அவை வழக்கொழிந்தவை என்று அவர் குறிப்பிடுவதாகக் கொள்வதா? அப்படியானால் பெண்கள் மீதான ஆண் ஆதிக்க அரசியல் இல்லாமல் ஆகிவிட்டது என்று அவர் சொல்வதாக அர்த்தம் கொள்வதா? அப்படியானால், "ஆண் உலகின் வன்முறை மீது வெறுப்பை உமிழும்" யசோதராவின் வரிகளை மித்ரா சிலாகிப்பதை எப்படி விளங்கிக் கொள்வது?

உண்மையில், பெண்மொழி, பெண் கவிதை என்பனவற்றின் வரவு குறித்தும் அவற்றின் தாக்கம் குறித்தும் பெண்ணிய சிந்தனை குறித்த வரலாற்று ரீதியான ஒரு புரிதலுடன் அல்லாமல் அங்கொன்று இங்கொன்றாக ஒரு சில கவிதை வரிகளை பிய்த்தெடுத்து விமர்சனம் செய்து விட முடியாது. ஆயுதப் போராட்டம் ஆரம்பமான காலத்தில், ஆண்களுக்குத் தாதியாகவும், தையல்காரர்களாகவும் பெண்கள் உள்வாங்கப்பட்ட நிலைமாறி களத்தில் நின்று போராடும் போராளிகளாக அவர்கள் உள்வாங்கப்பட்ட மாறுதல் நடைபெற்ற வரலாறும் ஈழத்துப் பெண்ணிய சிந்தனையின் வரலாறும் சமாந்தரமாக வளர்ந்து வந்தவையே. இவையிரண்டும் ஒன்றையொன்று பாதித்ததன் வெளிப்பாடே கவிதைகளில் ஏற்பட்ட சிந்தனை, மொழி என்பவற்றின் மாற்றங்களும் கூட. இன்று எழுதுகின்ற அனைத்துப் பெண் கவிஞர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. "நீரளவே தானா நீராம்பல்" என்ற கேள்வியை எழுப்பும் போது இந்த மூதுரை வெண்பாவின் (நீரளவே ஆகுமாம் நீராம்பல்) அடுத்த வரியையும் ஒருமுறை ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது. "தாம் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்பதே அந்த வரி.

பெண்ணியக் கல்வியின் வளர்ச்சி பெண் கவிஞர்கள் மத்தியில் ஆணாதிக்கத்தை முன்பை விடத் தெளிவாக இனங்காண உதவியிருக்கிறது என்பதையே மித்ராவின் பட்டியலில் உள்ள பெண்கவிகளின் வரிகளினூடு நாம் காணக் கிடைப்பதாகும். பெண்கள் 'தமக்கே ஆகிய' பெண்ணாக நிற்கும் பிரக்ஞையைப் பெற்று வருகிறார்கள் என்பதே இதன் அர்த்தம். எனவே எல்லாப் பெண் கவிஞர்களையும் அவர்கள் வாழும் சமூகச் சூழலில் அந்த சமூகத்தின் சிந்தனை மட்டத்திற்கு மேலாக நின்று ஆணாதிக்கத்திற்கு எதிராக அவர்கள் குரலெழுப்பியுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ள அதிக தத்துவார்த்த அறிவு தேவையில்லை. கவிதைகளை திறந்த மனதுடன் உள்வாங்கிக் கொள்கிற பண்பிருந்தால் போதும். பெண்களிடம் பொய்மை, போலி, குறுக்கம், புலம்பல், என்று எது இருந்தாலும் அது எமது சமூகச் சூழலின் நிலையாலேயே ஒழிய பெருமளவுக்கு அவர்களது தனிப்பட்ட குணாதிசயங்களால் அல்ல. அவை எல்லாச் சமூகங்களிலும் வெவ்வேறு காலகட்டங்களில் தவிர்க்க முடியாத நிலைகளாக இருந்து தான் இருக்கின்றன. அவற்றைக் கடந்து தான் உலகப் பெண்கள் இன்று முன்னேறியுள்ளார்கள். தமிழ் திரைப்படத்தில் தாலியைக் கழற்றி வீசுவதென்பது ஒரு புரட்சியாக உணரப்பட்டதற்குக் காரணம் அப்படம் வந்த காலகட்டம் என்பதைத்தவிர வேறல்ல. அது இன்றைக்கு புரட்சி அல்லவென்றாலுங்கூட அந்தச் செயலுக்குப் பின்னாலுள்ள உணர்வு ஒன்று தான். ஆணாதிக்க அரசியல், பண்பாட்டின் மீதான எதிர்ப்புணர்வு, பெண்ணியச் சிந்தனை, பெண்மொழி, பெண் அரசியல் என்பனவெல்லாம் 2001ஆம் ஆண்டின் அர்த்தத்தில் பார்த்தால் பாரதியும், வள்ளுவனும் கூட பிற்போக்கு ஆணாதிக்க வெறியர்கள் தான்.



**பெண்ணியக் கல்வியின் வளர்ச்சி பெண் கவிஞர்கள் மத்தியில் ஆணாதிக்கத்தை முன்பை விடத் தெளிவாக இனங்காண உதவியிருக்கிறது என்பதையே மித்ராவின் பட்டியலில் உள்ள பெண்கவிகளின் வரிகளினூடு நாம் காணக் கிடைப்பதாகும். பெண்கள் தமக்கே ஆகிய பெண்ணாக நிற்கும் பிரக்ஞையைப் பெற்று வருகிறார்கள் என்பதே இதன் அர்த்தம். எனவே எல்லாப் பெண் கவிஞர்களையும் அவர்கள் வாழும் சமூகச் சூழலில் அந்த சமூகத்தின் சிந்தனை மட்டத்திற்கு மேலாக நின்று ஆணாதிக்கத்திற்கு எதிராக அவர்கள் குரலெழுப்பியுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ள அதிக தத்துவார்த்த அறிவு தேவையில்லை. கவிதைகளை திறந்த மனதுடன் உள்வாங்கிக் கொள்கிற பண்பிருந்தால் போதும்.**

பெண் கவிஞர்களை விட்டு விடுங்கள் ஆண் கவிஞர்களிடம் புலம்பலும், சமரசமும், போலித்தனமும் இருக்கவில்லையா? கவிதைப் பிரதியின் பின்னாலுள்ள கவிஞர் எந்தச் சூழலில் எந்தக் குளத்தில் எந்த நீர்மட்டத்திலிருந்த நீராம்பலாக நின்று எப்படிக் குரல் கொடுத்திருக்கிறார் என்று பார்க்காது விமர்சனம் செய்ய முனைந்தால் உலகத்தில் புரட்சிக் கவிஞர்கள் என்று சொல்ல யாரும் இருக்க முடியாது. அந்த வரிசைக்குள் பாரதியோ, பாப்லோ நெரூடாவோ கூட வர முடியாது.
மித்ராவின் பார்வையின் அடிப்படையில் உள்ள தவறு அவர் உணர்வின் தீவிரத்தன்மையால் எழும் வார்த்தைகளை அடிப்படையாக வைத்து அரசியலை மதிப்பிட முனைவது என்று குறிப்பிட்டேன். கூரிய அரசியல் சிந்தனை கூரிய உணர்வையும் வார்த்தைகளையும் தர முடியும். ஆனால் அதிர்ச்சி ஊட்டுகிற வார்த்தைப் பிரயோகம் உணர்வின் கூர்மையை மட்டுமே வெளிப்படுத்துவதாக அமைய முடியும். சிந்தனை மட்டம் மேலோட்டமாக இருந்தாலும் கூட. உயர்மட்ட அரசியல் சிந்தனை, உணர்வு இரண்டும் இணைந்த நிலையில் வெளிப்படும் கூர்மையான மொழி உயர் மட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதை மித்ரா கவனத்தில் எடுப்பது பயன்தரும். அல்லாவிடில் பின்வரும் தவறுகளிலிருந்து அவர் விடுபடமுடியுமென்று தோன்றவில்லை.
"ஆயினும் 'பெண் எழுத்து' என்ற வகைமையினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில், ஈழத்துப் பெண்கவிதையின் போதாமைகள் இலகுவில் புலப்படும்."
இந்தப் போதாமைகள் குறித்த விமர்சனங்களில் 'முன்னுரிமையும் முற்சாய்வும் ஏற்பட்டு விடுகிறது'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார் மித்ரா. போதாமைகள் மொழி சார்ந்தவை அல்ல, சிந்தனை சார்ந்தவை என்று அவர் சரியாகவே இனங்காண்கிறார். அதனால் தான், "விமர்சனம் என்பது மிஞ்சிப் போனால் கவிதையியல், மொழிப் பிரயோகம் சார்ந்ததாக தன்னை மட்டிறுத்திக் கொள்கிறது. இவற்றையொட்டியே சி.சிவசேகரத்தின் ஏற்பும், மறுப்பும் அமைந்து விடுதலை துல்லியமாகக் காண முடியும். குறித்த கவிதைப் பிரதிகள் கோரி நின்ற அரசியல் வாசிப்புகளை சிவசேகரமோ அல்லது தாமும் கதைத்ததாய் நினைப்பவர்களோ செய்யவில்லை." என்றும் கூறுகிறார். (இந்தத் 'தாமும் கதைத்ததாய் நினைப்பவர்கள்' யாரென்று மித்ரா சொல்லவில்லை. நினைப்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் மித்திராவுக்கு இருப்பது நல்ல ஒரு விடயம் தான். ஆனால் அந்த ஆற்றல் இல்லாத எம்போன்ற மற்றவர்களுக்காகவாவது அவர் இதை யார் யாரென்று சொல்லியிருக்கலாம்) ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் இப்படிச் சொன்ன மித்ரா, தான் செய்யும் அரசியல் வாசிப்பில் கண்டதை, அரசியல் அல்ல என்று ஒதுக்கிவிடுவது தான். "ஈழத்துப் பெண் கவிதைகளில் சிறப்பாகக் குறித்துச் சொல்லப்பட வேண்டியது ஆயுத வன்முறைக்கெதிராக அக்கவிதைகளில் எழுந்து கொண்டே இருக்கும் ஈனக் குரலிலான எதிர்ப்பும் மறுப்பும் தான்." என்றும், "கலா அரசியல் சரிபிழைகளுக்குள் குறுகி நின்று விட" என்றும், "தமது எழுத்துக்கள் உருவாக்க வேண்டிய இந்த அரசியல் போர்க்குணத்தை அதன் வரலாற்று நிர்ப்பந்தத்தை ஆழமாக பல ஈழப் பெண்கள் உணரவில்லை. உணர்ந்த ஒரு சிலர் ஆண் எதிர்ப்புப் பிரகடனங்கள், அறிவுரைகள், துறவு என முடங்குகின்றனர். உணர்ந்தவர்களில் வேறுசிலர் அந்த அரசியலுக்கு முரணாகவும் இயங்குவதைக் காணலாம்" என்றும், "புலம்பலும் சபித்தலும், திட்டலும் பிறிதொரு சமயம் சமரசம் செய்தலுமாய் இவர்களது கவிதைப் பரப்பு நிரம்புகிறது. தொகுத்துப் பார்த்தால் இந்தப் பெண் கவிகள் சாடலும், ஊடலும், கூடலுமாய் கணவன் காலடியில் கிடக்கும் தமிழ்ப் பொண்டாட்டி வகைமாதிரிகளே தவிர வேறில்லை." என்றும் ஒதுக்கி விடுகிறார்.

சமூக அரசியல் பற்றிய பிரக்ஞையும் சரி, பெண் அரசியல் பற்றிய பிரக்ஞையும் சரி ஈழத்து இலக்கியத்தில் வெளிப்படும் அளவு என்பது ஈழத்து அரசியல் சிந்தனையின் மட்டத்தைத் தாண்டி விடவில்லை. தத்துவார்த்தத் தளத்தில் நிலவும் தேக்கம் அனைத்துப் படைப்பாளிகளையும் பாதிக்கிறது. ஆனால் அதற்காக பெண்களிடம் வெளிப்படும் எதிர்ப்பு உணர்வுக்கு அரசியல் கிடையாது என்றில்லை. அந்த அரசியல் பெண்நிலை அரசியல் அல்ல என்று குறிப்பிட்டுவிட முடியாது. பெண்நிலை அரசியலின் பல்வேறு மட்ட பரிமாணங்களைத்தான் நாம் அவற்றில் காண்கிறோம். கணவனின் காலடியில் கிடத்தல் என்பதோ சாடல் ஊடல் காதல் என்ற எவையுமோ அவற்றின் சந்தர்ப்பம் தெரியாமல் நிராகரிக்கப்படக் கூடியவை அல்ல. ஆண் ஆதிக்கத்துடனான முரண்பாட்டிற்கான தீர்வு பற்றி சிந்தித்த பல பெண்நிலையாளர்கள் அது பற்றிய தத்தமது கருத்துநிலைக்கேற்ப பல்வேறு வழிகளைப் பிரேரித்திருக்கின்றனர். மணம் முடித்தலுக்குப் பதிலாக, சேர்ந்து வாழல் முதல் லெஸ்பியனிசம் வரை பல்வேறு மாற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஈழத்துக் கவிதைகளிலும் பல்வேறு மாற்றுச் சிந்தனைகள் வெவ்வேறு அளவுகளில் வெளிப்பட்டிருக்கின்றன. காதலுக்கும் ஊடலுக்கும் ஏன் கூடலுக்கும் கூட அரசியல் இருப்பதை பெண்கவிதைகள் வெளிப்படுத்தியிருக்கின்றன. அவை கோரி நிற்கும் அரசியல் வாசிப்பு உண்மையில் அதுதான். தூக்கி எறியப்பட முடியாத கேள்வியாய் உங்கள் முன் நிற்கும் பெண்ணை, அவளது அரசியலை விளங்கிக் கொள்ளுங்கள் என்பதைத் தான் அவை கோரி நிற்கின்றன. தீவிரவாத பெண்ணிலைவாதம் ஆண்களை எதிப்பதும், கணவன் காலடியில் கிடக்கும் பெண்ணின் அதிகாரத்திற்கெதிரான ஓலமும் இலக்கியப் படைப்பில் ஒரே தளத்தில் இயங்க முடியும். இவற்றின் தத்துவார்த்த அரசியல்தளம் ஒன்றாகவே இருக்கமுடியும் / இருக்கிறது. புதியதோர் மாற்றுவழியை, மானிடவாழ்வை மேம்பாடான நிலைக்குத் தள்ளுகிற வழியை மனித சமூகம் கண்டடைகிறவரை இந்நிலை நீடிக்கத்தான் போகிறது. அதுவரையான படைப்பாளிகளின் பங்களிப்பெல்லாம் எல்லா மட்டங்களிலும் இருக்கத்தான் செய்யும். இதைப் புரியாதவரை மித்ரா விடுவது போன்ற தவறுகள் தொடரவே செய்யும்.




**ஒரு நல்ல விமர்சனம் வெறுமனே ஒரு கருத்துநிலையை அடிப்படையாகக் கொண்டு விடுவதால் மட்டும் செய்துவிடக் கூடியதல்ல. அந்தக் கருத்து நிலையின் அடிப்படையில் படைப்புகளை கணிப்பிடுவதற்காக ஆய்ந்தறியும் பொறுமையும், அந்தக் கருத்துநிலை நோக்கி படைப்பாளிகளை வழிநடாத்துகின்ற அக்கறையான நோக்கமும் இருக்க வேண்டும். கோட்பாட்டடிப்படை படைப்புகளை ஆய்ந்தறிவதற்கு ஒரு விமர்சகருக்கு வழிகாட்டும் சாதனமாக அமைய வேண்டுமே அன்றி, விமர்சகரின் எடுகோள்களை நியாயப்படுத்தும் சாதனமாகப் பயன்படுத்தப்படக்கூடாது. அது அறிவுத்துறை அறமும் அல்ல.**

பின்நவீனத்துவம் ஏற்படுத்திய அதிர்வுகள் வரலாற்றில் மிகவும் முக்கியமானவை. சிந்தனைத் தளத்தில் அது ஏற்படுத்திய கேள்விகள் மாபெரும் உடைவுகளுக்கு வழிவகுத்தன. அந்த உடைவுகள், கேள்விகளுக்கும் மாற்றத்திற்குமான பங்களிப்பை மேற்கொண்டிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதன் சாதனையும், பணியும் அந்தளவு தான். மாற்றத்திற்கு வழிகாட்டும் ஒரு தத்துவப் போக்காக அது இன்னமும் உருப் பெற்றுவிடவில்லை. ஆக, இந்தச் சிந்தனையால் வரலாற்றுப் போக்கினை வழிகாட்டிவிட முடியாது. பெண்மொழிக்கும் சரி, பெண் அரசியலுக்கும் சரி அது வழிகாட்டும் தத்துவமாக அமைந்து விடப் போவதில்லை.
மார்க்ஸ் சொன்ன வரிகள் இன்றும் பொருந்துகின்றன. "தேவை உலகை விளக்கும் தத்துவமல்ல, அதனை மாற்றியமைக்கும் ஒன்றுதான்." மித்ராவின் விமர்சனம் பயன்மிக்க ஒன்றாக Constuctiveவாக அமைய வேண்டும் என்பது எமது அவா. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சவால்களை எதிர்கொள்வதற்கு நிகராக இல்லை

சிவமோகன் சுமதி

1990 களின் ஆரம்பகால கட்டத்தில் சரிநிகர் வெளிவந்த காலத்தில் நான் அதனை வாசிப்பதுண்டு-பல ஆண்டுகளாக பல சமயங்களில் ஒரு தனித்த குரலாக சிங்கள பேரினவாதத்தை எதிர்த்து நிற்கும் குரலாக அமைந்த MIRJEஇன், தமிழ் மொழி ஊடகமாக சரிநிகர் அமைந்திருந்ததாலும் சிங்கள மக்கள் மத்தியில் MIRJEஇன் யுக்திய என்ற மாத சஞ்சிகை என்ன பணியை செய்ததோ, அதனை சரிநிகர் தமிழ் பேசும் மக்களின் மத்தியில் செய்யும் என்ற நம்பிக்கையின் பேரிலும் தான். தமிழில் வெளிவரும் தொடர்பு ஊடக சாதனங்கள் ஒரு வித விமர்சன பார்வையும் அற்று, காலத்தின் போக்கோடு அள்ளுப்பட்டுப் போகும் நிலையில் உள்ளபோது சரிநிகர், அரசியல், கலாசாரம், பொருளாதாரம் போன்றவற்றில் ஒரு மாற்று அல்லது விமர்சன அணுகுமுறையை உண்டு பண்ணும் களமாக அமையும் என்றும் நம்பினேன். அத்துடன் ஆரோக்கியமான ஒரு கேள்வி எழுப்பும் சக்தி வாய்ந்த குழுக்களை தனது தளத்தினூடாகக் கட்டியெழுப்பும் என்றும் எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் அப்படி நான் வேண்டியது நடைபெறவில்லை. அரசியல் தளத்தில் முஸ்லிம் சமூகம் அனுபவித்த அல்லது எதிர்கொள்ளும் புறக்கணிப்புகள் சிலவற்றைப் பற்றிய சில கட்டுரைகளையும் பெண்நிலைவாதப் போக்குகளைப் பற்றிய சில கட்டுரைகளையும் பிரசுரித்து ஒரு பரவலான பல்லின சமூக நோக்கைத் தாம் கொண்டுள்ளோம் என்ற போர்வையை போர்த்திக் கொண்டு செயற்பட்டாலும், அடிப்படையில் மத்தியதரவர்க்கங்களின் தேசியவாத உணர்ச்சிகளுக்கு ஒரு விமர்சனமற்ற குரல் கொடுக்கும் தளமாக. களமாகவே அது அமைந்தது. நான் எனது நிலைப்பாட்டை மேலும் விளக்கிக் கூற வேண்டும். ஒரு பழமை தோய்ந்த தேசிய வாதத்தை recycle பண்ணும் ஊடகமாகவே சரிநிகர் திகழ்ந்தது. மெல்லத் தமிழினி என்ற column இதற்கு நல்லதொரு உதாரணமாகும்.

அண்மையில் சரிநிகர் திரும்பவும் பிரசுரிக்கப்படப் போகின்றது என அறிந்த போது நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். இன்றைய சந்தர்ப்ப சூழ்நிலையில் கடந்த பல ஆண்டுகளில் ஏற்பட்ட பல்கோண அனுபவங்களின் பிரதிபலிப்புகளின் பின்னர், அவற்றைக் கருத்தினில் கொண்டு, முக்கியமாக பல்வேறுபட்ட பிளவுகள், தாக்கங்கள், எழுச்சிகள் ஆகியன பற்றிய புதிய கண்ணோட்டங்களை கருத்தினில் கொண்டு, சரிநிகர் ஒரு புதிய திசையில் செல்லலாம் என நினைத்தேன். இப் புதிய கண்ணோட்டங்கள் அரச பலத்துக்கும், மற்றும் வேறு ஆதிக்கங்களுக்கும் எதிரான போராட்டங்களைப் பற்றிய ஒரு கூரிய, ஆழமான, கருத்து ரீதியான பார்வையை முன்வைக்க உதவும் என நம்பினேன்.

ஆனால் சரிநிகரின் முதலிரண்டு இதழ்களையும் பார்க்கும் போது, அதற்கு இவ்வாறான காலத்துக்கு வேண்டிய சவாலை எதிர்கொள்ளும் சக்தியும் ஆற்றலும் இல்லையென்றே தெளிவாகின்றது. இவ்விதழ்களில் வெளிவந்த அரசியல் கட்டுரைகளை எடுத்துப் பார்த்தால் இது தெட்டத் தெளிவாக விளங்கும்.
அன்றும் இன்றும் எமது சமூகங்கள் எதிர்நோக்கும் பெரியதொரு சவால் எமது அரசியல் மற்றும் சிவில் சமூகங்களை ஜனநாயகமயமாக்குவதுதான். இது ஒரு பிரத்தியேகமான தேவையல்ல. இன்று எமது சமூகங்கள், முக்கியமாக தமிழ் சமூகம், ஒரு ஜனநாயக அரசியல் தளமற்று நிற்கின்றது. வடக்கு கிழக்கில் உள்ள எல்லா சமூகங்களையும் எடுத்துக் கொள்வோமாயின் போரினாலும், அரசின் அராஜகச் செயல்களினாலும், ஆயுத குழுக்களின் அத்துமீறிய அடாவடித்தனங்களாலும், அதற்கு மேலாக சமூகங்களை அழிக்கும் முயறச்சிகளாலும் அவர்கள் ஒரு முற்றுகைக்குள்ளாகியிருக்கிறார்கள். இத்தருணத்தில் இனப்பிரச்சினையை மையமாக வைத்து வெளிவரும் ஒரு சஞ்சிகை, எமது சமூகங்கள் மத்தியில் கருத்துப் பரிமாறல் செய்யக்கூடிய, சிந்தனையைத் தூண்டி, காலத்துக்கு வேண்டிய அவசியமான கேள்விகளுக்கும் விடைகளுக்கும் இட்டுச் செல்லுகின்ற உரையாடல்களை உண்டுபண்ணுவது ஒரு அதிமுக்கியமான தேவையாகும்.

இன்று முஸ்லிம், தமிழ் அரசியல் சமூகங்கள் அதிகாரப்பரவலாக்கம், சுயாட்சி, சுயநிர்ணயம், பாதுகாப்பு, நிலம். மதம், மொழி, பாலியல்கள், சாதிகள், குடியேற்றம் என பல்வேறுபட்ட அரசியல் உரிமைகளுக்காகப் போராடுகையில் இவையெல்லாவற்றையும் ஒருங்கிணைக்கும் ஒரு அடிப்படை வேண்டுகோளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு விடிவற்ற தமிழ் தேசியவாதத்தின் சுவாலைகளை வளர்த்துவிட்டு, அவை பலதரப்பட்ட மக்களிடையில் தணிந்து போய்க் கொண்டிருக்கும் இத் தருணத்தில், அவற்றுக்குக் கஷ்டப்பட்டு உயிர் கொடுக்கும் பணியில் சரிநிகர் தன்னை ஈடுபடுத்தியுள்ளது என்பதைத்தான் விமர்சிக்கின்றேன்.**

ஜனநாயகமயமாக்குதல் (democratization) என்ற செயல்பாடு விளங்குகின்றது. இதனை சரிநிகர் செய்யத் தவறியுள்ளது. ஒரு சஞ்சிகையோ அல்லது வேறெந்த பிரசுரமோ இப்படித்தான் இருக்க வேண்டுமென்று நான் prescription எழுத வரவில்லை. ஆனால் ஒரு சஞ்சிகையின் அரசியல் போக்குகளை ஆராய்வதன் மூலம் அது யாருடைய நலன்களை கருத்தில் கொண்டிருக்கிறது என்றும், அதன் மூலம் வேறு எந்த நலன்களையும், குழுக்களையும் புறக்கணிக்கின்றது எனவும் ஆராய்வதற்கான ஒரு அரசியல் பார்வையை முன்வைக்க எத்தனிக்கின்றேன். அதனூடாக நீண்டகாலப் போக்கில், ஒரு சரித்திரக் கண்ணோட்டத்தில் சரிநிகரின் ஸ்தானமும் அருகதையும் எவ்வாறு அமையும் எனவும் ஆராயவே இக் கருத்துக்களை முன் வைக்கிறேன்.

சரிநிகரின் முதலிரண்டு இதழ்களிலும் கட்டுரைக்கு மேலாக கட்டுரையில் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளை எதிர்த்து நிற்கும் பார்வை வெளிவருகின்றது. இலங்கை அரசின் பேரினவாத அல்லது மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு கண்டனம் தெரிவிப்பது அல்லது அவற்றை விமர்சனத்துக்கு உட்படுத்துவது பற்றி எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் அவ்வாறு செய்யும் போது ஒரு கருத்து ரீதியான தளத்தில் இருந்து கொண்டு, தமது நிலைப்பாட்டைக் கொள்கை ரீதியாக (theoretical) தெரியப்படுத்தி அளித்தால், சரிநிகரின் அரசியல் இன்று நாம் எதிர்கொள்ளும் இக்கட்டான நிலையை ஆராய்வதற்கு வழிகோலும். ஆனால் நடப்பது என்னவெனில், சரிநிகரின் கண்ணோட்டம், வெறுமனே ஜனரஞ்சகமான ஒரு கிளுகிளுப்பை ஊட்டும் எழுத்தாகவே அமைகின்றது. உண்மையில் ஜனரஞ்சகம் என்பதற்கும் கூட நான் எதிர்ப்பு இல்லை. நான் எதைக் கண்டிக்கிறேன் என்றால், ஒரு விடிவற்ற தமிழ் தேசியவாதத்தின் சுவாலைகளை வளர்த்துவிட்டு, அவை பலதரப்பட்ட மக்களிடையில் தணிந்து போய்க் கொண்டிருக்கும் இத் தருணத்தில், அவற்றுக்குக் கஷ்டப்பட்டு உயிர் கொடுக்கும் பணியில் சரிநிகர் தன்னை ஈடுபடுத்தியுள்ளது என்பதைத்தான் விமர்சிக்கின்றேன். உதாரணங்களுடன் பேசினால் எனது நிலைப்பாடு தெளிவாகும் என நம்புகிறேன். இரண்டு இதழ்களிலும் வெளிவந்துள்ள அரசியல் கட்டுரைகள், tabloidகள் பரவலாக்கி, பிரபல்யமாக்கிய அரசியல் துணுக்குகளாகவும், commentaryகளாகவும் தான் இருக்கின்றன. ஒரு நல்ல காத்திரமான கட்டுரை சுமனசிறி லியனகே எழுதிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமாக முன்வைத்த பிரேரணைகளைப் பற்றியது. ஆனால் இக்கட்டுரை லியனகே, பல ஆண்டுகாலமாக தெற்கில் உள்ள ஆங்கிலம், சிங்களம் பேசும் மக்களின் மத்தியில் கையாண்டுள்ள உரையாடல்களின் ஒரு சிறிய அம்சமாகும். அவர் தெற்கில், உள்ள சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள பேரினவாதத்தினை எதிர்த்து நீண்ட காலமாகப் போராடி வருகின்றார். அதனால் அந்தக் கட்டுரை தமிழில் தமிழ் பேசும் மக்களிடையே எந்தவொரு பங்கையும் செலுத்தாது என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், இந்த இரண்டாவது இதழில் இலங்கை அரசியலைப் பற்றி இரண்டு முக்கிய மொழிபெயர்ப்பு கட்டுரைகளை வழங்கும் போது, அவை எழுந்த, எழுதப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளாவிடின், அவற்றின் முழுமையான தார்ப்பரியத்தையும் தமிழ் வாசகர்களுக்கு அளிக்கும் சந்தர்ப்பம் இல்லாது விடுகின்றது. அதாவது லியனகேயின் கட்டுரையின் கருத்துரீதியான தார்ப்பரியம் என்னவெனில், அது பேரினவாதத்துக்கு (சிங்கள பேரினவாதத்துக்கு மட்டுமல்ல) எதிரான ஒரு நிலைப்பாட்டிலிருந்து எழுதப்பட்டதாகும். சரிநிகரின் ஏனைய கட்டுரைகள் இந்த மாதிரியான சிந்தனைத் தூண்டலுக்கு இட்டுச் செல்லும் சூழலை உண்டாக்கித் தரவில்லை. சரிநிகரின் editorial கூட திரும்பத் திரும்ப பழையதையே சொல்லும் ஒரு கிளிப்பிள்ளை மாதிரி. இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்துக்கும் அதன் நடவடிக்கைகளை சரியென்று கூறுபவர்களுக்கும், சரிநிகருக்கும், அதன் ஆசிரியர் குழுவுக்கும் பெரிய வித்தியாசமில்லை. இரண்டும் தேசிய வாதங்களை நாடுகின்ற குழுக்களே. எல்லாக் கட்டுரைகளிலும் ஆகிலும் கேவலமானதாக உள்ளது, வேட்டு புலிக்கல்ல கிலிக்கு என்ற குறுங்கட்டுரை. புலிகளின் விமானத்தாக்குதலுக்கு இலங்கை படைகள் எவ்வாறு ஈடுகொடுத்தார்கள் என்று கிண்டல் செய்யும் பாணியில் எழுதுகையில் அக்கிண்டல் இலங்கை இராணுவத்தின் இராணுவ பலவீனத்தை கிண்டல் பண்ணுவதாக அமைகின்றதே ஒழிய எம்மத்தியில் ஊடுருவிக் காணப்படும் இராணுவ மயமாக்கலை கண்டிப்பதாயோ கிண்டல் பண்ணுவதாயோ இல்லை. நாசமறுப்பானின் 'பேரினவாதப் பேரவையின் வேள்வி', 'மோதுகையின் ஒரு பகுதியா' என்ற நிர்மானுசனின் கட்டுரை 'வரலாற்றின் முரண்கள்' என்ற திசநாயகத்தின் கட்டுரை என்பன ஒன்றும் முன்னேற்றம் உள்ளனவாகத் தெரியவில்லை. ஒரு தினசரிப் பத்திரிகையின் அரசியல் கொமெண்டரி தரத்தில் தான் அவற்றைக் கணக்கிடவேண்டும்.

ஒட்டுமொத்தமாக பார்க்கையில் சரிநிகர் இலங்கை தமிழர்களின் தேசியவாதத்தை மையப்படுத்தி வெளிவரும் பிரசுரமே என்று தெரியவருகின்றது. தமிழ் தேசியவாதத்தை மையப்படுத்த சரிநிகருக்கு உரிமை உண்டு என்று யாராவது வாதாடலாம். ஆனால் அந்த தேசியத்தின் புறக்கணிப்புகளைப் பற்றி நாம் இன்று கேள்வியெளுப்பாவிடின் நாம் எமது பணியைச் செய்யத் தவறியவர்களாவோம். ஆனால் சரிநிகர் இப்படித்தான் இருக்கும். இதற்குக் காரணம் வேறு எதுவுமில்லை, தமிழ் மக்களைச் சார்ந்த அரசியல் வரட்சியும், தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் அரசியற் செயற்பாடுகளுமே.

இது இவ்வாறிருக்க பெண் எழுத்தாளர்கள், முக்கியமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்களைப் பற்றிய ஒரு interesting ஆன கட்டுரை ஒன்றைப் படித்தேன். 'நீரளவே தானா நீராம்பல்' என்ற மித்ராவின் கட்டுரை. இந்தக் கட்டுரை பெண் எழுத்தாளர்களைப் பற்றிய சிந்தனைக்குரிய கருத்துக்களை முன்வைக்கிறது. அதே நேரத்தில் அக் கருத்துகள் ஊடாக ஒரு மேலாதிக்க, (ஆணாதிக்க) கருத்துகளும் வெளிவருகின்றன போலத் தெரிகின்றன. முதலில் இதனை வாசிக்கும் போது எனக்குக் கஷ்டமாக இருந்தது. இக்கஷ்டம் இதைப்பற்றிய சொல்லாடலில் என்னுடைய பரிச்சயமற்ற தன்மையினால் எழுந்தது என நான் முதலில் எண்ணினேன். திரும்பத் திரும்ப இரண்டு மூன்று தடவைகள் வாசிக்கும்போது தான் நான் எதிர்கொண்ட இடைஞ்சல்கள் கட்டுரையின் முரண்பாடுகளினாலும் ஒரு வித தெளிவின்மையினாலும் தோன்றியுள்ளன என்று விளங்கியது. பெண்கள், பெண்ணிலைவாதிகள், பெண்ணியக் கருத்துக்களை முன்வைப்பவர்கள் எவ்வாறு எழுத வேண்டும், கவிதை புனைய வேண்டும் என்று எவ்வளவு ஆணித்தரமாக சொல்கிறார் ஆசிரியர். இது எனக்குப் பெரும் புதிராக உள்ளது. கவிதைகளின் கருத்தியல்களைப் பற்றியும், அமைப்பியல்களைப் பற்றியும், அதன் பல்வேறுபட்ட அரசியல் சார்புகளைப் பற்றியும் ஒரு விமர்சனக் கண்ணோட்டத்தை வைத்துக் கொள்வது, அலசி ஆராய்வது ஆரோக்கியமான விமர்சனம். ஆனால் பெண்களோ, ஆண்களோ அல்லது வேறெந்த பாலையுஞ் சார்ந்தவர்களுமோ, குறிப்பிட்ட குணாதிசயங்களைத் தமது கவிதைகளிலோ, எழுத்துக்களிலோ அடக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறுவது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

இதில் பெண் எழுத்து, பெண்ணிய எழுத்து, பெண்ணிய மொழி என்றெல்லாம் ஒரு பெண்ணிய சாராம்சத்தை ('essentialism' என்ற ஆங்கிலப் பதத்துக்கு எனக்கு வேறொரு தமிழ் பதமும் கிடைக்கவில்லை) முதன்மைப் படுத்துவது பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகும். ஒரு பெண் இவ்வாறு தான் எழுத வேண்டும், பெண் மொழியினைக் கையாள வேண்டும் என்று கூறுவது, நான் ஒரு பெண் என்று தன்னை அடையாளப் படுத்திக் கொள்ளுபவளின் அகநிலை சார்ந்த இயங்குதல் சக்தியைப் (agency) புறக்கணித்து அப்பெண்ணின் மேல் செலுத்தும் ஒருவித (ஆண்) ஆதிக்கத்தின் சின்னமாகும்.

**மூன்றாம் உலக பெண்நிலைவாதத்தின் நிலையிலிருந்து அரசியலை அணுகும் பெண்நிலைவாதிகள் இப்பெண் மொழி என்ற கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். வெள்ளை நிற, மேல்வர்க்க, அமெரிக்க, ஐரோப்பிய பெண்களின் நிலைப்பாடுகளைச் சார்ந்தே பெண் மொழி உருவாகியுள்ளது என்று பலர், விமர்சனம் எழுதியிருந்தார்கள். பெண் மொழி என்று சொல்லும்போது எந்தப் பெண்ணின் மொழி எனக் கேட்க நேரிடுகின்றது.**

பெண் மொழி என்றால் என்ன? இன்று நாம் பெண்நிலைவாதங்கள், தளங்கள் என்று பன்மையில் பேசிக் கொண்டிருக்கும் போது, Post Feminism என்ற பெண்நிலைவாத நிலைப்பாட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது பெண் மொழி என்று ஒருமையில் ஒருவர் நிறைந்த தன்னம்பிக்கையுடன் பேசுவது சற்று ஆச்சரியமாக இருக்கிறது. பெண் மொழி வேண்டுமென்றால் எந்தப் பெண்ணின் மொழி என்ற கேள்வி உடனே எழும்புகின்றது. மாலதி மைத்திரி அவர்களின் எழுத்துக்களிலிருந்து எடுக்கப்பட்டு தரப்பட்ட குறிப்பை நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். அக்குறிப்பின்படி பெண்ணிய மொழியானது, ஆணாதிக்கத்திலிருந்து எழும் பெண்ணின் புறநிலைத்துவத்தை (objectification) எதிர்த்து ஒரு மாற்று மொழியை ஏற்படுத்திக் கொள்வதே பெண்ணிய மொழி என்று. பொதுவாகப் பார்க்கையில் இது ஒரு நம்பிக்கை ஊட்டும் கூற்றாக, கருத்தாக அமைகிறது. இக் கருத்தின் முழுத்தார்ப்பரியமும் அவர்களின் எழுத்துக்களை முழுமையாக அறிந்தால் தான் விளங்கும் என்று எண்ணுகிறேன். ஆனால் கட்டுரையாளர் மாலதி மைத்திரியைப் பயன்படுத்திய விதம் சிக்கலாக உள்ளது. பெண்களின் agency யைத் தாக்கும் வகையில் உள்ளது. Helene Cixous, Luce Irigaray போன்ற பிரெஞ்சு பெண்நிலைவாதிகள் ஒரு காலகட்டத்தில் பெண் மொழி பற்றிப் பேசினார்கள். அவற்றுக்கு வேறு பல பெண்நிலைவாதிகள், முக்கியமாக மூன்றாம் உலக பெண்நிலைவாதத்தின் நிலையிலிருந்து அரசியலை அணுகும் பெண்நிலைவாதிகள் இப்பெண் மொழி என்ற கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். வெள்ளை நிற, மேல்வர்க்க, அமெரிக்க, ஐரோப்பிய பெண்களின் நிலைப்பாடுகளைச் சார்ந்தே பெண் மொழி உருவாகியுள்ளது என்று பலர், அவர்களில் முக்கியமாக, காயத்திரி ஸ்பிவாக் (Gayathri Spivak) விமர்சனம் எழுதியிருந்தார்கள். பெண் மொழி என்று சொல்லும்போது எந்தப் பெண்ணின் மொழி எனக் கேட்க நேரிடுகின்றது. அதே நேரத்தில் கோட்பாடு ரீதியான கேள்விகள் எழும்புகின்றன. பெண் என்று நாம் குறிப்பிடும் உருவமே ஒரு கருத்தாக்கம் என்றால், ஒரு அடையாளம் என்றால் (construct of identity) பெண் மொழியும் ஒரு வித புனைதல் தான். அது ஆண்/பெண் என்ற கருத்து வித்தியாசத்தின் பேரில் கட்டியெழுப்பப்பட்ட நிலையாகும். இந்நிலைகள் சமூகத்தின் அரசியல், பொருளாதார நிலைகளுடன் சேர்ந்தவைகளாகும். இதன் அடிப்படையில் ஒரு பெண், பெண் மொழியை கையாள வேண்டுமென்று கூறுவது essentialism ஆகும். இதன் அடிப்படையில் தமிழன் இவ்வாறு எழுத வேண்டும், முஸ்லிம்கள் இப்படித்தான் எழுத வேண்டும் என்றும் கூறிடலாம். பெண்களின் யதார்த்தங்களும், அகநிலைகளும் அவற்றை எடுத்துக் கூறும் மொழிகளும் பலவிதமானவை. இவையெல்லாம் சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும், அரசியல் தளங்களையும் சார்ந்து வரும் எழுத்துக்களாகும், எழுச்சிகளாகும். சரிநிகரின் சினிமா கட்டுரைகளை எடுத்துக் கொண்டால், அவை வெறும் பொருளடக்கத்தைப் பற்றிய விமர்சனங்களாகவே இருக்கின்றன.

எவ்வாறாயினும், தற்கால அரசியல் ரீதியில், சரிநிகரின் அரசியல் கட்டுரைகளைப் பார்க்கையில், அது தற்கால சமூகங்கள் விடுத்துள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு நிகராக இல்லை என்றே தென்படுகின்றது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசேரா


# நிர்வாண ராச்சியம்

காடு பற்றியும், அதனுள் இருக்கும் மரங்களின் வகைகள், முதலில் தோன்றிய மரவகை, அது நட்டு உண்டாக்கப்பட்டது காடா என்பது பற்றியெல்லாம் அறிவது பற்றியே எங்கள் விடுமுறைகள் கழிந்தன. அது பற்றிய ஆர்வம் எங்கள் மூவருக்குமே இருந்தது. இதற்காகவே விடுமுறை காலங்களில் எங்காவது செல்வது (வழக்கம். இது எங்களுடைய- எனதும் இரு மகள்களதும் - பொழுது போக்காக மட்டுமன்றி, தேடலில் உள்ள ஆர்வமாகவும் இருந்தது.

மரங்கள் பற்றிய நிறையக் கதைகள் எங்களுக்குத் தெரியும். நிறையத் தேடிப் படித்திருக்கிறோம். எனக்குத் தெரிந்ததை அவர்களுக்கும் அவர்களுக்குத் தெரிந்ததை எங்களுக்குமாகப் பகிர்ந்து கொள்ளல் நடக்கும். அவர்கள் இருவரும் காட்டினுள் இருக்கும் மர வகைகளை இனங்கண்டு கொள்வதில் உதவி பண்ணுவார்கள். அவர்கள் ஒவ்வொருத்திக்கும் பல மரத்தின் கதைகளும் வரலாறும் தெரியும்.

இந்த விடுமுறைக்குச் செல்லத் தீர்மானித்திருந்த காடு வேறு, ஆனாலும் போனது வேறு. ஏனென்றால் பொதுவாகவே காட்டினுள் மரங்கள் ஒன்றுடனொன்று உரசிக் கொள்ளும், காற்று அதிகமிருந்தால் உரசலில் கிளம்பும் பொறி பெரு நெருப்பை உண்டாக்கி எல்லா மரங்களையும் எரித்து விடும். முழுக்காடும் சாம்பலாகிவிடும். இங்கு அவ்வாறு இருக்கவில்லை. ஒரு மரம் மட்டும் எல்லா மரங்களையும் அழித்து, அவற்றை பிடுங்கி வீச முயற்சித்ததாம். தன் உயரத்தை அண்மிக்கக் கூட மற்றவற்றை விடுவதில்லையாம் - இந்தத் தகவலைக் கொண்டு வந்தது சிறிய மகள். அதன் பின்பே இங்கு வருவதாக எங்கள் பயணம் மாற்றித் திட்டமிடப்பட்டது.

நாங்கள் எதிர்பார்த்தளவு மரவகைகள் நிறைய இல்லை. ஐந்து வகைகள் கூடுதலாகவும், இன்னமும் ஒன்றிரண்டு வகையுமே காட்டை நிரப்பியிருந்தன. ஒருவகை மரம் மட்டும் மேவி வளர்ந்து அந்தக் காட்டையே தனது காடாக ஆக்கிரமித்திருந்ததை எங்களால் காண முடிந்தது. அந்த மரம்தான் மற்றயவைகளை அடக்கியாள முனைகின்றன என்பதை யாரும் சொல்லவில்லை – சொல்ல வேண்டிய தேவையும் இருக்கவில்லை.



காட்டுடன் அண்டி வாழ்பவர்களுக்கு அந்தக் காட்டின் தோற்றம் பற்றியும், மரங்கள் பற்றியும் நிறையத் தகவல்கள் தெரியும். அப்படிச் சேகரிக்கப்பட்டவை அதிகம் எங்களிடம் உள்ளன. அவற்றைப் பெற்றுக் கொள்வதை விரும்பி அங்கு நுழைந்தது எங்களுக்குப் பெருமளவு குழப்பத்தைத் தந்தது. அம்மரங்களில் ஒருவகையை நம்பிக் கொண்டு ஒரு கூட்டம் - என பல குழுக்கள் இருந்தன. அவர்கள் எல்லோருமே கூறினார்கள் - தங்கள் மரந்தான் சக்தி வாய்ந்ததென, அது மட்டுமன்றி அந்த மரத்தில் தங்களுடைய வாழ்க்கை கட்டிப் போடப்பட்டிருப்பதாகவும், அதன் இலைகளில் உள்ள வாசகங்களின்படியே எல்லோரும் (எங்களையும் சேர்த்து) நடக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்கள். அவர்களது கதைகள் எப்போதும் முடிந்தபாடே இல்லை. மிக நீண்டு கொண்டே சென்றது.

அந்தக் காட்டின் பூர்வீக மரம் தங்களுடையதென்றும், தங்களால் நேசிக்கப்படும் மரம்தான் முதன் முதலில் அங்கு நடப்பட்டது என்பதிலும் சில குழுவினர் விட்டுக் கொடுக்கவில்லை. சிலர் அந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளாமல் ஒதுங்கி இருந்தார்கள்.

ஆரம்பத்தில் இங்கு வாழ்ந்தவர்கள் கட்டையாகவும், சுருண்ட மயிரும், நீண்ட தலையும், ஓரளவுக்கு நெடிய முகமும், நடுத்தரமாக அகன்ற மூக்கும் கொண்டிருந்தார்கள். அவர்கள் வாழ்ந்தனரென்பதற்குக் கூட பெரிதாக ஆதாரம் இருக்கவில்லை. சிற்பி - வெண்பரல் - சிக்கி முக்கிக்கல் - பாறை அவர்களின் வாழ்வின் எச்சங்கள் - என்று தொடங்கி ஒரு தாடி நரைத்து தொங்கிய கிழவன் நிறுவத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கம், கழுதை, முயல், புலி, ஆடு, காகம், மயில், ஊர்க்குருவி என்பவற்றை வேட்டையாடியதன் அடிப்படையில் மக்கள் குலங்களாக வாழ்ந்தனர். அப்போது மரங்கள் இருக்கவில்லை. வெறும் பற்றைக் காடுகள் தான். மரங்கள் பற்றி அவர்கள் அறிந்திருக்கவுமில்லை. அந்த வேளையில் தான் அயல் தேசத்திலிருந்து சித்தரின் மரம் கொண்டு வரப்பட்டது. இப்போது அது எண்ணிக்கையற்றுக் கிடக்கின்றது. ஏன் தெரியுமா? (அது கேள்வியாக இருந்தாலும் பதிலை அவனே சொன்னான்.) அதன்



இலைகள். அதற்கு வரையறையற்ற சக்தியிருந்தது.

வெள்ளை படர்ந்திருந்த அந்த மரத்தின் இலை அகன்று வட்டம் போலவும், நுனி கூரானதாகவும் இருந்தது. வட்டப் பகுதி ஒவ்வொன்றிலும் எழுதப்பட்டிருந்த ஐந்து கொள்கைகளையும் - முன்னர் எட்டு இருந்ததாகச் சொல்வார்கள் - எங்கள் இலக்காக்கி இருக்கின்றோம். அதன் படரும் தன்மை இந்தக் காட்டையே நிரப்பி இருக்கின்றது.

நாக்கை நீட்டி உதடுகளை நனைத்துக் கொண்டு மௌனமாகிய கணம் குறுக்கிட்டாள் மூத்தவள். அது என்ன சித்தர் மரம்?

அது மட்டுந்தான் எங்கள் கேள்வியாக இருந்தது. அதன் பின் குறுக்கிட்டுக் கேள்வி கேட்க அனுமதிக்கப்படவில்லை. அதற்குரிய இடைவெளி விடப்படாமலேயே மாறி மாறிக் கதை நகர்த்தப்பட்டது. ஒருவர் என்றில்லாமல் எல்லோருமே ஒவ்வொரு பகுதியைக் கூறினார்கள்.

"இளவரசனாய் இருந்த சித்தன் மக்கள்படும் துன்பங்களையும், மிருக கொலைகளையும் கண்டு வேதனைப்பட்டான். மிருகங்களின் துடிதுடிப்பும், இரத்தம் பீச்சியடிப்பதும் அவனுக்கு மயக்கத்தைத் தந்தன. அவற்றின் வேதனைகளை உணரக் கூடிய சக்தி அவனிடமிருந்தது. அந்தக் குரூரத்தைச் சகித்துக் கொள்ள முடியாமல் வனாந்தரத்துக்கு ஓடிப் போனான்."

"அவனது உறக்கமும், விழிப்பும் அந்த மரத்தின் அடியில்தான் நிகழ்ந்தது. சகலவற்றையும் கழற்றி முழு நிர்வாணியாய் இந்த மரத்தைச் சுற்றித்தான் அலைந்தான். இதெல்லாம் முழு நிலவின் கீழேயே நடந்ததாய்ச் சொல்வார்கள்."

"மௌனமாய் அதன் கீழ் சம்மானங்காலிட்டு சாந்தமாய், பாதிவிழி மூடி இருந்தவன் அதன் கிளைகளில் ஏறி அமர்ந்து கொண்டு குச்சியொன்றை எடுத்துக் கொண்டு தனக்குத் தோன்றியதை எல்லாம் அதன் இலைகளின் வட்டப்பரப்பில் கிறுக்கத் தொடங்கினான். சிறிது காலத்தில் மரத்தின் இலை முழுவதும் அவன் எழுத்துக்களால் நிறைந்து போயின."

"இலையுதிர் காலத்தில் அவைகள் கொட்டிப் போய் மரம் அவனைப் போலவே மொட்டையாக இருந்தது. வசந்த காலத்தில் இலைகள் துளிர்க்கும் போது மீண்டும் மரத்தில் ஏறி கிளைகளில் அமர்ந்த வண்ணம் இலைகளைத் தனது கொள்கைகளில் அடங்கிய எழுத்துக்களால் நிரப்பத் தொடங்கினான். அது இரண்டு அல்லது மூன்று முறைதான் நடக்க வாய்ப்பிருந்தது. அதற்குள் மரத்தின் சூக்குமம் அவனால் கண்டு பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னைய காலங்களில் இலைகள் கொட்டித் துளிர்க்கும் போது அந்த எழுத்துக்களும் சேர்ந்தே இருந்தன. அதன் பின் அவனுக்கு எழுத வேண்டிய தேவை ஏற்படவில்லை. எழுத்துக்களால் நிரப்பப்பட்டிருந்த மரத்தின் சூக்குமம் எல்லாக் காலங்களிலும் - எல்லா இலைகளையும் எழுத்துக்களால் அடைத்து விட்டது. மரத்தின் - மூலம் அவனுக்கு மட்டுமே தெரியும் என்பதால் அது அவனுடைய மரமாகிப் போனது."

"அவன் இல்லாத வேளைகளில் அதன் கீழ் பலர் வந்திருந்து பார்த்தாலும் அவனைப் போல லாவகமாக உட்காரும் தந்திரம் யாருக்கும் தெரியவில்லை."

"இலைகளில் உள்ள எழுத்துக்களை எவ்வளவு முயற்சி பண்ணியும் அழிக்க முடியாமல் போனது. கிளைகளைக் கூட வெட்டிப் பார்த்தார்கள். வெட்டிய இடத்தில் முளைத்த இலைகளிலும் அவன் எழுத்துக்கள் மாறாமல் அப்படியே இருந்தன. அவனால் கண்டுபிடிக்கப்பட்ட மரத்தின் மூலத்தை இதுகாலவரைக்கும் யாராலும் கண்டு பிடிக்க முடியவில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நடைபயணம் மேற்கொண்டிருந்த உபகுப்தா் - இலைகளைப் படித்த பின்னா் தான் அவருக்கு இந்தப் பெயா் வந்தது. - அதற்கு மன்பிருந்த பெயா் அவனுக்கு வரவில்லை என்றான். - தன் பயணக் களையை நீக்கிக் கொள்ள அந்த மரத்தின் கீழ் அமர நோ்ந்தது. காற்றினால் அசைந்து கொண்டிருந்த சருகுகளில் ஒன்று பறந்து அவனது மடியில் விழுகிறது. முற்றாக அழிந்து போகாத எழுத்துக்களின் தடத்தைக் கண்ட அவன் மற்றைய இலைகளைத் தேடத் தொடங்கினான். ஆச்சரியத்துள் நுழைந்து கொண்டவன் மரத்தின் உச்சிக் கிளையில் இறங்கிக் கொண்டான்.”



“ஒவ்வொரு கிளைகளாக அதன் நுனிவரையிலும் நகா்ந்து ஒவ்வொரு இலைகளையும் படிக்கத் தொடங்கினான். அத்தனை கிளைகளிலுமுள்ள இலைகளைப் படித்து முடிக்க வருடங்கள் சென்றிருக்கும். அவ்வளவு விடயங்களையும் கோா்த்து எடுத்துக் கொண்டு இறங்கும் போது தலையின் மயிா்கள் கொட்டுண்டு போனதுடன் உடைகள் கிழிபட்டு நிா்வாணியாய் ஆகி இருந்தான்.”

“முழு இலைகளினதும் சாரமாக இருந்த நற்கொள்கை, நற்சிந்தனை, நற்பேச்சு, நற்கருமம், நற்பிழைப்பு, நன்முயற்சி, நன்மனம், நற்கவனம் என்ற எட்டு இலைகளையும் எடுத்துக் கொண்டு தன் பயணத்தைத் தொடராமல் இலைகளின் நுனி வளைந்து காட்டிக் கொண்டிருந்த வழியில் போனான்.”

“பிணங்களின் நடுவில் நின்று கத்திக் கொண்டிருந்தான் அசோகன். தன்னை யாரும் வெல்ல முடியாதென அறை கூவினான். மரணத்தின் அழுகுரலும், பிணத்தின் மணமும் அவனின் வெற்றிப் பெருமிதத்தை எள்ளளவும் குறைத்து விடவில்லை.”

“கலிங்கத்தின் வீழ்ச்சியும், வீரா்களின் மரணமும் அவனுக்கு எதைத்தந்தது எனக் கேட்டுக் கொண்டு வந்த உபகுப்தா், அவனிடம் தான் வைத்திருந்த எட்டு இலைகளையும், இலைகளின் ரகசியங்கள் அடங்கிய மரங்களைப் பற்றியும் கூறத் தொடங்கினான். முடியும் போது விடியல் எழுந்து கொண்டிருந்தது.”

“எழுத்துக்களால் கவரப்பட்டிருந்தவன் எழுநூறு தோழா்கள் அடங்கிய படையை இங்கு அனுப்பி மண்ணின் வளம் குறித்து அறிந்து கொண்டு கைராசிக்காரியாக இருந்த தன் மகளிடம் இம்மரத்தை இங்கு நடும்படி அனுப்பினான். அவளும் தந்தை வைத்திருந்த இலைகளின் எழுத்துக்களால் ஈா்க்கப்பட்டு அம்மரத்தில் ஏறி குந்தி இருந்தே தன்னை நிா்வாணியாக்கியிருந்தாள்.”

“அம்மரங்களால் இந்தக் காடு செழிப்பாகிய பின்னரேயே மற்றைய மரங்களை நட்டாா்கள். அதிலுள்ள எழுத்துக்களைப் பாா்த்தே அவற்றிலும் அதைப் பிரதி பண்ணினாா்கள்.”

நாங்கள் அங்கிருந்து வந்த பின்னா் அந்த வகை மரங்களின் இலைகளை ஆராயத் தொடங்கினோம். எதிலுமே அவனது எழுத்துக்கள் இருக்கவில்லை. ஒரு மரத்தின் இலையிலேனும் இருக்கலாமென மரத்திலேயே கிடந்தோம். குரங்குகளைப் போல மரத்துக்கு மரம் தாவிப் போனோம். ஆனால் எல்லாவற்றின் கீழும் சித்தன் குந்தி இருக்கப் பண்ணி இருந்தாா்கள். அவனிடம் எதுவித அசைவும் இருக்கவில்லை. கைகள் விலங்கிடப்பட்டு மரத்துடன் சோ்த்துக் கட்டப்பட்டிருந்தான். அவனுக்குக் கீழே இரத்தம் தோய்ந்த இலைகள் கிடந்தது.

ஒவ்வொரு கிளையையும் இயலுமானவரை வளைத்து இலைகளைக் குவிவு வில்லை கொண்டு அவதானித்தோம். காய்ந்துபோன குருதிச் சொட்டுக்களைத் தவிர எழுத்துக்கள் எதுவும் புலப்படவில்லை. நாங்கள் குந்தி இருப்பது தெரியாமல் பதுங்கி வந்த நிா்வாணிகள் சிலா் மரத்தின் இலைகளைக் கொய்து அவற்றின் கூரான நுனிகளைத் தடவிப் பாா்த்து விட்டு தங்களுள் மறைத்து எடுத்துச் சென்றாா்கள். தூரத்தே இன்னும் பல நிா்வாணிகள் யுத்தமுனைக்குச் செல்வது போல வியூகம் வகுத்து நின்றாா்கள். ஆனாலும் நாங்கள் ஒரு இலையிலேனும் அவனது கீறலை கண்டுபிடித்து விடும் முயற்சியில் இருந்தோம். இப்போது நாங்கள் குந்தியிருப்பது இரண்டு லட்சத்து ஐம்பத்து நான்காவது மரம் என்பதை அறிவித்தாள் இளையவள். நாங்களோ ஆளுக்கொரு கிளைகளில் இலைகளில் கண்களைக் குத்தியிருந்தோம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பருகுவோம் ஒரு கிண்ணம் மது!

## கவிஞர் மஹ்முத் தர்வீஷ்

நீண்டநாட்களுக்குப் பின் மஹ்முத் தர்வீஷ் ஹைஃபாவுக்கு வந்திருந்தார். ஹைஃபா பலஸ்தீனியர்களுடைய இடமாக ஒரு காலத்தில் இருந்தது. இப்போது இஸ்ரேலின் அங்கமாக இணைக்கப்பட்டு விட்டது. பலஸ்தீனத்தின் சிறப்பான கவிதைக் குரலான மஹ்முத் தர்வீஷ் தன்னுடைய இலக்கியப் பயணத்தை ஆரம்பித்தது ஹைஃபாவில் தான். மஹ்முத் தர்வீஷ் கவிதை வாசிப்பைக் கேட்க 1450 பேர் திரண்டார்கள். ஜோர்தானின் தலைநகரான அம்மாவில் வசித்து வந்தாலும் தனது சொந்த இடமான ரமல்லாவுக்கு அடிக்கடி வந்து போகிறார் தர்வீஷ். இரண்டே இரண்டு நாட்கள் மட்டும் தான் ஹைஃபாவில் தங்க மஹ்முத் தர்வீஷ்க்கு அனுமதி வழங்கியிருந்தது இஸ்ரேலிய அரசு. அறுபத்தாறு வயதாகிறது அவருக்கு. தர்விஷ் உடனான இந்த உரையாடல் இஸ்ரேலின் ஹாரிட்ஸ் (Haaretz) என்ற செய்தி இதழில் ஜுலை 13, 2007 அன்று வெளியானது. உரையாடலில் கலந்து கொண்டவர் டல்லா கர்பெல் (Dalla Karpel). ஆங்கிலத்திலிருந்து தமிழில்: சேரன்.

**ஹைஃபாவிற்குச் செல்வது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

எனக்கு 50 வயது கடந்த போது என்னுடைய உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதைக் கற்றுக் கொண்டேன். எத்தகைய எதிர்பார்ப்புக்களும் இல்லாமல் ஹைஃபாவிற்குச் செல்கிறேன். என் இதயத்திலே ஒரு வேலி உள்ளது. பார்வையாளர்களைச் சந்திக்கிற போது சில கண்ணீர்த் துளிகளை நான் சிந்தக் கூடும். என்னை அவர்கள் மிகுந்த அன்புடன் கட்டித் தழுவிக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். எனினும் அவர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கி விடுவேனோ என்ற ஆதங்கமும் என் மனதில் உள்ளது. ஏனெனில், என்னுடைய பழைய கவிதைகள் எவற்றையுமே நான் நிகழ்த்தப் போவதில்லை. ஒரு தேசப்பற்றாளனாக, ஒரு மாவீரனாக அல்லது ஒரு குறியீடாக நான் அவர்கள் முன் நிற்க விரும்பவில்லை. அடக்கம் வாய்ந்த ஒரு சாதாரண கவிஞனாகவே நான் அவர்கள் முன் தோன்ற விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பலஸ்தீனத்தின் தேசியக் குறியீடாக விளங்கிய ஒருவர் தன்னடக்கம் மிகுந்த ஒரு சாதாரணக் கவிஞராக உருமாற்றம் பெறுவது எப்படிச் சாத்தியமாகியது?**

அத்தகைய தேசியக் குறியீடு எதுவும் எனது உணர்விலோ அல்லது என்னுடைய கற்பனையிலோ இல்லை. தேசியக் குறியீடுகள் கோரும் நிபந்தனைகளையும், தேவைகளையும் நான் உடைக்க விரும்புகிறேன். பலஸ்தீன தேசியத்தின் திருவுருவாக என்னைப் பார்ப்பதையும், தவிர்த்துவிட வேண்டும். என்னை சாதாரண மனிதனாகப் பாருங்கள். தன்னுடைய கவிதைகளையும் தன்னுடைய வாசகர்களையும் தொடர்ந்து புடமிட விரும்பும் ஒருவனாக என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்.

**ஏன் உங்கள் பழைய கவிதைகளை ஒதுக்கி விடுகிறீர்கள்?**

ஒரு கவிஞன் தன்னுடைய முதலாவது கவிதைத் தொகுதியைத் தான் உன்னதம் என்று கொண்டாடினால், அது மோசமான நிலைமை தான். ஒவ்வொரு தொகுதியிலும் நான் பரிமாணம் அடைந்து வருகிறேன். ஹைஃபாவில் எனது வாசகர்களுக்காக எந்தக் கவிதைகளை நிகழ்த்தப் போகிறேன் என்று நான் இன்னமும் முடிவு செய்யவில்லை. ஆனால், பலர் என்னுடைய பழைய கவிதைகளைக் கேட்க விரும்புவார்கள் என்று எனக்குத் தெரியும்.

**எங்கள் தேசத்திற்கு எந்த நம்பிக்கையாவது இப்போது எஞ்சியுள்ளதா?**

எந்த நம்பிக்கையும் இல்லாவிட்டாலும் கூட, நம்பிக்கைகளை உருவாக்குவதும் படைப்பதும் நமது கடமையாக இருக்க வேண்டும். நம்பிக்கை இல்லையென்றால் நாங்கள் தொலைந்து விடுவோம். சிறு சிறு விடயங்களிலிருந்து கூட நாங்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும். இயற்கையின் அழகு, வாழ்க்கையின் உன்னதம், அதன் நொய்மை என்று பல உள்ளன. உள்ளத்தை நலத்துடன் பேணுவது மிகவும் தேவையானது அல்லவா? இப்போதைய சூழலில் நம்பிக்கையைப் பற்றிப் பேசுவது கடினம் என்று எனக்குத் தெரியும். நாம் வரலாற்றையும் புறமொதுக்கி விட முடியாது. நிகழ்காலத்தையும் மறக்க முடியாது. கட்டாயமாகவேனும் நாங்கள் நம்பிக்கையைக் கண்டு பிடித்தாக வேண்டும்.

**ஒரு படைத்தலைவனுக்கும் கவிஞனுக்கும் உள்ள வேறுபாடு என்ன என்று தெரியுமா? படைத்தலைவன் போர்க்களத்தில் கொல்லப்பட்ட எதிரிகளின் உடல்களை எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆனால் கவிஞனோ எத்தனை மனிதர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை எண்ணிக் கொண்டிருக்கிறான்.**

**எப்படி நாங்கள் நம்பிக்கையைக் கண்டு பிடிப்பது?**

குறியீடுகளோடும் உருவகங்களோடும் படிமங்களோடும் உறவாடுபவன் நான். கவிதையின் வலுவில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. கவிதையின் துணை கொண்டு முன்னே பார்க்கவும் நம்பிக்கையின் ஒளிக்கீற்றைக் காணவும் என்னால் முடியும் என்று நம்புகிறேன். கவிதை சில சமயங்களில் கள்ளப் பிறப்பாளனாகவும் இருக்கும். கவிதை உருமாற்றத்தை ஏற்படுத்தி விடும். யதார்த்தமற்றதை யதார்த்தமானதாக மாற்றும் மாயவித்தை கவிதைக்குரியது. அதுபோலவே யதார்த்தத்தை கற்பனையாகவும் படிமங்களாகவும் அது மாற்றி விடுகின்றது. நாங்கள் வாழுகின்ற உலகத்தோடு முரண்படும் இன்னொரு உலகைக் கவிதை கட்டியெழுப்ப வல்லது. கவிதையை ஆத்மீக மருந்தாகவே நான் உணர்கிறேன். வாழ்வில் நான் காண முடியாதவற்றை வார்த்தைகளால் நான் கட்டியெழுப்புகிறேன். அது ஒரு மாயத் தோற்றம் எனினும் நன்மை தரக் கூடியது. இதைவிட வேறு எந்தக் கருவிகளும் என்னிடம் இல்லை. எனதும் எனது தேசத்தினதும் வாழ்க்கைக்கும் நான் தரக் கூடியது இது மட்டும் தான்.

**எந்த நம்பிக்கையைப் பற்றிப் பேசுகிறீர்கள்?**

காஸாவிலும் மேற்குக் கரையிலும் இருந்து இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறத் தயாராயில்லை. பலஸ்தீன மக்கள் தமக்கான 22 வீத நிலத்தில் சுயமாக வாழ விரும்புகிறார்கள். தாயகத்திற்கும் அரசுக்கும் உள்ள வேறுபாடுகளை அவர்கள் அறிவர். இப்போதுள்ள அவல நிலையைத் தோற்றுவித்த காரணிகள், வரலாறு பற்றியும் அவர்களுக்குத் தெரியும். இரு இனங்கள் ஒரே நிலத்தில், ஒரே நாட்டில் வாழ்கின்றன. எனினும் அவர்களிடையே பேசுவதற்கு ஒன்றுமில்லை.

**காஸாவின் இப்போதைய நிலையைப் பற்றிய உங்கள் கருத்தென்ன?**

மிகத் துயரமான நிலை. உள்நாட்டு போர் நிலைமை அங்கே நிலவுகிறது. ஹமாஸுக்கும் ஃபற்றா(Fatah) வுக்கும் இடையே நடந்தவை மூடப்பட்ட தொடுவானத்தைத் தான் எனக்கு நினைவூட்டுகிறது. எமக்கு பலஸ்தீன அரசும் இல்லை. பலஸ்தீன அதிகார சபை (PA) யும் இல்லை. எனினும் வெறும் மாயத் தோற்றங்களுக்காக அவர்கள் அங்கே தமக்குள் போராடுகிறார்கள். இரண்டு பகுதியினருமே அரசு உருவானால், தாமே அதனைக் கைப்பற்றிவிட வேண்டுமென நினைக்கிறார்கள். காஸா என்பது மிகப்பெரிய சிறைச்சாலையாக இப்பொழுது காட்சி தருகிறது. அங்குள்ளவர்கள் ஏழைகள். அவர்களிடம் எதுவுமே இல்லை. எவருக்குமே வேலை இல்லை. அடிப்படை மருத்துவ வசதி கூடக் கிடையாது. நம்பிக்கையற்ற மக்கள் கூட்டம் போல அவர்கள் இருக்கிறார்கள். இந்தச் சூழலில் உள்ளக வன்முறை உருவாவது தவிர்க்க முடியாதது. யாருடன் போரிடுவது என்று தெரியாமல் தமக்குள்ளே மோதிக் கொள்கிறார்கள். காஸாவில் நிலவும் பொருளியல், மனோவியல், அரசியல் அழுத்தங்களின் பெருவெடிப்பே இந்தப் போர் என்று நான் கருதுகிறேன்.

**ஹமாஸின் அடிப்படைவாதத்தையிட்டு உங்களுக்கு அச்சம் உள்ளதா?**

மதச்சார்பற்றவர்களுக்கும், இஸ்லாமிய மரபைப் பேணுபவர்களுக்கும் இடையே பலஸ்தீனத்தில் ஒரு கலாசார, பண்பாட்டு முரண்பாடு உள்ளது. மதச்சார்பற்ற அல்லது மதத்தை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதாத பலஸ்தீனியர்கள் பல்லினப் பண்பாடு, பல்கலாசார அமைப்பு என்பவற்றை வலியுறுத்துகிறார்கள். ஆனால் மற்றையவர்களோ இஸ்லாமிய மரபுக்கூடாகவே பலஸ்தீனத்தைக் கட்டியமைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்த நிலைமை அரசியல் ரீதியாக என்னை அச்சுறுத்தவில்லை. ஆனால் கலாசார, பண்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாக என்னை அச்சுறுத்துகிறது. தங்களுடைய நம்பிக்கைகளை மற்றவர்கள் மீது திணிக்கின்ற ஹமாஸின் போக்கு என்னை மிகுந்த சங்கடத்துக்குள்ளாக்குகிறது. "ஒரு தடவை மட்டுமே ஜனநாயகம்" என்பதை அவர்கள் நம்புகிறார்கள் போலத் தெரிகிறது. இது ஒழுங்கான ஜனநாயகமாக இருக்க முடியாது. எனினும் ஃபற்றா, ஹமாஸ் அமைப்பினர் தனித்தனியாக இயங்குவது சாத்தியமில்லை. குருதியின் வெம்மை இன்னுமே ஆறவில்லை என்பதால் உடனடியாகவே இருதரப்பும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது சாத்தியமில்லை. எனினும், தமது நடவடிக்கைகளுக்காக ஹமாஸ் அமைப்பினர் மன்னிப்புக் கோரி, காஸாவைப் பழைய அதிகாரச் சமநிலைக்குக் கொண்டு வரத் தயாராக இருந்தால் நிலைமையில் மாற்றம் ஏற்படலாம். பலஸ்தீனிய சமூகத்தில் கணிசமான ஆதரவைப் பெற்றிருக்கும் ஹமாஸைப் புறந்தள்ளி விட முடியாது.

**இப்போதுள்ள நிலைமை இஸ்ரேலுக்குத் தானே வாய்ப்பாக உள்ளது?**

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடப் பொருத்தமான எவரும் பலஸ்தீனத் தரப்பில் இல்லை என்று தான் இஸ்ரேல் நீண்டகாலமாகக் கூறி வந்துள்ளது. மஹ்மூத் அப்பாஸுடன் பேசலாம் என்று இப்போது சொல்கிறார்கள். ஹமாஸ் தேர்தலில் வெல்வதற்கு முன்னரும் கூட அப்பாஸ் இருந்தவர் தானே! இஸ்ரேலியப் படைகளின் ஒரு சோதனைச் சாவடியையாவது நீக்க முடியவில்லை இஸ்ரேலுக்கு. அந்த நிலையில் அப்பாஸால் என்ன செய்ய முடியும்? இஸ்ரேலுடைய இத்தகைய கொள்கைகள் தான் பலஸ்தீனத்தில் வன்முறையையும் அதிதீவிரவாதத்தையும் ஊக்குவிக்கின்றன. சமாதானத்துக்காக எதனையும் வழங்க இஸ்ரேல் தயாரில்லை. 1967ஆம் ஆண்டின் எல்லைகளுக்கு அவர்கள் திரும்பிச் செல்லத் தயாராக இல்லை. பலஸ்தீன அகதிகளைப் பற்றிப் பேச அவர்கள் தயாராக இல்லை. யூதக் குடியேற்றங்களைப் பற்றிப் பேச அவர்கள் தயாராக இல்லை. ஜெரூசலேம் பற்றிப் பேசவும் அவர்கள் தயாராக இல்லை. அப்படியானால் பேச்சுவார்த்தைகள் எதற்கு? வரலாற்றையும், ஐதீகங்களையும் பிரித்துப் பார்ப்பதற்கு இஸ்ரேல் கற்றுக் கொள்ளாதவரை இந்த இருட்குகையின் முடிவில் எந்த ஒரு வெளிச்சத்தையும் என்னால் காண முடியாது.

**இஸ்ரேல் - பலஸ்தீனம் என்ற இரு தேசங்களுக்கிடையே எப்போதாவது உடன்பாடு ஏற்படும் என்று நம்புகிறீர்களா?**

நான் நம்பிக்கை இழக்கவில்லை. இஸ்ரேலியர்களுடைய உணர்வு நிலையில் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும். அந்த மாற்றத்திற்காக நான் பொறுமையுடன் காத்திருக்கிறேன். உறுதியான, அணுஆயுதம் தரித்த, மிகப் பலமான இஸ்ரேலை ஏற்றுக் கொள்வதற்கு அராபியர்கள் தயாராகவே உள்ளனர். ஆனால், இஸ்ரேல் தான் சமாதானக் கதவுகளைத் திறக்கத் தயாராக இல்லை.

**நிலத்துக்காக மரணம் என்று நிலமும் மரணமும் ஒன்றாகப் பிணைந்திருக்கும் பயங்கர நிலையிலிருந்து விடுபட இருதரப்புமே தயாராக இல்லை அல்லவா?**

இஸ்ரேலிய அரசியல்வாதிகளிடம் ஒரு கலாசாரப் புரட்சி ஏற்பட வேண்டும். அந்த நாட்டின் இளைஞர்களை எப்போதுமே அடுத்த போருக்காகக் காத்திருக்கச் செய்வது மிகக் கடினமானது. உலக மயமாதல் அந்த இளைஞர்களின் மீது பெருந் தாக்கம் செலுத்துகிறது. அவர்கள் வாழ விரும்புகிறார்கள். வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ய விரும்புகிறார்கள். இஸ்ரேலிய இராணுவ வாழ்க்கைக்கும் வெளியே இன்னொரு வகையான வாழ்க்கையை அவர்கள் வாழ விரும்புகிறார்கள். இஸ்ரேலிய மக்களிடமும், பலஸ்தீனிய மக்களிடமும் காணப்படுகின்ற அவநம்பிக்கையையும், ஆற்றாமையையும் நாம் ஒப்பிட முடியாது. ஏனெனில், இஸ்ரேலிய மக்களிடமும், இஸ்ரேலிய சமூகத்திலும் இந்த ஆற்றாமை இருக்குமானால் அது நல்ல அறிகுறி. மக்களிடம் இருக்கிற ஆற்றாமை இஸ்ரேலியத் தலைவர்களை ஒரு நல்ல தீர்வு நோக்கி நகர வழிசமைக்குமானால் அது நல்லது.

ஒரு படைத்தலைவனுக்கும் கவிஞனுக்கு உள்ள வேறுபாடு என்ன என்று தெரியுமா? படைத்தலைவன் போர்க்களத்தில் கொல்லப்பட்ட எதிரிகளின் உடல்களை எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆனால் கவிஞனோ எத்தனை மனிதர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை எண்ணிக் கொண்டிருக்கிறான். இறந்தவர்களுக்கிடையே பகைமை இருக்க முடியாது. எங்களுக்கு எதிரியாக இருப்பது ஒன்றே ஒன்றுதான்: மரணம். இந்த உருவகம் மிகத் தெளிவானது. இருதரப்பிலும் இறந்து போனவர்கள் எதிரிகளாக இருக்க மாட்டார்கள்.

**செக் நாட்டு எழுத்தாளர் வஸ்லாவ் ஹவெல் அரசியலில் இறங்கியது போல நீங்களும் அரசியலில் இறங்குவீர்களா?**

ஹவெல் ஒரு நல்ல ஜனாதிபதியாக இருந்திருக்கலாம். ஆனால் அற்புதமான எழுத்தாளராக அவர் அறியப்படவில்லை. அரசியலை நன்றாகச் செய்வதை விட கவிதைகளை நன்றாக எழுதுவதே எனக்குக் கை கூடுகிறது.

**1970இல் கொம்யூனிஸ்ட் இளைஞர் அமைப்பில் நீங்கள் இருந்தபோது அமைப்பின் பிரதிநிதியாக எகிப்து சென்றீர்கள். ஆனால் திரும்பி வராமல் அங்கேயே இருந்து விட்டீர்கள். இது குறித்து இப்போது கவலைப்படுகிறீர்களா?**

சில வேளைகளில் காலம் எங்களுக்கு ஞானத்தைத் தருகிறது. முரண்நகையின் அர்த்தங்களை வரலாறு எனக்குக் கற்றுத் தந்திருக்கிறது. 1970இல் நாட்டை விட்டுப் பிரிந்தமை பற்றி நான் கவலைப்படுகிறேனா என்ற கேள்வியை நான் எப்போதுமே கேட்பதுண்டு. இந்தக் கேள்விக்கான மறுமொழி என்னவென்பது முக்கியமல்ல என்ற முடிவுக்கே நான் இப்போது வந்துள்ளேன். கார்மல் மலை (Mount carmel) யிலிருந்து நான் ஏன் இறங்கி வந்தேன் என்பதே எனக்கு முக்கியமாகப்படுகிறது.

**ஏன் இறங்கினீர்கள்?**

முப்பத்தேழு ஆண்டுகளுக்குப் பின் திரும்பி வருவதற்காகத்தான். 1970இல் நான் மலையிலிருந்து இறங்கி வந்ததும் இல்லை. இப்போது 2007இல் திரும்பி வந்ததும் இல்லை. உண்மையில் இது ஒரு உருவகம். இன்றைக்கு நான் ரமல்லாவில் இருக்கிறேன். அடுத்த கிழமை கார்மல் மலைக்குப் போகிறேன். 40 ஆண்டுகளாக நான் அங்கே இல்லை என்பதை நான் நினைவில் கொள்வேன். எங்கிருந்து துவங்கினேனோ அங்கேயே திரும்புகிறேன். எனினும் எனது நீண்ட பயணம் ஒரு உருவகம் தான்.

**ஏதாவது ஒரு நல்வாய்ப்பு அமைந்து நீங்கள் ஹைஃபாவுக்கும், கலிலீக்கும் உங்களுடைய குடும்பத்துக்கும் திரும்ப முடியும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால்...?**

1996இல் 26 ஆண்டுகளுக்குப் பின்பு முதன் முறையாக ஹைஃபாவுக்குத் திரும்பியது உங்களுக்குத் தெரியும். உணர்ச்சி மேலீட்டால் நான் அழுததும் உங்களுக்குத் தெரியும். அப்போது நான் ஹைஃபாவிலேயே தங்கிவிட விரும்பினேன் - அது இஸ்ரேலிய நிலமாக மாறிவிட்ட பின்பும். ஆனால் இப்போது என்னைக் கேட்பீர்களானால் எனது பலஸ்தீன அடையாள அட்டையை விட்டுவிட்டு இஸ்ரேலிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள மாட்டேன். அது எனக்கு வெட்கத்தைத் தரும். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கேயில்லாத அந்த நீண்ட ஆண்டுகளில் நான் என்ன செய்தேனென்பது தான் முக்கியம். நான் நன்றாக எழுதப் பழகினேன். என்னுடைய கவிதைகள் மேலும் மேலும் மெருகேறின. கலை இலக்கியக் கண்ணோட்டத்தில் இருந்து பார்க்கிற போது, என்னுடைய இலக்கிய வளர்ச்சி என்னுடைய தேசத்திற்கு மிகுந்த பயன்பாடுடையதாக அமைந்தது.

**அரசியல் சூழ்நிலை மோசமடைந்திருக்கும் நிலையில் நீங்கள் இங்கே கவிதை நிகழ்த்த வந்தமை பற்றி சிலர் கண்டனம் தெரிவிக்கிறார்களே?**

நாங்கள் உயிரோடிருக்கிறோம். எதுசரி எது பிழை என்பது இப்போது எனக்கு சரியாகத் தெரியவில்லை. எங்களுடைய காலமும் நேரமும் நேரப் பொருத்தங்களும் ஒழுங்கற்றுச் சிதறிக் கிடக்கின்றன. இதுதான் என்னுடைய முதல்வருகையும் அல்ல. 1996இல் நண்பரும் சிறந்த எழுத்தாளருமான எமில் ஹபீபியின் இறுதிச் சடங்குகளில் பங்களிக்க வந்திருந்தேன். 2000இல் நாஸரேத் நகரில் என்னுடைய கவிதைகளை நிகழ்த்த வந்திருந்தேன். அரசியல் கட்சிகளின் சண்டை சச்சரகளுக்குள் நான் சிக்குப்பட விரும்பவில்லை. இஸ்ரேலில் வாழ்கிற அத்தனை பலஸ்தீன / அரபு மக்களினதும் விருந்தாளியாக வந்திருக்கிறேன். அவர்கள் எல்லோருக்குமான கவிஞன் நான். இங்குள்ள பல கவிஞர்கள் என்னை வெறுக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். கவிஞர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் பலரும் இவர்களில் இருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். பொறாமை என்பது மனித உணர்வு. ஆனால் அது தீவிர வெறுப்பாக மாறுகிறபோது வேறொரு பயங்கர உணர்வாக மாறிவிடுகிறது. என்னை இலக்கியத் தடைக்கல்லாகப் பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் நான் அவர்களைச் சிறுவர்களாகத்தான் பார்க்கிறேன். தங்களது ஆத்ம தந்தைக்கெதிராக அவர்கள் கலகம் செய்ய வேண்டும். என்னைக் கொலை செய்வதற்கான உரிமை அவர்களுக்கிருக்கிறது. ஆனால் அந்தக் கொலை இலக்கியத்தில், பிரதியில் (Text), ஒரு உயர்ந்த தளத்தில் நிகழ வேண்டும்.

**யூத - இஸ்ரேலிய அறிவுஜீவிகளுடன் உங்களுக்கு உறவுகள் உள்ளனவா?**

யூதக் கவிஞர் யிச்சாக் லாவோர் (Yitzak Laor) மற்றும் வரலாற்றியலாளர் அம்னொன் - றாஸ் - கிராக்கோட்ஸின் (Amnon - Raz - Krakotzkin) ஆகியோருடன் தொடர்புகள் உள்ளன. கடந்த இருபது ஆண்டுகளில் ஹிப்ரு மொழியில் நான் அதிகம் வாசித்தது கிடையாது. ஆனால் பல இஸ்ரேலிய எழுத்தாளர்களில் எனக்கு ஈடுபாடு உள்ளது.

**பல ஆண்டுகளுக்கு முன்பு அப்போதைய இஸ்ரேலிய கல்வி அமைச்சர் யொஸ்ஸி சாரிட் (Yossi Sarid) உங்களுடைய கவிதைகளை இலக்கியப் பாடத்திட்டங்களில் அறிமுகப்படுத்த முயன்றார். அதனால் வலது சாரிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இஸ்ரேலின் கூட்டாட்சி அரசையே கவிழ்த்து விடப் போவதாக பயமுறுத்தினார்கள். இது உங்களுக்குப் பெருமை தரும் விடயமல்லவா?**

என்னுடைய கவிதைகள் பாடப் புத்தகத்தில் இடம்பெறுவது பற்றி எனக்கு எந்த ஆர்வமும் இல்லை. என்னுடைய கவிதைகளைப் பாடப்புத்தகங்களில் சேர்த்தமை தொடர்பாக இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த விவாதத்தின் போது நான் மற்றவர்களைக் கேட்டது இதுதான். ஒரு பலஸ்தீனக் கவிஞனுக்காக ஆட்சியைக் கவிழ்க்கத் தயாராக இருக்கிறீர்களே? அதனை விட வேறு பலமான காரணங்கள் உங்களுக்குக் கிடைக்கவில்லையா? அரபுப் பாடசாலைகளிலும் எனது கவிதைகள் கற்பிக்கப்படுவதில் எனக்கு ஆர்வமில்லை. பாடத்திட்டங்களில் இடம்பெறுவதும் எனக்கு விருப்பமில்லை. ஏனென்றால், தம்மீது திணிக்கப்படுகிற எந்த இலக்கியத்தையும் வெறுப்பதே மாணவர்களது வழமையாக இருக்கிறது.

**உங்களுடைய வீடு எங்கேயுள்ளது?**

எனக்கு வீடில்லை. கணக்கற்ற தடவைகள் வீடுகள் மாறவும் இடம்பெயரவும் நேர்ந்தமையால் ஒரு ஆழமான அர்த்தத்தில் எனக்கு வீடு என இப்போது எதுவும் கிடையாது. எங்கே தூங்குகிறேனோ, எங்கே கவிதை எழுதுகிறேனோ, எங்கேயிருந்து வாசிக்கிறேனோ அந்த இடமே எனக்கான வீடு. அது எங்கேயும் இருக்கலாம். இதுவரை இருபது வீடுகளில் வாழ்ந்திருக்கிறேன். எனது நூல்களையும், மருந்துகளையும், ஆடைகளையும் விட்டு விட்டு பலமுறை ஓட வேண்டி ஏற்பட்டது.

**சிஹாம் தாவுத் ஆவணக் காப்பகத்தில் 1970இல் நீங்கள் விட்டுச் சென்ற உங்களுடைய கடிதங்கள், கவிதைகள், கையேடுகள் இருக்கின்றன அல்லவா?**

அந்த இடத்திற்கு என்னால் திரும்பி வரவே முடியாது என்பதை அப்போது நான் உணரவில்லை. புலப்பெயர்வையும் அலைந்துழல்வையும் (Diaspora) நானாக வரித்துக் கொள்ளவில்லை. 10 ஆண்டுகளாக ஹைஃபாவை விட்டு வெளியேற நான் அனுமதிக்கப்படவில்லை. மூன்றாண்டுகள் நான் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தேன். எந்த வீடு குறித்தும் எனக்கு இப்போது ஏக்கமில்லை. வீடு என்பது பொருளும் தளபாடங்களும் சார்ந்தது அல்ல. இடமும், வெளியும் சிக்கலான உணர்வுகளும் சேர்ந்து பிணைந்த ஒரு தளம். இப்போது எனக்கு வீடில்லை. இன்னொரு புறத்தில் எல்லா இடமும் ஒரே மாதிரித்தான் தோற்றமளிக்கிறது. ரமல்லா, அம்மான் நகரம் போல இருக்கிறது. அம்மான் நகரமோ பரிஸைப்போல இருக்கிறது. ஏக்கத்திலும் இழப்பிலும் வளர்ந்ததாலோ என்னவோ இப்போது என்னால் ஏங்க முடியாது இருக்கிறது. ஒருவேளை என்னுடைய



**எந்த நம்பிக்கையும் இல்லாவிட்டாலும் கூட, நம்பிக்கைகளை உருவாக்குவதும் படைப்பதும் நமது கடமையாக இருக்க வேண்டும். நம்பிக்கை இல்லையென்றால் நாங்கள் தொலைந்து விடுவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிகள்தான் மாறிவிட்டனவோ தெரியவில்லை. அறிவு, உணர்வையும் உணர்ச்சியையும் விஞ்சிவிட்டதோவென்று சந்தேகிக்கிறேன். நிச்சயமாக முரண்நகை (Irony) கூர்மை பெற்றிருக்கிறது. நான் முன்பு இருந்த தா்வீஷ் அல்ல.

**அதனால் தானா நீங்கள் குடும்ப வாழ்க்கையைத் தவிர்த்தீர்கள்?**

நான் இரண்டு தரம் திருமணம் புரிந்திருக்கிறேன் என்பதை எனது நண்பர்கள் அடிக்கடி நினைவூட்டுவார்கள். என்றாலும் திருமணம் என்பது ஒரு ஆழமான நினைவாக என் மனதில் ஒருபோதுமே இருந்ததில்லை. எனக்குக் குழந்தைகள் இல்லையேயென்பது பற்றி எனக்கு எந்த ஆதங்கமும் இல்லை. ஒருவேளை இருந்திருந்தால் அவன் ஒழுங்காய் இருந்திருப்பானோ தெரியாது. ஏன் இத்தகைய சந்தேகமும், பயமும் எனக்கு இருக்கிறது என்று தெரியவில்லை. என்றாலும் எனக்குக் குழந்தைகள் இல்லையென்பது பற்றி எந்த மனக்குறையும் இல்லை.

**எதைப் பற்றிய மனக்குறை உங்களிடம் இருக்கிறது?**

சிறு வயதிலேயே எனது கவிதைகளை வெளியிட்டு விட்டேன் என்ற மனக்குறை. உண்மையில் அவை மோசமான கவிதைகள். சொற்களால் சிலரைக் காயப்படுத்தி விட்டமை தொடர்பாக இப்போது கவலைப்படுகிறேன். கொஞ்சம் முரட்டுத் தனத்துடன் கூர்மையான வார்த்தைகளால் நண்பர்களைப் புண்படுத்திவிட்டேனென்ற மனக்குறை இருக்கிறது. சில நினைவுகளுக்கு நான் நேர்மையாகவும் நன்றியுள்ளவனாகவும் இருந்ததில்லை. எனினும் எத்தகைய குற்றச் செயலிலும் நான் ஈடுபடவில்லை.

**தனிமையை விரும்புகிறீர்களா?**

நிறையவே. யாராவது இரவுச் சாப்பாட்டுக்கு என்னை அழைத்தால் தண்டனை பெறுவது போலவே உணர்கிறேன். அண்மைக் காலங்களாக தனிமையையே நான் பெரிதும் விரும்புகிறேன். சுற்றி வர மனிதர்கள் தேவையென்று உணர்கின்றபோது அவர்களைத் தேடிப் போகிறேன். இது சுயநலம்தான் இல்லையா? எனக்கு ஐந்து அல்லது ஆறு நண்பர்கள் உள்ளனர். இதுவே அதிகம் என்று தோன்றுகிறது. எனக்குத் 'தெரிந்தவர்கள்' என்று ஆயிரக்கணக்கானோர் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் எவ்வகையிலும் எனக்குத் துணை செய்வதில்லை.



**இஸ்ரேலுடைய இத்தகைய கொள்கைகள் தான் பலஸ்தீனத்தில் வன்முறையையும் அதிதீவிரவாதத்தையும் ஊக்குவிக்கின்றன. சமாதானத்துக்காக எதனையும் வழங்க இஸ்ரேல் தயாரில்லை. 1967ஆம் ஆண்டின் எல்லைகளுக்கு அவர்கள் திரும்பிச் செல்லத் தயாராக இல்லை. பலஸ்தீன அகதிகளைப் பற்றிப் பேச அவர்கள் தயாராக இல்லை. யூதக் குடியேற்றங்களைப் பற்றிப் பேச அவர்கள் தயாராக இல்லை. ஜெரூசலேம் பற்றிப் பேசவும் அவர்கள் தயாராக இல்லை. அப்படியானால் பேச்சுவார்த்தைகள் எதற்கு?**

**ஆரம்ப காலக் கவிதைகளுக்குத் திரும்பிச் செல்வது இப்போது கடினமாக இருக்கிறது என்று கூறுகிறீர்கள். 'அம்மாவின் கோப்பி' என்ற கவிதையையும் இதற்குள் சேர்த்துக் கொள்கிறீர்களா?**

1963, 64 காலகட்டத்தில் மாஸியாகு (Maasiyahu) சிறைச்சாலையில் அந்தக் கவிதையை எழுதினேன். ஜெருசலேமில் உள்ள ஹீப்ரு பல்கலைக்கழகத்தில் கவிதை நிகழ்த்த என்னை அழைத்திருந்தார்கள். அப்போது என்னுடைய வாழிடம் ஹைஃபா. இஸ்ரேலில் வாழ்ந்த பலஸ்தீனர்கள் இராணுவச் சட்டத்தின் கீழ் வாழ்ந்த காலமது. ஜெருசலேம் செல்வதற்கான பயண அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்திருந்தேன். ஆனால் எனக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. என்றாலும் ரயில் ஏறிப் பயணப்பட்டேன். (அந்த ரயில் இப்போதும் ஓடுகிறதா?) அடுத்த நாள் நாஸரேத் காவல் நிலையத்திற்கு நான் அழைக்கப்பட்டேன். நான்கு மாதங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டு மாஸியாகு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன். ஒரு சிகரெட் பெட்டியில் தான் அந்தக் கவிதையை எழுதினேன். அந்தப் பெட்டியில் ஒட்டகத்தின் படம் இருந்தது. மஞ்சள் நிறப் பெட்டி. அந்தக் கவிதையை லெபனான் இசையமைப்பாளர் மார்செல் காலிஃப் (Marcel Kahalife) அற்புதமான பாடலாக மாற்றினார். என்னுடைய அழகான கவிதைகளுள் மிகுந்த அழகான கவிதை அது. ஹைஃபாவில் அதனை நான் வாசிப்பேன்.

**நீங்கள் பிறந்த ஊரான பிர்வா (Birwa) வுக்குச் செல்வீர்களா?**

இல்லை. இப்போது அது இஸ்ரேலியக் கிப்புட்ஸ் (Kibbutz) ஆக மாறிவிட்டது. அதன் பெயர் யாசுர் (Yas'ur) எனது ஊரின் நினைவுகளையே தக்க வைத்துக் கொள்ள விரும்புகிறேன். திறந்தவெளிகள், வயல்கள், ஒலிவ மரங்கள் என எல்லாவற்றினதும் நினைவுகளை. எங்கள் வீட்டு மல்பெரி மரத்தில் அம்மா குதிரையைக் கட்டியிருந்தார். ஒரு வழியாக நான் அந்தக் குதிரையில் ஏறிவிட்டேன். அடுத்த கணமே குதிரை என்னை வீசி எறிந்து விட்டது. அன்றைக்கு அம்மாவிடம் வாங்கிய அடியை இன்றும் மறக்க முடியவில்லை. அம்மாவிடம் நான் நிறைய அடி வாங்கியிருக்கிறேன். நானொரு காவாலிப் பயல் என்பது அவருடைய எண்ணமாக இருந்தது. ஆனால், காவாலியாகவும், குழப்படிகாரனாகவும் இருந்ததாக எனக்கு நினைவில்லை. வண்ணத்துப் பூச்சிகளையும் எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. ஊர் முழுவதுமே திறந்த வெளி. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எனக்கு வீடில்லை. கணக்கற்ற தடவைகள் வீடுகள் மாறவும் இடம்பெயரவும் நேர்ந்தமையால் ஒரு ஆழமான அர்த்தத்தில் எனக்கு வீடு என இப்போது எதுவும் கிடையாது. எங்கே தூங்குகிறேனோ, எங்கே கவிதை எழுதுகிறேனோ, எங்கேயிருந்து வாசிக்கிறேனோ அந்த இடமே எனக்கான வீடு. அது எங்கேயும் இருக்கலாம்.**

மலையுச்சியில் இருந்தது ஊர். ஒருநாள் காலையில் எழுந்த போது எல்லோருமே ஊரைவிட்டு ஓடிவிட வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஒருவராவது யுத்தத்தைப் பற்றியோ பசி, பஞ்சம் என்பது பற்றியோ பேசவில்லை. நானும் எனது மூன்று சகோதரர்களும் நடந்தே லெபனானுக்குச் சென்றோம். குழந்தையாக இருந்த எனது தம்பி வழிமுழுக அழுது கொண்டே வந்தான்.

**எழுதுவது தொடர்பாக ஏதாவது வழமைகள் உங்களுக்கு உள்ளதா?**

நிபந்தனைகள் கட்டுப்பாடுகள் என்று எதுவும் இருந்ததில்லை. சில பழக்க வழக்கங்கள் என்னிடம் இருந்தன. காலை பத்துத் தொடக்கம் பன்னிரண்டுவரை எழுதுவது எனக்குப் பழக்கமாகி விட்டது. நான் கையால் தான் எழுதுவேன். கணினியால் அல்ல. வீட்டில் தான் என்னால் எழுத முடிகிறது. தனியே இருந்தாலும் கூட அறைக்கதவைப் பூட்டி விடுவேன். தொலைபேசியை அணைத்து விடுவதில்லை. ஒவ்வொருநாளும் எழுதுவதில்லையென்றாலும், தினந்தோறும் மேசையில் அமர்வதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். எழுதுவதற்கு ஊட்டம் கிடைக்கலாம் கிடைக்காமல் போகலாம். ஊட்டம், தாக்கம், பாதிப்பு (inspiration) என்பதிலெல்லாம் எனக்கு அவ்வளவாக நம்பிக்கையில்லை.

**இறப்புக் குறித்து உங்களுடைய உணர்வுகள் இப்போது எப்படி உள்ளன?**

இறப்புக்காக நான் தயாராக இருக்கிறேன். ஆனால், அதற்காக நான் காத்திருக்கவில்லை. காத்திருப்பையும் அதன் வலியையும் துயரத்தையும் பற்றிய என்னுடைய காதல் கவிதை ஒன்றுள்ளது:

எனது காதலி நீண்ட நேரமாக வரவில்லை. /
ஒருவேளை வெளிச்சம் அதிகமாக உள்ள இடத்துக்குப் போய்விட்டாளோ என்று யோசித்தேன். /
கடைக்குப் போயிருக்கக் கூடும். /
அல்லது புறப்பட முன் கண்ணாடியில் தன்னைப் பார்த்திருப்பாள். /
தன்னிலேயே காதல் கொண்டவளாய் அவள் சொல்கிறாள்:/
வேறுயாரும் என்னைத் தொடுவது நியாயம் அல்ல.
நான் என்னுடையவள்! /

ஒரு வேளை விபத்தில் சிக்கி விட்டாளோ? /
காலையில் என்னை அழைத்திருப்பாள் /
நான் வீட்டில் இருக்கவில்லை. /
பூக்களும் மதுவும் வாங்குவதற்காக வெளியே போயிருந்தேன். /
ஒருவேளை அவள் இறந்து போயிருக்ககூடும். /
இறப்பும் என்னைப் போலவே தான். /
காத்திருப்பது அதற்குச் சாத்தியமில்லை. /
என்னாலும் காத்திருக்க முடியாது. /
எழுத இன்னும் நிறைய உள்ளது /
எல்லா இடங்களிலும் போர் தொடர்கிறது /
என்னுடைய கவிதைக்கும் இறப்புக்கும் எந்த உறவும் இல்லை. /
எனினும் வா /
சந்திப்போம் /
ஆனால், எனக்கு முன்பாகவே சொல்லிவிடு /
நான் தயாராக வேண்டும். /
நல்லாடைகள் அணிய வெண்டும். /
கடற்கரையோரமாய் ஒரு மதுச்சாலையில் சந்திப்போம் /
பருகுவோம் ஒரு கிண்ணம் மது /
பிறகு, என்னைக் கொண்டு செல்...

**சமாதானத்தை ஏற்றுக் கொள்ள இரு தரப்பினரும் தயாராக இருக்கிறார்களா?**

பலஸ்தீன மக்கள் தங்களை நேசிப்பதில்லை என்று இஸ்ரேலியர்கள் குறைப்படுகிறார்கள். இது நகைப்புக்கிடமானது. சமாதானம் என்பது இரு அரசுகளுக்கிடையே ஏற்பட வேண்டியது. அது அன்பிலும் காதலிலும் தங்கியிருக்கவில்லை. சமாதான ஒப்பந்தம் என்பது திருமணக் கொண்டாட்டம் அல்ல. இஸ்ரேலியர்கள் மீதான பலஸ்தீனியர்களின் வெறுப்பை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆக்கிரமிப்புக்குள் வாழ்வதை எவருமே வெறுப்பார்கள். முதலில் சமாதானம் ஏற்பட வேண்டும். அதன்பிற்பாடு நமக்கிடையே எத்தகைய உறவுகள் - காதலா, அன்பா, நேசமா - இருக்க முடியும் என்பதைப் பற்றி யோசிக்கலாம். அன்பும் காதலும் நேசமும் அந்தரங்கமான தனிப்பட்ட விடயங்கள் எவர் மீதும் அதனை நாம் திணிக்க முடியாது

**சாவின் பிடியிலிருந்து தப்பி வந்திருக்கிறீர்கள். முதுமையும் ஆசைகளுக்கு இணங்கா உடலும் உங்களுக்கு அச்சத்தைத் தருவதில்லையா?**

இரண்டு முறை சாவிலிருந்து தப்பியிருக்கிறேன். 1998இல் நான் உயிரியல் ரீதியாகச் செத்துப் போயிருந்தேன். சாவீட்டிற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டார்கள். 1984இல் வியன்னாவில் இருக்கும் போது மாரடைப்பு ஏற்பட்டது. நல்ல தெளிவான ஒளியில் வெண்முகில்கள் மீது ஒரு நல்ல தூக்கம் போலவே அப்போது உணர்ந்தேன். இறப்பு என்ற நினைவே இல்லை. மிதந்து மிதந்து பறந்தேன். திடீரென வலியை உணர ஆரம்பித்தேன்.அப்போது தான், உயிரோடு இருக்கிறேன் என்ற உணர்வு திரும்பி வந்திருக்க வேண்டும். இரண்டு நிமிடங்கள் நான் உயிரற்று இருந்ததாகப் பிறகு சொன்னார்கள். 1998இல் ஏற்பட்ட அனுபவம் தீவிரமானதும் வன்மம் கூடியதாகவும் இருந்தது. அது மகிழ்ச்சியான தூக்கமே அன்று.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்புக்குட்டி


# வானமற்ற வெளியில் கட்டபொம்மனும், சோலைக்கிளியும், செழியனும்

கனடாவிலிருந்து வெளியாகும், காலம் சஞ்சிகையின் ஆதரவில் வானமற்ற வெளி எனும் இலக்கிய நிகழ்வு ஜூலை மாதம் இடம் பெற்றது. இலக்கிய நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக சோலைக்கிளியின் (வாத்து) கவிதைத் தொகுதி, செழியனின் "கடலைவிட்டுப் போன மீன் குஞ்சுகள்" கவிதைத் தொகுதி மற்றும் என்.கே.மகாலிங்கம் மொழிபெயர்ப்பில் சினுவா ஆச்செபியின் "வீழ்ச்சி" (No Longer at Ease) ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன. அ.முத்துலிங்கம், த.சிவதாசன், ஜிஃப்ரி உதுமாலெப்பை ஆகியோர் நூல்களைப் பற்றிய ஆய்வுரை நிகழ்த்தினர். மூன்று நூல்களையும் அறிமுகப்படுத்திக் கவிஞர் சேரன் உரையாற்றினார்.

வெளியிடப்பட்ட மூன்று நூல்களும் பல வழிகளிலும் சிறப்புப் பெற்றவை. சோலைக்கிளியின் தொகுதி இதுவரை வெளியான அவரது கவிதைத் தொகுதிகளான எட்டாவது நரகம், காகம் கலைத்த கனவு, ஆணிவேர் அறுந்த நான், பாம்பு நரம்பு மனிதன், பனியில் மொழி எழுதி, என்ன செப்பங்கா நீ ஆகியவற்றிலிருந்து கவிஞரே தெரிந்தெடுத்த கவிதைகளும் புதியவை பதினெட்டுமாக நூற்றெட்டுக் கவிதைகள் அடங்கிய தொகையாகும். நவீன தமிழ்க் கவிதைக்குக் கல்முனை வழங்கிய மற்றுமொரு கொடை சோலைக்கிளி. நூலின் பின்னட்டைக் குறிப்பு சுருக்கமாகவும் துலக்கமாகவும் சொல்வது போல "பூவுலகின் நாயகர்களாகவும், உரிமையாளர்களாகவும் மனிதர்களே விளங்க வேண்டுமென்ற மானுட முதன்மைவாதத்தை நுட்பமாகவும், நளினமாகவும், கவித்துவப் பெருக்கோடும் கேள்விக்குள்ளாக்கும் நவீன கவி" அவர். கிழக்கிலங்கையின் வாழ்வும் வளமும், வலியுமே அவரது கவிதா உலகத்துக்கு எம்மை வழிநடத்தும் இயற்கை வழிகள்.

செழியனுடைய நூலும் இதுவரை வெளியான அவரது கவிதை நூல்களான இல்லாமல் போன தோழனுக்கு, மரணம், அதிகாலையைத் தேடி, குழந்தைகளிடம் பொய்களைக் கூறாதீர், ஆளற்ற தனித்தீவுகளில் நிலவு, ஈரமற்ற மழை ஆகியவற்றினதும் சில புதிய பாடல்களதும் தொகுப்பாகும். புரட்சிகரப் பின்னணியும் இப்போது புலம் பெயர்ந்த வாழ்வுமென இருவேறுபட்ட அனுபவ அரசியல் ஆழத்தில் ஊறி வெளியாகியிருக்கிற செழியனின் கவிதைகள் நம் கால வாழ்வின் முக்கியமான பரிமாணங்களில் ஒன்றெனலாம். தொகை நூல்களின் சிறப்பு என்னவெனில், அவை கவிஞரின் ஆழ அகலங்களை மட்டும் சுட்டுவதோடு நின்றுவிடாமல் அவர்களது கவித்துவப் பரிணாமத்தையும் தொடர்ச்சியையும் இனங்காண வல்லன. அவ்வகையில்







சோலைக்கிளியினதும், செழியனதும் தொகை நூல்கள் மிகுந்த கவனத்தைக் கோரி நிற்கின்றன.

தமிழில் சினுவா ஆச்செபியின் மொழிபெயர்ப்பாளராக மலர்ந்துள்ளார் என்.கே.மகாலிங்கம். ஏற்கெனவே ஆச்செபியின் Things Fall Apart எனும் சிறப்புமிக்க நாவலைச் "சிதைவுகள்" எனும் பெயரில் மொழிபெயர்த்திருக்கிறார். அந்த நூல் பெரும் வரவேற்பைப் பெற்றது. அந்த நூலின் தொடர்ச்சியாக ஆச்செபி எழுதியது தான் No Longer at Ease. இதற்கு மகாலிங்கத்தின் தலைப்புத்தான் "வீழ்ச்சி". நூலுக்கு ஜெயமோகன் சுருக்கமான ஆனால் பொருத்தமான முன்னுரை ஒன்றை எழுதியுள்ளார். ஆச்செபியின் நூல்கள் இலக்கிய அழகியற் தரங்களுக்கு அப்பால் காலனித்துவ வாழ்வையும் காலனித்துவ விமர்சனத்தையும் நுட்பமாக முன் வைத்ததில் பெருத்த முக்கியத்துவம் உடையவை. நானூறு ஆண்டுகால காலனியாதிக்கம் இருந்திருந்தாலும் காலனித்துவம் பற்றிய எத்தகைய மகத்தான படைப்புகளும் தமிழில் வெளிவந்ததில்லை. காலனித்துவம் பற்றிய புரிதல் கூட நமது சமூகத்தில் பெரிதளவில் இல்லை. இந்தப் பின்னணியில் தான் ஆச்செபியின் நூல்கள் தமிழில் வெளியாவது மிக அவசியமாக இருக்கிறது. என்.கே.மகாலிங்கத்தின் கடின உழைப்புக்குத் தமிழ்ச் சமூகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

நிகழ்வின் இறுதியில் "வீரர்கள் துயிலும் நிலம்" எனும் தென்மோடி நாட்டுக் கூத்து நிகழ்த்தப்பட்டது. காலனி ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடியவனாகக் கருதப்படும் கட்டபொம்மனின் கதையை நாட்டுக் கூத்தாக செல்வம் அருளானந்தம் எழுதியிருந்தார். ஒன்றரை மணிநேரம் உரிய முறையில் மரபு மீறாது அண்ணாவியார் சவரிமுத்து துணை கொண்டு கட்டபொம்மன் கதை நிகழ்த்தப்பட்டமை பெரும் வரவேற்பைப் பெற்றது. கூத்தில் முக்கிய பாகம் ஏற்று நடித்தவர்களான றெஜி மனுவேற்பிள்ளை, மரியதாஸ் அன்ரனி, மரியதாஸ் அருள்தாஸ் ஆகியோர் பழமையும், புதுமையும் இணைவுற மிளிர்ந்தனர். கத்தோலிக்கக் கூத்து மரபில் ஊறியவரான லெமோ ஜேசுதாசன் கூத்தை நெறியாள்கை செய்திருந்தார்.


புலம்பெயர் சூழலில் Invention of Tradition (மரபின் மீள் கண்டுபிடிப்பு) எவ்வாறு ஆக்க பூர்வமான முறையில் அமையும் என்பதற்கு இந்தத் தென்மோடி நாட்டுக் கூத்து நல்ல எடுத்துக்காட்டாகும். அடுத்தடுத்த தலைமுறைகளில் இத்தகைய மரபுமுறை தொடராது என்பது ஏனைய புலம்பெயர் சமூகங்களின் அனுபவங்களிலிருந்து தெரிந்தாலும் உள்ளவரை உயர்வே என்று நிறைவடைவதைவிட ஈழத்தமிழருக்கு இப்போது வேறு வழி இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து முன்னோடிகள் குறித்த ஒரு முயற்சி

ஆரபி









ஈழத்துத் தமிழுக்கு வளம் சேர்த்த எமது முன்னோடிகள் குறித்து சரியான ஆவணப்படுத்தல்களோ ஏன் அறிமுகக் குறிப்புக்கள் தானும் போதுமானளவுக்கு எம்மிடமில்லை. எமது பாரம்பரியம் குறித்து, எமது வேர்கள் குறித்து பின்னோக்கிப் பார்ப்பதற்கும் அதன் வளத்தையும் செழுமையையும் நவீனத்துவத்துடன், இன்றைய காலத்துடன் இணைப்பதற்கும் இது மிக அவசியமானது. ஈழத்துத் தமிழின், தமிழர்களின் எதிர்காலம் குறித்துச் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் கூட நமது முன்னோடிகள் குறித்த இந்தப் பதிவுகள் அத்தியாவசிய மானவை.

அந்தவகையில் விபுலானந்தரில் இருந்து கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி, பொன்னம்பலம் அருணாசலம், சி.வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், ஞானப்பிரகாசர் வித்துவசிரோமணி கணேசய்யர், பொன்னம்பலம் இராமநாதன், டொக்ரர் கிறீன் என்று மிக நீண்ட முன்னோடிகள் பட்டியலை நாம் அடையாளம் காணலாம்.


உதாரணமாக முன்னோடிகளுள் ஒருவரான விபுலானந்தர் தமிழ், கணிதம், விஞ்ஞானம், இசை, அறிவியல் என்று பரந்த தளத்தில் செயற்பட்டவர். தணியாத் தேடல் மிக்க ஒருவராகவே அவர் வாழ்ந்து மறைந்தார். அதுமட்டுமல்லாது தனது அந்தத் தேடலின் சுவையை நாமும் சுவைக்க வகை செய்தவர். இதேபோன்று இந்த ஆளுமைகள் ஒவ்வொருவரும் ஈழத்துத் தமிழ் வாழ்வும் வரலாறும் வளம் பெற ஆற்றிய பணிகள் ஏராளம்.





இந்த ஆளுமைகள் பற்றிய முழுமையான விபரங்களைத் தரும் பணியை குமரன் புத்தக இல்லம் மேற்கொண்டு வருகிறது. இதில் இதுவரை எட்டு ஆளுமைகள் பற்றிய நூல் வரிசை ஒன்றினை அது வெளியிட்டிருக்கிறது.

இந்த நூல் வரிசை பற்றி குமரன் புத்தக இல்ல பதிப்பாளர் குமரன் பின்வருமாறு கூறுகிறார். "இலங்கைத் தமிழ்ச் சூழலுக்கு எமது ஆளுமைகள் தொடர்பான விபரங்களைக் கொண்ட நூல் வரிசை ஒன்றினை வெளிக்கொண்டு வரும் நோக்கத்துடன் இதனை நாங்கள் ஆரம்பித்தோம். இந்தியாவிலே சாகித்திய மண்டலம் வெளியிடுகின்ற நூல் வரிசை போன்றதாக இவ்வரிசையும் அமைய வேண்டு மென்பது எமது அவாவாக உள்ளது. ஈழத்துத் தமிழ்ச் சூழலில் தாக்கத்தினை ஏற்படுத்திய முக்கியமானவர்களை அது இலக்கியமாக இருந்தாலும் சரி, கலைத்துறை சார்ந்தவர்களா னாலும் சரி, அரசியற்துறை சார்ந்தவர்களானாலும் சரி அவர்களைப் பற்றிய முழுமையான விபரங்களை ஒரு ஐம்பது அல்லது அறுபது பக்கங்களுக்குள் விபரிக்கக் கூடிய முறையில் இவ்வரிசையை நாங்கள் திட்டமிட்டோம். இதன் வாசக இலக்கு பாடசாலை மாணவர்களையும் பொது வாசிப்பில் ஈடுபட்டவர்களையும் அடிப்படையாகக் கொண்டுள் ளது. இவ்வரிசையில் கூடியளவில் புகைப்படங்களையும் அவ்வாளுமைகள் தொடர்பான மேலதிக இணைப்புக்களைத் தரக் கூடிய பின்னிணைப்புக்களையும் முடிந்தவரை சேர்த்து வருகின்றோம். இவ்வரிசை முழுமை பெறுகின்ற போது அத்தொடர் இலங்கைத் தமிழ்ச் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள் பற்றிய முழுமையான தகவல் திரட்டாக அமையும் என்று நாம் நம்புகிறோம்."




இந்த நூல் வரிசை இன்றைய இளையர்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு மிக அத்தியாவசியமான ஒன்றாகும். அது மட்டுமல்லாமல் எல்லோருடைய வீடுகளிலும் இருக்க வேண்டிய ஒரு முக்கிய நூல்திரட்டு எனவும் இதனைக் குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சீரிய முகங்களைச் சுட்டும் கட்டுரைகள்

துளசி

அ. யேசுராசாவின் இலக்கியக் கட்டுரைகள் நேர்த்தியாகத் தொகுக்கப்பட்டு அலை வெளியீடாக இப்பொழுது கிடைக்கின்றன. அச்சிலும், பதிப்பிலும், அழகிலும் மிகுந்த கவனம் எடுக்கப்பட்டு வெளியாகியுள்ள இத்தொகுதியில் யேசுராசா முதன் முதலாக எழுதிய கட்டுரை 'ஒரு வாசகனின் அபிப்பிராயம்' (1971) இடம்பெற்றுள்ளது. அழகியல், அரசியல், இலக்கியமும் பிரச்சாரமும், வைதிக மார்க்ஸியம் போன்றவை குறித்து கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரை விமர்சனத்துக்குள்ளாக்குவதன் மூலம் விவாதங்களைக் கிளப்பிய 'குருக்களை மிஞ்சும் சீடப்பிள்ளை', 'தேசிய இனப்பிரச்சினையும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும்' ஈழத்துத் தமிழ்க் கவிதை ஆய்வரங்கில் யேசுராசா வாசித்த ஆழமான விமர்சனக் கட்டுரை போன்ற சிறப்பான கட்டுரைகளை இந்நூல் கொண்டிருக்கிறது. கூடவே அஞ்சலிக் கட்டுரைகள், மதிப்புரைகள், மூன்று மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் என்பனவும் இடம்பெற்றுள்ளன.

வழுவற எழுத வேண்டும் என்ற விருப்பும், தெரிவும் தனது வாதங்களுக்கான சான்றுகளைத் தருவதும் அவ்வப்போது அடங்கிய கோபத்துடன் பெய்யப்பட்டிருக்கும் வரிகளும் அங்கதச் சிரிப்பும் யேசுராசாவுக்கு உரியவை. அவை உரிய முறையில் பொருத்தமான தளத்தில் இடம்பெறுவது வாசிப்பை ஆர்வமும், சுவையும் மிக்கதாக மாற்றி விடுகின்றன. மூன்றாவது மனிதனில் இடம்பெற்ற அவரது நேர்காணலை தொகுப்பில் முதற்படைப்பாக அவர் சேர்த்திருப்பது ஏனைய கட்டுரைகளை வாசிப்பதற்குரிய பின்னணியை வழங்குகிறது.

யேசுராசாவின் ரசனையும், உணர்திறனும், ஆளுமையும் சார்ந்து அவர் முன்வைக்கிற விமர்சனக் குறிப்புகளை, அவரே சொல்வது போல 'பரிசீலனைக்குரிய முன்வைப்புக்களாகக்' கொள்ள முடியும். தன்னுடைய விமர்சனப் பார்வை குறித்த தெளிவும், அப்பார்வையின் கூறுகள் எவை என்பதையும் தனது கட்டுரைகளில் அவர் தெளிவாகக் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக அமரதாஸ், றஸ்மி, கருணாகரன், அஸ்வகோஸ் ஆகிய




கவிஞர்களைப் பற்றிய தனது விமர்சனக் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'தன்னுணர்வுமிக்க ஒரு கவிஞன் கருதியது தெளிவாக - இறுக்கமாக - பிசிறல்களை வெளிப்படுத்துகிறதா? அவனது உணர்வு என்னைத் தொற்றுகிறதா என்பனவே எனது அக்கறைகள்'.

அந்த அக்கறையின் வழி இயங்குவது விமர்சனத்தின் ஒரு தளம்தான். வேறு தளங்கள் சாத்தியமா? படைப்புக்கும், சூழலுக்குமிடையே என்ன இடைத்தாக்கம் நிகழ்கிறது. ஒரு படைப்பாளியின் படைப்பில் காலம் எத்தகைய மாற்றங்களைச் சேர்த்திருக்கிறது? அக்கறைகளுக்கு அப்பாற்பட்ட அரசியல் என்ன? போன்ற கேள்விகளை விமர்சனத்தின் ஏனைய தளங்கள் சார்ந்து எழுப்பலாம். யேசுராசாவின் விமர்சனங்கள் இந்தத் தளங்கள் நோக்கி நகர்வது தேவை.

சு.ரா, ஏ.ஜே பற்றிய யேசுராசாவின் கட்டுரைகள் உயர்ந்தவை. ஆளுமைகளை மதிப்பிடுகிற பொழுது அவர்களுடைய பன்முகங்களையும் கூடவே அவர்களோடு பழகிய அனுபவங்களினூடாகப் பெற்ற அகப் பரிமாணங்களையும் நுணுக்கமாக இணைத்து எழுதப்படுகிற கட்டுரைகள் மிகவும் குறைவு. அந்த வகையில் யேசுராசாவின் கட்டுரைகள் மிகுந்த கவனத்தை ஈர்ப்பன.

அயராமல், தொடர்ச்சியாகவும், வேட்கையுடனும் இலக்கியத்துள் ஆழ நடம் புரியும் ஒரு மனிதனின் சீரிய முகங்களைச் சுட்டும் கட்டுரைகள் இத்தொகுதியிலுள்ளன எனலாம்.

●

**பெரிய எழுத்து**
**த.மலர்ச்செல்வன்**
**வெளியீடு: மறுகா.**
**ஆரையம்பதி - மட்டக்களப்பு**
**பக்கங்கள்: 78**
**விலை: ரூபா 175.00**




**மரண நிழல் எங்கும் படிந்து கிடக்கின்றது. எப்போதும் மனம் வாழ்வின் இறுதி பற்றியே பேசுகிறது. இக்கணத்திலே என்னால் ஜீரணிக்க முடியாத சில தூண்டல்கள் படைப்பாகியிருக்க வேண்டும். அப்படைப்பு வாழ்வின் நெருடல்களைக் கொப்பளித்து இருக்கின்றது என்கிறார் மலர்ச்செல்வன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வன்னியின் நிறங்கள்

ரவி

ஈழத்திலே நாவல்கள் கூடுதலாக வெளியான காலமாக எழுபதுகளைக் கருத முடியும். அருள் சுப்பிரமணியத்தின் அவர்களுக்கு வயது வந்துவிட்டது. பாலமனோகரனின் நிலக்கிளி, செங்கை ஆழியானின் வாடைக்காற்று, காட்டாறு, தலித் இலக்கியமென இன்று சொல்லப்படும் தாழ்த்தப்பட்டவர்கள் பற்றிய நாவல்களை எழுதிய டானியல், அவரது நாவலான பஞ்சமர் இவையெல்லாம் எழுபதுகளில் வெளிவந்தவை. தலித் இலக்கியத்தின் முன்னோடியாக தமிழகத்தவராலும் போற்றப்படுபவர் கே.டானியல். நிறைய எழுத்தாளர்களின் பல நல்ல நாவல்கள் இந்தக் காலப் பகுதியில்தான் வெளியாகின. அதற்கேற்ற சூழல் அக்காலப் பகுதியில் நிலவியது. முக்கியமாக வீரகேசரி வெளியீடாகப் பல நாவல்கள் பிரசுரிக்கப்பட்டன. தென்னிந்திய நாவல்களின் இறக்குமதியும் தடைசெய்யப்பட்டிருந்தது. இவையெல்லாம், ஈழத்து எழுத்தாளர்களுக்குப் புத்துணர்வை ஊட்டின. கல்கி, சாண்டில்யன், லக்ஷ்மி, மு.வரதராசன் எனத் தமிழக எழுத்தாளர்களையே தமது ஆதர்ச எழுத்தாளர்களாகக் கருதி வந்த வாசகர்களுக்கு எமக்கு என்று ஒரு இலக்கியம் உண்டு என்பதை விளங்கிக் கொள்ள வைத்ததும் எழுபதுகள்தான்.

ஆனால் அதற்குப் பின்னர் நாவல் இலக்கியத்தைப் பொறுத்தவரை ஒரு தளர்ச்சி ஏற்பட்டது. எழுபதுகளில் முனைப்புடன் எழுதிய பல எழுத்தாளர்கள் தமது முயற்சியைக் கைவிட்டவர்களாக வேறு விடயங்களில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கியிருந்தனர். ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை நிலைமையைத் தலைகீழாக மாற்றியிருந்தது. 1982இல் தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்பட்ட பின்பு வாசிப்புப் பழக்கம் மெல்ல அருகத் தொடங்கிவிட்டது.

இத்தகையதொரு காலகட்டத்திற்தான் நீ.பி.அருளானந்தம் எழுதிய வாழ்க்கையின் நிறங்கள் நாவல் பலரது அவதானிப்புக்கு உள்ளாகியுள்ளது. நாற்பது வருடங்களுக்கு முன்னம் இருந்த வவுனியா நகரின் சூழ்நிலையையும் அவ்விடத்து மக்களின் வாழ்க்கை நிலையையும் எடுத்துக் காட்டுவதாக நாவலின் கதை அமைந்திருக்கிறது. வன்னி மண்ணின் வனப்பை நிலக்கிளி, காட்டாறு போன்ற நாவல்கள் சிறப்பாக சித்தரித்துள்ளபோதும் வவுனியா நகரை முதன்மைப்படுத்தி இந்தளவுக்குச் சிறப்பான நாவல்




இதற்கு முன்னர் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை.

மாட்டுவண்டில் சவாரிப்போட்டிகள் மக்களை எந்தளவுக்குப் பாதித்திருந்தன என்பதை இந்த நாவல் வெளிக்கொண்டு வந்துள்ளது. அடுத்து வேட்டைத்தொழில். வேட்டை என்று சொல்லி தனது வாழ்க்கையை அவமாக்கும் நடுத்தர வயதினர் ஒருவரின் கதையும் இங்கே சொல்லப்படுகிறது. இதனால் அந்தக் குடும்பம் படும் கஷ்டம் இவைகளை இங்கே விபரித்துள்ளார். நாற்பது வருடங்களுக்கு முன்பு நடந்த விடயங்களை தரிசிக்க வைப்பதாக பல விடயங்கள் வாழ்க்கையின் நிறங்கள் நாவலிலே காணப்படுகின்றன. தமிழர் பிரதேசங்களில் மாட்டுவண்டில் சவாரி பிரபலமான விளையாட்டாக அண்மைக்காலம்வரை நிகழ்ந்துள்ளது. வண்டிச்சவாரிக்காக மாடுகள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. போட்டியில் வெல்வதற்காக சவாரிக்காரர்கள் எவ்வகையான உத்திகளையெல்லாம் பயன்படுத்துகிறார்கள். போன்ற விடயங்கள் எல்லாம் இங்கே விரிவாகத் தரப்பட்டுள்ளது. மாடுகள் செங்காரி, மயிலை என்றெல்லாம் வகைப்படுத்தப்படுகின்றன. செங்காரி மற்றும் மயிலை மாடுகள் வீட்டுக்கு நல்லம் எனச் சொல்லப்பட்டுள்ளது. செங்காரியிலும் அதிகம் சிவப்பாக இருக்கக் கூடாது குறைவான செங்காரியாய் இருந்தால்தான் அது நல்லமாடு. மயிலை என்றாலும் கணக்காய் குறைந்தளவு மயிலையாய் இருக்கிற மாடுகள்தான் செல்வத்தை கொண்டுவரும். நெற்றிச்சுழி ஏறுசுழியாய் இருக்கிற மாடுகள் நிமிர்ந்து நடக்குமாம். இடது பக்கம் விரிசுழி, வயித்திலே புள்ளி, வால் எலிவால்போல் இருத்தல். முழங்காலுக்கு மேல் குஞ்சமிருத்தல், ஏரியில் சுழியிருத்தல் இவைபற்றி எல்லாம் நுணுக்கமாய் தரப்பட்டுள்ளது.

இப்படி கிராமிய மட்டத்தில் நிலவி வரும் பல நடைமுறைகளை இந்த நாவலில் காணமுடிகிறது. வண்டில் சவாரியில் சவாரி செய்பவரோடு கூடவே இன்னொருவரும் இருப்பார். அவரை ஏவலாள் என்பார்கள். அவர் மாடுகளுக்கு அறிமுகமில்லாத புதியவராகக் காணப்படுவார். மாடுகளைப் பயமுறுத்தி வேகமாக ஓட வைப்பது அவரது வேலை. மாடுகள் வேகமாக ஓடவேண்டும் என்பதற்காக வாலை முடுக்கிவிடுவது, கூரிய ஆயுதங்களால் குத்துவது, வாலைக் கடிப்பது இவையெல்லாம் ஏவலாளரின் பணிகள். வாயில்லா ஜீவன்களை இவ்வாறு வருத்தித்தான் மாட்டுவண்டில் சவாரியில் வெற்றி பெறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வவுனியாவில் முன்பு வேட்டை தொழிலில் ஈடுபட்டவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவரை வாழ்க்கையின் நிறங்கள் நாவலில் உலவவிட்டுள்ளார் நீ.பி.அருளானந்தம். வேட்டைத்தொழிலில் ஈடுபடுபவர்களின் குடும்பங்கள் உருப்படாது என்பது மக்களின் நம்பிக்கை இங்கே பொன்னுத்துரையரின் மகன் சேனாதி வேட்டைத் தொழிலை நம்பி வாழ்பவர். சேனாதியின் பொறுப்பற்ற போக்கினால் அவரது குடும்பம் சொல்லொண்ணா துயரங்களை அனுபவிக்கின்றது. அவரது பிள்ளைகளில் இரண்டை பொன்னுத்துரையரும் மனைவியும் வளர்க்கின்றனர். சேனாதிக்குத் தகப்பனைப் பிடிக்காது. பொன்னுத்துரையருக்கும் மகனைக் கண்டாலே வெறுப்பு. அவன் ஒன்றுக்கும் உதவாத ஊதாரி என்பது அவர் கணிப்பு.

பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர் நிலக்கிளி நாவல் பற்றிக் குறிப்பிடும்போது பாலமனோகரன் வன்னி மண்ணில் பிறந்தவர் அந்த மண்ணில் வாழ்ந்து தளிர்நடை பயின்று வளர்ந்தவர். அதனால்தான் நிலக்கிளி நாவலை மண்ணின் மணம் வீசும் நாவலாக அவரால் எழுத முடிந்தது. எனக் குறிப்பிடுகிறார். அவரது குறிப்பு வாழ்க்கையின் நிறங்கள் நாவலுக்கும் பொருந்தும்.


ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப வெளிச்சம் பரப்புகிற நிறங்களைக் கொண்டதாக இருக்கிறது. மனிதரின் இயல்புகளும் பொதுவான போக்குகளும் வாழ்க்கையை நிறம் இழக்கச் செய்கின்றன. என்றாலும் மனிதர்கள் நம்பிக்கையோடு ஒளிமயமான எதிர்காலம் வரும் என்ற மன உறுதியோடு வாழ்ந்து செயல் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இதை இந்த வாழ்க்கையின் நிறங்கள் என்ற நாவல் நன்றாக உணர்த்துகிறது என வல்லிக்கண்ணன் குறிப்பிட்டுள்ளார். மாற்றங்களை மறுப்பதற்கில்லை, கபளீகரம், ஆண்மைக்குணம், கறுப்பு ஞாயிறு ஆகிய சிறுகதை தொகுதிகளையும் நீ.பி.அருளானந்தம் எழுதியுள்ளார். அவரது கறுப்பு ஞாயிறு சிறுகதைத்தொகுதி 2006ஆம் ஆண்டு அரசின் சாகித்திய விருதைப் பெற்றுள்ளது. நீ.பி. அருளானந்தத்தின் பல சிறுகதைகள் தமிழகத்தில் வெளியாகும் தாமரை, கணையாழி சஞ்சிகைகளில் பிரசுரமாகியுள்ளன. இவரது எழுத்துகள் ஈழத்து இலக்கியத்துக்கு மேலும் அணி சேர்க்கிறது என்பது உண்மை.

●

நம்மைப் பற்றிய கவிதை
ஆகர்ஷியா
வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம்.
பக்கங்கள்: 70
இந்திய விலை: ரூபா 50.00





எளிமையான வார்த்தைகளாலும், புதிய படிமங்களாலும் நமது அன்றாட வாழ்க்கையை மாற்றிவிடுகிற ரசவாதம் ஆகர்ஷியாவின் கவிதைகளில் கிடைக்கிறது. பிரிவு, நேசம், யுத்தம், இழப்பு உள்ளடங்கிய வேட்கை, சிறிய இன்பங்கள், பெரிய துன்பங்கள் என வாழ்வின் எல்லாப் பரிமாணங்களுமே நுட்பமாக இவரது கவிதைகளில் பதிவு பெறுகின்றன. பெயருக்கேற்றபடி ஆகர்ஷிக்க வைக்கும் கவிதைக் குரல் இவருடையது.




முகமூடி செய்பவள்
விஜோதினி
வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம்.
பக்கங்கள்: 87
இந்திய விலை: ரூபா 60.00

நவீன தமிழ்க் கவிதையில் விஜோதினியின் கவிதைக் குரல் ஒரு புதுக்குரல். போரின் வெம்மையும், காதலின் நெருப்பும், துயரத்தின் படர் தாமரையும் சூழ்ந்து கிடக்கிற ஒரு நிலக் காட்சியின் அற்புதமான, ஆனால் வலியைக் கிளப்புகிற குரல். மொழியின் வனப்பும், தொனியின் சிறப்பும், ஆசையும், நிராசையும் பிரிவறக் கலக்கும் ஒரு நூதனமான வெளியுமென இவரது கவிதைகள் நமது அனுபவப் பரப்பை அகலப்படுத்துகின்றன. பெயரில் மட்டுமல்ல – இவரது கவிதைகளிலும் இருக்கிறது விநோதம்.

எனக்குக் கவிதை முகம்
அனார்
வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம்.
பக்கங்கள்: 55
இந்திய விலை: ரூபா 40.00



ஈழத்தமிழின் நவீன கவிதைக்குப் புதிய முகங்களைத் தருபவராக இருக்கிறார் அனார். அவருடைய கவிதைகளைத் திருப்பித் திருப்பிப் படிக்கிறபோது வேட்கையும் காதலும் மேலெழுகின்றன. தனிமையும் காத்திருப்பும் எரித்தாலும் உடல் சுடர்விடுகிறது. பதற்றமும், பீதியும் சூழ்கின்றன. திசைகள் குழம்பித் தத்தளிக்கின்றன இருந்தாலும் அனாருடைய கவிதைகள் தீட்டும் அரசியல் சித்திரம் மிகவும் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா அரங்காடல்

# ஈழத்தமிழுக்கு மெருகு!

- சுப்பு -





கனடாவில் நல்ல நாடகங்களையும் கலா நிகழ்வுகளையும் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்த்தி வருகிற மனவெளி கலையாற்றுக் குழுவினரின் பதினான்காவது அரங்காடல் இந்த ஆண்டும் ஜூலை மாதம் இரண்டு காட்சிகளாக ரொறான்ரோவில் நிகழ்த்தப்பட்டது. திறமையும், உழைப்பும், விடாமுயற்சியுமிக்க நாடக நெறியாளர்களும் அற்புதமான நடிகர்களும் கனடியத் தமிழ் நாடக அரங்கச் சூழலில் உருவாகியிருக்கிறார்கள் என்பதற்கு இம்முறை அரங்காடல் நிகழ்வும் சான்றாக அமைந்திருந்தது. கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ் நாடக இயக்கம் கனடாவில் துடிப்புடன் இருந்து வருகிறது. அவ்வப்போது "இடைவெளிகள்" ஏற்பட்டாலும் மனவெளி, நாளை நாடகப் பட்டறை (ஜெயகரன்), கூத்தாடிகள் (ஞானம் லம்பேட்), உயிர்ப்பு பெண்கள் பட்டறை (சுமதி ரூபன்), கருமையம் போன்ற அமைப்புக்கள் நாடக வெளியில் இயங்கி வருகின்றன.

இந்த ஆண்டு அரங்காடல் நிகழ்வில் மூன்று நாடகங்களும் ஒரு கவிதா நிகழ்வும், நடன நிகழ்வு ஒன்றும் இடம் பெற்றன. நோபல் பரிசு பெற்ற கரோல்ட் பின்டரின் The New World எனும் நாடகத்தைத் தமிழ்மயப்படுத்தி மேடையேற்றினார் துஷி ஞானப்பிரகாசம். 1991இல் முதல் வளைகுடாப் போர்க் காலகட்டப் பகுதியில் எழுதப்பட்ட இந்நாடகம் "இப்பொழுதும், எப்பொழுதும்" என்ற பொருத்தமான தலைப்போடு கச்சிதமாக மேடையேற்றப்பட்டது. ஆற்றலும், தேடலும் மிக்க நெறியாளராக துஷி ஞானப்பிரகாசம் விளங்குகிறார். அயனெஸ்கோவின் The Lesson என்ற நாடகத்தின் தமிழ் வடிவத்தை (பிரதி: பென்னேஸ்வரன்) "அரி ஓம் நம" என்னும் பெயரில் அபுராந்தகன் மிகச் சிறப்பாக நெறிப்படுத்தியிருந்தார். அர்த்தமும் அபத்தமும், மேதமையும் விசர்த்தனமும், அறிவும் அறியாமையும் பல சந்தர்ப்பங்களில் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களே என்பதை உயிர்ப்போடு சித்திரிக்கும் அயனெஸ்கோவின் உன்னதமான பிரதிக்கு அழகாக நியாயம் செய்திருந்தார்கள் நெறியாளரும், நடிகர்களும்.

கனடாத் தமிழ்ச் சமூகத்தில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே ஏற்பட்டு வருகிற தலைமுறை இடைவெளிப் பிரச்சினை நளினமாகவும், நகைச்சுவையாகவும் யதார்த்தம் மிக்கதாகவும் சித்திரித்திருந்தது. இரண்டுக்கும் நடுவே பிரதி: (சிவமணி, இயக்கம்: இளையபாரதி) எனும் நாடகம். கருத்தியல் சார்ந்து சிக்கலான விவாதங்களை எழுப்பக் கூடிய பிரதி எனினும் உயரிய நடிப்பும் லாவகமான நெறியாள்கையும் மெச்சத்தக்கதாக அமைந்தது.

கவிஞர் சி.சிவசேகரத்தின் சில கவிதைகளைத் தொகுத்து "சாகாத சரித்திரங்கள்" என்ற பெயரில் கவிதா நிகழ்வொன்றைக் கவிஞர் வி.கந்தவனம் இயக்கியிருந்தார். வி.திவ்வியராஜன், கணபதி ரவீந்திரன், ராஜ்மீரா இராசையா ஆகியோர் பண்பட்ட முறையில் கவிதைகளை நிகழ்த்தினர். அமெரிக்க வல்லாட்சி, நமது விடுதலை, தொடர்ந்த எதிர்ப்புப் போன்றவற்றை மையங் கொண்ட பொருத்தமான கவிதைகள் இடம் பெற்றிருந்தன. சலிப்பூட்டும் வகையில் மரபார்ந்த பரத நாட்டியமே பெரிதும் கோலோச்சி வருகிற சூழலில் நிறங்களுக்கான புதிய விளக்கங்களை நடனப் படிமங்களுடாக மேடையில் கொண்டு வந்த ஆடல் நிகழ்வுக்கு "நிறங்களின் நிஜங்கள்" என்று தலைப்பிட்டிருந்தார் நர்த்தகி ஆனந்தி சசிதரன். பல்லாயிரக்கணக்கானோர் மொழியும், உயிர்ப்புமின்றி பரதத்தையும், ஆடற்கலையையும் சிரச்சேதம் செய்கிற புலம்பெயர் தமிழ்ச் சூழலில் நவீன சிந்தனையும், புதிய படிமங்களும் அத்திபூத்தாற்போல இடம்பெறுகின்றன. அந்த வகையில் இம்முயற்சி குறிப்பிடத்தக்கது.

பொருள் வளமும், மனித வளமும் நன்கு வாய்க்கப் பெற்றுள்ள கனடியத் தமிழ்ச் சமூகம் ஈழத் தமிழ்த் தனித்துவத்திற்கு ஏதாவது செய்ய முடியுமெனில் அது கலைகளுடாகவும், இலக்கியத்தூடாகவும், மொழிப் பேணுகைக்கு ஊடாகவும் மட்டுமே சாத்தியம். அரங்காடல் போன்ற நிகழ்வுகளின் ஒழுங்கு தொடர்ச்சியும், வீச்சும் பரவலும் இத்தகைய தனித்துவத்திற்கு மெருகூட்டலாம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர்களின் ஆற்றல்களைக் கொண்டாடிய சிறுவர் திருவிழா

# -2007-

து. கௌரீஸ்வரன்

சிறுவர்கள் பற்றிய அக்கறை என்பது எம்மிடையே சற்றுக்குறைவானது. அதிலும் சிறுவர்கள் பற்றி, அவர்களுடைய உலகம் பற்றி நாங்கள் அதிகம் கவனம் கொள்வதில்லை. ஆனால் போர் மற்றும் சுனாமி காரணமாக பெற்றோரையும் சுற்றத்தையும் இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அத்தகைய சிறுவர்களுடைய காப்பிடமாக சிறுவர் இல்லங்கள் திகழ்கின்றன. இந்தச் சிறுவர் இல்லங்களில் வாழ்கின்ற சிறுவர்கள் பற்றிய பார்வையானது, வெளிச் சமூகங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுவர்கள் பற்றிய பார்வையிலிருந்து வேறுபட்டதாகவே இருந்து வருகிறது. குறிப்பாக சிறுவர் இல்லங்களில் வாழ்கின்ற சிறுவர்கள் ஆதரவற்றவர்களாகவும், பரிதாபத்திற்குரியவர்களாகவும் பார்க்கப்படும் இதேவேளை இச்சிறுவர்களுக்கு உதவுவது புண்ணியத்திற்குரிய செயலாகவே கருதப்பட்டு வருகிறது.

இது ஒரு புறம். மறுபுறம் இந்தச் சிறுவர் இல்லங்கள் பெருமளவுக்கு ஏதோவொரு மதச்சார்புடைய நிறுவனங்களாலேயே நடாத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக சிறுவர் இல்லங்களில் வாழ்கின்ற சிறுவர்கள் மீது அவ்வச் சிறுவர் இல்லங்கள் சார்ந்த மத அடையாளங்களும், மதம் சார்ந்த பழக்க வழக்கங்களும் மிகவும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கச் செய்யப்படுவதனைக் காண முடிகிறது. மத அடிப்படைவாதக் கூறுகள் வேர்கொள்ளும் இடங்களாகவும் சிறார்கள் மீது அவை திணிக்கப்படும். இடங்களாகவும் இந்தச் சிறுவர் இல்லங்கள் காணப்படுகின்றன. ஆனால் ஒப்பீட்டளவில் இந்தச் சிறுவர் இல்லங்களுக்கு வெளியே எமது சமூகத்தில் வாழ்ந்து வரும் சிறுவர்கள் மீது இத்தகைய கட்டுப்படுத்தல்கள் மிகக் குறைவாகத் தானிருக்கிறது.

இத்தகைய மாறுபட்ட பார்வையானது ஆக்கபூர்வமான சமூகங்களின் உருவாக்கத்திற்கு பங்கம் விளைவிக்கும் காரணிகளுள் ஒன்றாக உள்ளது. இன்றைய சூழலில் சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வரும் சிறுவர்களும் சாதாரணமாக சமூகங்களில் வாழ்கின்ற சிறுவர்களைப் போன்றவர்கள்தான், என்கின்ற எண்ணத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் சிறுவர் இல்லத்துச் சிறுவர்கள் பற்றிய உரையாடல்களை சமூகத்தின் சகல மட்டத்திலும் நிகழ்த்தும் நோக்குடனும், சிறுவர் இல்லத்துச் சிறுவர்களினுடைய கலையாற்றல்களினுடைய வெளிப்பாடுகளின் தொகுப்பாக சிறுவர் திருவிழா ஒன்று மூன்றாவது கண்ணால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக்குழு, மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் மற்றும் Association Friends of Children amici dei bambini என்பவற்றுடன் இணைந்து மட்டக்களப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 சிறுவர் இல்லங்களில் இச்சிறுவர் திருவிழா மட்டக்களப்பில் நடாத்தப்பட்டது.

சிறுவர் இல்லங்களில் வாழ்கின்ற சிறுவர்கள் தம்மைப் போன்று ஏனைய சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுவர்களைச் சந்தித்து அவர்களுடன் ஊடாடி அவர்கள் மத்தியில் தமது வித்தியாசம் வித்தியாசமான ஆற்றல்களைத், திறன்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான சூழ்நிலைகள் இச்சிறுவர் திருவிழா மூலம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

14 சிறுவர் இல்லங்களையும் சேர்ந்த சிறவர்கள் சகோதர மனப்பாங்குடனும், நட்புடனும், பரஸ்பரப் புரிந்துணர்வுடனும் விழா ஒழுங்கமைப்பு வேலைகளிலும், விழா ஆற்றுகைகளிலும் பங்கு கொண்டார்கள்.

ஓவியம் வரைதல், வண்ணங்களைக் கையாளுதல் என்பது சிறுவர்களிடையே நேர்த்தியான செயற்திறனையும், மன ஒழுங்குமுறையையும் வளர்ப்பதுடன் சிறுவர்களின் சுதந்திரமான சிந்தனைகளைத் தூண்டுவதற்கும், சிறுவர்களின் ஆழ்மன உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் வழிபுரியும் எனும் நோக்குடன் சிறுவர்களுடனான கலையாக்கச் செயற்பாடுகளில் ஓவியம் வரைதலும், வண்ணங்களைக் கையாளுதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விதம் சிறுவர்கள் வண்ணங்களைக் கையாண்டு உருவாக்கிய ஓவியங்கள் சிறுவர் திருவிழாவின் கண்காட்சிகளுள் முக்கியமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. சிறுவர்கள் பலர் ஒன்று சேர்ந்து வரைந்த தொடர் ஓவியத்திலும் மற்றும் சுயபிரதிமை ஓவியங்கள், உயிரங்கிகள், விதம்விதமான தாவர இலைகள் குறித்த ஓவியங்களிலும், சிறுவர்கள் வண்ணங்களைப் பயன்படுத்தியுள்ள விதமும் அதிலுள்ள செய்நேர்த்தியும் அழகுபடுத்த மேற்கொண்டுள்ள விதம் விதமான வடிவமைப்புகளும் செம்மைநுட்பமான சிறந்த அழகியல் உணர்வு கொண்ட எதிர்கால ஓவியர்களுக்கான ஆரம்பத்தினைச் சுட்டிக் காட்டி நின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியங்களுடன் இணைந்ததாகச் சூழலில் கிடைக்கும் இயற்கை வளங்களைக் கொண்டு சிறுவர்கள் உருவாக்கிய ஆபரணங்கள், விதம்விதமான உருவங்கள் என்பனவும் கண்காட்சியை அழகுபடுத்தியிருந்தன. இப்படைப்புக்கள் சிறுவர்களின் நுண்ணிய கை வேலைப்பாடுகளின் திறனையும், செய் நேர்த்தியையும் அவர்களின் கற்பனைத்திறனையும் வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தன.

எமது பண்பாட்டில் ஏனையோரை அச்சங் கொள்ளச் செய்வதற்காக உருவாக்கும் வெருட்டி உருவங்களை வெருட்டியாக இல்லாமல் அனைவரும் விரும்பிப் பார்க்கும் வகையிலான விரும்பிகளாக உருவாக்கும் செயற்பாட்டினை மூன்றாவது கண், சிறுவர்களுடனான கலையாக்கச் செயற்பாடுகளின் போது மேற்கொண்டுள்ளது. இவ்விதம் சிறுவர்கள் மகிழ்வாக ஒன்று கூடி உருவாக்கிய விதம் விதமான விரும்பிகள் கண்காட்சியில் கொலு வைக்கப்பட்டிருந்தமை அனைவரதும் கவனத்தை ஈர்த்துக் கொண்டது.



இத்தோடு சிறுவர்களுடனான கலையாக்கச் செயற்பாடுகளின் போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் பலவும் இத்திருவிழாவில் ஓவியர் சுசிமன் நிர்மலவாசனின் வடிவமைப்பில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தது. இது கலாபூர்வமான புகைப்படக் கண்காட்சியாக அமைந்திருந்தது.

சிறுவர் திருவிழாவின் கலை நிகழ்வுகளில் ஒன்றாக சிறுவர்களின் பாரம்பரிய வாத்திய இசைக் கோலங்கள் கலையாக்க மன்றமூடாக ஆற்றுகை செய்யப்பட்டன. பாரம்பரிய தோல் வாத்தியங்களான பறை, உடுக்கு, மத்தளம் என்பவற்றினைப் பயன்படுத்தி சிறுவர்கள் ஆர்வத்துடனும், குதூகலத்துடனும் இசைக் கோலங்களை ஆற்றுகை செய்து மகிழ்ந்தார்கள்.

இவ்விழாவின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுள் ஒன்றாக சிறுவர்கள் உருவாக்கிய பாடல்களின் இசை நிகழ்ச்சி அமைந்திருந்தது. சிறுவர்கள் பல குழுக்களாக ஒன்றிணைந்து பாரம்பரிய மெட்டுக்களில் பாடிய பாடல்கள், சிறுவர்களின் ஆக்கத்திறன்களை ஆக்கபூர்வமாக வெளிப்படுத்திய ஊடகங்களாக இருந்ததுடன், சிறுவர்களின் உலக நோக்குகளை பெரியவர்கள் புரிந்து கொள்ள உதவிய சிறுவர்களின் குரல்களாகவும் அமைந்திருந்தன.

சிறுவர் திருவிழாவின் மாலை நிகழ்வுகளில் சிறுவர்களின் அரங்க ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டன. பாரம்பரிய ஆட்டக் கோலங்களும், சிறுவர் நாடகங்களும் இதில் முக்கியம் பெற்றிருந்தன. சக நண்பர்கள் வாத்தியங்களை இசைத்துத் தாளம் சொல்ல மற்றைய நண்பர்கள் ஆர்வத்துடன் பாரம்பரிய ஆட்டக்கோலங்களை ஆற்றுகை செய்தார்கள்.

பாடுவதும், ஆடுவதும், தாள வாத்தியங்களை இசைப்பதுவும் சிறுவர்களுக்கு விருப்பமான செயற்பாடுகள். இத்தகைய செயற்பாடுகள் சிறுவர்களின் சுய வெளிப்பாட்டிற்கான அவர்களது படைப்பாக்க விருத்திக்கான உந்துதலை வழங்கக் கூடியதாக இருத்தல் அவசியம். இன்றைய சூழலில் ஆடல், பாடல் என்பது சிறுவர்களை வெறுமனே நுகர்வு நிலையில் மாத்திரம் வைத்திருப்பதாகவே இருந்து வருகின்றது. இதற்கு அடிப்படையாகச் சினிமா தொழிற்படுகின்றது.

இப்பின்னணியில் சிறுவர்களின் சுயாதீனமான படைப்பாக்க வல்லமையும், கற்பனைத் திறனும், ஆக்கபூர்வமான தன்மைகளில் வெளிப்படும் வகையில் பாடலாக்கமும், நடனமாடுவதும், வாத்தியங்கள் இசைப்பதுவும் சிறுவர் திருவிழாவில் இடம்பெற்றமை கவனத்திற்குரிய நிகழ்வாக அமைந்திருந்தது.

சிறுவர்கள் தமக்கு விருப்பமான கதைகளை ஆக்கபூர்வமான வகையில் நடனங்களாக ஆற்றுகை செய்தார்கள். இவ்வாற்றுகையில் பங்குகொண்ட சிறுவர்கள் உரிய நேரத்திற்கு முன்னரேயே ஒப்பனைகளை மேற்கொண்டும், வேட உடைகளை அணிந்து கொண்டும் ஏனைய சிறுவர்களுடன் உரையாடி, ஊடாடிய விதம் சிறுவர் அரங்கின் உண்மையான நோக்கத்தை நேரடியாகக் காணும் அனுபவத்தை வழங்கியது.

மிருகங்கள் போல் உடையணிந்து ஒப்பனையிட்ட சிறுவர்கள் சிலர் ஆற்றுகைகளைப் பார்வையிட்ட வண்ணமிருந்த சிறுவர்கள் மத்தியில் சென்று நீங்கள் எங்களைப் பார்த்துப் பயப்படாதீர்கள் நாங்கள் மிருகங்கள் போல் வேசமிட்டுள்ளோம் என்று கூறி மகிழ்ந்தார்கள். இச்சிறுவர் திருவிழாவில் கதை சொல்லியாக வந்த நபர், சிறுவர்களின் வேறுபட்ட ஆற்றல்களை வெளிக் கொண்டு வருபவராகவும், சிறுவர்களுடன் கூடி, ஓடி, ஆடிபாடி மகிழ்வித்து அறிவூட்டலை மேற்கொள்பவராகவும் சிறுவர்களின் படைப்பாக்க வல்லமையைத் தூண்டக் கூடியவராகவும் பல்துறை ஆற்றல் வெளிப்பாடுகள் நிரம்பியவராகச் செயற்பட்டார். கதைசொல்லியுடன் சிறுவர்கள் உற்சாகமாகவும் குதூகலத்துடனும் ஊடாடிய விதம் மூன்றாவது கண் அறிமுகம் செய்யும் பல்துறை ஆற்றல்களுள்ள கதைசொல்லிகளின் தேவையை உணர்த்தி நின்றது.

இத்துடன் சிறுவர்களின் எழுத்தாக்கங்களை வெளிப்படுத்தும் வகையிலான "முளை" சஞ்சிகையும், சிறுவர்களின் ஆற்றுகைகளை உள்ளடக்கிய "ஆற்றல்" எனும் இறுவட்டும் இத்திருவிழாவில் மூன்றாவது கண்ணால் வெளியிட்டு வைக்கப்பட்டன. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ்ப்பாணத்தில்


# கலை இலக்கிய நிகழ்வுகள் - ஒரு நோக்கு

நெடுவல்


















யாழ்ப்பாணத்து மக்கள் 11.08.2006 காலப்பகுதியிலிருந்து முனைப்புடன் தலைதூக்கியுள்ள ஊரடங்கு உத்தரவு, அடையாளந் தெரியாத நபர்களால் சுட்டுக்கொலை, ஆள்கடத்தல், அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையேற்றமும், தட்டுப்பாடுமென பல்வேறு அசம்பாவிதங்களாலும் மோசமான மன அழுத்தத்திற்குள்ளாகி வருவதாக உளவளத்துணையாளர்கள் தெரிவிக்கின்றனர். இம்மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான மாற்றுவழிகளை ஒழுங்கமைக்கத் தவறுமிடத்து மனநோயாளர்களினது எண்ணிக்கை யாழ் குடாநாட்டில் எதிர்வரும் காலங்களில் சடுதியாக அதிகரிக்குமெனவும் இவ்வுளவளத்துணையாளர் எச்சரிக்கையொன்றையும் விடுத்துள்ளமை கவனிக்க வேண்டியதாகும்.

அண்மைக்காலமாக ஒரு மரண வீட்டினைப் போலிருக்கிறது யாழ்ப்பாணம். நாளொன்றிற்கு ஆகக்குறைந்தது ஒருவராவது சுட்டுக்கொல்லப்படுகின்றார். இது நாளாந்தம் மக்கள் எதிர்பார்க்கும் நிகழ்வாகி வருகிறது. இந்நிலையில் உளவளத்துணையாளர்கள் மனஅழுத்தக்குறைப்பிற்கான மாற்றுவழிகளில் ஒன்றெனப் பரிந்துரைக்கும் 'கலை இலக்கிய நிகழ்வுகளில் பங்கேற்றல்' யாழ்ப்பாணத்தில் சாத்தியக் குறைவானதாக உள்ளபோதிலும் திருமறைக் கலாமன்றம் கலை இலக்கிய நிகழ்வுகளை முன்னெடுத்து வருவது பிரதானமாக பதிவு செய்யப்பட வேண்டியதாகும்.

இதில் முதற்கட்டமாக தவக்கால ஆற்றுகையாக மார்ச் 28, 29, 30,31 ஏப்ரல் 01-2007 காலப்பகுதியில் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கிய திருப்பாடுகளின் காட்சியான 'மலையில் வீழ்ந்த துளிகள்' குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். இரவு வேளைகளில் நிகழ்த்தப்பட வேண்டிய இவ்வரங்காற்றுகையானது ஊரடங்கு உத்தரவு போன்ற நெருக்கடிகளால் பிற்பகல் 3.45 மணி தொடக்கம் 6.00 மணிவரை தொடர்ந்து ஐந்து நாட்கள் அளிக்கை செய்யப்பட்டிருந்தது. அதிலும் ஒருநாள் திடீரென வழமையில் இரவு ஏழு மணிக்கு அமுலுக்கு வரும் ஊரடங்கு உத்தரவு 6 மணிக்கு அமுலுக்கு வருவதாகத் பரவிய செய்தியால் 5.30 மணியுடன் அளிக்கையை முடிவுக்கு கொண்டுவர வேண்டியேற்பட்டது.

இவ்வரங்காற்றுகை நிகழ்வுக்குப் பின்பாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கலை இலக்கிய நிகழ்ச்சிகளென யாழ்ப்பாணத்தில் எவையும் இடம் பெற்றிருக்கவில்லை. அண்மையில் நம்பிக்கையளிக்கும் விதமாக இரு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன என்பது முக்கியமாக குறிப்பிடவேண்டியதாகும். அவற்றிலொன்று 15.08.2007 புதன்கிழமை முற்பகல் பதினொரு மணிக்கு கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, ஈழத்துக் கலை இலக்கியப்புலத்தில் பணியாற்றிவரும் திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கோடு யாழ்ப்பாண பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கலைத்தூது கலையகம் யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றிய ஆண்டகை நாள்தோறும் அடையாளந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொலை, ஆள்கடத்தல், காணாமற் போதல் எனக் கேள்விப்படுகின்ற அசம்பாவிதங்களுக்கு மத்தியில் கலைத்தூது கலையகம் திறப்புவிழா பற்றிய செய்தி நெருக்குவாரங்களிலிருந்து விடுபடுவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டார்.

அடுத்து நோக்க வேண்டியது திருமறைக் கலாமன்றம் ஒழுங்கமைத்து நிகழ்த்திய 'தமிழ்விழா'வாகும். ஓகஸ்ற் 2007 - 18,19 ஆகிய திகதிகளில் காலை, மாலை நிகழ்வுகளாக முற்பகல் 8.45 மணிதொடங்கி பிற்பகல் 01.15 மணிவரையும் கலை இலக்கியக் கருத்தரங்குகளும் பிற்பகல் 3.00 மணி தொடங்கி பிற்பகல் 5.30 மணிவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றமை இன்றுள்ள யாழ்ப்பாணச் சூழலில் அளப்பெரும் காரியமாகவே கொள்ளலாம்.

18ஒகஸ்ற் 2007 நிகழ்வுகள் காலை 08.45 மணிக்கு ஆரம்பமாயின. நவீன இலக்கிய கருத்துரைகளுக்கான முதலாவது அமர்வுக்கு இ.ஜீவகாருண்யன் (இமையவன்) தலைமைவகித்தார். 'ஈழத்தில் நவீன இலக்கிய விமர்சனம்' எனும் தலைப்பில் க.அருந்தாகரன் கருத்துரை வழங்கினார். போதிய முன்னாயத்தமின்றி நிகழ்த்தப்பட்ட இக்கருத்துரை பலவீனமாயமைந்தது. அடுத்து ஐ.சண்முகலிங்கம் (குப்பிழான் ஐ.சண்முகன்) 'பத்தி எழுத்துக்கள்' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கினார். ஈழத்து ஆய்வரங்கில் 'பத்தி எழுத்துக்கள் குறித்த முதலாவது கருத்துரை இதுவெனக் கருதலாம். பத்தி எழுத்துக்கள் குறித்த சண்முகனின் ஆய்வானது வெறும் கருத்துத்திணிப்பாக அல்லாமல் ஆழ்ந்த தேடலுக்கு வழிவகுப்பதாகவிருந்தது. பத்தி எழுத்துக்கள் என்றால் என்ன? என்பதற்கு அவர் திட்டவட்ட வரைவிலக்கணங்கள் எதனையும் முன்வைக்கவில்லை. பதிலாக சில கருதுகோள்களையே முன்வைத்தார். பத்தி எழுத்தாளர்களில் அவர் கே.எஸ்.சிவகுமாரனையும், அ.யேசுராசாவையும் முதன்மைப்படுத்தினார். 'உயிர்கொல்லும் வார்த்தையை' முன்வைத்து சேரனையும் குறிப்பிட்டார். கிழக்கிலங்கையின் ஆனந்தனை நினைவு கூர்ந்தார். டி.சிவராமை (தராக்கி) ஒரு பத்தி எழுத்தாளரென சண்முகன் குறிப்பிட்டார். கலந்துரையாடலில் தராக்கியை ஒரு பத்தி எழுத்தாளராகக் கருதமுடியாது என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. பத்தி எழுத்துக்களின் -நியம வடிவம் குறித்தும் கலந்துரையாடலில் கேள்வி எழுப்பப்பட்டது. இன்றைய சூழலில் பத்தியெழுத்துக்களுக்கான நியமவடிவங்கள் இணையத்தளங்களின் செல்வாக்கினால் - சிதைந்துவிட்ட நிலையில் இது குறித்த விவாதம் அவசியமற்றதென்ற அபிப்பிராயத்தையும் சிலர் முன்வைத்தனர்.

அன்றைய நாளின் இரண்டாவது அமர்வுக்கு கவிஞர் சோ.பத்மநாதன் தலைமை வகித்தார். இவ்வமர்வின் முதலாவது கருத்துரை 'தொண்ணூறிலிருந்து ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை' எனும் தலைப்பில் செ.சுதர்சன் என்பவரால் வழங்கப்படவிருந்தது. அவர் சமூகமளிக்காமல் தனது கட்டுரையை மின்னஞ்சலில் அனுப்பியிருந்தார். அது அரங்கில் வாசிக்கப்பட்டது. இதையடுத்து 'தொண்ணூறிலிருந்து ஈழத்தமிழ்க் கவிதை' எனும் தலைப்பில் பா.அகிலன் என்பவர் கருத்துரை வழங்கினார். இது கட்டிறுக்கமும், நேர்த்தியும் கொண்ட கருத்துரையாக அமைந்தது.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான மாலை நிகழ்வில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியற்கல்லூரியின் மாணவர்களால் அளிக்கை செய்யப்பட்ட 'உதயனைத் தடுத்த உத்தமி' எனும் நாட்டிய நாடகம் இடம்பெற்றது.

19.08.2007 ஞாயிறு காலை 8.45 மணிக்கு ஆரம்பமான இரண்டாம் நாள் நிகழ்வுகளின் முதலாவது அமர்விற்கு சிறுகதை எழுத்தாளர் க.சட்டநாதன் தலைமை வகித்தார். இவ்வமர்வின் முதலாவது கருத்துரையை சு.குணேஸ்வரன் 'புலம்பெயர் இலக்கியம்' எனும் தலைப்பில் நிகழ்த்தினார். இது நன்கு திட்டமிடப்பட்டு நிகழ்த்தப்பட்ட நேர்த்தியான கருத்துரையாகும். எனினும் புலம்பெயர் இலக்கியம் என்றவகையில் தமிழில் பால்வினைநோயான எயிட்ஸ் தொடர்பாக வெளிவந்த 'அழிவின் அழைப்பிதழ்' எனும் தியாகலிங்கத்தின் நாவல் பற்றி குணேஸ்வரன் எடுத்துக் காட்டத் தவறியதை சண்முகன் சுட்டிக் காட்டினார். தொடர்ந்து 'செங்கை ஆழியானின் வகைமாதிரி நவால்கள் ஐந்து' (காட்டாறு, வானும் கனல்சொரியும், ஆச்சி பயணம் போகிறாள், கடல்கோட்டை, வாடைக்காற்று) எனும் தலைப்பில் அ.யேசுராசா கருத்துரை வழங்கினார். இக்கருத்துரையானது செங்கை ஆழியானை ஒரு ஜனரஞ்சகப் போலி எழுத்தாளரென நிறுவும் முயற்சியாகும். இதற்காக அ.யேசுராசா ஐந்து நாவல்களிலுமிருந்து தேர்ந்தெடுத்த சில பகுதிகளை எடுத்துக்காட்டி தனது கருத்தினை நிறுவ முயன்றார். கருத்துரையின் முடிவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஈழத்தமிழ் இலக்கியத்தின் ஆரம்பக்கட்ட வாசிப்பில் செங்கை ஆழியனின் இடமும் இருப்பும் தவிர்க்க முடியாதது என்றொரு கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது அமர்வுக்கு பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் தலைமை தாங்கினார். இதில் முதலாவது கருத்துரையை 'பின் நவீனத்துவமும் தமிழ்ச்சூழலும்' எனும் தலைப்பில் ந.ரதிக்குமார் என்பவர் நிகழ்த்துவதாக இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் அவர் விழாவுக்கு சமூகமளிக்கவில்லை. இதனால் இக்கருத்துரையை ஹரிஹரசர்மா என்ற பதின்ம வயது இளைஞர் வழங்கினார். பின் நவீனத்துவத்தின் கோட்பாட்டு எல்லைவிட்டகலாதவொரு கருத்துரையாக இது அமைந்த போதிலும் இவ்விளைஞரின் கருத்துரை வெளிப்பாட்டுத்திறனும் அளிக்கையும் சபையினரின் கவனத்தை ஈர்த்தது. அடுத்து 'தொண்ணூறிலிருந்து ஈழத்துத்தமிழ் நாடக இலக்கியங்கள்' எனும் தலைப்பில் க.நவதர்சினி கருத்துரை வழங்கினார். இக்கருத்துரை தொண்ணூறிலிருந்து ஈழத்துத் தமிழ் நாடக இலக்கியத்தின் ஓர் அசலான வெட்டு முகத்தை எடுத்துக்காட்ட முனைந்ததாகத் தோன்றியது. நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்கு மிகப் பயனுள்ள ஒரு கருத்துரையாக இது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாலைநிகழ்வுகளில் கலைநிகழ்ச்சிகளாக முதலில் இசைக்கச்சேரி நடைபெற்றது. வயலின் (அ.ஜெரொமன்), மிருதங்கம்(க.கஜன்), கடம்(நா.மாதவன்), கஞ்சிரா(வி.ராகவன்), முகர்சிங்(சி.செந்துாரன்) முதலான பக்கவாத்தியங்கள் சகிதம் தவநாதன் றொபேட் அவர்களின் வாய்ப்பாட்டு இடம் பெற்றது. தொடர்ந்து யோ.யோண்சன் ராஜ்குமார் பிரதியாக்கி நெறியாள்கை செய்த 'கொல் ஈனுங் கொற்றம்' எனும் கூத்துரவ நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது.

மேலும் குறிப்பிடவேண்டிய இன்னொரு அம்சம் யாழ்ப்பாணத்தில் Book Lab எனும் புத்தகவிற்பனை நிலையத்தினூடாக தீவிர இலக்கிய சஞ்சிகைகள் மற்றும் நூல்களை விற்பனை செய்து வரும் தெ.இரவீந்திரன் இவ்விருநாள்களிலும் நிகழ்வரங்குடன் இணைந்த வகையில் மட்டுப்படுத்தப்பட்ட புத்தக விற்பனை மற்றும் கண்காட்சியொன்றை திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில் நடத்தியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில் இத்தகையதொரு கலை இலக்கிய நிகழ்வினை திருமறைக் கலாமன்றம் முன்னெடுத்திருப்பது பாராட்டுக்குரியது. இந்நிகழ்வினை ஒழுங்கமைப்பதில் முனைப்புடன் செயற்பட்ட 'கலைமுகம் சஞ்சிகையின் பொறுப்பாசிரியர் கி.செல்மர் எமில் நன்றிக்குரியவர். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவஅபிராவின்

# வாழ்வின் மீதான காதல்


**எஸ்.கே. விக்னேஸ்வரன்**

இலக்கியப் படைப்பொன்றை அறிமுகம் செய்து வைப்பது அல்லது அதுபற்றிய விமர்சனக் குறிப்பையோ அது எம்முள் ஏற்படுத்தும் தாக்கத்தையோ, அது உருவாக்கிய மனப்பதிவையோ பிறருடன் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் எழுதுவது என்பது படைப்புக்களைத் திறந்த மனதுடன் உள்வாங்குகிற, சொந்தமான கருத்தும் பார்வையும் கொண்ட எந்த ஒரு வாசகருக்கும் சாத்தியமான ஒன்றுதான். ஆயினும் கவிஞர் தேவஅபிராவின் "இருண்ட காலத்தில் தொடங்கிய என் கனவுகளும் எஞ்சி இருப்பவைகளும்" கவிதைத் தொகுதிக்கான இக்குறிப்பு அவ்வளவு இலேசாக சாத்தியப்படக்கூடிய ஒன்றாக இருக்கப் போவதில்லை என்பது இதை எழுதத் தொடங்கும் போதே எனக்குத் தெரிகிறது. இதற்குக் காரணம் கவிஞர் தேவஅபிரா (தெட்சணாமூர்த்தி புவனேந்திரன்) கவிதைகளின் ஆழமும் வீச்சும் அழகும் விரிக்கின்ற கவிதை வெளியின் பரப்பெல்லையின் விஸ்தீரணம் தான் என்று தோன்றுகிறது.

இத்தொகுப்பில் வெளியாகியுள்ள கவிதைகளை, அவையவை படைக்கப்பட்ட காலப் பின்னணியில் வைத்தும். இன்றைய சூழலில் வைத்தும் படிக்கின்ற போது அவை எழுப்புகின்ற உணர்வுத் தளங்களையும், ஏற்படுத்தும் விரிவுகளையும் அனுபவிப்பதைத் தவிர சொல்லி விளக்கமுனைவதில் அர்த்தமில்லை. ஏனென்றால் தேவஅபிராவின் மொழி எளிமையானது. சிக்கலற்ற தெளிந்த நீரருவி போல தவழ்ந்து தவழ்ந்து ஓடுவது. அழகும் தெளிவும் கொண்ட நளினமும் அதேவேளை திசை தேடும் ஆர்வமும் வேகமும் கொண்டது. அதற்கிடையில் நின்று விளக்க உரை பகர யாரும் தேவையில்லை. அப்படியே நேரடியாகவே அதில் இறங்கி அதன் குளிர்மையை, ஓட்ட வேகத்தை, ஆழத்தை எளிமையை, உணர்ந்தபடியே யாரும் அதை அள்ளிப் பருகமுடியும். அதில் நீங்கள் உங்களைக் காணமுடியும். உங்கள் உணர்வுகளைத் தரிசிக்க முடியும். உங்கள் ஆசைகளை, கேள்விகளை, அனுபவங்களை அது பேசுவதைக் கண்டு அனுபவிக்க முடியும். அவர் அதிகம் சிக்கலான படிமங்களைத் தேடவில்லை. குறியீடுகளுக்குள் தடக்கி விடவில்லை. வெளிப்படையான நெஞ்சிலிருந்து நேர்மையாகவும் நேரடியாகவும் வருகின்ற வார்த்தைகளாக அவை வருகின்றன.

ஐ.கிங் ஒருமுறை சொன்னார்:

"கவிஞர் உண்மையே பேச வேண்டும். சிலர் சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இன்னாருடைய கவிதைகள் மிகவும் பிரபல்யமாக உள்ளன. ஏனென்றால் அவை மக்களின் இதயங்களை வெளிப்படுத்துகின்றன என்று. ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. இன்னாருடைய கவிதைகள் பிரபல்யமானவை. ஏனென்றால் அவர் உண்மை பேசுகிறார் - இதயத்தில் இருந்து நேரடியாக. ஒவ்வொருவரும் உண்மையைக் கேட்கவே விரும்புகிறார்கள். ஒரு கவிஞர் உண்மையான விசுவாசமிக்க வார்த்தைகளால் பேசுவதன் மூலமாகத்தான் மக்களின்




இதயங்களைத் தொடமுடியும். அவர் மக்களுடன் நிற்க வேண்டும். அவர்களுடைய விருப்பையும், வெறுப்பையும், துன்பத்தையும், சந்தோசத்தையும், பகிர்ந்து கொள்ள வேண்டும். மக்களிடம் இருந்து அவரது பார்வையும் துணிவும் பிறப்பெடுக்கும் போது தான் அவரால் மக்களது நம்பிக்கைக்குரியவராக முடியும்...."

மக்கள் பொய்களை நம்புவதில்லை. நீங்கள் எவ்வளவு பூடகமாக அவற்றைத் தெரிவித்தாலும், எவ்வளவு தராதரத்துடன் அவற்றைப் பேசினாலும் அவை மக்களது

## தேவ அபிரா கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயங்களைத் தொடுவதில்லை. ஒவ்வொருவரும் தமது மனதில் ஒரு அளவுகோலைக் கொண்டிருக்கிறார்கள் உங்கள் வார்த்தைகளை அளவிட.

தேவஅபிராவின் கவிதைகள் நெஞ்சிலிருந்து நேரடியாக வருபவை என்றேன். எமது மக்களின் வாழ்வில், அவர்கள் வாழும் தெருக்களில், அந்தத் தெருக்களில் பறக்கும் புழுதிகளில், அவர்களது வாழ்வுச் சுமைகளில், இன்பங்களில், துன்பங்களில் அவரது நெஞ்சு உறைவிடம் கொண்டிருக்கிறது. ஆயினும், அந்த மக்களின் மடியிலிருந்து நடக்கும் மாறுதல்களை இனங்கண்டு கேள்வி எழுப்புகிறது. மக்களின் குரலாக கவிஞரின் குரல்,

*எதிர்காலக் கனவுகளை ஊதிப்*
*பெண்கள் சமையல் செய்கிறார்கள்.*
*புகை கவிகிறது.*
*இரவும் நகர்கிறது.*
*விடிவின் சுவடுகளை அறியாத*
*கிராமத் தெருக்களில்*
*நாய்கள் குரைப்பதேன்....?*

இந்த ஏன் என்ற கேள்வியுடன் அவரது கவிதைத் தொகுதி தொடங்குகிறது. இருளை நோக்கித் தள்ளுப்பட்டுக் கொண்டிருக்கும் சமூகத்தின் "*விடிவின் சுவடுகளை அறியாத கிராமத் தெருக்களின்*" கேள்வியாக அது கிளம்புகிறது.

ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தொண்ணூறுகளுக்கு ஒரு முக்கியத்துவம் இருப்பது பற்றி ஏற்கெனவே பேசப்பட்டிருக்கிறது. எண்பதுகளில் வெடித்தெழுந்த யுத்த வேகத்தில் அடிபட்ட உணர்வுகளும், பெற்றுக் கொண்ட அனுபவங்களும் வழங்கிய வெண்சூட்டில் பதப்பட்ட உள்ளங்களுடன், தம்மைத்தாமே கேள்விக்குள்ளாக்கும் மனோநிலையுடன் பல படைப்பாளிகள் உருவாகிய காலம் அது. ஆழமும் தரமும் வாய்ந்த கேள்விகளையும், தேடலையும், சிந்தனைகளையும் எழுப்புகின்ற - அவற்றின் இலக்கிய முழுமை எவ்வாறிருப்பினும் - பல படைப்பாளிகளும் படைப்புகளும் தோன்றிய காலகட்டம் இது. இக்காலகட்டத்தில் எழுந்து வந்த வளரிளம்பருவப் படைப்பாளிகளில் நுண்ணிய உணர்திறனுடனும், படைப்புக் கலை பற்றிய பிரக்ஞை உணர்வுடனும், தமிழ் இலக்கியத்தின் பாரம்பரிய செழுமையில் ஊறி வளர்ந்த அனுபவத்துடனும், படைப்பு முயற்சியில் இறங்கிய படைப்பாளிகளுள் கவிஞர் தேவஅபிராவும் ஒருவர். இதனாலேயே தொண்ணூறுகளில் தோன்றிய பல சமகாலப் படைப்பாளிகளைப் போலன்றி, இவர் வேறுபட்டு நிற்கிறதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தமது உணர்வுகளையும், அனுபவங்களையும் வெளிப்படுத்தும் எல்லா வழிகளும் அடைபட்ட நிலையில் எழுத்துத்துறையை தமது வெளிப்பாட்டுச் சாதனமாக ஏற்றுக் கொண்டு வந்த, பல படைப்பாளிகள் போலன்றி - இவர்களில் ஒருசிலர் தரமான படைப்பாளிகளாக வளர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது- தேவ அபிராவின் துறை இலக்கியத் துறையாகவே இருந்தது. அவரது எல்லாவகையான உணர்வுகளதும் அனுபவங்களதும், சிந்தனையினதும் வெளிப்பாட்டுத் தளமாக கவிதையும் இலக்கியமுமே இருந்தன. காலம் கோரிநின்ற படைப்புகளிற்கான தேவையுடன் அவர் தன்னை இரண்டறக் கலந்து கொண்டார் என்பதே அவரது இலக்கிய உலகிற்கான வருகை பற்றிக் குறிப்பிடப் பொருத்தமான வாக்கியமாக அமையும் என்று நம்புகிறேன்.

தொண்ணூறுகள் தமிழ் தேசியம் அரசியல் ரீதியான நெருக்கடிகளை எதிர்கொண்ட ஒருவகையான தேக்கத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த காலமும் கூட. கேள்விக்கு அப்பாற்பட்டதாக எதுவும் இல்லை என்ற கோட்பாடு வலுப்பெற்று வளர்ந்த காலமும் கூட அது என்று சொல்லலாம். விடுதலைப் போராட்டத்தின் தவறான பக்கங்கள் அவற்றின் விளைவுகள், அந்த விளைவுகள் சமூக அளவிலும் மக்களின் வாழ்வு முறையிலும் சிந்தனையிலும் ஏற்படுத்திய பலமான தாக்கங்கள், இதனால் தேசம் சிதறுண்டு தேசாந்திரம் எங்கும் பரந்ததும் நிகழ்ந்த காலம் இது.

இக்காலகட்டம் ஐ-கிங் சொன்னது போல உண்மையைப் பேசுகிற, உண்மை மட்டும் பேசத்தெரிந்த படைப்பாளிகளை உருவாக்கிற்று. அவர்களது குரல்கள் அவர்கள் நெஞ்சின் குரல்களாக, உண்மையின் குரல்களாக வெளிப்பட்டன. அவை அநியாங்களை எதிர்த்தன, அடக்குமுறையின் எல்லா வடிவங்களையும் கோபத்துடன் முகத்திலறைந்தாற் போல எதிர்த்துக் குரல் எழுப்பின. அவை தேசத்தின் விடுதலையை நேசிப்பனவாக, அது சரியான திசை வழியில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று ஆத்மார்த்தமான ஈடுபாட்டுடன் முழங்கின.

சரிநிகர் பத்திரிகை இந்தக் குரல்களின் வெளிப்பாட்டுக் களமாக, கொழும்பிலிருந்து இயங்கி வந்தது. வெளி நாடுகளிலிருந்தும் பல சஞ்சிகைகள் இந்தக் குரல்களை ஒலிப்பதற்கான களமாக இயங்கின.
தேவ அபிராவின் கவிதைகள் வெளிவந்த காலப்பகுதி இது.

இக்காலப்பகுதி,

"*இரத்தத்தை எச்சிலாய் திரட்டி இருளின்மீது உமிழ்: எழுந்துவா*" என்று பலவந்தமாக__பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்ட பெண்ணை நோக்கியும்,

"*ஈழக்காளி, உன் ஆத்மாவையும் பிடுங்கி அங்காடியில் வை*"
என்று யாழ் முஸ்லிம் மக்களது உடமைகள் விடுதலை இயக்க காவலர்களால் சூறையாடப்பட்டதை எதிர்த்தும்,

"*காலத்தின் கழுத்தைப் பிடித்து தள்ள முடியும் என்றால்*
*இவ் விருண்ட காலத்தை*
*நரகக் குழிக்குள் தள்ளுவேன்*"

என்று விரக்தியால் பீடிக்கப்பட்ட சமூகமாய் தேசம் சிதறுண்டு கொண்டிருப்பதை காணக் சகிக்காது கோபித்தும், வெளிப்படுகின்ற வரிகள் அன்றைய காலத்து நிகழ்வுகள் மீதான, அவற்றின் போக்கின் மீதான கேள்வியும் மறுதலிப்புமாக தேவஅபிரா மூலமாக வெளிப்பட்ட காலகட்டம்.

இந்தக் காலம் இன்னொன்றையும் செய்தது.

தேசத்தின் விடிவுக்காகவும், உரிமைகட்காகவும் தம்மை எல்லாவிதத்திலும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்த பலரை எவ்விதத்திலும் செயற்பட முடியாதபடிக்கு முடமாக்கி வைக்கின்ற இருண்ட சூழலினை அது நாடு பூராவும் விரித்துவிட்டிருந்தது. தாங்க முடியாத மனச்சுமை, வாழ்வுச் சுமையின் கோரம் அதிகரித்துள்ள நேரத்தில் அச்சுமையும் அதிகரித்துப் போன நிலைமை, சகிக்கமுடியாத

## தேவ அபிரா கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சடைப்பை ஏற்படுத்தி பலரை ஊரைவிட்டு, உறவை விட்டு, தேசங்கள் பல கடந்து பரதேசிகளாக ஓடவைத்தது. அப்படி ஒடிப்போன அவர்களால் பூரணமான நிம்மதியைக் காணமுடியவில்லை. வாழ்வு பற்றிய உணர்வும், மனதும் தாம் பிறந்து வளர்ந்த தெருப்புழுதிகளில் அழுந்திக் கிடக்க, உடலை மட்டும் பல்லாயிரம் கிலோமீற்றர்கட்கு அப்பால் எடுத்துச் சென்றுவிட்டால் நிம்மதி கிடைத்துவிடுமா என்ன? இரண்டக வாழ்வு. இரண்டகமான நிலை, தீரா ஏக்கம், தீராத் துயரம் என இருந்த வாழ்வு தொடர்ந்தது.

*"கல்லறைக்கு வர்ணம் பூசும் சவக்காலைத் தெருவில்*
*நான் ஓடிக்கொண்டிருப்பேன்"*
என்றும்,
*"ஓவென்றிரைந்த கடல் வழித் தெருவில்*
*என் காலடியோசை*
*மறைந்த நாளிலேதான்*
*நான் இறந்து இருக்க வேண்டும்.*
*பனியுறையும் இம்முகாமிலல்ல"*
என்றும் தம்மைத் தொலைத்த உணர்வுடன் மனிதர்களை உலகெங்கும் அலையவும் வைத்தது.

கவிஞர் தேவஅபிரா இந்தப் பத்தாண்டுகளில் யுத்தபூமியிலும், கொழும்பிலும், திருமலையிலும், பின்னர் நெதர்லாந்திலுமாக தனது வாழ்வைத் தேடிய பயணத்தில் "*காற்றும் மரமும் கலந்து பாட, கையேடும் கோலும் கொண்டு கவிதைபெற்ற காலம் கண்முன் சிரிக்கிறதை*"க் கண்டு ஏங்கும் உணர்வுடன் இக்காலத்தின பல படைப்பாளிகளையும் போல உடல் பெயர்ந்து போன ஒருவர், அவரது அனுபவங்கள் ஒவ்வொரு தரிப்பிடத்திலும் தனது தேசம் பற்றிய, அங்கத்தைய வாழ்வு பற்றிய, கழிவிரக்க உணர்வுடன் கூடிய சோகத்துடன் வெளிப்படுகின்றபோது அது காலத்தின் கண்ணாடியாக வெளிப்படுகின்றது. நம்மை நாமே பார்த்துக் கொள்கிற பெருமிதப்படுகிற, வெட்கித் தலைகுனிகிற, பார்க்க விரும்பாத, உண்மையை மட்டுமே வெளிப்படுத்தும் கண்ணாடியாக அது எங்கள் முன் நிற்கின்றது.

இந்தத் தொகுப்பின் கவிதைகளூடு வெளிப்படுகிற தேவஅபிரா முதலில் ஒரு மனிதர். இரத்தமும் சதையுமான வாழ்வை அதன் எல்லாவிதமான இன்ப துன்பங்களுடனும் அனுபவித்து வாழத் துடிக்கின்ற ஒரு மனிதர். உண்மையையும், நேர்மையான உணர்வுகளை வெளிப்படுத்தவும், அழகை அனுபவிக்கவும், அன்பைப் பகிரவும், குற்றங்களை எதிர்த்து நிற்கவும், துன்பத்தில் அழவும், இன்பத்தில் சிரிக்கவும் ஆன எல்லா இயல்புகளும் கொண்ட மனிதர். உண்மையான மனிதர்களின் உணர்வுகளில் பொய்மையில்லை, ஒளிவுமறைவு இல்லை அவற்றின் மொழியில் நெளிவு, சுழிவு இல்லை எல்லாமே வெளிப்படையானவை. அவை தர்க்கங்களில், காய் நகர்த்தல்களில், வேஷம் போடுவதில் தங்கியிருப்பதில்லை. காதல், பிரிவு, ஏக்கம், பலம், பலவீனம், கோபம், பயம் என்று அவை தமது உணர்வுகளை எந்த மாய்மால வார்த்தை களுக்குள்ளும் மறைக்காமல் வெளிப்படையாகவே கூறிவிடுகின்றன.

அவர் கவிதைக்கு கையாளும் மொழியும், தேர்ந்தெடுக்கும் சொற்களும், அவற்றை இடையிடையே தேவை கருதி இணைக்கும் விதமும் மிகவும் இயல்பாக நடக்கின்றன. மிகவும் கவனமான செப்பனிடலினூடாக அவரது வரிகள் வார்க்கப்படுகின்றன. இயற்கையோடு ஒன்றிய மனதின் தளத்தில் விரியும் உணர்வுகள் கலந்த காட்சிப் படிமங்கள், கவிதையை படிப்பவருடன் ஒன்றி, கவிஞருடன் சேர்ந்து உணரவும், அனுபவிக்கவும், இணைந்து போகவும் செய்து விடுகின்றன.

ஒரு படைப்பாளியாவதற்கான அடிப்படைத் தகுதி என்ன என்று கேட்டால் முதலில் அவர் ஒரு மனிதராக இருக்க வேண்டும், அவரது கால்கள் நிலத்தில் பதிந்திருக்க வேண்டும் என்று சொல்வேன். மனிதராக இருத்தல் என்றால் என்ன? என்று என்னை யாராவது கேட்கக் கூடும். பொய்மையும், வேஷங்களும் இயல்பாகிப் போய்விட்ட ஒரு காலத்தில் இந்தக் கேள்வி ஆச்சரியமூட்டும் ஒன்று அல்லத்தான். ஆனால் இந்தத் தகுதி இல்லாதவிடத்தில் ஒருவரால்,

*திரி தீண்டிய விளக்கொளி நெஞ்சத்தில்*
*ஆத்மாவுக்கருகில் ஒலித்த குரல்கள்*
*தொலைதூரங்களுக்குச் சிதறுண்டு போனபின்*
*வாழ்க்கைக்கு மரணம் என்றொரு அர்த்தம் உள்ளதை*
*உணர்கிறேன்.*
*தனித்து விடப்பட்ட மனிதர்களின் கண்கள்*
*ஒளி மங்கிப் பஞ்சடைந்து வருகின்றன*
… … … … … … … … …
… … … … … … … … …
*விடுதலையைப் பாடும் எண்ணுக் கணக்கற்ற கவிஞர்களின்*
*குரல்களுக்கிடையிலுள்ள இடைவெளியை*
*நிரப்பிச் செல்லும்*
*சத்திய நதியின் ஊற்று மூலத்தை அடைத்திருப்பது எது?"*

என்ற வரிகளைத் தரமுடியாது என்று கருதுகிறேன். இந்தக் கேள்வியையோ, அதற்கான இடைவெளிகளையோ அடையாளம் காணும் பிரக்ஞை அவர்களுக்கு வரமுடியும் என எனக்குத் தோன்றவில்லை. தேவஅபிராவிடம் அது தாராளமாகவே இருக்கிறது. அவருக்கு, அவை மிக இலகுவாக தென்பட்டு விடுகின்றன. தென்படும் ஒவ்வொன்றும் அவரது கவிமனத்தில் ஏற்படுத்தும் பிரதிபலிப்புக்கள் மற்றும் மன உற்பவிப்புக்கள் (mental constructions) வாசகரின் மனதை பலநூறு உற்பவிப்புக்கள் சிறகடிக்கிற களமாக மாற்றிவிடுகின்றன. "*....உன் ஆத்மாவையும் பிடுங்கி அங்காடியில் வை*" என்ற கவிஞரின் வரி ஒரு தேசத்தினதும் மட்டுமல்ல, முழு மனித குலத்தினதும் மனசாட்சிக்கு விடுக்கப்படும் ஒரு தார்மீகச் சவால்.


"இருண்ட காலத்தில் தொடங்கிய என் கனவுகளும் எஞ்சி இருப்பவைகளும்" என்ற இந்தத் தொகுப்பு ஒரு இருண்ட காலத்தின் கண்ணாடியாக அதிலிருந்து மீண்டு வாழத்துடிக்கும், வாழ்வின் மீது உறுதியான காதல் கொண்ட ஒருவரது உணர்வின் வெளிப்பாடாகவும், அதன் காரணமாகவே அதிலிருந்து வெளிப்பட்டுப்போக முயலும் ஒருவரின் உணர்வுகளின் போராட்டமாகவும் வெளிப்பட்டிருக்கிறது.

இந்தத் தொகுதி ஈழத்தமிழ் கவிதைப் பரப்பில் புறந்தள்ளிவிட முடியாத ஒரு உறுதியான இடத்தைத் தனதாக்கிக் கொள்ளும் என்பதைச் சொல்லி வைக்க வேண்டியதில்லை.

## தேவ அபிரா கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் உதிர்த்த கலைஞன்

**மைக்கலஞ்சலோ அன்டோனியோனி**
**29.09.1912 - 30.07.2007**

**- கே.எஸ்.சிவகுமாரன் -**

உலகின் சிறந்த திரைப்பட நெறியாளர்களுள் ஒருவராகக் கருதப்பட்ட மைக்கலஞ்சலோ அன்டோனியோனி (1912 – 2007) தமது 94 ஆவது வயதில் இயற்கையெய்தினார்.

இரு தடவை மணம் முடித்த இவருக்கு, மொனிக்கா விட்டி (Monica Vitti) என்ற இத்தாலிய நடிகை நெருக்கமானவர். இவருடன் தோழமை கொண்டவர். நெறியாளரின் முக்கிய படங்களில் நடித்தவர்.

நெறியாளரும் இத்தாலிய புனைகதை, நாடகப் பிரதிகள் எழுதுவதிலும் நாட்டங் கொண்டவர். ஏற்கெனவே பல திரைப்படங்களை நெறிப்படுத்திய போதிலும், திரைப்படக்கலையின் நுட்பங்களை மேலும் தெரிந்து கொள்ளத் திரைப்படக் கல்லூரியில் பயின்றவர். அத்தகைய மனப் பக்குவமும் கல்லாதவை உலகளவு என்பதையறிந்து வைத்திருந்தமையும் அவர் ஆளுமையின் ஒரு தோற்றம். உயர்ந்த உருவம், தீட்சண்யக் கண்கள், அகன்ற நெற்றி, மௌனமே அவர் மொழி.

அன்டோனியோனி இறந்த தினமாகிய 2007, ஜுலை 27இல்தான், மற்றொரு சிறந்த ஐரோப்பிய நெறியாளரான இங்மர் பேர்க்மனும் (Ingmar Bergman) இறந்த தினம் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

***

1960களில் ஐரோப்பிய (இத்தாலி, பிரான்ஸ், ஸ்வீடன், போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரி, யூகோஸ்லாவியா, ஸ்பெயின் போன்ற நாடுகளின் படங்கள்) நாடுகளின் படங்கள் ஆய்வறிவாளர்களையும், அழகியல்வாதிகளையும் வியப்பில் ஆழ்த்தி வந்தன.

அக்காலகட்டத்தில் நிலவி வந்த மேனாட்டுக்கலை, இலக்கியச் சூழலில் பெரிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொள்ளப்பட்டவர்களுள் நானும் ஒருவன். இவை பற்றியெல்லாம், அக்காலத்தில் நான் எழுதி வந்த இலக்கியப் பத்திகளில் மனத்திரை (தினகரன்), அக்கரைச்சீமையிலே (புதினம்), சருகுகள் (செய்தி), சித்திரதரிசினி (தினகரன்), நாற்சரம் (வீரகேசரி) போன்றவற்றில் எழுதி வந்திருக்கிறேன்.

ஆயினும், மாற்றமே இயற்கையின் நியதி என்ற நிதர்சனத்திற்கு ஏற்ற வகையில் நாளடைவில் எனது இரசனைப்பாங்கும் பயன் மதிப்புகளும் பரிணாம வளர்ச்சி கொண்டன.

எனவே, இன்று ஐரோப்பிய (வட, மத்திய, தென். கிழக்கு நாடுகளின்) படங்களில் காணப்பட்ட சுவையை நான் முழுமையாக இரசிப்பதில்லை. மாறாக வேறு பிரதேசங்களின் படங்கள் என்னைக் கவர்ந்து வருகின்றன. அவற்றுள்ளே யப்பான், தென்கொரியா, மத்திய கிழக்கு, தென்கிழக்காசியா, அமெரிக்கப் படங்கள் காலவோட்டத்திற்கிணங்க புதிய வடிவங்களில் வருவதை ஏற்றுக் கொள்ளக் கூடிய மாற்றத்தை என்னில் காண முடிகிறது.

மேற்சொன்ன விபரங்கள் இங்கு தேவைப்படுகின்றன. ஏனெனில் மைக்கலஞ்சலோ அன்டோனியோனி பற்றிய குறிப்பை எழுதும் பொழுது கூட என் மனமாற்றம் அதில் பிரதிபலிக்கவே செய்யும்.

***

மைக்கலஞ்சலோ அன்டோனியோனி இடதுசாரியப் போக்குள்ளவர் என்பது அவருடைய சீன விஜயத்தின் போது (மாஓ காலத்திலே) தெரிய வந்தது. இருந்த போதிலும் "அந்நியமாதல்" (Alienation) போக்கிலேயே இவருடைய பெரும்பாலான படங்கள் அமைந்திருந்தன.


இவருடைய படங்களில் நான் பார்த்துப் புரிந்து கொள்ள முயன்றவை மூன்று மாத்திரமே. அவையாவன Blow – up, L'aventura, Red Desert இவற்றினுள்ளே Blow up படம்பற்றியும், நெறியாளரின் சீன விஜயம் குறித்தும் ஒரு செய்திக் குறிப்பை செ.கணேசலிங்கன் 1970களில் கொண்டு வந்த "குமரனில்" எழுதியிருக்கிறேன். இது அவர் வெளியிட்ட "குமரன் இதழ்களின் தொகுப்பிலும்" இடம் பெற்றுள்ளது.

L'aventura , Red Desert ஆகிய இரு படங்களையும், பூனேயில் திரைப்படத் திறனாய்வுப் பயிற்சி (1990) பெற்ற போது பார்க்க வாய்ப்பு ஏற்பட்டது. அன்டோனியோனி நெறிப்படுத்திய படங்களில், எனக்கு மிகவும் பிடித்த படம் Red Desert தான். விரிவுரையாளர்கள் இப்படத்தின் வண்ணப் பிரயோகத்தினையும், நெறியாளரின் நுட்பத் திறனையும் எடுத்துக் கூறிய போது, இப்படத்தின் உன்னதமான 'சினமா' அம்சங்களை அறிந்து கொள்ள ஏதுவாயிற்று.

1964இல் இந்தப்படம் வெளியாயிற்று. ரிச்சர்ட் ஹரிஸ், மொனிக்காவிட்டி நடித்த இப்படம் அன்டோனியோனியின் முதலாவது வண்ணப்படம். இப்படத்தில் இடம்பெறும் வண்ண உடைகள், மற்றும் வண்ணக் காட்சிகள் யாவும் குறிப்பிட்ட உணர்வை அல்லது அனுபவத்தை அல்லது செய்தியை உணர்த்தி நிற்பன. அவற்றுள்ளே சிவப்பு வர்ணம் துருத்தி நிற்கும். கதாநாயகியின் மனோநிலையை - காதல், காமம், பரிவு, இரங்கல், கோபம், தாபம் போன்ற மனோநிலைகளை சித்திரிப்பவையாக இந்தச் செந்நிறம் காட்டி நிற்கும். வண்ணத்தினூடாகவும் நெறியாளர் சொல்கிறார் எனலாம்.

கதாநாயகி சுவாதீனத்திற்கும், சித்த சுவாதீனமற்ற நிலைக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளவள். மொனிக்கா விட்டி அழகியல் ரீதியாகப் பல்வேறு உணர்வுகளைப் படம் பிடிக்கிறார்.

***



மைக்கலஞ்சலோ அன்டோனியோனி உலகக் கவனத்தைப் பெற்ற வேளையில் அலெய்ன் ரெ(ஸ்)னே, ஜ்ஷோன் லூக், கொடாட் போன்ற பிரெஞ்சுத் திரைப்பட நெறியாளர்கள் பிரபல்யம் பெற்றிருந்தனர். இவர்கள் எல்லாம் ஆய்வறிவாளர்களாய் இருந்தமையால் இவர்கள் படங்களெல்லாம் படித்த, உயர்மட்ட இரசனையுடைய பார்வையாளர்களைப் பெரிதும் திருப்திப்படுத்தின.

இருந்த போதிலும், கதைசார்ந்த படங்களையே விரும்பிப் பழக்கப்பட்ட பார்வையாளர்களுக்கு அன்டோனியோனியின் படங்கள் ஆத்திரத்தை உண்டு பண்ணின. இவரின் படங்களைப் பார்த்தவர்கள் அரைவாசியிலேயே படம் பார்க்காது வெளியேறியதாக நாம் அறிகிறோம்.

இதற்குக் காரணம், அந்நியமயப்பட்ட -ஒருவரோடொருவர் தொடர்பற்ற- பாத்திரங்களே. இவரின் படங்களில் பெரும்பாலும் இடம்பெற்றன. புதிர் கொண்ட மனிதப் பாத்திரங்களுக்கும், பார்வையாளர்களுக்குமிடையே திரை வந்து குறுக்கிட்டது போல, படக்கதையும், எடுக்கப்பட்ட முறைமையும் அமைந்ததனால், அன்டோனியோனியின் தனித்திறமையைப் புரிந்து கொள்ளும் அளவிற்குப் பார்வையாளர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளவில்லையெனலாம்.

இவருடைய படங்களில் பாத்திரச் செயல்களைப் பார்க்கிலும், அச்செயல்களின் பிற தாக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சியனுபவத்திற்கு இடங்கொடுக்கிறது எனலாம். இக்காலத்தில் இத்தகைய படங்களைப் பார்த்துப் பழகிக் கொண்டு, எனது இரசனையையும் வளர்த்துக் கொண்டதனாற் போலும் திரைப்படத் திறனாய்வை நான் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

***


L'Aventura (1959) படத்தின் சில காட்சிகளை மாத்திரம் பயிற்சி வகுப்பில் (பூனேயில்) போட்டுக் காட்டினார்கள். முழுமையாக இப்படத்தைப் பார்க்க முடியவில்லை. La motte, போன்றவையும் அன்டோனியோனி நெறிப்படுத்திய ஆரம்பகாலப் படங்கள் என அறிகிறோம்.

1986இல் இவருடைய Blow- up வெளிவந்தது. இப்படம் கொழும்பில் காட்டப்பட்டபோது அப்படத்தின் உத்திச் சிறப்புகளுக்காக வியந்து மகிழ்ந்தேன். லண்டன் நாகரிக மாந்தர் பழகும் பூங்காவொன்றில் காதலர் சல்லாபித்து மகிழ்வதை நிழற்படப் பிடிப்பாளர் தமது கமெராவிற்குள் கொண்டு வந்து. 'நெகட்டிவ்' வைக் கழுவிப் பார்த்தபோது அப்படத்தின் பின்னணியில் கொலை நிகழ்ச்சியொன்றைக் கண்டு கொள்கிறார். துப்பறியும் பாங்கிலமைந்த இப்படம் அக்காலச் சம்பிரதாயத் திரைப்பட உத்திகளினின்றும் வேறுபட்டு நிற்கிறது. கமெரா இயங்கிய விதத்தில் ஓர் ஒழுங்குமுறை இருக்கவில்லை. எல்லாமே தலைகீழாக அமைந்திருந்தன.

நெறியாளரின் வேறு சில படங்களாவன, Le Amiche, The Passenger, Zabriskie Point. கடைசியாகக் குறிப்பிடப்பட்ட படம் 1970களில் இடம்பெற்ற மாணவர் கிளர்ச்சிகளை மையமாகக் கொண்டது.

ஐரோப்பிய சினமா வளர்ச்சியை நாம் அறிந்து கொள்ள மைக்கலஞ்சலோ அன்டோனியோனி பற்றியும் நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும். சுமார் 50 வருடங்களுக்கு முன் நிலவிய கலை, இலக்கியப் போக்குகள் இப்பொழுது இல்லை. காலம் மாறிவிட்டது. கலைவடிவங்களும் மாறிவிட்டன. ஆனால், முக்கிய விஷயம் என்னவென்றால், பழமையிலிருந்துதான் புதுமை மிளிர்கிறது என்பதே.

sivakumaranks@yahoo.com



**ஈழத்து அரசியல் நாவல்**
யமுனா ராஜேந்திரன்
வெளியீடு: அம்ருதா பதிப்பகம்
சென்னை
பக்கங்கள்: 200
இந்திய விலை: ரூபா 70.00

இந்நூல் சமகாலப் பிரக்ஞையுடன், சரித்திரப் பகைப்புலத்தில் நெசவான சில ஈழத்து நாவல்களை கட்டமைப்பு, மொழிநடை, விவரணமுறை ஆகிய சகல தளங்களிலும் தனது விமர்சனப் பார்வையை முன் வைக்கிறது.


---

**பின்நவீனத்துவம் மாயைகளைக் கட்டவிழ்த்தல்**
கேசவன், சிவசேகரம், முருகையன், வேணுகோபால்
வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை
கொழும்பு
பக்கங்கள்: 114
விலை: ரூபா 180.00




பின் நவீனத்துவம் என்பது ஒரு தத்துவமா, அரசியற் கொள்கையா, ஒரு கலைக் கோட்பாடா எனக் கேட்டால் பிரதானமாக அது ஒரு கலைக் கோட்பாடாக இருப்பினும் தத்துவமும் அரசியலும் அதனுடன் இரண்டறக் கலந்தது என்று தான் பதில் கூற வேண்டும். எந்த ஒரு கலைக் கோட்பாடும் தத்துவத்தையும் அரசியலையும் புறம் ஒதுக்குவதில்லை. இவை வெளிப்படையாகவோ அல்லது மறை முகமாகவோ அதன் உள்ளார்ந்த அம்சமாக இருக்கும் என நுஃமான் தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

---




**பின்னவீனத்துவத்தை விளங்கிக் கொள்ளல்**
கலாநிதி சபா.ஜெயராசா
வெளியீடு: இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை
கைலாசபதி ஆய்வு வட்டம்
கொழும்பு
பக்கங்கள்: 96
விலை: ரூபா 125.00

பின்னவீனத்துவத்தை அறிவு நேர்மையுடன் நோக்க வேண்டியுள்ளது. சுயவிருப்பின் காரணமாக அதனை மிகைப்படுத்திக் கூறுதலோ அல்லது தாழ்த்தி மதிப்பீடு செய்தலோ பொருத்தமற்றது என்கிறது நூலின் முன்னுரை.

---

**யாழ்ப்பாணச் சமூகம்**
**சாதி, இனத்துவம் முதலாய கட்டுரைகள்**
பரம்சோதி தங்கேஸ்
வெளியீடு: மலர்
கொழும்பு
பக்கங்கள்: 159
விலை: ரூபா 350.00




இலங்கைப் பிரச்சினைகளை அதிலும் குறிப்பாக தமிழ்ச் சமூகத்திலுள்ள பிரச்சினைகளைப் பற்றி நோக்குவது மிகவும் அவசியமானதாகும். அந்த வகையில் இந்நூலில் உள்ள ஆய்வுக் கட்டுரைகள் முக்கியம் வாய்ந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைக்கக்கூடிய பழமங்களின் சிருஷ்டியாளர் மகாஜன்

(02.10.1944 – 13.07.2007)



ஜி.ரி. கேதாரநாதன்

புகழ்பெற்ற இந்திய ஒளிப்பதிவாளர் கே.கே.மகாஜன் 2007 ஜூலை 13ஆம் திகதி மும்பையில் காலமானார். திரையுலகில் நெருக்கமானவர்களால் கே.கே என அழைக்கப்படும் இவர் முன்னோடி ஒளிப்பதிவாளர் என்பதுடன் ஒளிப்பதிவுத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவராக தனக்கென தனித்தடம் பதித்துக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. காலஞ்சென்ற திரைப்பட மேதை சத்யஜித்ரேயின் ஒளிப்பதிவாளராக பதர் பாஞ்சாலியிலிருந்து பணியாற்றத் தொடங்கி, அதன் பின்னர் அவரின் நிரந்தர ஒளிப்பதிவாளரான சுப்ரற்ற மித்ரா சுதந்திர இந்தியாவின் முதலாவது தலைமுறை ஒளிப்பதிவாளராயிருக்க, அதன் இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்தவர் கே.கே.மகாஜன் ஆவார். இவர்கள் இருவரும் 'கமெரா' என்ற அடிப்படைக் கருவியை வைத்துக் கொண்டு தத்தமது கற்பனை வளத்தின் மூலமும், நேர்த்தியான கையாளுதலின் மூலமும் இந்திய சினிமாவுக்கு வளம் சேர்த்தவர்களாக விமர்சகர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பாராட்டப்படுகிறார்கள். ஒவ்வொரு தலைமுறையிலும் மிகத் திறமை வாய்ந்த நெறியாளர்கள் ஒருசிலர் உருவாகும் போது அவர்களுடன் இணைந்து வெளிப்படும் ஆற்றல்களாக ஒளிப்பதிவாளர்கள் ஒருசிலரும் உருவாவது ஒரு தவிர்க்க முடியாத நியதியாய் இருந்து வருகிறது. அந்தவகையில் சத்யஜித்ரேயுடன் இணைந்து வெளிப்பட்ட ஒரு ஆற்றலாக சுப்ரற்ற மித்ராயிருந்தால், குமார் சகானி மற்றும் மிருணாள் சென் ஆகிய இரு நெறியாளர்களுடன் இணைந்து வெளிப்பட்ட ஒரு ஆற்றல் நிச்சயம் கே.கேயை விட வேறு யாருமல்ல.

கே.கே.ஒக்டோபர் 02 1944ஆம் ஆண்டில் பிறந்தார். குரு, சிஷ்ய பரம்பரையென்ற பாரம்பரியத் தடமாகிய, ஒரு பிரபல ஆளுமையின் கீழ் பயிற்சியாளராக நீண்ட காலம் பொறுமையுடன் பணியாற்றி அதன் பின்னர் அக்குருவினுடைய ஆசீர்வதிப்புடன் ஒளிப்பதிவாளராக அவதாரமெடுக்காமல், அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையான கல்வி அதன் வழியான பயிற்சிகள் போன்றவற்றின் மூலம் புனேயிலுள்ள இந்திய திரைப்பட தொலைக்காட்சிக் கல்லூரியிலிருந்து **(FTII)** முதலாவதாக வெளிவந்த வருவோர் மீது மாத்திரமே நம்பிக்கை கொண்டிருந்த காலம். அவ்வாறானதொரு நிலையில் வாய்ப்புகள் கிடைப்பதற்கு பெரும்பாலானோருக்கு அதிர்ஷ்டமே ஒன்றுக்கொன்று ஒவ்வாத இரு உலகங்களிலும் காலூன்றி நின்றாலும், அவற்றிற்கேயுரிய "நெளிவு சுழிவுகளை" உணர்ந்து பணியாற்றும் பாங்கு தெரிந்தவர் மகாஜன். தொழில்



பட்டதாரி ஒளிப்பதிவாளர் உற்பத்திகளில் ஒருவர் கே.கே.

முன்னைய பிரபாத் ஸ்ரூடியோ வளவில் சகல சாதனங்களது வசதிகளுடனமைந்த இந்தியாவிலுள்ள இந்த முதலாவது திரைப்படக் கல்லூரி பாரிஸிலுள்ள மிகப் பிரசித்தி பெற்ற திரைப்படக் கல்லூரியினை முன்மாதிரியாகக் கொண்டு இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இங்குள்ள தேசிய திரைப்படக் காப்பகம் மிகச் சிறப்பாகப் பயனுள்ள முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பௌதீகவியல் பட்டதாரியான மகாஜன், புனா திரைப்படக் கல்லூரியின் ஆரம்பகால பட்டதாரிகளுள் ஒருவர். திரைப்படக் கல்லூரியின் ஆரம்ப காலகட்டம் என்பதால், இப்போதிருப்பதைப் போல அந்த நாட்களில் திரைப்படக் கல்லூரி போதியளவு பிரசித்தி பெற்றிருக்கவில்லை. பயிற்சியாளராக நீண்டகாலம் குறிப்பிட்டதொரு ஆளுமையின் கீழ் பணியாற்றியதன் பின்னரே, சுதந்திரமாக அந்தந்தத் துறைகளில் கால் பதிக்க முடியும். சினிமாத்துறையினரும் அவ்வாறு கை கொடுத்து வந்தது. திரைப்படக் கல்லூரியிலிருந்து வெளியேறி வாய்ப்புக்களுக்காக அலைய வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்த திரைப்படக் கல்லூரிப் பட்டதாரிகளை, சினிமாத்துறையினர் ஏளனமாகப் பார்த்த காலமது. ஒரு சுதந்திர ஒளிப்பதிவாளராக பம்பாயில் மகாஜன் விளம்பரப் படங்களிலும் பின்னர் ஆவண மற்றும் குறுந்திரைப்படங்களிலும் பணியாற்றினார்.

எது எவ்வாறாக இருந்தாலும் தான் தொட்டதைத் துலங்க வைக்கும் அபார ஆற்றல் கொண்டவர் மகாஜன். இதனால் குறைந்த செலவில் கலைத்தரமாக எடுக்கும் திரைப்படங்களில் மாத்திரமின்றி வணிக ரீதியாக எடுக்கப்படும் திரைப்படங்களிலும் தனக்கெனத் தனித்தடத்தைப் பதித்துக் கொண்டவர் மகாஜன். தொழில் ரீதியாக எண்ணிக்கையில் கூடுதலான படங்களில் பணியாற்றத் தொடங்கினாலும் தனது தரத்திற்கு எத்தகைய ஊறும் நேர்ந்து விடாது தனது பெயரைக் காப்பாற்றியவர் அவர். பரந்துபட்ட திரையுலகைப் பொறுத்தவரை வணிக சினிமா, கலைத்தர சினிமா ஆகிய வேறுபட்ட ரீதியாக வெகுஜன ஹிந்தித் திரைப்படங்களில் பணியாற்றினாலும் அவற்றின் அழகியல் தொடர்பாக அவருக்கேயுரிய கடுமையான விமர்சனங்கள் சில வேளைகளில் அவ்வப்போது அவரிடமிருந்து வெளிப்படுவது உண்டு. திரைப்படக் கல்லூரிக் காலத்தில் இத்தாலிய கறுப்பு வெள்ளைத் திரைப்படங்களை வெகு நேர்த்தியாக ஒளிப்பதிவு செய்த முன்னோடிகளான ஒற்றலோ மார்ற்ரெலி, ஜி.ஆர்.அல்டோ ஆகியோரது படைப்புகளால் வெகுவாகக் கவரப்பட்டதுடன் அவற்றின் தாக்கங்களுக்கும் அவர் ஆட்பட்டிருந்தார். பிரான்சிய புதிய அலை திரைப்படங்களும் அவரது கவனத்தை ஈர்த்தன. அவற்றை விட இங்மர் பேர்க்மனது கறுப்பு – வெள்ளைத் திரைப்படங்களினது ஒளிப்பதிவு சிருஷ்டியாளர்களான குனார் பிஷர் மற்றும் ஸ்வென்நொஸ்ற் ஆகியோரது படைப்புகளிலும் அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். உள்நாட்டில் சத்யஜித்ரேயின் ஒளிப்பதிவாளர் சுப்ரற்ற மித்ரா அவரைக் கவர்ந்திருந்தார்.

மகாஜனது கதைப்பாங்கான திரைப்பட பிரவேசம் 1966ஆம் ஆண்டில் குமார் சகானியின் Glass pane



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படத்துடன் ஆரம்பமாகின்றது. அத்திரைப்படத்திற்குத் திரைப்படக் கல்லூரியின் மாணவனாக இருந்த நிலையிலேயே ஒளிப்பதிவாளராக மகாஜன் பணியாற்றியிருந்தார். அதன் மூலம் குமார் சகானிக்கு ஆரம்பக் காலத்திலிருந்தே மகாஜனுடைய ஆற்றலின் மீதிருந்த நம்பிக்கை வெளிப்படுகின்றது. அதிலிருந்து திரைப்படத்தின் நெறியாளராகவும் ஒளிப்பதிவாளராகவும் அவர்களிருவரதும் கூட்டுப் பங்காளராகிய பிணைப்பு நாற்பது வருடங்களுக்கு மேல் நீடித்திருக்கிறது. திரையுலகைப் பொறுத்தவரையில் இதனையொரு சாதனையாகவே கருத வேண்டும். இதேபோன்று மிர்ணாள் சென்னுடன் கறுப்பு வெள்ளைத் திரைப்படமான புவான் ஸொமியில்1969ஆம் ஆண்டு ஆரம்பமாகிய மகாஜனது பயணம் மிர்ணாள் சென்னின் 18 திரைப்படங்கள் பூர்த்தியாகும்வரை, நீண்டதொரு பயணமாகத் தொடர்ந்திருக்கின்றது. பிரமாண்டமாக தயாரிக்கப்படும் வெகுஜன ஹிந்தித் திரைப்படங்களைப் பொறுத்தவரை பம்பாய் திரைப்படத்துறையினர் மத்தியில் மகாஜனது ஒளிப்பதிவுக்குக் கூடிய மவுசு இருந்த போதிலும் அவர் பணம் ஒன்றே குறிக்கோள் என நினைத்துச் செயற்பட்டது கிடையாதென மிர்ணாள் சென் கூறுகிறார். மேலும் மகாஜனது அத்தகையதொரு மனோபாவம் தமக்கும் மகாஜனுக்குமிடையே நிலவி வந்த பரவசமானதொரு பிணைப்பில் வெளிப்பட்டு வந்ததாகவும் அவர் விபரிக்கிறார். 1960களின் பிற் கூறுகளிலும் 1970களின் முற்கூறுகளிலும் புதிய வேகத்துடன் வீரியமான பல கதைப்பாங்கான திரைப்படங்கள் வெளிவந்தன. மிர்ணாள் சென்னின் புவான் ஸொமி (1969), பாசு சட்டர்ஜியின் சரா அகாஸ் (1969), மணி கௌலின் உஷ்கி ரொட்டி உட்பட இரு படங்கள் (1969, 1971) குமார் சகானியின் மாயாடார்பன் (1972)



அத்துடன் மிர்ணாள் சென்னின் கோரஸ் (1974) ஆகிய படங்களையும் இதில் அடக்கலாம். இத்திரைப்படங்களில் மகாஜனது ஒளிப்பதிவு மிக நேர்த்தியாக கற்பனை வளமும், கவித்துவ அழகும் மிக்கதாக அமைந்திருந்ததைப் பார்வையாளர்களும், விமர்சகர்களும் ஒரே குரலில் பாராட்டியிருக்கிறார்கள். தனது தொழிலின் ஆரம்பக் காலத்திலேயே மகாஜனது இந்தப் பாய்ச்சல் இந்திய புதிய அலைத் திரைப்படங்களது எழுச்சிக்குப் பெருமளவிலானதொரு பங்களிப்பைச் செய்தது. இந்த வரிசையில் ஷ்யாம் பெனகல், குமார் சகானி மற்றும் பி.டி.ஹர்க்கா ஆகிய நெறியாளர்களுக்கான ஆவணத் திரைப்படங்களை ஷ்யாம் பெனகலின் **Children of the streets** (1967), குமார் சகானியின் **A certain childhood** (1967) மற்றும் பி.டி.ஹர்க்காவின் **Amrita Shergil** (1968) ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். சிறந்த ஒளிப்பதிவுக்காக இவை யாவும் விருது பெற்ற படங்களாகும்.




தனது தொழிலை நேசிக்கும் மகாஜன் அதன் நுணுக்க விபரங்களை இளந் தலைமுறையினருடன் பகிர்ந்து கொள்வதில் எத்தகைய தயக்கத்தினையும் கொண்டிருக்கவில்லை. அவர் தனது வாழ்நாளில் இருபதுக்கும் மேற்பட்ட சுதந்திரமாக இயங்கும் ஒளிப்பதிவாளர்களை உருவாக்கியிருக்கிறார். அவருடைய துணையாளர்களாகப் பணியாற்றிய இருபதுக்கும் மேற்பட்டோர் இன்று தொழில் ரீதியாகத் தனித்து இயங்கக் கூடிய தேர்ச்சி பெற்ற சுதந்திர ஒளிப்பதிவாளர்களாக நிலைத்து நிற்கிறார்கள். மகாஜன் தனது துணையாளர்களாகப் பணியாற்றியோரை மாத்திரமன்றி ஏனைய இளந்தலைமுறை ஒளிப்பதிவாளர்களையும் படைப்புகளின் மூலம் ஆகர்ஷிக்கும் ஆசான் நிலையிலுள்ளதொரு ஆளுமையாக இருக்கிறார். "ஒரு விழாவின் பொருட்டு மகாஜன் பழைய திரைப்படக் காப்பகத்தின் கட்டிடத்தை ஒளி வேலைப்பாடுகளால் அலங்கரித்திருந்தார். மிக அழகாக ஒரு தேர்ந்த கலைஞனொருவனது சிருஷ்டியாக அந்த வேலைப்பாடு இருந்தது. ஒளியும் இருளும் உட்கலந்து ஒளி – நிழல் நர்த்தன வடிவில் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதை நான் உள்ளூர அனுபவித்தேன். மாணவ நிலையிலிருந்த எனக்குள் ஒரு கலைஞனது ஆழ்ந்த பரவசம் ஏற்பட்டது." இவ்வாறு கூறியவர் வேறு யாருமல்ல. அப்போது திரைப்படக் கல்லூரி மாணவராயிருந்து அதன் பின்னர் ஆற்றல் வாய்ந்த ஒளிப்பதிவாளராக மாறிய பிறவி, ரெயின் ரூ பாகிஸ்தான் ஆகிய திரைப்படங்களின் ஒளிப்பதிவாளராகிய சுனி யோசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். தொழில் ரீதியிலான வேலைப்பளுவுக்கு மத்தியிலும் தொடர்ந்து புனே திரைப்படக் கல்லூரியுடனான தொடர்பினைப் பேணி வருவதில் மகாஜன் அதிகளவு அக்கறை கொண்டிருந்தார். மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புக்களை அங்கு நடாத்துவதில் அவர் ஆர்வத்துடன் செயற்பட்டார். மேலும் கொல்கொத்தா சத்யஜித்ரே திரைப்படத், தொலைக்காட்சிக் கல்லூரியிலும் பயிற்சி வகுப்புக்களை நடாத்தி வந்தார்.



காட்சிகளின் தன்மைக்கு ஏற்றபடி சரியான "லென்ஸ்" தெரிவு, காட்சிக்கான ஒளியின் செறிவு, இருளின் அடர்த்தி போன்றவற்றை மிகக் கூர்மையாக துல்லியமாக வெளிப்படுத்துவதில் அவற்றிற்கான நுணுக்க அளவீடுகளில் ஒரு துளி கூட பிசகவிடமாட்டார் மகாஜன். ஒரு போதும் பொருளை எம்மிடம் கொண்டு வரமாட்டார். மாறாக சூழலில் பொருளின் அர்த்தப்பாட்டைப் புலப்படுத்துவார். ஒளி, நிழற்படுத்தல்கள் மிகச் சரியாக வருவதற்கு கடும் பிரயத்தனம் எடுத்துக் கொள்வதுடன் ஒளி, நிழல் சேர்க்கையின் உள்ளார்த்தத்தை கிரகிக்க எங்கள் பொறுமையைக் கோருவார். ஒரு தரிசனத்தை அதற்குரிய வீச்சுடன் மிகத் துல்லியமாகக் கொண்டு வருவார். வர்ணத்தைத் தொழில் ரீதியான லாவகத்துடனும் கறுப்பு வெள்ளையை அதற்குரிய தொழிற் தேர்ச்சியுடனும் கொண்டு வருவார். உதாரணமாக ஹிமாச்சல் பிரதேசத்தை காட்சிப்படுத்தும் போது எவரும் அழகான மலைகளையும் அதனையொட்டிய சுற்றாடல் அழகுகளையும் வெளிக்கொணர முற்படுவர். ஆனால் அவ்வாறான காட்சிகளில் நெறியாளரின் தேவையை உணர்ந்து, கதாபாத்திரங்களது உணர்வுகளை அல்லது அவர்களது ஏக்கங்களை அவர்களுக்கு இருக்கும் சிக்கல்களை ஒரு கவித்துவ அழகுடன் கொண்டு வருவதற்கு மகாஜன் முற்படுவார். நெறியாளருக்கான காட்சிகள், படிமங்களை நுணுக்க விபரங்களுடன் முதலீடு செய்து கொள்வதில் அழகியல் உணர்வுகளுடன் கூடிய ஆழமானதொரு கிரகிப்பு அவரிடமிருந்து வெளிப்படுவதை அவதானிக்க முடியும். அவர் 'வெறும்' ஒளிப்பதிவாளரல்ல. மிக உயர்ந்ததொரு தளத்தில் இயங்கும் நெறியாளர்களுக்கானதொரு ஒளிப்பதிவாளராக அவர் எப்போதும் பரிணாமமடைந்து விடுவார். கலையாக்கத்தின் உயர் தளத்தில் நெறியாளருக்கும் ஒளிப்பதிவாளருக்குமான சந்திப்புப்புள்ளி எப்போதுமே இருந்து கொண்டிருக்கும். இதனாலேயே குமார் சகானியும், மிரணாள் சென்னும் அவருடைய பிரசன்னத்தில் பரவசமானதொரு கூட்டிணைப்பை எய்துவது இலகுவில் சாத்தியமாகி விடுகிறது.

இந்தவகையில் மகாஜன் தனக்கெனப் பல தனித்த அடையாளங்களைப் பேணிவரும் ஒளிப்பதிவாளராக இருந்து வந்திருக்கிறார். காட்சி பூர்வமாகவும், அழகியல் பூர்வமாகவும் இழையோடும் நெருக்கங்களை ஒருங்கிணைக்கக் கூடிய உயர்ந்த ஒளிப்பதிவுக் கலைஞராகவே அவருடைய படைப்புகள் அவரை எமக்கு இனங்காட்டுகின்றன.

வாழ்நாளில் பல சாதனைகள் நிகழ்த்திய ஒளிப்பதிவுக் கலைஞரான மகாஜன் அவற்றிற்காக பல அரிய விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

1999இல் ஆற்றல் வாய்ந்த ஒளிப்பதிவாளர்களை ஒரு குழுவாக இணைத்துக் கொண்டு இயங்க ஆரம்பித்தார். சினிமாவுக்கும் ஏனைய கலை வடிவங்களான ஓவியம், கட்டிடக்கலை, இசை, நடனம் மற்றும் நாடகம் போன்றவற்றிற்கிடையிலான நெருக்கமான இயல்புகளை அவற்றிற்கிடையிலான உள்ளார்ந்த ஊடாட்டங்களை வெளிக்கொணரும் வகையில் ஒளிப்பதிவாளரின் பங்கையும், பணியையும் மேம்படுத்துவதே அக்குழுவினரின் குறிக்கோளாகும். ஒளிப்பதிவாளராக மகாஜனின் புதுமையான பங்களிப்பினை மெச்சி, மும்பாய் அசையும் படிமங்கள் கலைக்கழகம் 2000 ஆம் ஆண்டு நவம்பரில் முதலாவது "கொடாக்" (Kodak) தொழில்நுட்ப சிறப்பு விருதினை அவருக்கு அளித்தது. இந்திய சினிமாவுக்கு வளம் சேர்க்கும் வகையில் அவருடைய புதுமை வாய்ந்த பங்களிப்பான ஒளிப்பதிவு "அழகியல் ரீதியிலான வர்ணமும், இணைப்பாக்கமும் பொருந்தி ஒளிப்பதிவுக்கலையில் ஒரு உயர்ந்த பட்ச தரத்தினை எய்திய சாதனையாக மனப்பதிவு ஓவியத்தை எம் முன்னே கொண்டு வருகிறது" என்ற பாராட்டு வாசகம் விருதுடன் இணைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஒளிப்பதிவுத்துறை குறித்து மகாஜன் பின்வருமாறு கூறுகிறார். "இத்தொழிலில் ஈடுபட்டிருப்பது எனது அதிர்ஷ்டமாகும். அதிகம் பேரைச் சந்திக்கவும் அவர்களுடன் பணியாற்றவும் வாய்ப்புக் கிட்டுகிறது. இத்தொழிலில் ஒவ்வொரு நாளும் கற்றுக் கொள்ள பல புதிய விடயங்கள் இருக்கின்றன. என்னை ஈர்ப்பது இந்தப் புதுமை அம்சமாகும். கற்பதற்கு ஒரு எல்லை கிடையாது. தொழிற்திறனில் சிகரத்தைத் தொட்டுவிட்டதாக எவரும் கருதிவிடவும் முடியாது. ஒவ்வொரு நாளும் இது மாறுகிறது. நீங்கள் எப்படியும் கற்றாக வேண்டும்."

ஒரு நல்ல திரைப்படம் முடிந்த பிறகும் எம்மைத் தொந்தரவுபடுத்தும் அல்லது துரத்தும் படிமங்கள் சிலவாவது நிச்சயம் இருக்கும். இந்தவகையில் இந்திய சினிமாவில் நிலைக்கக் கூடிய படிமங்களை தந்த ஒளிப்பதிவுக்கலைஞர்கள் ஒரு சிலரே. அந்த வரிசையில் நிச்சயம் மகாஜனுக்கு தனியிடமுண்டு.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.ஜே.கனகரட்னா

26.08.1934 – 11.10.2006

# அறிவை மக்கள் மயப்படுத்தல்




சுரேஷ் கனகராஜா

எல்லோராலும் நன்கு புரிந்து கொள்ளப்படாத இலக்கிய மரபொன்று எம் சமுதாயத்தில் இருந்து வருகிறது. இத்தகைய எழுத்துக்களை "அறிவுப் பரம்பல்" (knowledge dissemination) இலக்கியம் என்று அழைக்கலாம். பல ஆய்வுத் துறைகளில் ஆங்கிலத்தில் அல்லது பிறமொழிகளில் வெளிவரும் நூல்கள், கட்டுரைகள் பற்றிய தகவல்களையும், அவற்றில் இடம்பெறும் வாதங்களையும், பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அவருடைய அறிவுப்பரம்பல் எழுத்துக்களை நாம் கணக்கெடுக்காமல் இருப்பதற்குக் காரணம், மேற்குலகில் இடம்பெறுவது போன்று நாம் அறிவுருவாக்க எழுத்து மரபுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதைத்தான் காட்டுகிறது. ஆனால் ஆங்கிலமொழிப் பாண்டித்தியமும் சர்வதேச இலக்கிய அறிவுசார் கண்ணோட்டமும் அருகிப் போய்க் கொண்டிருக்கும் எம் சமுதாயத்திலாவது அறிவுப்பரம்பல் பணியை நாம் வித்தியாசமான முறையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

மேற்கத்தைய படைப்புக்கள், அந்நிய கருத்துக்களை எம்மேல் திணிக்கும் கலாசார காலனித்துவத்தை ஏ.ஜே. முறியடிக்கிறார். அப்படைப்புக்களை எமக்கேயுரிய பாணியில், விமர்சனக் கண்ணோட்டத்தோடு, எம்முடைய தேவைகளுக்கு ஏற்றமுறையில் கிரகிக்கச் செய்வதால் இது கைகூடுகிறது. மேற்கத்தைய அறிவாலும் கலைகளாலும் பண்பாடுகள் அடிமைப்படுத்தப் படுகின்றன என்ற பயம் நிலவும் இந்த நாட்களில் ஏ.ஜே. கையாண்ட யுக்தி முற்போக்கானது."

வாசகர்களுக்காகத் தமிழில் தரும் எழுத்துக்கள் இம்மரபில் அடங்கும். சினிமாப் படங்கள், நாடகங்கள், நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கண்காட்சிகள் போன்ற துறைகளில் வேறு மொழிகளில் இடம்பெறும் வெளியீடுகள் பற்றிய கட்டுரைகளும் இதில் அடங்கும். இந்த மரபு மொழிபெயர்ப்பிலிருந்து வேறுபட்டது. மொழிபெயர்ப்பாளர் மூலநூலை இயன்றளவு ஒட்டியே மொழிபெயர்க்க வேண்டும். ஆனால் "அறிவு பரப்பும்" கட்டுரைகளில் எழுத்தாளர் மூலத்தை வாசித்து நன்கு கிரகித்து விட்டு, ஓரளவு தனித்துவத்தோடும், விமர்சனக் கண்ணோட்டத்தோடும், அந்த அறிவை தன் சொந்த வார்த்தைகளில் எமக்குத் தருகிறார். அதேநேரம் இத்தகைய எழுத்துக்கள் "அறிவு உருவாக்க" (knowledge construction) எழுத்துக்களிலிருந்து வேறுபட்டவை. அறிவுருவாக்கலில் எழுத்தாளர் தம் சொந்தச் சிந்தனை களையும் ஆய்வுக் கண்டுபிடிப்புக் களையும் புதிதாக வெளியிடுகின்றார். ஆக்க இலக்கியப் படைப்புக்களும், எழுத்தாளரின் சொந்தச் சிந்தனைகளையும் கண்ணோட்டத்தையும் தருவதால் இவையும் சில சமுதாயங்களில் "அறிவுருவாக்க" எழுத்து மரபில் அடக்கப்படுகின்றன. ஆனால், "அறிவுப் பரம்பல்" எழுத்துக்களில் பிறருடைய படைப்புக்களைப் பற்றியே எழுத்தாளர்கள் பேசுகின்றனர்.

அறிவுப் பரம்பல் எழுத்துக்கள் வேறு சமுதாயங்களிலிருந்து வந்தாலும் எம் சமுதாயத்தில் இவற்றின் இடம் சற்று வித்தியாசமானது. உதாரணமாக, மேற்கத்தைய சமுதாயத்தின் புத்திஜீவிகள் "அறிவுருவாக்க" கட்டுரைகளையே பெருமளவு எழுதுகின்றனர். இத்தகைய எழுத்துக்களே அவர்களுக்கு மதிப்பைத் தேடிக் கொடுக்கின்றன. ஓர் ஆய்வாளரின் கணிப்பின்படி, ஒரு மேற்கத்தைய புத்திஜீவியின் எழுத்துக்களில் ஐந்து சதவீதமானவை மட்டுமே பொதுமக்களுக்கு தன் சொந்த ஆய்வை அல்லது தன் துறையின் புதிய சிந்தனைகளைச் சஞ்சிகைகளில் அல்லது பத்திரிகைகளில் வெளியிடும் முயற்சிகளாக அமைகின்றன. பொதுவாக, இத்தகைய பணியை மேற்கில் பத்திரிகையாளரிடம் விட்டு விடுகின்றனர். மாறாக, தமிழ்ப் புத்திஜீவிகள் பிரசுரிக்கும் எழுத்துக்களில் கணிசமான அளவு அறிவுப் பரம்பல் முயற்சிகளே என்பதை நாம் நன்கு அறிவோம். (சிலவேளைகளில், எம் சொந்த சிந்தனைகள் என்ற போர்வையில் நாம் பிரசுரிக்கும் சில கட்டுரைகள் கூட, நாம் அறியாமலே வேறு நூல்களிலிருந்து நாம் பொறுக்கியவையாகி விடுவதுண்டு. மூல நூல்களை அடையாளங் காட்டும் மரபு எம் சமூகத்தில் ஆழமாக வேரூன்றாததால், எல்லாவற்றையும் எம் சொந்த முயற்சிகளாக வாசகர்களுக்கு முன்வைக்கக்கூடியதாக இருக்கின்றது. தமிழ்ப் புத்திஜீவிகளும் கல்விமான்களும் அறிவுப் பரம்பல் எழுத்துக்களை பெரியளவில் பிரசுரிப்பதற்குக் காரணங்கள் இருக்கின்றன.

1. ஆங்கில மொழிப் பாண்டித்தியம் படிப்படியாக எம்மவர்கள் மத்தியில் அருகிப்போக, வெளிநாடுகளில் இடம்பெறும் புதிய ஆய்வு நடவடிக்கைகளையும் கண்டுபிடிப்புக்களையும் தமிழ் வாசகர்களுக்கு அளிப்பது இன்றியமையாத அறிவுசார்ந்த பணியாக இருக்கிறது.

2. இப்பணியைச் செய்யக்கூடிய ஆங்கில அறிவு சில புத்திஜீவிகளிடம் மட்டுமே இருக்கிறது.

3. சிறப்பான துறைகளில் இடம்பெறும் புதிய அறிவைப் புரிந்து கொள்ளக்கூடிய பாண்டித்தியம் சிலரிடம் மட்டுமே இருக்கின்றது.

4. பல்துறைசார்ந்த முறையில் (interdisciplinary ) அதிகமாக இடம்பெறும் முன்னணி முயற்சிகள், பழைய பாணியில் தம் துறைசார்ந்த ஆய்வில் மட்டும் நின்று கொள்ளும் அறிவாளிகளால்கூட புரிந்து கொள்ள முடியாது போகிறது. உண்மையில், ஆங்கில அறிவுள்ள ஒரு புத்திஜீவி என்ற தகைமைகூட இப்பணியைச் செய்வதற்குப் போதாது. குறைந்த பட்சம் இரு மொழிகளிலும் (சொந்த மொழியிலும், வேற்று மொழியிலும்) சரளமுள்ளவராக இருப்பதோடு, பல்துறைக் கண்ணோட்டமுள்ள புத்திஜீவிகளே இப்பணியைச் செய்யவும் முடியும்.
"மத்து", "செங்காவலர் தலைவர் யேசுநாதர்" என்ற இரு நூல்களிலும் இடம்பெறும் கட்டுரைகளை வாசித்தபோது ஏ.ஜே.கனகரட்னா எப்படியான திறமையுடன் அறிவுபரம்பல் இலக்கியப் பணியை ஆற்றியிருக்கிறார் என்று நான் வியந்தேன். இன்று பல நாடுகளிலும் வாழும் முன்னணி ஆய்வாளர்கள், ஆங்கிலத்திலேயே தம் கண்டு பிடிப்புக்களைப் பிரசுரிக்க, சுயமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டித்தியம் மட்டும் உள்ள அறிவாளிகள் (எந்த நாட்டிலிருந்தாலும் சரி) தம் அறிவுசார் முயற்சிகளை திறம்படச் செய்ய முடியாது. இந்த வகையில் பார்க்கும்போது, ஏ.ஜே. இந்நூல்களில் ஆற்றும் பணி தமிழ்ப் புத்திஜீவிகளுக்குக்கூட இன்றியமையாதது. மேலும், புலமைசார் வட்டங்களுக்கு வெளியே சாதாரண மக்கள்கூட ஆங்கிலத்தில் வெளிவரும் சர்வதேச அறிவுக் களஞ்சியத்தை ஏ.ஜே.யின் பணியால் புதினப் பத்திரிகைகளில் அல்லது சஞ்சிகைகளில் வாசித்துப் பயன்படக் கூடியதாக இருக்கிறது என்பதைச் சிந்திக்கும்போது இவ்வெழுத்து மரபைக் குறித்து ஒரு புதிய மதிப்பு என் மனதில் பிறந்தது. ஏ.ஜே. ஆக்க இலக்கியத்தில் அல்லது சொந்த ஆய்வு முயற்சிகளில் கைவைக்காமல் தன் திறமைகளை வீண் போக்குகிறாரே என்று கவலைப்பட்டவர்களில் நானும் ஒருவன். ஆனால், ஏ.ஜே. செய்யாதவற்றைப் பற்றிக் குறை கூறாமல், அவர் சாதித்த காரியத்தை மெச்சுவது இனியாவது அவசியம். அவருடைய அறிவுப்பரம்பல் எழுத்துக்களை நாம் கணக்கெடுக்காமல் இருப்பதற்குக் காரணம், மேற்குலகில் இடம்பெறுவது போன்று நாம் அறிவுருவாக்க எழுத்து மரபுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதைத்தான் காட்டுகிறது. ஆனால் ஆங்கிலமொழிப் பாண்டித்தியமும் சர்வதேச இலக்கிய அறிவுசார் கண்ணோட்டமும் அருகிப் போய்க் கொண்டிருக்கும் எம் சமுதாயத்திலாவது அறிவுப்பரம்பல் பணியை நாம் வித்தியாசமான முறையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

இந்த அறிவுப்பரம்பல் இலக்கிய மரபு மேலும் வளர வேண்டும் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். ஏ.ஜே.யைப் போன்று பன்மொழிப் பாண்டித்தியமும் பல்துறை ஆர்வமும் உள்ளவர்கள் எம் சமுதாயத்தில் இன்னும் தேவை. எனினும், இப்பணியைத் திறம்படச் சாதிக்க இவ்வடிப்படைத் தகைமைகளோடு நின்றுவிட முடியாது. ஏ.ஜே. கையாண்ட சில சிறப்பான யுக்திகளை, அவர் கட்டுரைகளில் அடையாளங் காண்பது இப்பணியை வளர்க்க உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். அந்த எதிர்பார்ப்போடு பின்வரும் அவதானிப்புகளை முன்வைக்கிறேன்.


ஒரு புதிய சிந்தனையை அல்லது நூலைத் தக்க பின்னணி அறிவில்லாது விளங்கிக் கொள்ள முடியாது. ஆங்கிலம் நன்றாகத் தெரிந்திருந்தாலுங்கூட சில ஆய்வாளரின் கட்டுரைகளை வாசிக்கும்போது அவற்றைப் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதற்குக் காரணம் எமக்குத் தேவையான அடிப்படை அறிவு எம்மிடம் இல்லாததே ஆகும். ஆனால், ஏ.ஜே. ஒரு சிந்தனையை அல்லது நூலை விபரிக்கும்போது, தன் பரந்த வாசிப்பின் பயனாக, அச்சிந்தனையின் சரித்திரப் பின்னணி, அதைச் சார்ந்த எடுகோள்கள், ஆய்வாளரைப் பற்றிய சொந்த விபரங்கள் போன்றவற்றைத் தருவதால் நாம் பொருளைச் சற்று இலகுவாக விளங்கக் கூடியதாக இருக்கிறது. உதாரணமாக, "செங்காவலர் தலைவர் யேசுநாதர்" நூலில், புளொக்கின் "பன்னிருவர்" கவிதையை விமர்சிப்பதற்கு முன், புளொக்கின் வாழ்க்கை, அவருடைய பெற்றோரின் சிந்தனைப் போக்கு, அவருடைய சமூக அந்தஸ்து, அவரைப்பற்றிய சமகால முக்கியஸ்தர்களான லூனசாஸ்கி, லெனின் போன்றோர் கொண்டிருந்த மதிப்பீடு என்பன தரப்படுவதால், இக்கவிதையின் அர்த்தத்தை நாம் ஆழமாக விளங்கிக்கொள்ள முடிகிறது. அப்படியே, "பானையும் சட்டியும்" கட்டுரையில் லெயிங்கின் புரட்சிகரமான சிந்தனைகளை அறிமுகப்படுத்துமுன் அவருடைய கல்வி, தொழில் வரலாறு, தென்னிலங்கை விகாரையில் தியான நடவடிக்கைகளில் ஈடுபட்டமை, சஞ்சிகைகளுக்கு அவர் கொடுத்த பேட்டி, ஏனைய பிரசுரங்களின் விபரம் என்பன தரப்படுவதால் அவருடைய சிந்தனையை நாம் தக்க முறையில் விளங்க முடிகிறது.

மேலும், ஏ.ஜே. தமிழ்மொழியில் சரளமாக எழுதக்கூடியது மட்டுமல்லாமல், தமிழ் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் கொண்டிருந்த நாட்டம், அந்நிய சிந்தனைகளை எம் உலகப் பார்வைக்கு எட்டக்கூடிய முறையில் எழுதக் கூடிய சாத்தியத்தையும் அவருக்குக் கொடுக்கிறது. புளொக்கின் கவிதையைப்பற்றிப் பேச முன்னர், அவருக்கு ஒப்பாகப் பாரதியார் ரஷியப் புரட்சி பற்றிப் பயன்படுத்திய ஆன்மீக ரீதியான உவமானத்துடன் ஏ.ஜே. தொடங்குகிறார். லெயிங்கின் உளவியலை அறிமுகப்படுத்தமுன் கட்டுரை எழுதப்படும் நாட்களில் திரையிடப்பட்ட "குடும்ப வாழ்க்கை" என்ற படத்தின் கதையைச் சுருக்கமாகக் கூறி, அதிலுள்ள கருத்துக்களை லெயிங்கின் கருத்துக்களுடன் ஒப்பிட்டு அலசுகிறார். கடினமான

**“**

**'அறிவுருவாக்க' எழுத்துக்கும் 'அறிவுப்பரம்பல்' இலக்கியத்துக்கும் இடையேயுள்ள வேறுபாடு ஏ.ஜே.யின் எழுத்துக்களில் சுருங்குகின்றது. ஏ.ஜே. வெளிநாட்டு அறிவுருவாக்கப் படைப்புகளை எமக்கு அறிமுகப்படுத்தினாலும், அவற்றைத் தன் சொந்த அறிவாலும் விமர்சனக் கண்ணோட்டத்தாலும் இடையீடு செய்து, எம் சமூகத்தைக் குறித்த புதிய ஆய்வையும் கேள்விகளையும் அறிவையும் தன் கட்டுரைகளில் வளர்க்கிறார். அதாவது, ஏ.ஜே.யின் அறிவுப்பரம்பல் கட்டுரைகள் புதிய அறிவை உருவாக்குகின்றன. இதனால் தான் அடுத்த வருடம் வெளிவரும் Geopolitics of Academic Writing and Knowledge Production (University of Pittsburg Press) என்ற என் நூலை ஏ.ஜே.க்கு சமர்ப்பித்திருக்கிறேன். அறிவாக்கத்தில் மேற்குலகிற்கும் மூன்றாம் உலக நாடுகளுக்குமிடையே நிலவும் ஏற்றத் தாழ்வை இந்நூலில் ஆய்வு செய்யும்போது, ஏ.ஜே. இப்பிரச்சினையை எதிர்கொள்ள எடுத்த முயற்சிகளை என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.**

**”**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளை எம் பண்பாட்டோடு தொடர்புபடுத்தி எழுதுவது எம் கிரகிப்பிற்கு உதவியாக அமைகிறது. இதைவிட, அதிகமான எல்லாக் கட்டுரைகளிலும் தான் எழுதத் தெரிவுசெய்த விடயத்தை எம் சமுதாயத்தில் இடம்பெறும் முக்கிய விவாதங்களின் அல்லது கரிசனைகளின் கண்ணோட்டத்தி லேயே ஏ.ஜே. பேசுகிறார். வெளிநாட்டில் இடம்பெறும் சமகால ஆய்வுகளை அல்லது சிந்தனைகளைப் பயன்படுத்தி எம் சமுதாயத்தின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதே இந்த அணுகுமுறையின் குறிக்கோள். எனவே, அமெரிக்க இலக்கியத்தை பிரித்தானிய இலக்கியத்திலிருந்து வேறாகப் பிரித்து ஒரு தனி மரபை வளர்க்க எடுத்த முயற்சிகளைப் பற்றிய ராவின் நூலை விபரிக்க முன்னதாக எம் எழுத்தாளரின் மத்தியில் தென்னிந்திய இலக்கியத்தி லிருந்து பிரிந்த மரபு வளர முடியுமா என்ற உள்ளூர் விவாதத்தை ஞாபகப் படுத்துகின்றார். மேலும், ஆங்கிலமொழி 16ஆம் நூற்றாண்டளவில் கிரேக்க லத்தீன் மொழிகளிலிருந்து பிரிந்த ஒரு தனித்துவமான மொழியாக வளருவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளைப் பற்றிய ஜோன்சின் நூலை விபரிக்க முன்னர் எம்மவர்கள் மத்தியில் தமிழைப் போதனாமொழியாகவும் ஆட்சி மொழியாகவும் வளர்க்கலாமா என இடம் பெற்ற விவாதங்களை ஞாபகமூட்டுகிறார். இத்தகைய ஓர் ஆரம்ப பந்தியின் பின்னர் ஏ.ஜே. சொல்லாமலேயே நாம் மிகுதிக் கட்டுரையை எம் சொந்தப் பிரச்சினைகளின் கண்ணோட்டத்திலே வாசித்துக் கொள்கிறோம். எனினும், இந்நூல்களின் கோணத்திலிருந்து எம் விவாதங்களில் தான் வகுத்துக் கொள்ளும் நிலைப்பாட்டையும் எமக்குப் பயனுள்ள படிப்பினைகளையும் கட்டுரை இறுதியில் ஏ.ஜே. தெரிவிக்கத் தவறுவதில்லை.

மேலும் எந்தக் கொள்கையையோ நூலையோ படைப்பையோ பற்றி எழுதினாலும், ஏ.ஜே. அதை ஓர் அகன்ற கோணத்தில் வைத்துப் பார்த்து, அதன் முக்கியத்துவத்தையும் தாற்பரியத்தையும் கவனமாக ஆராய்வார். புஎளாக்கின் "பன்னிருவர்" கவிதையில் யேசுநாதர் செங்காவலர் தலைவராக இடம்பெறுவதைக் குறித்து ரஷ்யாவில் ஆன்மீகவாதிகளும் இடதுசாரிகளும் எழுப்பிய விமர்சனத்தை ஏ.ஜே. வாசகர்களுக்குத் தருகிறார். இதன் அடிப்படையில் புளொக்கின் தரிசனத்தை நியாயப்படுத்த மூன்றாவது ஓர் கண்ணோட்டத்தை முன்வைக்கிறார். அடுத்தது, "இலக்கியத் திருட்டு" என்ற கொள்கையைப்பற்றி எழுதும்போது, அது ஏன் நிலமானியச் சமுதாயத்திற்கு முன்னர் மேற்கில் இடம் பெறவில்லை, இன்றும் ஏன் கீழைத்தேச நாடுகளில் முக்கியமாக இடம்பெறுவதில்லை என்ற கேள்விகளை எழுப்பி ஒரு பரந்த பார்வையை எம்மில் வளர்க்கிறார். இறுதியில், டான் ஜேக்கப்ஸனின் சிறுகதையைச் சொல்லி, இலக்கியத் திருட்டைப் பற்றிப் புதிய கேள்விகளை எழுப்புகிறார். இப்படியாக, ஒரு படைப்பையோ கருத்தையோ பல கோணங்களிலிருந்து பார்க்கக்கூடியதாக இருப்பது தமிழ் வாசகர்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியமே. ஏ.ஜேயின் பரந்த அறிவின் பயனாகவே எமக்கு இந்த ஆசீர்வாதம் கிட்டுகிறது.

கடைசியாக, எல்லாக் கட்டுரைகளிலும் ஏ.ஜே.யின் சமூகம் சார்ந்த வர்க்க ரீதியான ஒரு விமர்சனக் கண்ணோட்டம் தெளிவாக இடம் பெறுகிறது. அவர் எழுத எடுத்துக் கொண்ட விடயத்தை சமூக, அரசியற் போக்குகளின் பின்னணியில் ஆழமாக விமர்சிக்கிறார். உதாரணமாக, "பானையும் சட்டியும்" கட்டுரையில் ரஷ்யாவில் மாறுபட்ட கருத்துள்ளவர்களை பைத்தியக்காரர் என்று கூறி தண்டிப்பதற்காக உளவியல் பயன்படுத்தப்படுகிறது என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டை விமர்சிக்கிறார். பல உதாரணங்களுக்கூடாக ஜனநாயகரீதியான மேற்குலகிலும் அதன் விழுமியங்களுக்கு எதிரானவர்கள் பைத்தியக்காரர்கள் என கணிக்கப்படும் உண்மையை அம்பலப்படுத்துகிறார். "தொட்டப்பன்" என்ற படத்தை விபரிக்கும்போது, இந்த மாஃபியாக் குழுவினரின் ஈவிரக்கமற்ற கொலைகளைப்பற்றி ஒரு கண்டனமும் இடம்பெறாததுபற்றி கேள்வி எழுப்புகிறார். இறுதியில், இந்தப் படம் ஹொலிவுட்டுக்கே ஏற்ற பாணியில் பணமுள்ளவர்களின் பலத்தை மிகைப்படுத்தி, வன்முறையை மலிவுபடுத்தும் ஓர் ஜனரஞ்சகப் படைப்பாகவே அமைகிறது என நாம் முடிவு செய்கிறோம். அப்படியே, "இலக்கியத் திருட்டு" தனியுடைமை வாதத்தால் உந்தப்பட்ட ஒரு நடைமுறை என்று ஏ.ஜே. வைக்கும் வர்க்கரீதியான கண்ணோட்டம் ஆழமான கேள்விகளை எழுப்புகின்றது.

இந்த வகையில், எந்தவொரு வெளிநாட்டு ஆங்கிலப் படைப்பையும் தன் தனித்துவமான பார்வையும், விமர்சனமும், பரந்த கண்ணோட்டமும், எம் சமூகப் பிரச்சினைகளுக்குரிய தொடர்பும் இல்லாமல் எமக்கு அவர் தருவதில்லை. எமக்கு அறிமுகப்படுத்தும் படைப்பில் எவற்றைப் பேச தெரிவு செய்கிறார், எந்தக் கோணத்திலிருந்து பார்க்கிறார், எத்தகைய கண்ணோட்டத்தை எம்மில் வளர்க்கிறார் என்று நாம் சிந்திக்கும்போது, ஏ.ஜே.யின் எழுத்துக்களில் ஒவ்வொரு வசனத்திலும் அவருடைய சொந்த முத்திரை இருக்கிறது என்பதை நாம் உணரலாம். இத்தகைய கட்டுரைகள் எம் சிந்தனையையும் அறிவையும் வளர்ப்பதோடு, எம் சொந்த இலக்கிய, பண்பாட்டு வாழ்க்கையில் எழும் பிரச்சினைகளை எமக்கே உரிய பாணியில் தீர்க்கவும் வழிவகுக்கின்றன. எனவே, ஏ.ஜே. இவ்வெழுத்து வடிவத்தைக் கையாண்ட விதத்தில் இரு பெரிய உண்மைகள் இருக்கின்றன.

1. மேற்கத்தைய படைப்புக்கள், அந்நிய கருத்துக்களை எம்மேல் திணிக்கும் கலாசார காலனித்துவத்தை ஏ.ஜே. முறியடிக்கிறார். அப்படைப்புக்களை எமக்கேயுரிய பாணியில், விமர்சனக் கண்ணோட்டத்தோடு, எம்முடைய தேவைகளுக்கு ஏற்றமுறையில் கிரகிக்கச் செய்வதால் இது கைகூடுகிறது. மேற்கத்தைய அறிவாலும் கலைகளாலும் பண்பாடுகள் அடிமைப்படுத்தப் படுகின்றன என்ற பயம் நிலவும் இந்த நாட்களில் ஏ.ஜே. கையாண்ட யுக்தி முற்போக்கானது.

2. "அறிவுருவாக்க" எழுத்துக்கும் "அறிவுப்பரப்பல்" இலக்கியத்துக்கும் இடையேயுள்ள வேறுபாடு ஏ.ஜே.யின் எழுத்துக்களில் சுருங்குகின்றது. ஏ.ஜே. வெளிநாட்டு அறிவுருவாக்கப் படைப்புகளை எமக்கு அறிமுகப்படுத்தினாலும், அவற்றைத் தன் சொந்த அறிவாலும் விமர்சனக் கண்ணோட்டத்தாலும் இடையீடு செய்து, எம் சமூகத்தைக் குறித்த புதிய ஆய்வையும் கேள்விகளையும் அறிவையும் தன் கட்டுரைகளில் வளர்க்கிறார். அதாவது, ஏ.ஜே.யின் அறிவுப்பரம்பல் கட்டுரைகள் புதிய அறிவை உருவாக்குகின்றன. இதனால் தான் அடுத்த வருடம் வெளிவரும் Geopolitics of Academic Writing and Knowledge Production (University of Pittsburg Press) என்ற என் நூலை ஏ.ஜேக்கு சமர்ப்பித்திருக்கிறேன். அறிவாக்கத்தில் மேற்குலகிற்கும் மூன்றாம் உலக நாடுகளுக்குமிடையே நிலவும் ஏற்றத் தாழ்வை இந்நூலில் ஆய்வு செய்யும்போது, ஏ.ஜே. இப்பிரச்சினையை எதிர்கொள்ள எடுத்த முயற்சிகளை என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

நன்றி: அப்பால் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமரா வில்லைகளுக்குள் உயிர்ப்பைத் தேடும் கலைஞன்!




தேசிய கலாபவனத்தில் (National Art Gallery) அண்மையில் ஓவிய மற்றும் புகைப்படக் கண்காட்சி ஒன்று நடைபெற்றது.



அங்கொடை மனநல மருத்துவ நிலைய நோயாளிகளுக்கு மனநல வைத்தியத்தின் ஒரு பகுதியாக செய்யப்படும் Occupational Therapy யின் போது, அவர்களால் வரையப்பட்ட ஓவியங்கள் நெய்யப்பட்ட கைத்தறித் துணிகள், மற்றும் பூ வேலைப்பாடுகள் காட்சிக்காகவும் விற்பனைக்காகவும் வைக்கப்பட்டிருந்தன.


கூடவே மனநல வைத்தியர் சிவதாஸ் இன் புகைப்படக் கண்காட்சியும் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இயற்கையின் அழகு, வைத்தியசாலையின் சுற்றுப்புறம், அதைச்சுற்றி வாழும் பறவைகள் மற்றும் உயிரினங்கள், நோயாளிகள் என்று தனது ஒளிப்படக்கருவிக்குள் அவர் சிறைப்பிடித்த நூற்றுக்கும் மேற்பட்ட ஒளிப்படங்கள் அங்கு காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.



பிரமிப்பூட்டுகின்ற நேர்த்தியும் அழகும், இயற்கையின் பரிமாணத்தை துல்லியமாக காட்டுகிறவையுமாக அந்தப் படங்கள் அமைந்திருந்தன.

அங்கொடை மனநல வைத்தியசாலையில் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் என்ற நோக்குடன் பார்க்கும் பார்வையாயின் எதிர்பார்ப்பு எல்லைகளை தகர்த்துவிடும் அதிர்வைத் தருகின்றன அப்படங்கள்.



சிவதாசின் ஒளிப்படக்கருவி, ஒவ்வொன்றிலும் வாழ்வின் உயிர்ப்பைத் தேடுகின்றது. மன இறுக்கத்தினால் (Mental Stigma) இல் அவதியுறும் நோயாளிகளுக்கு மறுவாழ்வுக்கு உதவும் அந்த வைத்தியசாலையின் சூழலினுள் உயிர்ப்புக்கான தேடல் மிகப் பொருத்தமான ஒரு இணைவு புத்துயிர்ப்புக்கான அடையாளங்களை தேடும் அல்லது ஒளிப்படக்கருவி கண்டு சிறைப்பிடித்துள்ள அந்த ஒளிப்படங்கள் வாழ்வின் மீதான நம்பிக்கையை அந்த நோயாளிகளுக்கு மட்டுமல்ல பார்வையாளர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்குகிறது.


அது வெறுமனே, ஒரு மன இறுக்கத்திற்கெதிரான ஒளிப்படக்காட்சி அல்ல புத்துயிர்ப்புக்கான தேடலை நோக்கிய ஒரு பயணம் அது.

ரஃபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered As a News Paper in Sri Lanka.

Regi. No: W67879




படம்: ரஞ்சித் அஸங்க

Publishers: Sarinihar, 237/22, Wijekumarathunga Road, Colombo 05.
Printers: Navamaga, 66/4, Sri Dharmarama Road, Ratmalana.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org